# உதயன்

சுடர் 30 கதிர் 340 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 15, ஞாயிற்றுக்கிழமை 01.11.2015



மகாராஜா பொதிகள் சேவை

இங்கு மகாராஜா உற்பத்தி பொருட்களை விசேட கழிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

GTV Enterprises (Pvt)Ltd.

இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், 021 - 2224338 / 021-4925024

இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா, 024 - 4930200


# 7, 393 ஏக்கர் நிலப்பரப்பு இன்னமும் படைகளிடம்

## யாழ். மாவட்டச் செயலகம் திரட்டிய தகவலில் அம்பலமானது உண்மை

யாழ்ப்பாணம், நவம்பர் 1

யாழ்.மாவட்டத்தில் முப்படையினராலும் 7 ஆயிரத்து 393.46 ஏக்கர் நிலப் பரப்பு இன்னமும் கையகப்படுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளது. இதில் 7 ஆயிரத்து 214 ஏக்கர் தனியாருக்குரியதுடன் எஞ்சிய 179.46 ஏக்கர் அரச காணியாகும்.

யாழ்.மாவட்டச் செயலகத்தினால் கடந்த செப்ரெம்பர் மாத இறுதியில் திரட்டப்பட்ட தகவலிலேயே மேற்படி விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

இராணுவத்தினரால் 10 ஆயிரத்து 359 பேருக்குச் சொந்தமான 7 ஆயிரத்து 58.2 ஏக்கர் காணியும், பொலிஸாரி

பக். 20

# போரின் இறுதியில் சரணடைய இணங்கவில்லை புலித்தலைமை

## இப்போது சொல்கிறார் சொல்ஹெய்ம்



கொழும்பு, நவ. 1

போரின் இறுதிக் கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடைவதற்கு, மேற்குலக நாடுகள் மற்றும் இந்தியாவினால் முன்வைக்கப்பட்ட திட்டத்துக்குப் புலிகளின் தலைமை சாதகமாகப் பதிலளிக்க வில்லை என்று

பக். 20

# பருத்தித்துறை பொலிஸ் நிலையம் நேற்று முதல் புதிய கட்டடத்தில்

## அமைச்சர் திலக் மாரப்பன திறந்து வைத்தார்



கரணவாய்,நவ.1

பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக சுமார் 176 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட பருத்தித்துறைப் பிரதேசத்துக்கான புதிய பொலிஸ் நிலையம் சட்டம், ஒழுங்கு மற்றும் சிறைச் சாலைகள்

பக். 20

## ஜனாதிபதி இன்று தாய்லாந்து பயணம்

கொழும்பு, நவ.1

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று தாய்லாந்துக்கு உத்தியோகபூர்வப் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கைக்கும் தாய்லாந்துக்குமிடையில் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 60ஆவது ஆண்டுகள் நிறைவடை

பக். 20

# சிறைச்சாலைக் கட்டடத் தொகுதி யாழ்ப்பாணத்தில் நேற்று திறப்பு



யாழ்ப்பாணம், நவ. 1

இதுவரை காலமும் தனியார் வீடுகளில் இயங்கிவரும் யாழ்.சிறைச்சாலைக்கென யாழ்.பண்ணையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய சிறைச்சாலைக் கட்டடத் தொகுதி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. சட்டம் ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன

பக். 20

# கைதிகளுக்குப் பிணை ஏற்பாடுகள் ஆரம்பம்

## யாழில் கூறினார் சிறைச்சாலை அமைச்சர்



யாழ்ப்பாணம், நவ. 1

அரசியல் கைதிகள் விடயம் சூடு பிடித்துள்ள நிலையில், அவர்களைப் பிணையில் விடுவிப்பது தொடர்பில் சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு

பக். 20

## கேணியில் மூழ்கி ஆலய பூசகர் சாவு

கரணவாய், நவ. 1

ஆலயக் கேணியில் நீராடச்சென்ற பூசகர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை கரணவாய் பகுதியில் இடம்பெற்றது.

கரணவாய் தெற்கு முருகமூர்த்தி ஆலயத்தின் பிரதம குருவான கனகசபை தியாகராஜா குருக்கள் (வயது - 86)

பக். 20

# சிறையில் கொல்லப்படும் வரலாறு இனி வேண்டாம்

## யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 1

சிறைச்சாலைகளில் தடுத்து வைக் கப்படுகின்ற கைதிகள் கொல்லப்பட்ட வரலாறுகள் எழுதப்பட்டுவிட்டன. அத்தகைய வரலாறுகள் இனி மேல் எழுதப்படக்கூடாது. அதற்கு அத்தகைய சம்பவங்கள் சிறைச்சாலைகளில் இடம்பெறக் கூடாது என்று யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்தார்.

பக். 20

# 224 பேருடன் நடுவானில் சிதறியது ரஷ்ய விமானம்

## எகிப்திலிருந்து புறப்பட்டவேளை சோகம்

கெய்ரோ, நவ. 1

எகிப்திலிருந்து ரஷ்யாவை நோக்கி 224 பயணிகளுடன் சென்ற விமானம் ஷினாய் தீபகற்பம் அருகே நடுவானில் வெடித்துச் சிதறியது.

இதில் பயணித்த 17 குழந்தைகள் உட்பட 224 பேரும் உயிரிழந்துள்ளனர்.

எகிப்தின் செங்கடலை ஒட்டி யாம் எல் கே நகரிலிருந்து ரஷ்யாவின் சென். பீற்றர்ஸ்பேர்க் நகரத்துக்கு நேற்றுச் சனிக்கிழமை 224 பயணிகளுடன் ரஷ்யாவுக்குச் சொந்தமான இந்த எயார்பஸ் ஏ 321 விமானம் புறப்பட்டுச்

பக். 20










மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புதிய சிறைச்சாலையில் பெரிதாக ஏதும் இல்லை

## திறந்து வைத்த அமைச்சர் திலக் கருத்து

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்.சிறைச்சாலை நவீனமயப்படுத்தப்பட்ட சிறைச்சாலை எனக் கூறப்பட்டிருந்தது. ஆனால் வந்து பார்த்தபோதுதான் புரிந்தது இங்கு பெரிதாக எதுவும் இல்லை என்று என சட்டம் ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித் தார்.

யாழ்.சிறைச்சாலைக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறைச்சாலைக் கட்டடத் தொகுதி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்த பின்னர் கட்டடத் தொகுதியைச் சுற்றிப் பார்வையிட்டார். அதன் பின்னர் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைச் சிறைச் சாலைகளில் தற்போது 18 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் வரையிலான கைதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களுக்குரிய வசதிகள் அங்கு வழங்கப்படுகின்றதா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. அத்துடன் ஒரு சிறைக் கைதிக்கு ஒரு நாளைக்கு 500 ரூபா செலவிடப்படுகிறது.

பெரும் குற்றவாளிகளைப் பிணையில் விடுவிப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது பெரும் குற்றவாளிகள் இலகுவில் தப்பிச் செல்லாதவாறு அவர்கள் பிணையில் விடுவிக்கப்படும்போது அவர்களது கடவுச் சீட்டு நீதிமன்றால் வாங்கப்பட்டுவிடும் என்றார்.

ஒரு சிறையில் 80 தொடக்கம் 90 கைதிகளை அடைத்து வைத்திருப்பது என்பது நல்ல செயல் அல்ல. ஏனெனில் அவர்களும் மனிதர்களே. எனவே வெளிநாடுகளில் கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருப்பது போன்று எதிர்காலத்தில் ஒரு அறையில் 2 பேர் வீதம் தங்க வைக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு முயற்சித்துள்ளேன் என்றும் அவர் மேலும் தெரிவித் தார். (ற-4,21,105)

# ஐ.ம. சுதந்திர முன்னணி எப்படியும் பிளவடையும்!

## அடித்துக் கூறுகின்றார் வாசுதேவ

கொழும்பு, நவ.1

தற்போதைய நிலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பிளவடைவது உறுதி என்றும் இதன் போது சுதந்திரக் கட்சியிலிருந்து பல உறுப்பினர்கள் பிரிந்து செல்வார்கள் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

புதிய முன்னணி தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்றத்தில் புதிய எதிர்க்கட்சி பொது முன்னணியுடன் இணைவதற்கு 48 உறுப்பினர்கள் தயாராகவுள்ளனர். இதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் முழுமையான ஆசீர்வாதம் கிடைத்துள்ளது.

இந்த நிலைமையினுள் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலின் போது அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக எதிர்க்கட்சி பொது முன்னணியின் வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.

தற்போதைய நிலைமையினுள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பிளவடைவது உறுதி. இதன் போது சுதந்திரக் கட்சியிலிருந்து பலரும் பிரிந்து செல்வர். மேலும், நாடாளுமன்றத்தில் 95 ஆசனங்கள் கிடைத்துள்ள முன்னணிக்கு 48 ஆசனங்கள் இழக்கும் நிலைமை உருவாகவுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக முன்னணி, சுதந்திரக் கட்சி மற்றும் எதிர்க்கட்சியின் பொது முன்னணி ஆகிய குழுக்களின் கீழ் போட்டியிடும்- என்று கூறியுள்ளார். (ற)

# இனவாதத்தை தூண்டுவதற்கு சில அரசியல்வாதிகள் முயற்சி

## பருத்தித்துறையில் அமைச்சர் திலக் மாரப்பன தெரிவிப்பு

கரணவாய், நவ. 1

இந்த நாட்டில் இனவாதத்தைத் தூண்டுவதற்கு சில அரசியல்வாதிகள் முனைகின்றனர். இந்த நல்லாட்சி அரசில் இனவாதம் தலை தூக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது என்று தெரிவித்தார் சட்டம், ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

நேற்று பருத்தித்துறையில் புதிய பொலிஸ் நிலையக் கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.





அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பிரதேச மக்களை நாங்கள் ஒருபோதும் மறந்து விடவில்லை. நாம் ஒற்றுமையாகவும் நல்லிணக்கத்துடனும் வாழ வேண்டும் என எமது பெற்றோர்கள் சொல்லித் தந்திருக் கிறார்கள். அவ்வாறு நாம் நல்லிணக்கத்துடன் வாழும் போது தான் இந்த நாட்டில் உண்மையான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

தமிழர்கள் உயர்பண்பு கொண்டவர்கள். அத்தகையவர்களை சிறுவயது முதல் நண்பர்களாகக் கொண்டவன். நாம் இரண்டு இனங்களாகப் பிரிந்து நிற்க வேண்டிய அவசியமில்லை. பௌத்த மத விழுமியங்கள் இந்து மதத்திலும் இந்து மத விழுமியங்கள் பௌத்த மதத்திலும் காணப்படுகின்றன. அவ்வாறு இருக்கும் போது ஏன் பிரிந்து நிற்க வேண்டும். நாங்கள் சிங்களவர்களாக இருந்தாலும் உங்களைச் சகோதர வாஞ்சையுடன் தான் பார்க்கின்றோம். எங்களுக்குள் கலாசாரப் பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் நாம் அவற்றை மறந்து வேறுபாடுகள் இன்றிச் செயற்பட வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட சில அரசியல்வாதிகள் இனவாதக் கருத்துக்களைக் கூறி நாட்டைக் குழப்பி வருகின்றனர். இதனை நாம் ஒற்றுமையாகச் செயற்பட்டு முறியடிக்க வேண்டும்.

இந்த நாட்டிலுள்ள ஜனாதிபதியும் பிரதமரும் இனவாதக் கருத்துக்களுக்கு எதிரானவர்கள். எமது நல்லாட்சிக்கான இந்த அரசு இனவாதத்தை தலை தூக்க ஒருபோதும் அனுமதிக்காது என்பதை இந்த இடத்தில் உறுதிப்படுத்திக் கூறிக் கொள்கின்றேன்.

திறந்து வைக்கப்பட்ட பொலிஸ் நிலையமானது இந்தப் பகுதி மக்களின் சட்ட ஒழுங்குகளை நிலைநாட்ட பாடுபடும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

பொலிஸார் தமது கடமைகளைச் செய்யும் போது சில தவறுகள் ஏற்படுகின்றமை தவிர்க்க முடியாததாகும். அதனை மக்களாகிய நீங்கள் மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போது பொலிஸார் சம்பந்தமான பிரச்சினைகள் ஆராய்வதற்காக பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழு எந்தவித அரசியல் நெருக்கீடுகளும் இன்றி சுயமாகச் செயற்படும். இந்த ஆணைக்குழுவின் செயலகங்களை ஒவ்வொரு மாவட்டங்களிலும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த அலுவலகம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விரைவாக திறக்கப்படவுள்ளன. அவை திறக்கப்பட்ட பின் பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகளை சகல தரப்பினரும் தெரியப்படுத்த முடியும்.

இந்தப் பிரதேசத்தில் கடமையாற்றும் சகல பொலிஸ் அதிகாரிகளும் தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்பட்டு வருகின்றனர் என்பதை உறுதிப்படுத்திக் கூறிக்கொள்கின்றேன் - என்றார். (ற-108,109)

## இன்று மரநடுகை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.1

ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம் எனும் கருப்பொருளில் வட மாகாண மரநடுகை மாதத்தின் தொடக்கவிழா நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகவுள்ளன. நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளின் ஆரம்பநாள் நிகழ்வுகள் இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.நகர் வரவேற்பு வளைவுக்கு அருகாமையில் உள்ள செம்மணி உப்பாற்றங்கரை பகுதியில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் கலந்து கொண்டு மரங்களை நட்டுவைக்கவுள்ளார். (ஐ-ரி5)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.1

சண்டிலிப்பாய் ஐடியல் அக்கடமியின் வருடாந்த பரிசில் வழங்கும் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிர்வாக இயக்குநர் வி.என்.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ப.நந்தகுமார், சிறப்பு விருந்தினராக யாழ் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ. அருணகிரிநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-ரி5)

■ ■ ■

யாழ்ப்பாணம்,நவ.1

வல்வெட்டித்துறை அ.மி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் திறந்த வெளிஅரங்கில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் க.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், கௌரவ விருந்தினராக கிராம அலுவலர் சிவகுரு தவனேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ-422)

# உயரழுத்த மின் தாக்கி குடும்பஸ்தர் படுகாயம்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, நவ.1

உயரழுத்த மின்சாரம் தாக்கி வவுனியாவில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். பூந்தோட்டம் பகுதியில் மகாறம்பைக்குளம் பிரதான வீதியில் உள்ள கட்டடம் ஒன்றின் 3 ஆவது மாடியின் கூரை மீது குழாய் பொருத்தும் பணியில் இருந்த தொழிலாளர் ஒருவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. ஒரு பிள்ளையின் தந்தையான யூட் பெரேரா (வயது -28) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

மழைநீர் வடிந்து செல்வதற்காக கூரை மீது ஏறி குழாய் பொருத்தும் பணியில் இருந்த பெரேரா அருகாகச் சென்ற லக்ஸபான உயரழுத்த மின் கம்பி மீது கயிறொன்றைப் போட்டு கீழே இருந்த தனது செருப்பை எடுக்க முயன்றுள்ளார். கம்பி மீது போடப்பட்ட கயிற்றைத் தட்டி நேராக்க முற்பட்ட சமயம் மின் தாக்கி உடலில் எரிகாயங்கள் ஏற்பட்டதுடன் மூன்றாவது மாடியில் இருந்து தூக்கி வீசப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்திருந்த பெரேரா உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ற)

# மலசலகூட குழிக்குள் விழுந்து 4 வயதுச் சிறுமி உயிரிழப்பு

## மட்டக்களப்பில் பரிதாபம்

மட்டக்களப்பு, நவ.1


மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி பாலாமேனில் மலசலகூடம் கட்ட வெட்டப்பட்ட குழியில் விழுந்து சிறுமி ஒருத்தி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர். காத்தான்குடி ஆறாம் குறிச்சி பாவா வீதியைச் சேர்ந்த நான்கு வயதுச் சிறுமியொருவரே உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுமி மாலை 4 மணியளவில் தனது வீட்டுக்கருகிலுள்ள பெரியம்மாவின் வீட்டில் வீடு கட்டுவதற்காக போடப்பட்ட அத்திபாரத்தில் நின்று விளையாடிக் கொண்டிருந்த போது, அந்த அத்திபாரத்தினுள் மலசல கூடம் நிர்மாணிப்பதற்காக வெட்டப்பட்ட குழியினுள் விழுந்துள்ளார்.

சிறுமியைக் காணவில்லை என பெற்றோரும் அவரது உறவினர்களும் தேடிய நிலையில் இந்தச் சிறுமி மாலை 6.30 மணியளவில் மலசல கூடம் நிர்மாணிப்பதற்காக வெட்டப்பட்ட குழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து, சிறுமி காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ள போதிலும், அவர் அங்கு உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



மார்பகப் புற்று நோய்கள் மற்றும் பிற தொற்றா நோய்கள் குறித்து பெண் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு மட்டக்களப்பு, ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் நேற்று இடம்பெற்றது. அலுவலகங்களில் கடமையாற்றும் பெண் உத்தியோகத்தர்கள் குறிப்பாக ஆசிரியைகளிடத்தில் மார்பகப் புற்று நோய் பற்றிய விழிப் புணர்வு குறைவாக இருப்பதன் காரணமாக மார்பகப் புற்று நோய்க்கும் மற்றும் பிற தொற்றா நோய்களுக்கும் பெண்கள் ஆளாகும் வீதம் அதிகரித்துள்ளது என்று வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம். தாரிக் சுட்டிக்காட்டினார். இந்தக் கருத்தரங்கில் ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பெண் உத்தியோகத்தர்கள், ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட சுமார் 150 இற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர். (ற)

# மீள்குடியேற்ற அமைச்சினால் யாழில் 61 மில்லியன் செலவு

## ஜனவரி முதல் இன்று வரை

யாழ்ப்பாணம், நவ.1

மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டில் இதுவரை 61 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் உள்ள நலன்புரி முகாம்கள் மற்றும் மீளக் குடியமர்வோரின் வாழ்வாதார மேம்பாடு ஆகியவற்றுக்காக மட்டுமே குறித்த 61 மில்லியன் ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் நலன்புரி நிலையங்களின் திருத்தத்துக்காக 21 மில்லியன் ரூபாவில் கூரைத் தகடும், நலன்புரி முகாம்களில் உள்ள கழிப்பறை மற்றும் கிணறு திருத்தத்துக்கு 2.5 மில்லியன் ரூபாவும், மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் பாதை, காணித் துப்புரவுப் பணிகளுக்காக 26 மில்லியன் ரூபாவும், மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கிணறுகளின் திருத்தத்துக்காக 2.8 மில்லியன் ரூபாவும், மீளக்குடி யேறிய மக்களுக்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்காக 27மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டின் இறுதிக்குள் செயற்படுத்த எண்ணியுள்ள மற்றும் தற்போது ஆரம்பித்துள்ள பணிகளுக்காக மேலும் 34 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-101)

# பெய்துவரும் மழையால் மீன் பிடிபாடு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.1

தற்போது மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதை அடுத்து யாழ். குடாப்பரப்பு மற்றும் தீவுப் பகுதிக் கடலில் மீன்களின் பிடிபாடு அதிகரித்துள்ளது என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மீன்களின் பிடிபாடு அதிகரித்துள்ளதை அடுத்து குடாநாட்டு மீன் சந்தைகளில் கடலுணவு விலைகள் குறைந்துள்ளன. தீவுப் பகுதியில் இருந்தும் பெருமளவு மீன்கள் சந்தைகளுக்கு வருகின்றன என்றும் வியாபாரிகள் கூறுகின்றனர்.

வலிகாமம் மேற்கு, கிழக்கு மற்றும் வடமராட்சிப் பிரதேசங்களில் இருந்தும் சந்தைக்கு கடலுணவுகள் கொண்டு வரப்படுகின்றன என்று தெரிவித்த வியாபாரிகள் அதிகம் ஒட்டி, பாரை, திரளி போன்ற மீன்களே கொண்டு வரப் படுகின்றன என்றும் தெரிவித்தனர். இவை கிலோ 200 தொடக்கம் 350 ரூபா வரையில் விற்கப்படுகின்றன.

அதேவேளை, தற்போதைய காலநிலை காரணமாக ஆழ்கடல் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளது என்று மீனவர்கள் தெரிவித்தனர். தற்போது இடியுடன் கூடிய காலநிலை காணப்படுவதாகவும், கடல் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுவதாலும் தாம் ஆழ்கடல் மீன்பிடிக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொண்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ற-17)

# வாகன புகைச் சோதனை நிலையம் முல்லையில் அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.1

வாகன புகைச் சோதனை நிலையம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இல்லாத காரணத்தால் தாம் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாகனவரி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வாகனப் புகைச் சோதனை மேற்கொள்வது அவசியமானதாகும்.

வாகனங்களுக்குப் புகைச் சோதனை மேற்கொள்வதற்கு முல்லைத்தீவில் நிரந்தர நிலையம் ஒன்று இல்லை என்று அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

வாரந்தோறும் வெள்ளிக்கிழமை நடமாடும் புகைப் பரிசோதனை நிலையம் நடத்தப்படுகின்றது என்று தெரிவித்த பொதுமக்கள், அன்றைய தினமே இராணுவத்தினர் முதல் கொண்டு பொதுமக்கள் வரையில் அனைவரும் வாகனங்களுக்குப் புகைப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று தெரிவித்தனர்.

இதனால் தாம் வாகன வரிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள நீண்ட காலம் காத்திருக்க வேண்டியுள்ளது என்று குறிப்பிட்ட மக்கள் இதுகுறித்து அதிகாரிகள் கவனமெடுத்து மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-21.101)

## பனம்பாத்தி அமைக்கும் பணி தாமதமாக ஆரம்பம்

வரணிப் பிரதேசத்தில் தற்சமயம் பனம் பாத்திகள் அமைக்கும் வேலைகள் பனம் கிழங்கு உற்பத்தியாளர்களினால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுவாக வயல் விதைப்பு வேலைகள் முடிவடைந்த பின்னரே பனம் பாத்திகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படுவது வழமையானது என்றும் தொடர்ந்து கடும் கோடை நிலவியதால் இந்த வேலைகள் தாமதம் அடைந்தன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் இந்த ஆண்டு பனம் கிழங்கு உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்படும் என்று எதிர்வு கூறப்படுகிறது. எதிர் வரும் ஆண்டில் பனம் உற்பத்திகளான ஒடியல், புளுக்கொடியல் என்பவற்றுக்கு பெரும் மவுசு ஏற்படும் நிலை உள்ளதாக பனம் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (ற-122)

# முல்லை. விவசாயிகளுக்கு உப உணவுத் தானியங்கள்

யாழ்ப்பாணம், நவ.1

மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் 100 பேருக்கு உப உணவுச் செய்கைக்கான தானிய விதைகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

மாகாண விவசாய அமைச்சின் மா வட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப் பாளர் அற்புதசந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு கொக்குத் தொடுவாய் நிலக்கடலை உற்பத்தியாளர் சங்க கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

முல்லைத்தீவு, கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கே இவை வழங்கப்பட்டன. விவசாயி ஒருவருக்கு 2 கிலோ நிலக்கடலை, 2 கிலோ பயறு, 2 கிலோ உழுந்து என்பன வழங்கப்பட்டன. அத்துடன் கத்தி, மண் வெட்டி போன்ற விவசாய உபகரணங்களும் வழங்கபட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் அதிகாரிகள், விவசாயிகள் கலந்துகொண்டனர். (ற)

# இந்தியாவில் இருந்து 998 குடும்பங்கள் போரின் பின்னர் நாடு திரும்பியுள்ளன

## மாவட்ட செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.1

போர் முடிந்த பின்னரான 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அகதிகளாக தங்கியிருந்த 998 குடும்பங்கள் யாழ்.குடாநாட்டின் 15 பிரதேச செயலாளர்கள் பிரிவுகளிலும் மீள்குடியமர்ந்துள்ளன என்று மாவட்டச் செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இடம்பெற்ற போர் காரணமாக வடக்கு, கிழக்கின் சகல மாவட்டத்தையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் அயல்நாடான இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து, தமிழ் நாட்டின் பல முகாம்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர். அங்கு அவர்கள் நீண்டகாலம் பெரும் நெருக்கடியின் மத்தில் வாழ்ந்த நிலையில் தற்போது இலங்கையில் நிலவும் சூழலை அடுத்து தாயகம் திரும்பி வருகின்றனர்.

இதுவரை காலமும் யாழ்.குடாநாட்டுக்கு மட்டும் 998 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரம் 814 பேர் திரும்பியுள்ளனர்.

அவர்கள் யாழ்.குடாநாட்டின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மீளக்குடியமர்ந்துள்ளனர். தெல்லிப்பழையில் 63 குடும்பங்களும், பருத்தித்துறையில் 141 குடும்பங்களும், கரவெட்டியில் 44 குடும்பங்களும், கோப்பாயில் 44 குடும்பங்களும், நல்லூரில் 77 குடும்பங்களும், வேலணையில் 85 குடும்பங்களும், நெடுந்தீவில் 44 குடும்பங்களும், சாவகச்சேரியில் 72 குடும்பங்களும், சண்டிலிப்பாயில் 60 குடும்பங்களும், சங்கானையில் 45 குடும்பங்களும், உடுவிலில் 21 குடும்பங்களும், மருதங்கேணியில் 30 குடும்பங்களும், ஊர்காவற்றுறையில் 66 குடும்பங்களும், காரைநகரில் 5 குடும்பங்களும், யாழ்ப்பாணத்தில் 191 குடும்பங்களும் மீள்குடியமர்ந்துள்ளன என்று மாவட்டப் புள்ளி விவரங்கள தெரிவிக்கின்றன. (ற-101)

# முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை இனச் சுத்திகரிப்பல்ல

## சிவமோகன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ.1

தமிழரின் விடுதலைப் போராட்டம் முடக்கப்படுவதற்கு அனுமதிக்க முடியாத நிலையிலேயே விடுதலைப் புலிகளால் முஸ்லிம் மக்கள் வட பகுதியில் இருந்து வெளியேற்றப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதே தவிர அவர்களுடைய காணிகளை தமிழர்கள் அபகரிப்பதற்கு விடுதலைப்புலிகள் எப்போதும் அனுமதிக்கவில்லை. - இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியா றோயல் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இராணுவம் தமிழ் முஸ்லிம் மக்களின் வடக்கு, கிழக்கு மாகாண காணிகளை அபகரித்து சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளித்தது போல் விடுதலைப்புலிகள் முஸ்லிம் மக்களின் காணிகளை அபகரிக்க அனுமதிக்கவில்லை.

நான் வன்னி நிலப்பரப்பில் வாழ்ந்தவன். வன்னி நிலப்பரப்பில் நடந்தேறிய அரசியல் போராட்ட சூழல் தெரிந்தவன். துரதிர்ஷ்டவசமான ஒரு சூழலில் தமிழரின் விடுதலைப் போராட்டம் முடக்கப்பட அனுமதிக்க முடியாத நிலையிலேயே முஸ்லிம் மக்கள் வட பகுதியில் இருந்து விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்படவேண்டி இருந்தது. இருப்பினும் முஸ்லிம் மக்களின் காணிகளை தமிழ் மக்கள் அபகரிக்க என்றும் விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை. விடுதலைப் புலிகள் தூரநோக்கில் செயற்பட்டதால் தான் இன்று எவ்வித தங்கு தடையும் இன்றி முஸ்லிம் மக்கள் தமது காணிகளில் முல்லை மாவட்டத்தில் குடியேறக்கூடியதாக இருக்கிறது.

விடுதலைப்புலிகளின் ஆரம்பகால போராட்டத்தில் முஸ்லிம் இளைஞர்களும் முக்கிய பங்கு வகித்தனர். முஸ்லிம் மக்களை இனச்சுத்திகரிப்பு செய்யும் நோக்கில் விடுதலைப்புலிகள் செயற்படவில்லை. அதனால்தான் 20 ஆண்டு காலத்தின் பின்னும் முஸ்லிம் மக்கள் தமிழர்களுடன் சேர்ந்து மீள் குடியேறி வருகிறார்கள்.

வடக்கு கிழக்கு மாகாணம் முஸ்லிம் தமிழ் மக்கள் வாழும் தமிழ் மொழி பேசும் மாகாணம். இங்கு முஸ்லிம் மக்களுக்கு எதிராக எந்த ஒரு தமிழனும் யாதார்த்தத்துக்கு மாறாக செயற்படமாட்டான். ஒரு சில தமிழ் முஸ்லிம் இனவாதிகளால் தமிழ் மொழி பேசும் எமது மக்களின் ஒற்றுமை குலைக்கப்பட இடமளிக்க முடியாது - என்றார். (ற-21)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475,
021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு முஸ்லிம்கள் மீள்குடியேற்றம்: விரைந்து மேற்கொள்ள வேண்டும்

யாழ்ப்பாணத்தில் வசித்த முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்து விட்டன. அது குறித்த கவனவீர்ப்புப் போராட்டம், நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது.

கொழும்பிலும் அதனை நினைவு கூரும் வகையில் நிகழ்வு ஒன்று நடைபெற்றது. அதில் அமைச்சர்கள் டி.எம். சுவாமிநாதன், மங்கள சமரவீர, ரவூப் ஹக்கீம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் பங்குபற்றினர்.

அங்கு உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர--

பௌத்த நாடு என்ற பெயரில் மிகவும் மோசமான வகையில் சிறுபான்மை இன மக்கள் அடக்கப்பட்டதுடன், திட்டமிட்ட இன அழிப்பும் அடக்குமுறையும் கடந்த காலங்களில் இடம்பெற்றன.

அந்த நிலையிலிருந்து மக்களையும் நாட்டையும் விடுவித்து ஜனநாயகத்தின் பாதையில் திருப்பி உள்ளோம். நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க பல வழிகள் உள்ளன. தீர்வு மிக அண்மித்துள்ளது. தமிழ், முஸ்லிம் மக்கள், எங்களுடன் ஒன்றிணைந்து இலங்கையைக் கட்டி எழுப்ப வேண்டும்-- என்று கேட்டுக்கொண்டார்.

அத்தோடு;

பெரும்பான்மையான முஸ்லிம்கள் இன்னமும் தமது சொந்த மண்ணுக்கு -- இடங்களுக்கு - செல்லமுடியாத நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

உள்ளக விசாரணை மற்றும் தீர்வுப் பொறிமுறையில் முஸ்லிம் மக்களின் கரிசனைகளும் உள்ளடக்கப்படும். அமைச்சர்கள் மற்றும் அரச நிறுவனங்களை இணைத்து உத்தேச தீர்வுத்திட்டம் வகுக்கப்பட்டு அரசினால் வழங்கப்படும் - என்றும் அமைச்சர் மங்கள சமரவீர-- வாக்குறுதி அளித்துள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான எம். ஏ. சுமந்திரன், மேற்குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு வெளியிட்ட கருத்தும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

வடக்கில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு, இனச் சுத்திகரிப்புச் செய்யப்பட்டமை துரதிர்ஷ்டவசமான சம்பவம். அதற்கான பொறுப்பை ஒவ்வொரு தமிழ் மகனும் ஏற்றுக் கொண்டாக வேண்டும். 25 ஆண்டுகள் கழிந்தும் அது மாற்றியமைக்கப்படாமை மிகவும் வருத்தத்துக்கு உரியது - என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ளிக்கிழமை அரங்கம் என்ற (Friday Forum) அமைப்பும்--

சுமார் 75,000 முஸ்லிம் மக்கள் வடக்கில் - யாழ்ப்பாணத்தில் - இருந்து துரத்தப்பட்டு 25 ஆண்டுகள் கடந்த நிலையில் ---

அவர்களை மீளக் குடியமர்த்துவதற்கு அரசு தாமதிக்காது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது.

தமிழ் - முஸ்லிம் நல்லுறவு ஏற்படுத்தப்பட வேண்டும். அதனூடாகவே தமிழ் - முஸ்லிம் மக்கள் இடையேயான கசப்புணர்வைப் போக்க இயலும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு முஸ்லிம்களின் மீள்வருகைக்கு அர்த்தமுள்ள நல்லிணக்கம் உருவாக்கப்பட வேண்டும்; அது நடைமுறை ரீதியில் பரம்பலாக்கப்பட வேண்டியதும் தவிர்க்க முடியாத ஒன்று எனவும் வெள்ளி அரங்கம் வலியுறுத்தி உள்ளது.

அது அரசினாலும், சம்பந்தப்பட்ட ஏனைய தரப்புக்களாலும் உள்வாங்கப்படுவது அத்தியாவசியம்.

மேலும் ---

வடக்கில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு அவர்கள் புத்தளத்தை அடைந்தவேளை - -

தாம் வெளியேறியதைத் தாங்க முடியாத தமது தமிழ் அயலவர்கள், விம்மி விம்மிக் கதறி அழுதார்கள் என்றும் -- -பல மைல் தூரம் கால் நடையாகப் பயணம் செய்த வேளை, வழிதோறும் உணவு, குடி தண்ணீர் மற்றும் பிரயாண வசதிகளைச் செய்து கொடுத்ததாகவும், இடப்பெயர்வுக்கு உள்ளான முஸ்லிம் சகோதரரொருவர் தெரிவித்தமையும் ஞாபகத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

அவர்களது மீள்குடியேற்றத்துக்கு அரசு விரைந்து வழி சமைப்பது தட்டிக்கழிக்க முடியாத கடமைகளில் ஒன்றாகும். தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை அளிக்கும் பட்சத்தில் வடக்கின் முஸ்லிம் சகோதரர்களையும் கைதூக்கி விட வேண்டும். நல்லாட்சி அரசு இதனை மனமார்ந்து செய்யுமா? எதிர்பார்க்கலாமா? ..........

இடப்பெயர்வின் வலியும், சொந்த இடத்தில் மீளக் குடியேற முடியாத துன்பதுயரமும் அதனை அனுபவித்தவர்களுக்கே தெரியும்.

வடக்கு முஸ்லிம்கள் தமது சொந்த நிலங்களில் இருந்து அந்நியமாக்கப்பட்டு கால் நூற்றாண்டு ஆகிவிட்டது. அவர்களின் தலைமுறைகள் கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் தட்டி வீழ்த்தப்பட்டிருப்பர் என்பது வெள்ளிடை மலை.

அந்த மக்களின் மீள்குடியேற்றத்துக்கு மனப்பூர்வமாக ஒத்துழைப்பு வழங்குவது மனிட நேயம் கொண்ட ஒவ்வொருவரினதும் தலையாய கடமை.

அரசியல் பிணக்குகளை ஊக்குவித்து வளர்த்த, அப்போதைய அரசின் பாவத்தைப் போக்கும் பொறுப்பு, இப்போதைய அரசுக்கே உண்டு; அதனை நல்லாட்சி அரசு மறந்துவிடலாகாது.

# வடமராட்சியில் நாடக விருந்து

உள்நாட்டுப் போர் நடைபெற்ற மற்றும் போர் முடிவுற்ற காலத்தில் காணப்பட்ட 'தறுக்கணிப்புச் சூழல்' கலைப் படைப்புக்களைப் பிரசவிக்க விடவில்லை. ஒருவகையான 'மலட்டுத் தன்மையே' காணப்பட்டது அல்லது 'குறைப்பிரசவங்களே' நடந்தன எனலாம். இந்தச் சூழலில் 2013ஆம் ஆண்டிலிருந்து 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்ற கோசத்துடன் செயல் திறன் அரங்க இயக்கம் இயங்கி வருகின்றது.

கடந்த அரசின் கெடுபிடி காரணமாக சுதந்திரமான படைப்புக்கள் வெளிவர முடியவில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை. இந்தச் சூழலில் செயல்திறன் அரங்க இயக்கம் நாடகத்துறை தொழில் முறை சார்ந்ததாக வளர்ச்சிபெற வேண்டும் என்ற நோக்கோடு கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக இயங்கி வருகின்றது.

இதன் முக்கியமான செயற்பாடாக வருடாந்தம் நாடகத் திருவிழாவை நடத்துவதைக் குறிப்பிடலாம். 2013ஆம் ஆண்டு முதலாவது நாடகத் திருவிழா நல்லூரில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்காவில் திறந்த வெளியில் அமைக்கப்பட்ட மேடையில் இளையோர் நாடக விழாவாக நடைபெற்றது. இதில் ஒன்பது நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இதன் பின்னர் 2014 ஆம் ஆண்டு புதிதாக 'பஞ்சபூத அரங்கு' அறிமுகம்செய்யப்பட்டது. பல்வேறு அரங்கப் பாரம்பரியங்களை உள்வாங்கி புதிய வடிவிலானதாக இந்த அரங்கு உருவாக்கப்பட்டது. அதே ஆண்டில் நல்லூர்த் திருவிழாக்காலத்தை முன்னிட்டு 9 நாள்கள் தொடர்ச்சியாக நாடகத் திருவிழா ஒழுங்கு செய்து நடத்தப்பட்டது. இதில் 4 நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

தொடர்ச்சியாக, 2015 ஆம் ஆண்டு ஏப்ரலில் 'ஓராள் அரங்கை' அறிமுகம் செய்து போட்டிகளை நடத்தி ஓராள் அரங்கத் திருவிழாவையும் செயல் திறன் அரங்க இயக்கம் நடத்தியிருந்தது. இதில் 24 தனியன்களின் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வருடந்தோறும் நடத்தப்படுவதான ஏற்பாடுகளுடன் நல்லூர் நாடகத் திருவிழா அறிமுகம் செய்யப்பட்டது. தொடர்ச்சியாக 12 நாள்கள் இந்த விழா நடைபெற்றது. இதில் 20 நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. சிறுவர் நாடகங்கள், பாரம்பரிய நாடகங்கள், ஓராள் அரங்கிற்கான நாடகங்கள், கவிதை நாடகங்கள், நவீன நாடகங்கள், வேடமுக நாடகங்கள் என்று பல்வேறு வகை சார்ந்த நாடகங்கள் இந்த நாடக விழாவில் மேடையேற்றப்பட்டன. இதனை ஈழத்து நாடக வரலாற்றில் ஒரு வரலாற்றுச் சாதனை எனலாம். இந்த நாடக விழாவில் மேடையேற்றப்பட்ட நான்கு நாடகங்கள் வடமராட்சியில் முதல் தடவையாக மேடையேறவுள்ளன. இந்த முயற்சியை வடமராட்சி லயன்ஸ் கழகம் சிரமேற்கொண்டு மேற்கொள்கிறது. ஒரு தேசத்தின் உயிர்ப்புக்கு கலைச்செயற்பாடுகள் சான்று பகர்கின்றன. அதனை ஊக்குவிப்பவர்கள் உன்னதமானவர்கள். போற்றப்பட வேண்டியவர்கள்.

இன்று நடைபெறவுள்ள நாடக விழாவில் ஈழத்து நாடக உலகின் தாய் என்று வர்ணிக்கப்படும் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'பஞ்சவர்ண நரியார்' சிறுவர் நாடகமும், தே.தேவானந்தின் 'சிரிப்பு மூட்டை' சிறுவர் நாடகமும், 'மரணச்சான்றிதழ்' ஓராள் அரங்கிற்கான நாடகமும் மற்றும் 'ஏகாந்தம்' வேடமுக நாடகமும் மேடையேறுகின்றன.



உதயன்
ஊடக அனுசரணை

### சிரிப்பு மூட்டை சிறுவர் நாடகம்

'சிரிப்பு மூட்டை' நாடகம் பெரியவர்களும் சிறுவர்களும் இணைந்து நடிக்கும் நாடகமாகும். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையால் அவதியுறுகின்ற, நெருக்கடிக்குள் தவிக்கின்ற சிறார்களின் பிரச்சினைகளையும் அவர் தம் விருப்பத்தையும் இந்த நாடகம் பேசுகிறது. தனது யதார்த்த வாழ்வில் கிடைக்காததை தனது கனவுலகில் பெற முயற்சிக்கின்ற சிறுவன் ஒருவனின் கதையே மேடை வெளியை நிரப்புகிறது. மனிதனுக்கு மிகத் தேவையானது சிரிப்பு. அதனைத் தொலைத்துவிட்டுத் தேடுவதும் பின்னர் அதனைக் கண்டு கொள்வதும் இதன் சுவாரசியமாகும்.



### பஞ்சவர்ணநரியார் சிறுவர் நாடகம்

இது சிறுவர்களுக்காக பெரியவர்கள் நடிக்கின்ற நாடகமாகும். 2003ஆம் ஆண்டு குழந்தை ம.சண்முகலிங்கத்தினால் எழுதப்பட்டு செயல் திறன் அரங்க இயக்கத்தினால் தயாரிக் கப்பட்டு 150க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் மேடையேற்றப்பட்டது. தற்போதுமீண்டும் 12 ஆண்டுகளின் பின்னர் இந்தநாடகத்தை செயல்திறன் அரங்க இயக்கம் தயாரித்துள்ளது. சிறுவர்களுக்கு பெருவிருந்தாக அமைகின்ற இந்தநாடகம் தொடர்ச்சியாக பல இடங்களில் மேடையேற்றப்பட்டு வருகிறது.

### 'ஏகாந்தம்' வேடமுக நாடகம்

ஈழத்து நவீன தமிழ் அரங்கில் புதிய நுழைவாக 'ஏகாந்தம்' நாடகத்தை இனங்காண முடியும். இதனை வேடமுக நாடகம் என்று அழைக்கலாம். முழுவேடமுகத்தை (Full mask) பயன்படுத்தி முதியவர்கள் இருவரின் தனிமையை இந்த நாடகம் பேசுகிறது. இதில் நிழற் கட்டவுட் பொம்மைகள் பயன்படுத் தப்பட்டு சில காட்சிகள் அளிக்கை செய்யப்படுகின்றன. காலச்சூழல் காரணமாக தனிமையில் வாழும் முதியோர்களின் அவலம் இங்கு வெளிப்படுகிறது. பாத்திரங்களின் உரையாடல்கள் ட்ப்பிங் குரல்களால் தரப்படுவதும் இந்த வகை நாடகங்களின் சிறப்பாகும்.

### 'மரணச்சான்றிதழ்' ஓராள் அரங்குக்கான நாடகம்

இது தனிஒருவர் மேடைவெளியை பல பாத்திரங்களாக நிரப்புவதாகும். இந்த அரங்க முறையை செயல் திறன் அரங்க இயக்கம் அறிமுகம் செய்து ஊக்கப்படுத்தி வருகின்றது. இந்த நாடகத்தில் தனது கணவனை இராணுவத்திடம் கையளித்து அவர் பற்றிய எந்தத் தகவலும் தெரியாது காத்திருக்கும் பெண்ணொருவரின் கதை பேசப்படுகிறது. கொடிய போர் கேள்விக் குள்ளாக்கப்படுகிறது. எமது நாட்டில் தீர்வின்றி நீடிக்கின்ற காணாமற்போனோர் பிரச்சினை வெறும் மரணச்சான்றிதழ்களால் மட்டும் தீர்க்கப்படக் கூடியதல்ல என்பதை நாடகம் ஆணித்தரமாக முன்வைக்கின்றது.

கடந்த மாதம் கிழக்கு பல்கலைக்கழக விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் மேடையேற்றப்பட்டு வரவேற்பைப் பெற்ற இந்த நாடகங்கள், வடமராட்சி மக்கள் பார்த்து மகிழ்வதற்காக வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், நெல்லியடி மத்திய கல்லூரியில் இன்று நவம்பர் முதலாம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளன. சிறுவர்கள், பெரியவர்கள் மற்றும் நாடக ஆர்வலர்களுக்கு பெருவிருந்தாக நிச்சயம் அமையும்.

## பரிசளிப்பு விழா

கரணவாய், நவ.1

தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் இரா.சிறி நடராசா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் மகளிர் விவகார இராஜங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (த-108)

## தொழில் வாய்ப்புக்களை
### அதிகரிக்க கலந்துரையாடல்

நாட்டில் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் மக்களின் வருமானத்தை அதிகரித்தல் பற்றியதான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றுள்ளது.

பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைத் தெரிவுக்குழு ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் இந்த விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

புதிய தொழில்வாய்ப்புக்கள், மக்கள் வருமானத்தை அதிகரித்தல், கிராமிய பொருளாதார அபிவிருத்தி, நாட்டின் வரிக்கொள்கை மற்றும் பல்வேறு துறைகளின் ஊடாக மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களை அதிகரித்தல், உள்நாட்டுக் கைத்தொழில்களை மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் பற்றியும் அதில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்தி நிலைமைகள் மற்றும் அவை பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ள பொருளாதார முகாமைத்துவம் பற்றிய தெரிவுக்குழுக் கூட்டத்தை மாதாந்தம் நடத்தவும் அதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்காக என்ன திட்டங்கள் தயாரிப்படுத்தப்பட்டுள்ளன என்பது பற்றிய விடயங்கள் தெரிவிக்கப்படவில்லை.

அந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் பல அமைச்சர்களும் கலந்து கொண்டனர். (த-4)


**தையல்**

இந்தியாவில் 8 வருட அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும்

இடம் : குமாரசாமி வீதியிலிருந்து பிரம்படி வீதி, கோக்குவிலுக்கு மாற்றப்பட்டுள்ளது.

தொடர்பு : 076 639 9277

**விற்பனைக்கு**

HP (cp-1025) கலர்பிறிண்டர் மற்றும் AC outdoor units, தம்புரோ work station partition ஆகியவை விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0714620806

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2693 திகதி 2015-10-31

25 34 35 52 F 37

ரூ. 32,399,925/-

SUPER BALL

சீட்டிழுப்பு எண் 416

சீட்டிழுப்பு திகதி 2015.10.31

31 40 49 61 B

ரூ. 40,293,280/=

**மகப்பேறு இனவிருத்தி நிலையம்**

மகளிருக்கு குழந்தைப்பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடிவயிற்றுநோ கருச்சிதைவு மாதவிடாய் உட்பட சகல விதமான பிரச்சினைகளுக்கு சிகிச்சையளித்தலும் மகப்பேறு இனவிருத்திக்கான சிகிச்சைகளும், IVF, ICSI யும் கொடை முட்டை(donaor egg), விந்து நன்கொடை (donaor sperm) போன்ற சிகிச்சைகளை ஐக்கிய இராட்சியத்தில் (UK) 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தம் அவர்கள் திருநெல்வேலி **நொதேன் சென்றல் வைத்தியசாலையில்** அளித்து வருகின்றார். சென்ற மாதம் இவரின் சிகிச்சை மூலம்இரு தாய்மாருக்கு சோதனைக்குழாய் மூலம் குழந்தைகள் பிறந்தது யாவரும் அறிந்ததே.

(c 19679) (14.15.16)

தொடர்புகளுக்கு:

திருமதி கௌரி இல: 077 343 9988

021 221 9988, 021 221 9977, 021 222 2263

**பி.ஜே. பர்னாண்டோ**

**பல் கட்டுபவர்கள், கண்பரிசோதனை செய்து கண்ணாடி வழங்குபவர்கள்**

**542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

வறுமைக்கோட்டுக்குட்பட்ட முதியோர்களுக்கான இலவச மூக்குக்கண்ணாடி விநியோகம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் தங்கள் பகுதி கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தும் கடிதத்துடன் நேரில் வந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றாம்.

பாடசாலை மாணவர்களுக்கும் வாடிக்கையாளருக்கும் விலைக்கழிவுடன் மூக்குக் கண்ணாடிகளை பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு:

077 684 5640, 077 864 3992 (65709) (10.17)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் கந்தையா தவம் (பவுன்ராஜா)

"வீறு எய்திமாண்டார் வினைத்திட்பம் வேந்தன் கண் ஊறு எய்தி உள்ளப்படும்"



மண்ணக வாழ்வு

01.01.1942 - 30.09.2015

34/1, கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

பூவிலும் மென்மையாம் இதயம் - என்றும்
புன்னகை செய்திடும் வதனம்
தேனிலும் இனியதாம் வார்த்தை - மக்கள்
சேவையே உங்கள் வாழ்க்கை
வானிலும் உயர்ந்த நற்குணங்கள் அதில்
வண்ணமாய்த் தோன்றிடும் செயல்கள்
மானுடன் என்றிடும் வாழ்வில் பல
மாண்புகள் கொண்டனை கண்டோம்.

"உங்கள் ஆத்மா இறைவனுடன்
உங்கள் நினைவுகள் எங்களுடன்"

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர். (65707)

# மரண அறிவித்தல்

## திருமதி வாலாம்பிகை நடராசா



காரைநகர், களபூமி, சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் கருங்காலியை வசிப்பிடமாகவும் இல.993/6, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி வாலாம்பிகை நடராசா 31.10.2015 சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி(விசுவப்பா) - சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் சிவகுதன் (உரிமையாளர் - சித்தி விநாயகர் களஞ்சியம், சாவகச்சேரி), காலஞ்சென்ற சிவநேசன், சிவசோதி(உரிமையாளர் - சித்தி விநாயகர் களஞ்சியம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்ஜினி, ஜெயதேவி(ஆசிரியை - யா/சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம், குருநகர்) ஆகியோரின் அன்புமாமியாரும் மதிவதனன், சுகாணன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, வைத்திலிங்கம், சரஸ்வதி, நேசரத்தினம், தியாகர்ாசா பூமணி மற்றும் சௌந்தராம்பிகை ஆகியோரின் பாச மிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை மனோன்மணி மற்றும் நல்லம்மா, பரமேஸ்வரி, நவரத்தினம், இராசலட்சுமி, கனகலட்சுமி, தெய்வநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கதிரவேள், சரஸ்வதி, நாகலிங்கம், சரஸ்வதி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலை8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வண்ணார்பண்ணை கோம்பயன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர். (65702) (14.15.16)

இல.993/6, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

077 539 6472, 077 800 1387

# மரண அறிவித்தல்

## திருமதி சிவதேவி செல்வரட்ணம்



பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும் 22A, UC குவாட்டஸ் மன்னார் வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவதேவி செல்வரட்ணம் 30.10.2015 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராசா - சத்தியதேவி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - ராசமணி தம்பதியரின் மருமகளும் ஓய்வு பெற்ற உதவி பெறியியலாளர்வீடமைப்புத்திட்ட அதிகாரசபை செல்வரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் ரவி (கனடா) அவர்களின் அன்புச் சகோதரியும் சிவதர்சன்(கனடா), டினேசன் (கனடா), மயூரி (திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாருமதி(கனடா) அவர்களின் மைத்துனியும் நிஷா(கனடா), சியாம்குமார் (திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் பவசாயி, திரிசாயி, தஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.11.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று தட்சனாங்குளம் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 024 222 2700, 077 729 9022

தகவல் : க.செல்வரட்ணம்(கணவர்) (19688) (14.15.16)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 23 . 11 . 1925



மறைவு 27 . 10 . 2015

## அமரர் சின்னத்தம்பி பொன்னுத்துரை

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)

பெரும் விருட்சமாக கிளை பரப்பிய உங்கள்
நிழலில் இளைப்பாறி காத்திருந்தோம்
பெரியப்பா காலனவன் கவர்ந்திடவே!
கலங்குகின்றோம் நாம் தனிமையில்!

எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பெரியப்பா லண்டனில (27.10.2015) காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குமரன் ஸ்ரோஸ், 233, K.K.S வீதி, சுன்னாகம்.

மதிவாணன் கல்யாணி(ராஜி) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## R.V சுப்பையா செட்டியார் கந்தசாமி (B.A)

(ஓய்வுபெற்ற ஆசிரியர், சென்யோன்ஸ் கல்லூரி)



யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் 25/5, புங்கங்குளம் வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சு.கந்தசாமி நேற்று (31.10.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற R.V சுப்பையா செட்டியார் சின்னத்தாய் அம்மாள் தம்பதியரின் அன்பு மகனும் சன்னாசிச் செட்டியார் மீனம்மாள் தம்பதியரின் அன்பு மருமகனும் பார்வதியின் பாசமிகு கணவரும் இந்துமதி, ஜமுனா, காலஞ்சென்ற நிஷாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரகுமாரின் அன்பு மாமனாரும் இ.ஜெயலட்சுமி (இந்தியா) R.V.S பாலசுப்பிரமணியம், S.ராமசாமி (சட்டத்தரணி, இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் V.Kராசையா (இந்தியா) சுப்புலட்சுமி, மகேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

25/5, புங்கங்குளம் வீதி, சுண்டுக்குளி.

தகவல் குடும்பத்தினர் 077 0712105

## நாய்க்குட்டி விற்பனைக்கு

2 மாதம் நிரம்பிய டோபர்மன் (Doberman) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ஊசி போடப்பட்டுள்ளது. Black மற்றும் Liver Brown நிறங்கள் உண்டு.

தொ.பே. 077 171 3647

## அறைகள் நாள் வாடகைக்கு

800.00- 2950.00/- A/C இணைந்த குளியலறை கோட்டையிலிருந்து HOTEL VILLA வரை போக்குவரத்து இலவசம். 422/1,Galle Road வெள்ளவத்தை. 072 255 2222 011 499 9944 Mohamed

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், திருநெல்வேலி ஆடியபாதம் வீதி யில் இல.187இல் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு. N.G.O அல்லது காரியாலய பாவனைக்கு உகந்தது. தொடர்பு- 075 034 7195

## மணமகன்கள் தேவை

யாழ்.இந்து 36 வயது டொக்டர், வவுனியா32 வயது ஆசிரியர், புத்தளம் 28 வயதுபடித்த, 32 வயது கனடா பட்டதாரி(B.Sc) , சிற்றிசன், 28 வயது திருகோணமலை பட்டதாரி ஆகிய மணமகள்களுக்கு மண மகன்கள் தேவை. (65660) (14.15.17)

தொடர்பு:
066 205 5077, 077 552 8882

## வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ். தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு முன்பாக இல.8புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.

தொடர்பு: 011 250 4281
071 299 1256
(f/19586)(11.15.16.17)

## கடைகள் வாடகைக்கு

யாழ்.ஸ்ரான்லி வீதியில் கடைகள் வாடகைக்கு உண்டு. கட்டடத் தொகுதியாகவும், தனித் தனியான கடைகளாகவும் வாடகைக்கு வழங்கப்படும்.

தொடர்பு:
071 443 7336, 077 847 5072

## மணமகள் தேவை

84இல் பிறந்த அவிட்ட நட்சத்திரம், உதயத்துச் செவ்வாய், பாவக்கிரகம் 47 உடைய, அரச உத்தியோகத்தில் உள்ள மணமகனுக்கு, உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ தகுந்த மணமகள் தேவை.


தொடர்பு: 077 859 5408

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்.கச்சேரியை அண்டிய பகுதியில் தங்கி நின்று அல்லது வந்து போகக் கூடிய, வீட்டு வேலைகள் மற்றும் சமையல் தெரிந்தவர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 076 531 0421

## Ave Maria Travels & Tours



KDH 223வான் சேவை
தொடர்பு:077 716 5230,077 579 2295
(J.Ria)

## விற்பனைக்கு

கறுப்பு நிற Rot weiller - German supperd பெண் 2மாத நாய்க்குட்டிகள் விற்பனைக் குண்டு. பூச்சி மருந்து, தடுப்பு ஊசி போடப் பட்டது. விலை நேரில்.

சிவானந்தன் - 077 634 1541

## வீடு வாடகைக்கு

61/6, நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்த 10 அறைகள், 2 Hall, 2 சமையலறையுடன் கூடிய 4000 சதுர அடி, மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. கடந்த 6 வருடங்களாக அரச நிறுவனத்தின் பாவனையிலுள்ளது. அரச தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு- 076 843 0645

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் வியாபார ஸ்தாபனத்துக்கு வேலையாள்கள் தேவை.

1. விற்பனையாளர்
2. சிட்டை எழுதுநர்
3. உதவியாளர்
4. கணக்காளர்
5. ஆங்கில அறிவுள்ள 45 வயதுக்கு மேற்பட்ட நபரும் தேவை.

077 361 1282

## இந்திய சாஸ்திரியார் வருகை

கிளிநொச்சி புண்ணிய நகருக்கு வருகை தந்துள்ளார். ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண் கணிதம் மற்றும் திருமணத் தடை, கல்வித்தடையா? குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளி நாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்க வும். காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.

இல.529, திருநகர் வடக்கு, கிளிநொச்சி.
072 681 6681, 072 681 6691





நாம் உங்களுக்கு உதவ தயார்
•Visit Visas •Rejected Visas
நிராகரிக்கப்பட்ட மற்றும் புதிய விண்ணப்பங்கள்
*Appeals & Rejected Visas *Special Occasions
*Family & Friends Visit *Medical Visits
*Tourist/Business Visits
• Australia • Italy • Switzerland
• Canada • Japan • Sweden
• China • New Zealand • UK
• France • Netherlands • USA
• Germany • Norway
100% உத்தரவாதம்*
THE VISA CENTRE
Migration, Work & Study Solutions
Level One, 21, Maitland Crescent, Colombo 07.
HOTLINES:
0777 633 955 / 0777 633 977 / 0773 444 447
The Visa Centre
Tel: 5 334433 Fax: 5 352303 Email: info@thevisacentre.com
www.thevisacentre.com


## அறைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதி, யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் வேலை பார்க்கும் பெண்கள், சிறிய படிக்கும், வேலை பார்க்கும் குடும்பத்துக்கு சகல வசதியுடன் அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு- 831/34, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 021 222 1781

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 34 வயதுடைய லண்டன் விசா உள்ள மணமகளுக்குத் தகுந்த மணமகன் தேவை. (லண்டன் விரும்பத்தக்கது)

தொடர்பு: 00 44 74 6629 5010 (U.K)
(65662)(11.15.16)

## காணி விற்பனைக்கு

வேம்பிராய் - வரணிவீதி, தாவளை இயற்றாயில் கல்வளைப் பிள்ளையார் கோயில் வீதி அருகே அமைந்த 10 பரப்புக் குடியிருப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு- 077 911 6022

## வீடு காணி விற்பனைக்கு

உரும்பிராய் பலாலி வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடும், கோண்டாவிலிலும் இராசவீதி, கோப்பாயிலும் பண்ணை செய்யக் கூடிய தோட்டக்காணிகளும் விற்பனைக்கு உள்ளன. தரகர் தேவை யில்லை.

தொடர்பு: 077 925 9089 (65663)(11.15.16)

## கற்பிக்கும் ஆற்றல் கொண்டவர்கள் தேவை

தரம் 3 இல் கல்வி கற்கும் மாணவனுக்கு சகல பாடங்களையும் கற்பித்தல் மற்றும் பாடசாலை, பிரத்தியேக வகுப்புக்களுக்கு ஒழுங்குசெய்து அழைத்துச் செல்லல் ஆகிய திறன் கொண்டவர்கள் உந்துருளி சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (65669)(11.15.16)

தொடர்பு: 077 060 2224


Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்






விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையாக கச்சேரி- நல்லூர் வீதியில் 1¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 077 614 643

## மணமகள் தேவை

33 வயதுடைய பூரம் நட்சத்திரம், செவ்வாய் இல்லை. 19¾ கிரகபாவமுடைய, HNDA முடித்து லண்டனில் M.B.A முடித்த மண மகனுக்கு P.R.O உள்ள மணமகள் தேவை. (லண்டன் விரும்பத்தக்கது) தொடர்பு: 077 375 2476

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக பிறவுண் வீதியில் 3 அறைகளைக் கொண்ட மாபிள் பதித்த முதலாம் மாடியில் அமைந்துள்ள வீடு நிறுவனங்களுக்கு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 233 6238 (65669)(11.15.16)

## வீடு வளவு விற்பனைக்கு

இல.333, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப் பாணத்தில் பரப்பு 3 குளி 7.55 விஸ்தீரணம் கொண்ட வீடுவளவு விற்பனைக்குண்டு.

தொடர்பு- 076 702 3565

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள பான்சிக் கடைக்கு பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 076 688 2470

## வேலைவாய்ப்பு

ரூ.48000 அதி உயர் சம்பளம். விமான நிலையம், துறைமுகம், தனியார் தொழிற்சாலை ஆகியவற்றுக்கு (வயது: 18-40)ஆண், பெண், உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். 6 மாதத்தில் நிலையான தொழில். இன்னும் 50 வேலை வாய்ப்புகள் மற்றும் அதிஉயர் சம்பளம்.சிறந்த எதிர்காலம். வாய்ப்பைத் தவறவிடாதீர்கள். தொடர்புகொள்ளவும்:

077 956 9606, 075 420 4351

இலங்கை முழுவதும் இப்போது உடனடி வேலைவாய்ப்புகள். நீங்கள் எதிர்பாக்காத வருமானத்தை ஈட்டிக்கொள்ளலாம். சொக்லேட், கோடியல்,பாம்மா, சோயா, குளிர்பானம் ஆகிய துறைகளில் உடனடியாக 75 வேலைவாய்ப்புக்கள். (வயது: 18 - 55) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். ஆண், பெண். சம்பளம் (20000 - 40000) நாள் சம்பளம் - OTயுடன் 1600 (OT-1 Hrs) நாள் சம்பளம் பெற்றுக் கொள்ளலாம் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

T.P. 075 028 7319, 078 308 8234

நாள்சம்பளம் 1500/= மாதாந்தம் எவ்வளவு? உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். சொக்லெட், பாம்மா, ஐஸ்கிறீம் போன்ற தொழிற்சாலைகளின் அனைத்துப் பிரிவுகளுக்கும். வந்த நாளிலே வேலை. ஆண்/பெண், (18-55) OT உடன் 40000/= இற்கும் அதிகமான சம்பளம் (நாள்சம்பளம், கிழமைச்சம்பளம், மாதச் சம்பளம்) உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

T.P. 077 401 7543, 755 446 898

சொன்ன சம்பளம் கிடைத்ததா? மாதக் கடசியில் (8000 -12000) ஆகிய சம்பளமா கிடைத்தது. உணவு,தங்குமிடம்,உங்கள் சம்பளத்தில் கழித்துக்கொண்டார்களா? இதோ உண்மையான சம்பளம் நாள் சம்பளம் -1500/= உங்கள் விரும்பப்படி ஒவ்வொரு நாளும் சம்பளம் உணவு, தங்குமிடம் உடை ஆகியன முற்றிலும் இலவசம். உங்கள் சம்பளத்தை நீங்களே கணக்குப் போட்டு பார்த்துக்கொள்ளவும். (நாள்சம்பளம் 1500×25 Day= 37500) (உண்மையான சம்பளம்) பிரதான தொழிற்சாலைகளில் லேபல், உற்பத்தி, பொதியிடல் ஆகிய பிரிவுகளுக்கு, ஆண், பெண் (வயது: 18 -50) வரும் நாளிலே வேலை.

T.P. 775 977 259, 77 891 0598
(65679) (13.15.16)




நாளைய தலைவர்களுக்கு வழங்கப்படும் கௌரவிப்பு
பிரணாம புலமைப்பரிசில்
தொடர்ந்தும் 15வது தடவையாகவும்!
நீங்களும் பிரணாம புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பியுங்கள்!
2016 செலிங்கோ லைஃப் பிரணாம புலமைப்பரிசில் கீழ்வரும் பிரிவுகளின் வழங்கப்படவுள்ளது:
• ஆண்டு 5 புலமைப்பரிசில் - 2015
• க.பொ.த (சாதாரண தரம்) - 2014
• க.பொ.த (உயர் தரம்) - 2014
• தேசிய திறமை விருதுகள் - 2014/2015
பிரணாம புலமைப்பரிசில்
செலிங்கோ லைஃப்

## செயல்முறைப் போட்டி

வண்ணை–சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் வருடம் தோறும் நடத்திவரும் செயல்முறைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகள் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு என இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது. இதே வேளை தரம் 1,2 மாணவர்களுக்கான நீதிநூல் மனனப் போட்டியின் இறுதிச்சுற்றில் சுமார் 85 மாணவர்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. கோலம் போடுதல் போட்டி காலை 9 மணிக்கும், மாலை கட்டுதல் போட்டி முற்பகல் 10.15 மணிக்கும், தோரணம் பின்னுதல் போட்டி முற்பகல் 11.30 மணிக்கும் நடைபெறவுள்ளன. அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், போட்டியாளர்கள் போட்டிக்குரிய பொருள்களுடன் குறித்த நேரத்துக்குச் சமுகம் தரவேண்டும் எனவும் சைவசமய அபிவிருத்திக் கழக பரீட்சைச் செயலாளர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (ஐ-ரி6)


Yarl Beauty Academy
YARL BEAUTY ACADEMY
அழகுக்கலை பயிற்சிகள்
தீபாவளி திருநாளினை முன்னிட்டு 40% கட்டணக்கழிவில் புதிய பிரிவுகள் ஆரம்பம்
Certificate in Basic Beauty Course (ஒரு மாத கால அழகுக்கலை) 3600/= மட்டுமே.
Dip in Beauty Culture & Hair Dressing (மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
Cake Decoration Classes (கேக் ஐசிங்)
அனைத்து பயிற்சிகளும் கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
கிழமை நாள் புதிய பிரிவுகள் 06.11.2015 அன்று 10.00 மணிக்கு
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 07.11.2015 அன்று 10.00 மணிக்கு
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.
இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)



விநியோக முகவர்கள் தேவை
நீங்கள் மொத்த வியாபார நிலைய உரிமையாளரா...?
விநியோக முகவரா...?
நிறுவன உரிமையாளரா...?
அப்படி இருந்தாலும் இல்லாவிடினும் வெற்றிகரமான வியாபாரத்தின் உரிமையாளராவதற்கு இதோ உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்
இந் நாட்டின் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட டின் மீன் விற்பனையின் முன்னணி நிறுவனமாகிய நாம் எமது நிறுவனத்தின் விநியோக வலையமைப்பினை விரிவுபடுத்தும் முகமாக நாட்டின் அனைத்து பிரதேசங்களிலிருந்தும் முகவர்கள் தேவைப்படுகின்றனர்.
கவர்ச்சிகரமான விலைக்கழிவு வழங்கப்படும்
வங்கிப்பிணை (Bank Guarantee) அல்லது காசுக் கொள்வனவு மூலம் பொருட்களை பெற்றுக்கொள்ள முடியும்.
விண்ணப்பிப்பதற்கு அல்ல மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:
Ethniq Inter - Trade
இல.199/2, இராஜகிரிய வீதி, இராஜகிரிய.
தொலைபேசி: 076 822 8577
மின்னஞ்சல்: sales.ethniq@gmail.com



பரதநாட்டிய அரங்கப்பிரவேசம்



உரும்பிராய் கலைக்கோயில் நடன அதிபரான
ஸ்ரீமதி பத்மினி செல்வேந்திரக்குமாரின் மாணவியான
செல்வி அபிராமி திவாகரசர்மாவின்
பரதநாட்டிய அரங்கேற்றம்
இன்று (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ் வைபத்திற்கு
தலைவர்:
ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் J.P.
(சர்வதேச இந்துமத குருபீடாதிபதி)
பிரதம விருந்தினர்:
நாட்டிய பேராசான் கலைஞர் வேல் ஆனந்தன்
கௌரவ விருந்தினர்கள்:
நாட்டியவாரிதி திருமதி லீலாம்பிகை செல்வராஜா
கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன்
நாட்டிய கலைமணி திருமதி யசோதரா விவேகானந்தன்
சிறப்பு விருந்தினர்கள்:
வே.ஞானகாந்தன்
(யா/கொக்குவில் இந்துக்கல்லூரி, அதிபர்)
பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயா
(வாழ்நாள் பேராசிரியர்யாழ். பல்கலைக்கழகம்)
ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.
அத்தருணம் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
பெற்றோர் சிவஸ்ரீ நா.திவாகரக்குருக்கள் தி.ஜெயப்பிரபா
தி.ஜெயகிருதசர்மா (நன்றி)
குறிப்பு: நேற்றைய உதயனில் சிவஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் J.P. சர்வதேச இந்துகுருமார் ஒன்றிய தலைவர் என தவறுதலாக கொடுத்தமைக்கு மன்னிக்கவும், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி என சேர்த்துக்கொள்ளவும்.



இன்று முதல் (01.11.2015) கையிருப்பு உள்ளவரை
தீபாவளியை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை




கரன் வோட்ச் & ரேடியோ
இல. 26, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கரன் எலக்ரோனிக்ஸ்
இல. 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


WIN
1000
Mountain Bikes
Mom, Me & My MILO
போட்டி விதிமுறைகள்:
Nestlé
MILO
Chocolate Malt Food Drink
MILO ENERGY
Fuelling
the winning spirit
Nestlé


அறிமுகமாகிறது
New Clogard FRESH BLAST Gel
New Clogard FRESH BLAST Gel NELLI + ALOE VERA
New Clogard FRESH BLAST Gel CLOVE + EUCALYPTUS
FLUORIDATED GEL TOOTHPASTE
FIGHTS GERMS
FRESH ஆ சொல்லுங்க
ஆய்வுகூட பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டது
கிருமிகளை கட்டுப்படுத்தும்
பற்துளைகளிலிருந்து பாதுகாக்கும்
சுவாசத்திற்கு புத்துணர்ச்சியளிக்கும்
HEMAS

# ஆரோக்கிய முதுமை தருமே அர்த்தம் நிறைந்த வாழ்க்கை

வைத்தியர் பொ. ஜெசிதரன்
MBBS (SL)DFM (Colombo)

முதுமை என்பது தனி மனித வாழ்க்கைச் சக்கரத்தில் ஒரு பருவமே. இது நோய் அல்ல. ஆனால் பல நோய்களின் விருப்பத்துக்கு உரிய இடமாக இது உள்ளது என்பது தான் உண்மை. ஆரோக்கியமான முதுமை என்பது தானும் சந்தோசமாக இருந்து கொண்டு மற்றவர்களையும் சந்தோசப் படுத்துவதாகும். வளரிளம் பருவத்தில் நாம் கற்றுக்கொண்ட நல்ல பழக்கவழக்கங் களே, ஆரோக்கியமான முதுமையைத் தரும். மாறாக, புகைத்தல், மதுபானப் பழக்கம், போதைப்பொருள் பாவனை, முறையற்ற பல பெண்களுடனான தொடர்புகள், ஆரோக்கியமற்ற உணவுப் பாவனை போன்ற தகாத பழக்கங்களைக் கொண்ட வளரிளம் பருவம் நல்ல ஆரோக்கியமான முதுமையைத் தராது என்பது சொல்லித் தான் தெரியும் விடயம் அல்ல.

ஆரோக்கியமற்ற முதுமையுடன் தனிமை, புறக்கணிப்பு என்பவையும் சேர்ந்து விட்டால், அந்த முதுமையை வாழ்ந்து கடப்பதில் அர்த்தமில்லை. ஆரோக்கியமான முதுமையுடன் ஆழ்ந்தபுலமை, பரந்த அனுபவம் என்பனவும் சேர்ந்து பகிரப்பட்டால், இளம் பராயத்துக்கு அதை விடச் சிறந்த பல்கலைக் கழகம் தான் ஏது? இந்த முதுமை, தனது அறிவையும், அனுபவத்தையும் குழந்தைகளிடமும், சமூகத்திடமும், பகிர்ந்து அவர்களை முன்னேற்றப் பாதையில் வீச்சுடன் பயணிக்க உதவிடலாம். முதுமையை முழுமையாக அனுபவிக்க, நோயற்ற தன்மை அவசியம். நோய் நிலைமைகளை ஆரம்பத்திலே கண்டறிந்து தகுந்த சிகிச்சை மேற்கொண்டால் அறிகுறிகள் காட்டாமல் மறைந்திருந்து தாக்கும் நோய்களையும் வெற்றி கொள்ள முடியும். இதற்காக ஆண்டுக்கு ஒருமுறை யேனும் மருத்துவப் பரிசோதனை செய்தல் வேண்டும். 40 வயதுக்கு மேற்பட்டவர்கள், தொற்றா நோய்களான பிறசர், சலரோகம், புற்றுநோய் போன்றவற்றுக்கான பரிசோதனைகளைச் செய்தல் வேண்டும். சுய சிகிச்சைகளைத் தவிர்த்தல் நல்லது. உடலில் சடுதியான ஏதேனும் மாற்றங்கள் ஏற்படின் (சடுதியான நிறைக் குறைவு) குடும்ப வைத்தியர்களுடன் கலந்தாலோசிப்பது நல்லது. குறைந்த செலவில் பல நோய்களைத் தடுத்திட, குறிப்பிட்ட காலத் துக்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனை செய்வதே சிறந்தது. ஆரோக்கியமான முதுமைக்கு போசணைச் சத்துக்கள் நிறைந்ததும், அதிக கலோரிப் பெறுமானம் அற்றதுமான உணவும், தவறாத உடற் பயிற்சியும் மிக மிக அவசியமாகும்.



### உணவு

வயதுடன் பசியும் ருசியும் மாறுபடும். உண்ணும் அளவும் குறைவடையும். எனவே போசணைத்தரம் குறையாத உணவுகளைத் தெரிவு செய்து உண்ண வேண்டும். தானிய உணவுகளை மூன்று வேளையும் உண்ணலாம். புரதச் சத்து அதிகம் உள்ள பருப்பு வகைகளைத் தினமும் சேர்த்துக்கொள்ளலாம். தினமும் இரண்டு கோப்பை பால் அருந்தலாம். விதம் விதமான பச்சைக் காய்கறி வகைகளைச் சேர்த்துக்கொள்ளலாம். குருதிச்சோகையைக் குறைக்கும் இரும்புச்சத்து நிறைந்த உணவுகளான கீரை, பேரீச்சை போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். மலச்சிக் கலைத் தவிர்க்க நார்ச்சத்து அதிகமுள்ள காய்கறிகள், பழங்கள், 3 லீற்றர் குடி தண்ணீர், காலையில் அதிக உணவும், மதியம் மிதமாகவும், இரவில் குறைவான உணவும் எடுக்கலாம். அதிக சக்திப் பெறுமானமுள்ள உணவுகளைத் தவிர்த்துஉடலுழைப்புக்கு ஏற்ப சக்தியை வழங்கக்கூடிய உணவுகளை எடுத்துக் கொள்வதுடன், அவை மிகுந்த போசணைப் பெறுமானம்உள்ளவையாகத் தெரிவு செய்வது சிறந்தது.

### உடற்பயிற்சி

தினமும் 30 நிமிடங்களுக்கு, வாரத்தில் 5 நாள்கள் உடற்பயிற்சி செய்தல் நல்லது. வேக நடை, சைக்கிள் ஓடுதல், நீந்துதல் போன்றவற்றைச் செய்யலாம். மருத்துவரின் ஆலோசனைப்படி உடற்பயிற்சியை ஆரம்பிக்கலாம். உணவு, நீராகாரம் எடுத்திருப்பின் 2 மணித்தியாலங்களின் பின்பே உடற்பயிற்சி செய்தல் நலம். திறந்த நல்ல காற்றோட்டமான இடத்தைத் தெரிவு செய்து உடற்பயிற்சியில் ஈடுபடுதல் சிறந்தது. உடற்பயிற்சி யினால் ஏற்படும் நன்மைகளாவன:- பிறசர், சலரோகம், மாரடைப்பு, கொலஸ்ரோலைக் குறைக்கும். உடல் பருமன் குறையும். கவர்ச்சியான உடலமைப்பு ஏற்படும். என்புகள் உறுதிபடும். உடல் வலிமை பெறும். மனச்சோர்வை அகற்றி சுறுசுறுப்பாக இயங்க முடியும். மலச்சிக் கலைத் தவிர்க்கும். இரவில் நல்ல தூக்கம் வரும். ஆரோக்கியமான முதுமையின் சந்தோசத்தை கெடுக்கும் காரணிகளாக தூக்கமின்மை, மறதி, அடிக்கடி கீழே விழும் தன்மை, இரவில் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டி யிருத்தல், நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் அமைகின்றன. இவற்றைத் தகுந்த முறையில் கையாண்டு கட்டுப்படுத்தி எவ்வாறு ஆரோக்கிய நிலையை மேம்படுத்தலாம் என்று இனிப் பார்ப்போம்.

### தூக்கமின்மை

இரவில் 5-8 மணிநேர தூக்கம் போது மானது. தூங்கும் நேரத்தை விட ஆழ்ந்த தொடர் தூக்கம் தான் அவசியம். நல்ல தூக்கம் வருவதற்குக் கீழ்வரும் செயன் முறைகளைக் கடைப்பிடித்து வரலாம். தினமும் இரவில் குறிப்பிடப்பட்ட நேரத்தில் படுக்கைக்குச் செல்ல வேண்டும். காலையில் குறிப்பிட்ட நேரத்தில் எழ வேண்டும். படுக்கை அறை அமைதியான சூழலாகவும், மிதமான வெளிச்சமாகவும் இருத்தல் வேண்டும். தூக்கத்தைக் குறைக்கும் மாத்திரைகளை பகற்பொழுதுகளில் பாவிக்கலாம். இரவு நேரத்தில் தவிர்த்தல் வேண்டும் குறைவானபகல்தூக்கம், மாலை வேளைகளில் உடற் பயிற்சி மற்றும் இரவில் தேநீர், மதுபானங்கள் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். படுப்பதற்கு முன்பு குளியல், தூக்கத்துக்கு முன்பு சிறிது நேர தியானம்.

### மறதி

இதைத் தவிர்க்க போசணைச் சத்து நிறைந்த உணவு, தனிமையைத் தவிர்த்தல், பொழுது போக்கு அம்சங்களில் ஈடுபடுதல், உடற்பயிற்சி, தியானம் என்பவை மூளையின் குருதி ஓட்டத்தைச் சீராக்கி, மூளையைச் சுறுசுறுப் பாக்கி மறதியைத் தவிர்க்கும். ஞாபக மறதியைக் குறைத்திட தினமும் செய்ய வேண்டியவற்றைக் குறிப்புப் புத்தகத்தில்எழுதிவைத்திருந்து, நிறைவுற்ற வற்றைக் குறியிடும் முறையைப்பழக்கிக் கொள்ளுதல் நல்லது. மருந்துகளை எடுக்கும் போதும் இவ்வாறு குறியிடுவதை வழக்கப்படுத்திக் கொள்வது சிறந்தது. அவர்கள் தினமும் பயன்படுத் தும் அறையில், குறைந்தளவு பொருள் களை- தேவையான பொருள்களை மட்டும் வைத்திருத்தல். முடியுமாயின் பொருள் களைத் தொடர்ந்தும் ஓர் இடத்தில் அதாவது அடிக்கடி நாமே இடம் மாற்றாது வைத்தல். தின நாள்காட்டியை அவரின் கண்களுக்குத் தெரியுமிடத்தில் அவர் அறையில் தொங்க விடுதல். ஞாபகப் பயிற்சிகளை ஊக்குவித்தல். (உதாரணமாக குறுக்கெழுத்துப் போட்டிகளில் பங்கெடுத்தல், சுடோக்கு போட்டிகளில் ஈடுபடுதல்) என்பவற்றையும் கடைக்கொள் ளுதல் நன்று.

### அடிக்கடி விழும் (கீழே) தன்மை

வயது கூடிக்கொண்டு செல்லும்போது, எமது உடலை சமநிலையில் பேண உதவும் அங்கங்களான உட்செவியின் நத்தைச்சுருள், மூளி, கண், தசை இழையங்கள், எலும்புகள் என்பவற்றின் செயற்றிறனி லும் மாற்றங்கள் ஏற்படுவதால் முதுமையில் இலகுவில் நிலைதடுமாறி கீழே விழும் வாய்ப்புக்கள் அதிகம். இவ்வாறு விழும் சந்தர்ப்பங்களில் இளையோர் அவர்களுக்கு மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஆதர வாக இருத்தலே சிறப்பாகும். மாறாக, எள்ளி நகையாடிச் சிரிப்பது, அவர்கள் மனதில் காயங்கள் ஏற்படுத்தும் என்பதை நாம் உணர வேண்டும். இவ்வாறு நிலை தடுமாறி விழக்காரணங்களாவன:- உட்செவி நோய்கள், பார்வைக்குறைபாடு, தசை இழையங்கள் பலவீனமாதல், மூட்டுக்கள் செயற்றிறன் இழப்பும் மூட்டுவலியும், மாத்திரைகள், தூக்க மாத்திரைகள், மதுப்பழக்கம், தசை இழையங்கள் தங்கள் கட்டமைப்பை இழத்தல். தொடர்ந்து படுக்கையில் இருப்பதனால் புறச்சூழல் ஈரமான தரை, மேடுபள்ளமான தரை, மங்கியவெளிச்சம், ஒழுங்கற்று சிதறிக்கிடக்கும் பொருள்கள், தேவையற்ற பொருள்கள் என்பனவாகும். எனவே காரணத்தை இனங்கண்டு அவற்றைத் திருத்தியமைத்தால் செயற்றிறனும் ஆரோக்கியமும் அதிகரிக்கும். அடிக்கடி விழுவதனால் ஏற்படும் விளைவுகள்: சிராய்ப்புகளும், காயங்களும் அவற்றைத் தொடர்ந்து வரும் குருதி இழப்பும், எலும்பு முறிவு, தலைக் காயங்கள், நடக்க முடியாமையும், தொடர்ந்து படுக்கையில் இருக்க வேண்டிய நிலையும், தசை இழையம் பலவீன மடைதல், சாவு என்பனவாகும். எனவே ஆரம்பத்திலேயே காரணம் கண்டு திருத் தப்பட்டால் தேவையற்ற நேர, பொருள், இழப்புக்களைத் தவிர்த்திடலாம். குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை கண், காது பரிசோதித்தலும், குறைபாட்டை நிவர்த்தி செய்தலும், நோய்களுக்குத் தவறாது உரிய சிகிச்சை பெறுதல். மருந்துகளின் பக்க விளைவுகளைத் தெரிந்து கொள்ளுதலும் வைத்தியரின் ஆலோசனை பெறுதலும், மது வகைகளைத் தவிர்த்தல், பொருத்தமான காலணிகளைத் தெரிவு செய்து பயன்படுத்துதல், தேவைப்படின் கைத்தடி போன்ற உபகரணங்களின் ஆதரவோடு நடத்தல், உடற்பயிற்சியைக் கிரமமாக தவறாது செய்தல், படுக்கையிலிருந்து எழும்போது மெதுவாக எழுந்து உட்கார்ந்து பின் சிறிது நேரம் நின்றதன் பின்னரே நடக்க ஆரம்பித்தல், எழுந்தவுடன் நடப்பதைத் தவிர்த்தல். அறையில் விரிக்கப்பட்டிருந்த இறுக்கமற்ற நில விரிப்புக்களை அகற்றுதல் அல்லது நில விரிப்புக்களைப் போடாதிருத்தல். மின்சார ஒழுக்குகள் ஏற்படாத வகையில் பாதுகாப்பான மின்னிணைப்புக்களை உறுதிசெய்தல். தேவை யற்ற விதத்தில் மனச்சோர்வை ஏற்படுத்தும் மருந்துகளைப் பாவிப்பதைத் தவிர்த்தல் போன்ற செயன் முறைகளைக் கடைப் பிடித்து வந்தால் இயலுமானவரை விழுவதைத் தவிர்த்திடலாம்.

இரவில் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டியிருத்தல். இதற்கான காரணங்களாக தூக்க மின்மை, இதயம் பலவீனமடைதல், ஆண் களில் புறஸ்ரேற் சுரப்பி (Prostate) வீங்கிப் பருத்தல்.

நீரிழிவு நோய், இரவு நேரத்தில் அதிகமான தண்ணீர், தேநீர், கோப்பி அருந்துதல், சிறுநீர்த் தொற்று, மலச்சிக்கல். இதைத் தவிர்ப்பது எப்படி? நீரிழிவு, மலச்சிக்கல், சிறுநீர்த் தொற்று நோய்களுக்குத் தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்ளல். சிறுநீரை அதிகளவு வெளியேற்றும் Lasix மாத்திரைகளை இரவு நேரத்தில் பாவிப்பதைத் தவிர்த்தல். இரவில் தேநீர், கோப்பி போன்றன குடிப்பதைத் தவிர்த்தல். Prostate வீக்கத்துக்கு சிகிச்சை பெறுதல். பெண்கள் அடி வயிற்றுத் தசைகளை இறுக்கிச் செய்யும் தசைப்பயிற்சியில் ஈடுபடல் போன்ற



செயன்முறைகளினால் இந்த உபாதையைக் குறைத்திடலாம்.

### மாரடைப்பு

இது முதுமையில் ஆண், பெண் இருபாலாருக்கும் சமமாக ஏற்படுகிறது. சில சமயம் சத்தமின்றி நெஞ்சு வலியின்றியும் மாரடைப்பு வரலாம். குறிப்பாக நாள்பட்ட நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இவ்வாறு நெஞ்சு வலியற்ற மாரடைப்பு வரலாம்.

(14 ஆம் பக்கம் பார்க்க....)



தம்ரோ
தீபாவளி விசேட சலுகை
சர்வதேச நம்பிக்கையை வென்ற தளபாடங்கள்
Opera Sofa 3+2+1
Vanus Sofa 3+1+1
ரூபா. 37,900
Revon அலுமாரி
ரூபா. 16,900
Regent கட்டில்
ரூபா. 14,575
Feori Bed Suite
15% வரை கழிவு
TGT 010E+TSC 045E
Pearl Dining Set ரூபா. 29,800
போம் மெத்தைகள்
ரூபா. 4,225 இலிருந்து
5 வருடங்கள் வரை உத்தரவாதம் உடையது
Spring Mattress
for a blissful night's sleep
15 Year WARRANTY
The best comfort
High quality durable spring structure
Quilted cover with a super soft layer
KVB/011
KSD 008
ரூபா. 10,975
KDT 035
ரூபா. 6,575
GCT 032
ரூபா. 4,475
இந்த கொடுப்பனவு 2015 நவம்பர் 10 வரை மட்டுமே.
ஆரம்ப கட்டணமில்லாத 03 வருடங்களுக்கு வட்டியில்லாத இலகு கொடுப்பனவு முறைக்கு
www.damro.lk
நாடு முழுவதுமுள்ள தம்ரோ காட்சியறைகளிலிருந்து
077 2 857 857

# இறந்தவர்களை என்றும் நினைப்போம் அவர் தம் பணிகளைத் தொடர்வோம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர் – யாழ்.பல்கலைக்கழகம்

**நவம்பர் மாதம் 2ஆம் திகதி இறந்தவர்களின் நினைவு தினமாக கத்தோலிக்க திருச்சபையில் நினைவு கூரப்படுவதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

உலகக் கத்தோலிக்கத் திருச்சபையானது, நவம்பர் மாதம் 2ஆம் திகதியை மரித்த விசுவாசிகளின் நினைவு தினமாக, அதாவது கத்தோலிக்கத்திருச்சபையில் உறுப்பினராய் இருந்து இறந்துபோன அனைவரையும் நினைவுகூர்ந்து அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபிக்கும் தினமாகவும், அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக அன்புப்பணிகளில் ஈடுபடும் தினமாகவும் அனுசரித்து வருகிறது. இந்தத் தினத்துக்கு முன்பாக, கத்தோலிக்க மக்கள் சேமக்காலைக்கு, அதாவது இறந்தவர்கள் புதைக்கப்பட்டுள்ள கல்லறைக்குச்; சென்று அதனைச் சுத்தம் செய்து பின்னர் அன்றைய தினத்தில் தமது அன்புறவுகளின் கல்லறையில் மலர்கள் வைத்து மெழுகுவர்த்தி ஏற்றி அன்புப் பணிகளில் ஈடுபட்டு இறந்தவர்களை நினைவு கூர்ந்து செபிக்கின்றனர்.

இறப்பு என்பது மனித வாழ்வில் தவிர்க்கப்பட முடியாத ஒன்று. மனிதராகப் பிறந்த அனைவரும் இறப்பைச் சந்தித்தே ஆகவேண்டும். இது அனைவரும் அறிந்த, அதேவேளை ஏற்றுக் கொண்டுள்ள ஒரு உண்மையாகும். ஆனால் இறப்பு என்பது எங்கு, எப்போது, எப்படி நிகழும் என்பதே இங்குள்ள கேள்வியாகும். ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்று கூறப்படுகிறது. இறப்பைப்போர் முடிந்த பின்னரும் பல்வேறு வகைகளில் பலரும் சந்திப்பதை காணக்கூடியதாகவுள்ளது. வயோதிபத்தில் – நோயில் – விபத்தில் – குடும்பத்தகராற்றில் – வன்முறையில் - அசாதாரண நிலைகளில் எனப்பல வகைகளில் இறப்பு இன்று உணரப்படுகிறது.

கத்தோலிக்க ஆலயங்களில் முன்பு பாடப்பட்டு இப்போது சற்று மறக்கப்பட்ட பின்வரும் பாடல் இதனைத் தெளிவாக விளக்குகிறது.

"இன்றைக்கோ நாளைக்கோ கொல்லும் சாவு – உன்னையோ என்னையோ யாம் அறியோம் – இங்கேயோ எங்கேயோ வரும் சாவு – நன்மைக்கோ தீமைக்கோ யாம் அறியோம் – ஒருநாள் வரும் நிஜமே – நேரமே நீ அறியாய் - ஆர்தான் உதவிடுவார் ஐயோ பயங்கரமே –

சூழ்ந்து நிற்கும் உறவோர் துக்கம் மிகுந்தழவே – விழ்ந்தே படுக்கையின் மேல் வேதனைப் படுவாயே"

எம்மோடு வாழ்ந்தவர்கள் – அன்பைப் பகிர்ந்தவர்கள் சொல்லாமலே எம்மை விட்டுப் பிரியும் போது – அந்தப்பிரிவு எம்மால் தாங்கிக் கொள்ள முடியாததாகிறபோது – அவர்கள் விட்டுச் செல்லும் வெற்றிடம் என்றுமே எவராலுமே நிரப்பப்பட முடியாத ஒன்றாக அமைகிறபோது, அந்தப் பிரிவு வேதனை மிக்கதாகிறது. – தாங்கிக்கொள்ள முடியாததாகிறது – எவ்வளவு ஆறுதல் சொன்னாலும் அது போதாமலே போய்விடுகிறது – இறப்பின் பிரிவைச் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே தனித்து நின்று அனுபவித்து முடிக்க வேண்டும். அத்தகைய வேளைகளில் காலம் தான் பதில் சொல்ல வேண்டும். காலம் செல்லச் செல்லவே கவலை மறக்கப்படுகிறது. கண்முன் இல்லாதவர்கள் கனதூரம் போய் விடுகிறார்கள். ஆனால் மனதை விட்டு முழுமையாக நீங்கிப் போய் விடுவதேயில்லை. இறந்தோர் நினைவு தினங்கள் அவர்களை எமது மனதுகளுக்கு மீண்டும் கொண்டு வருகின்றன. இறந்தவர்களை நினைத்துச் செய்யப்படும் நற்செயல்கள் மற்றும் அன்புப்பணிகள் அவர்கள் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்வதாகவும், தேவையில் இருப்போர் அவர்கள் பெயரால் வாழ்வைத் தொடர வழிசெய்வதாகவும் இருப்பதே சிறந்தது.

கத்தோலிக்கத் திருச்சபை தருகின்ற போதனையை இங்கு நினைவு கூர்வது பொருத்தமானது. – இறப்பவர்களுக்கு வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை. இந்த மண்ணக வாழ்வு முடிந்ததும் விண்ணகத்தில் நித்திய வீடு ஆயத்தமாக உள்ளது. – இந்த நம்பிக்கையிலே இவ்வுலக வாழ்வை நல்லதாக – மறு உலகுக்கு நன்மை பயப்பதாக வாழ அழைக்கப்படுகிறோம். இங்கு வாழும் போது வைத்திருந்த அனைத்தையும் விட்டு நாம் வாழ்ந்த நல்ல வாழ்வின் பயன்களை மட்டும் எம்முடன் எடுத்துச் செல்கிறோம்.

கடந்த கால கொடிய போரில் தம்மை அர்ப்பணித்து இறந்து போனவர்களையும் நவம்பர் மாதத்தில் நினைவு கூருகிறோம். இறந்து போனவர்களை எரிப்பதைக் காட்டிலும் புதைப்பது அவர்களை ஆண்டுதோறும் என்றாலும் நினைவு கூர – தரிசிக்க – அவர்களுக்காக வேண்ட வழிசெய்கிறது. இறந்தவர்கள் தாம் இவ்வுலகில் தெரிந்தும் தெரியாமலும் செய்த தவறுகளுக்காகத் தண்டனை பெற்றபின் இறைவனுடைய இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாறுகிறார்கள் என்பதே கத்தோலிக்க நம்பிக்கையாகும். இறந்தவர்களைத் தூற்றுவதோ அவர்களின் மனிதப் பலவீனங்களை மிகைப்படுத்துவதோ, அவர்களின் நற்பெயரைக் கெடுக்கும் செயற்பாடுகளைத் தொடர்வதோ செய்த்தகாத செயல்களாகவே கருதப்படுகின்றன. இறந்தவர்களின் படங்கள் மாலையிடப்பட்டு மரியாதையுடன் பேணப்படுகின்றன - அவர்களின் கல்லறைகள் மதிப்புடன் பாதுகாக்கப்படுகின்றன – அவர்கள் ஆற்றிய நற்செயல்கள் அவர்கள் பெயரால் தொடரப்படுகிறது -- இந்த நல்ல செயல் அன்று முதல் இன்றுவரை பேணப்படுவது சிறப்பானதாகும். இரண்டாம் உலகப்போரின்போது இறந்த அன்னியர்களின் கல்லறைகள், இன்றும் எமது நாட்டில் திருகோணமலையில் பேணிப் பாதுகாக்கப்படுகின்றமை பாராட்டப்பட வேண்டியதாகும். ஆனால் உள்நாட்டுப் போரில் இறந்து போனவர்களின் கல்லறைகள் கிளறி எறியப்பட்டமை வேதனை மிக்கதாகும்.



வெறும் கல்லறைகளை அழிப்பதால் அவர்களின் வாழ்வையும் பணியையும் அழித்து விட முடியாது. சரித்திரத்தையும் சாதனைகளையும் மூடிமறைத்து விட முடியாது.

இறந்தவர்கள் அனைவரும் பூஜிக்கப்பட வேண்டியவர்கள். புனிதர்களாகப் பேணப்பட வேண்டியவர்கள். இனம் – மதம் – நிறம் என்ற வேறுபாட்டைக் கடந்து மதிக்கப்படவும், மரியாதையுடன் பேணப்படவும் வேண்டியவர்கள்.

நவம்பர் மாதம் 2ஆம் திகதி சேமக்காலைகள் அனைத்தும் மக்கள் வெள்ளத்தால் நிறைந்து வழியப்போகின்றன. இங்கு சிறப்பு முக்கியத்துவம் பெறுவது யாழ் புனித மரியன்னை பேராலய சேமக்காலையாகும். இது யாழ் மறைமாவட்டத்தின் ஒன்பது பங்குகளுக்குச் சொந்தமானதாகும். யாழ் புனித மரியன்னை பேராலய சேமக்காலையானது, யாழ் புனித மரியன்னை பேராலய பங்கு – குருநகர் பங்கு – யாழ் அடைக்கல அன்னை ஆலய பங்கு – சுண்டிக்குழி யுவானியார் ஆலய பங்கு – பாண்டியன்தாழ்வு பங்கு – பாசையூர் பங்கு – நல்லூர் ஆசீர்வாதப்பர் ஆலய பங்கு உட்பட்ட ஒன்பது பங்குகளுக்குமான பொதுவான சேமக்காலையாகும். இங்குதான் இறந்து போன குருக்களின் உடல்களும் அடக்கம் செய்யப்படுகின்றன. இறந்த ஆயர்களின் உடல்கள் புனித மரியன்னை பேராலயத்தில் அடக்கம் செய்யப்படுகின்றன என்ற தகவல் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய தகவலாகும். ஏறக்குறைய 4 ஆயிரம் கல்லறைகளைக் கொண்ட (ஒரு கல்லறையில் உறவினர்களின் உடல்களும் அடக்கம் செய்யப்படுகிறது) புனித மரியன்னை பேராலய சேமக்காலையானது, இட நெருக்கடி காரணமாக கடந்த பத்து ஆண்டுகளுக்குள் பொதுக் கல்லறைக்குள் அடக்கம் செய்யும்திட்டம் ஒன்றைநடைமுறைப்படுத்திவருகிறது. அதாவது கல்லறை இல்லாதவர்களுக்கு பொதுக்கல்லறைகள் வழங்கப்பட்டு கிட்டத்தட்ட 7 ஆண்டுகளின் பின்னர் புதியவர்களை அங்கு புதைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே இங்கு 100 பேருடைய உடல்கள் அடக்க செய்யப்பட்டுள்ளன.

மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார், பேராலயத்தில் பங்குத்தந்தையாக பணியாற்றிய காலத்தில் இராஜசிங்கம் வீதிப்பக்கமான சுற்று மதிலை உயர்த்திக் கட்டி எழுப்பியுள்ளார். அது மட்டுமல்லாமல் குருக்களின் கல்லறைகளை ஒரே அளவிலான ஒரே ஒழுங்குமுறை கொண்ட கல்லறைகளாக மாற்றியமைத்த பெருமைக்குரியவர் அவர். தற்போதைய பேராலயப் பங்குத்தந்தை ஆர். எச். சகாயநாயகம் அடிகளார் சேமக்காலை முழுவதையும் இதேபோன்று மாற்றி அமைக்கத் திட்டமிட்டுள்ளார். இவ்வாறு செய்வதனால் உள் வீதிகள் – இறந்தவர்களைக் கொண்டு செல்வதற்கு வசதியாகவும், அழகாகவும் அமைக்கப்படலாம். குருக்களின் கல்லறைகள் அழகுற அமைக்கப்பட்டிருக்கும் விதத்தைப் பார்த்து இறைமக்களும் தமது உறவினர்களின் கல்லறைகளைத் தோண்டி மாற்றி அமைக்க சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் மேற்படி பணிக்குத் தேவையான பெருந்தொகைப் பணம் கிடைக்குமானால் அப்பணியை அழகுற மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கிறார். வெளிநாடுகளில் சேமக்காலைகள் அழகு மிகுந்த பூங்காக்கள் போல் அமைக்கப்பட்டு மலர்ச்செடிகள் ஆங்காங்கு நடப்பட்டு புனிதமான இடமாகக் காட்சி தருகின்றன. அமைதியாகச் சென்று செபிக்கவும், இளைப்பாறவும் ஏற்ற இடமாக இருக்கின்றன. எமது நாடுகளில் சேமக்காலைகள் அவ்வாறு இல்லாதிருப்பது வேதனை மிக்கதே. இங்கிருக்கும் சேமக்காலைக்ளுக்கு அருகில் செல்லவே பயமாக இருக்கிறது. சேமக்காலைகள் அழகாகவும், அடிக்கடி பயமின்றி விரும்பிச் செல்லத்தக்க இடமாகவும், இருப்பது மரணம் பற்றிய பயத்தையும் உளவியல் ரீதியாகக் குறைக்கத் துணை புரியலாம். வெளிநாடுகளில் இருந்து தமது இறந்துபோன உறவினர் பெயரால் நற்பணிகளை மேற்கொள்ள விரும்புவோர் யாழ் புனித மரியன்னை பேராலய சேமக்காலையை புதுப் பொலிவுடன் அமைக்கும் பணிக்கு உதவ முன்வருவது இன்றைய காலத்தின் தேவையாகும். இங்கிருப்போரும் பொது நன்மை கருதியும், யாழ் புனித மரியன்னை பேராலய சேமக்காலையின் எதிர்காலம் கருதியும் தம் உறவினர்களின் கல்லறைகளைத் தோண்டி மாற்றி அமைக்கும் பணிக்குச் சம்மதம் தெரிவிக்கவும் தம்மால் இயன்ற பண உதவியைச் செய்யவும் முன்வர வேண்டும்.

கடந்த ஆறுமாதங்களாகப் புனித பேராலய சேமக்காலைக்கு முழுநேரக் காவலாளி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு போவோர் வருவோர் எல்லோரும் கண்காணிக்கப்படுவதாகவும் பேராலயப் பங்குத்தந்தை ஆர். எச். சகாயநாயகம் அடிகளார் தெரிவித்தார். இதனால் பிச்சை எடுப்போர் – மதுபோதையில் வருவோர் – போதைப்பொருள்களைப் பாவிப்போர் போன்றோர் அங்கு வராமல் அவ்விடத்தின் புனிதத்தன்மை பேணப்படுவதாக பலர் மகிழ்ச்சி தெரிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். மேலும் சேமக்காலையைச் சுற்றியுள்ள அனைத்து மதில்களும் உயர்த்தப்பட்டு மேலும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

சேமக்காலைகளின் கல்லறைகளைத் துப்பரவு செய்து தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருக்க அனைவரும் முயல்வோம். ஒரு நாள் நாமும் அடக்கம் செய்யப்படவுள்ள சேமக்காலைகள் நாம் வாழும்போதே எமது கண் முன்னேயே அழகுற மிளிரச் செய்வோம். நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே - முடிவில்லாத ஒளி அவர்கள் மேல் ஒளிர்வதாக - சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக என என்றும் செபிப்போம்.





ஏமாறாதீர்!
எஸ்-லோன் இலட்சினையை கவனியுங்கள்
the capital maharaja organisation limited
Since 1930
S-lon
நீங்கள் வாங்கும் நீர்க்குழாய்களிலும், பொருத்துக்களிலும் எஸ்-லோன் இலட்சினை இல்லையெனில் அவை எஸ்-லோன் அல்ல.
எஸ்-லோன் இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளதா என்று சரி பார்த்து, வாங்குங்கள்.
எஸ்-லோன் லங்கா (பிரைவட்) லிமிட்டெட்
கெபிட்டல் மஹாராஜா நிறுவனத்தின் ஓர் துணை நிறுவனமாகும்.
515/7, டி.பி ஜேயா மாவத்தை, கொழும்பு-10 | தொ.பே: 011 4 760 100
பக்ஸ்: 011 5 352 741 | மின்னஞ்சல்: slonsales@slon.maharaja.lk
S-lon




தீபத்திருநாளாம்
தீபாவளி பண்டிகையை
முன்னிட்டு
10% முதல் 40%
வரையான
விசேட விலைக்கழிவு
ABI Fashion World
அபி பஷன் வேல்ட்
அதிகாலை வானத்தில் என்னென்ன
"வண்ணம்"
அதில் இல்லாத வண்ணங்கள் எங்களிடம்
"மின்னும்"
புதுமையான அழகிய கனவு
பாரம்பரிய பட்டுச்சேலைகள் முதல் லெஹங்கா, வண்ணச்சேலைகள்,
திருமண பட்டுச்சேலைகள், ஆடவர் மற்றும் சிறுவர்களுக்கான ஆயிரமாயிரம்
ஆடை வகைகள் ஏராளம் எம்மிடம்
இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட பாரம்பரிய பட்டுக்கள்
நேரடியாக உங்கள் கைகளில் - வண்ண ஓவியமாய்
இன்பத்தின் தருணங்கள் எங்குண்டோ
அபியின் ஆடைகள் அங்குண்டு
112, காங்கேசன்துறை வீதி,
(H.S.B.C. வங்கிக்கு முன்பாக) யாழ்ப்பாணம்.
abifashionworld
021 222 3738,
077 324 6503

# ஆரோக்கிய முதுமை தருமே அர்த்தம் நிறைந்த வாழ்க்கை

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

இவர்களில் உடற்சோர்வு, களைப்பு, மூச்சுவாங்குதல், மயக்கம், மன நிலையில் ஒரு தடுமாற்றம், பக்கவாதம் போன்றவகைகளே மாரடைப்பின் முதல் அறிகுறிகளாகவும் இருக்கலாம். எனவே நெஞ்சில் ஏதாவது ஓர் அசௌ கரியம் ஏற்பட்டால் உடனே மருத்துவரிடம் காண் பித்து ECG எடுப்பது நல்லது. நீரிழிவு நோய், உயர்குருதியமுக்கம், உடற்பருமன், புகைப்பிடித்தல், மதுபான பாவனை, ஆரோக்கியமற்ற உணவு பழக்கம், பரம்பரை இவை காரணமாக மாரடைப்பு ஏற்படுகிற வாய்ப்புக்கள் அதி கமாகக் காணப்படும்.

மாரடைப்பைத் தடுக்க தினமும் உடற் பயிற்சியில் ஈடுபடுதல், உடற் பருமனைக் குறைத்தல், மதுபானம், புகைப்பிடித்தல் பாவனையைத் தவிர்த்தல், உயர் குருதியமுக்கம், நீரிழிவு நோய்களுக்குத் தொடர் சிகிச்சை பெறுதலும் அவற்றைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருத்தலும், மனதை அமைதியாக வைத்துக்கொள்வதற்கு தியானம், ஆன்மிகத்தில் ஈடுபடல் மற்றும் பொழுதுபோக்குச் செயற்பாடுகள், கலைகளில் ஈடுபட்டு வருதல் போன்ற செயன்முறைகளினால் மாரடைப்பு வருவதை கூடு மானவரை தவிர்த்திடலாம். நெஞ்சு நோவு இன்றி வரும் மாரடைப்பு, வாயுக்கோளாறு என்று அலட்சியப்படுத்த வேண்டாம். (குடும்பநல) வைத் தியரிடம் ஆலோசனை பெறுதல் நல்லது.




### நீரிழிவு நோய்

உடற்பருமன் கூடுதல், உடற்பயிற்சி இன்மை, கலோரிப் பெறுமானம் கூடிய உணவுகளை உண்ணுதல் பரம்பரை காரணமாகவும் சில மாத்திரைகள், மனக்கவலை போன்றவை நீரிழிவு நோயை ஏற்படுத்துகின்றன. அதிக பசி, அதிக தாகம், கால்களில் ஏற்படும் விறைப்பு, உடல் அரிப்பும் கடிப்பும் (itching of body) பார்வைக் குறைபாடுகள், அதிக களைப்பு அடிக்கடி சிறுநீர் கழித்தல், சிறுநீர்ப் பாதையில் கடியும் அரிப்பும், கால்களில் நீண்டகாலம் மாறாத புண்கள் போன்றன இந்த நோயின் அறிகுறிகளாகும். குருதிப் பரிசோதனை மூலம் இந்த நோயை எளிதில் கண்டுபிடித்துவிடலாம். இந்த நோய்க்கு முறையான சிகிச்சை செய்யாதுவிடின் கண்பார்வை இழப்பு, சிறுநீரக செயலிழ்ப்பு, கால்களின் உணர்விழப்பு, மார டைப்பு போன்ற சிக்கல் தன்மைகளை எதிர் கொள்ள வேண்டிவரும். முதுமையிலும் மற் றையோருக்கு கஷ்டம் தராமல் வாழ கீழ்வரும் உபகரணங்கள் உதவியாக இருக்கும். கண் கண்ணாடி பார்வையை சீராக்கி, அடிக்கடி தடுமாறி விழுவதைத் தடுக்கும். செயற்கைப்பல் உண்ணும் உணவின் தரம் அதிகரிக்கும், பேச்சுத்தெளிவாக இருக்கும், முகம் அழகாக தோன்றும். காது கேட்கும் கருவி வாழ்க்கைத்தரம் உயரும். மனச் சோர்வு அகலும். கைத்தடி தடுமாறி விழும் வாய்ப்பைத் தடுக்கும். ஆரோக்கியமான முதுமையை மேம்படுத்த முடியுமானவரை கீழ்வரும் செயன்முறைகளை வாழ்வில் நடைமுறைப்படுத்த முயலவேண்டும். தனிமையை தவிர்ப்போம் ஏதேனும் ஒரு பொழுதுபோக்கில் நாட்டம் கொள்வோம். தனது தேவைகளைத் தானே செய்து கொள்ளப் பழகிடுவோம். இது தனியாக வாழ நேரிட்டால் கூட தைரியத்தை தந்திடும். தியானம் செய்தல் இது மன அமைதி, மனோபலம், எதையும் எதிர்கொள்ளும் திடம், சகிப்புத்தன்மை தந்திடும். தொண்டு செய்தல் இது உடலாலும் மனத்தாலும் செய்யலாம். மற்றவர்களின் பிரச்சினை தீர, மனத்தால் பிரார்த்தனை செய்யலாம். பிள்ளைகளின் கஷ்டத்தைப் புரிந்து கொண்டு முடிந்தளவுக்கு உதவியாக இருத்தல். அதிகமான எதிர்ப்பார்ப்புக்களை தவிர்த்தல் போன்றன இதிலடங்கும். ஆன்மிகச் சிந்தனையும் ஈடுபாடும் மன உளைச்சல் தரும் தீய எண்ணங்களிலிருந்து மனம் விடுபட்டு மனச் சுமை குறைந்து வாழ்க்கை அமைதியான தெளிந்த நீரோட்டமாக இருப்பதற்கும் சாவையும் மகிழ்வுடன் ஏற்கும் மனப்பாங்கையும் இது அருளும். வீடுகளைப் புதிதாக நிர்மாணிக்கும் போது அல்லது அமைக்கும் போது அழகுக்கு முன்னுரிமை கொடுப்பது போல், முதியோரின் ஆரோக்கியத்தை மேம்படுத்திப் பேணுவதிலும், அந்த வீட்டின் அமைப்பு இருப்பதில் கூடிய கருத்தைச் செலுத்திடல் வேண்டும். அவர்கள் பயன்படுத்தும் பகுதி வழுக்கும் தன்மை அற்ற தரை அமைப்பாக இருப்பதை உறுதிசெய்தல். பார்வை குறைந்தவர்களும் படிகளை இலகு வில் இனங்காணத்தக்க வகையில் நிலவர்ணம் அல்லது மாபிளிலிருந்து படியின் வர்ணத்தை அல்லது மாபிளை பிறிதொரு நிறத்தில் அமைத்தல். தரைமட்டங்கள் வெவ் வேறு தளங்களில் அமையும்போது அதனை இலகுவில் கண்டறியக்கூடிய வகையில் நிறத்தெரிவுகளைச் செய்தல். மலசலகூட இருக்கையின் வர்ணமும் (Commode) பின்புற மாபிளின் வர்ணமும் கடும் மென்மை வர்ணங்களில் அமைக்கும் போது ஒளி குறைந்த வேளையிலும் Commode இனம் காணுவது இலகுவாகி அவர்களின் உள சௌ கரியம் அதிகரிக்கும். Commode இருக்கையில் அமருவதற்கும் எழுவதற்கும் ஏற்ற பிடிமான அமைப்புக்களைப் பொருத்திக்கொள்ளுதல். இவை அந்த வீட்டை முதி யவர்களுக்கு ஏற்ற, நட்புச் சூழலாக அமைத்து விடும். அல்லாதவிடத்து எமது அப்பா, அம்மா எவ்வளவு கேட்டுக்கொண்டாலும் எங்கள் வீட்டில் எங்களுடன் ஒரு நாள் கூட தங்குகின்றார்கள் இல்லை என அங்கலாய்த்துக் கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.









சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதி அதிபர் நடராசா பாலச்சந்திரன் தனது 31 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையொட்டி கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா பணியாளர்கள் ஆகியோரால் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டு பிரதி அதிபருக்கு மலர்மாலை அணிவித்தும், பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தனர். (ஐ-9)



சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை சமூகத்தினரால் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர் ஆகியோர் கௌரவிக்கப் பட்டனர். (ஐ-9)







வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் நல்லூர் திருவிழாக் காலத்தில் நடத்திய கலை நிகழ்வுகள். (ஐ)



வவுனியா பெரிய கோமரசன்குளம் பாடசாலைக்கு வடமாகாணசபை உறுப்பினர்களான மயில்வாகனம் தியாகராசா மற்றும் இ.இந்திரராசா ஆகியோரால் நிழல்பிரதி இயந்திரம் (போட்டோக்கொப்பி இயந்திரம்) வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)



வடமாகாணசபை உறுப்பினரான மயில்வாகனம் தியாகராசா. வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய உதைபந்தாட்ட வீரர்களுக்கான பரிசுப்பொருள்களை வழங்கி வைத்தார். (ஐ)





கிளிநொச்சி கண்டாவளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாட சாலையில் இடம்பெற்றது. வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (ஐ)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் வளலாய் மீள் குடியேற்றப் பகுதியில் கண்ணி வெடியில் சிக்கி கால் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்துக்கு உதவிப் பொருட்கள் மற்றும் பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்கள் என்பவற்றை வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)





நவாலி ஸ்தான அ.மி.த.க.பாடசாலையில் 2015 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் கௌர விப்பு மற்றும் சிறுவர் தின நிகழ்வின் போது அதிபர் க.விஜயகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் சக ஆசிரியர்கள், பெற்றோர்கள் நிற்பதையும். அதனை தொடர்ந்து மாணவர்கள், கௌரவிக்கப்பட்டு அழைத்து வரப்படுவதைக் காணலாம். (ஐ)





கச்சாய் கண்ணகி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற சத்தியவான்-சாவித் திரி புராண இசை நாடகத்தின் காட்சிகள் (ஐ)



அண்மையில் இடம்பெற்ற சுன்னாகம் காந்திரூபன் முன்பள்ளியின் கல்விக் கண்காட்சியின் போது உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர், முன்பள்ளி ஆசிரியர்கள் தகவல் வட்டப் பகுதியை பார்வையிடும் போது... (ஐ)





தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர் குழு தெரிவின்போது பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.கணேஸ் உரையாற்றுவதைக் காணலாம். (ஐ–122)



களனி துட்டகமுனு வித்தியாலய ஆசிரியர் ஈ.ஜீ.எஸ். சஞ்சீவ அண்மையில் வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு நல்லெண்ணப் பயணம் ஒன்றை மேற்கொண்டு வருகை தந்தபோது, பாடசாலை அதிபர் வை.விஜய குமாரன் மற்றும் ஆசிரியர்கள், ஆசிரியரை வரவேற்று உபசரித்ததுடன் அதிபர் மற்றும் ஆசிரியர் இருவரும் ஞாபகார்த்தப் பரிசுகளை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டனர். (ஐ–122)



உலக உணவுத் திட்ட வேலைக்கான உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் சர வணை கிழக்கு தெங்கங்குளம் வாய்க்காலைப் புனரமைப்பு செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபொழுது வேலணை, சரவணையைச் சேர்ந்த பயனாளிகள் புனரமைப்பு வேலையில் ஈடுபடுவதைக் காணலாம். (ஐ–167)



வேலணை வங்களாவடி முருகன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழாவின்போது வள்ளி, தெய்வானை சகிதம் முருகன் தேரில் ஆரோகணித்து வீதியுலா வரும் காட்சியைக்



# வாருங்கள், இலங்கையின் மிகச் சிறந்த சேவை அணியில் இணைந்து கொள்ளுங்கள்

## எமது இடத்தின் முகத்தோற்றம்

செயல்வீரம் நிறைந்த எமது சேவை அணியில் இணைந்து கொள்வதற்காக வேடிக்கையான, நட்புறவான மற்றும் விற்பனையில் கூடிய கவனம் செலுத்துகின்ற சில்லறை விற்பனை நிலைய இணை உத்தியோகத்தர்களை நாம் எப்போதும் தேடிக் கொண்டிருக்கின்றோம். நீங்கள் இலங்கையின் மிகவும் அங்கீகாரம் பெற்ற வர்த்தக குறியீடுகளுள் ஒன்றில் வேடிக்கையான, சவால்மிக்க அதேநேரம் நெகிழ்ச்சித் தன்மையுள்ள ஒரு வாய்ப்பை தேடிக் கொண்டிருக்கின்றீர்களா?

## வாடிக்கையாளர் சேவை இணை உத்தியோகத்தர்கள்

இதில் இணைந்து கொள்வதற்கான திறனாற்றலை நீங்கள் கொண்டுள்ளீர்களா?

- இதயத்தில் இருந்து சேவை வழங்குவதற்கான பேருவகை
- மக்களுடனும் தொழில்நுட்பத்துடனும் இணைந்து பணியாற்றுவதில் மகிழ்ச்சியடைதல்
- சவால்மிக்க சூழ்நிலைகளில் அமைதியாக இருத்தல்
- எமது வாடிக்கையாளர்களுக்கு எது தேவை என்பதை புரிந்து கொள்ளல்
- தொழில்வாண்மையாளராக திகழ்கின்ற நிலையிலும் கூட அற்புதமான நகைச்சுவையுணர்வு
- வார இறுதி நாட்கள் மற்றும் மாலை நேரங்களில் வேலை செய்யக் கூடிய நெகிழ்ச்சித் தன்மை
- சில்லறை விற்பனை துறையில் முன்னனுபவத்துடன், இலக்குகளை அடைதல் மற்றும் அவற்றை தாண்டிச் செல்வதில் நிரூபிக்கப்பட்ட கடந்தகால பதிவானது ஒரு மேலதிக தகைமையாக இருக்கும். நீங்கள் நீங்களாகவே இருங்கள், செயல்வீரர்கள் நிறைந்த எமது அற்புதமான சில்லறை விற்பனை அணியில் ஒரு அங்கமாக, சக்தி பெற்றிருப்பதை உணர்ந்து பாருங்கள்.

## நிலப்பகுதி பொறுப்பதிகாரி

பாத்திரம்

- கம்பனியின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு, குறித்தொதுக்கப்பட்ட புவியியல் நிலப்பகுதியின் வியாபார திட்டங்களை முகாமைத்துவம் செய்தல்.
- தொடர்ச்சியான வெற்றியை உறுதிப்படுத்தும் முகமாக செயலாற்றலை கண்காணித்தல்.
- வெளியீட்டின் செயற்றிறனை உறுதிப்படுத்துவதற்காக, வெளியீடு அல்லது பெறுபேறுகள் தொடர்பில் அணியினருக்கு தெளிவானதொரு கவனக்குவிப்பையும் புரிந்துணர்வையும் வழங்குதல்.
- வழிமுறைகளின் சீரான தன்மையை உறுதிப்படுத்தும் ஒத்திசைவுமிக்க முக்கியமான புதிய பணிப்புரைகளை நிறைவேற்றுவதற்காக மூலோபாயங்கள் அல்லது வழிமுறைகளை உருவாக்குதல்.
- முக்கியமான புதிய பணிப்புரைகளை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு அளிக்கக் கூடியவாறு நிறுவன முறைமைகள் சரியான விதத்தில் காணப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல்.
- நிறுவன இலக்குகளை, சொந்த திணைக்களப் பிரிவுக்கான நடைமுறைப்படுத்தக் கூடிய இலக்குகளாகவும் ஒரு மூலோபாயமாகவும் மாற்றியமைத்தல்

நபரின் தகைமை விபரங்கள்:

- பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு சமமான தொழில்சார் தகைமை
- விற்பனை துறையில் 1-2 வருடங்கள் அனுபவம்

நீங்கள், மேற்குறிப்பிடப்பட்ட நபராக திகழ்கின்றீர்கள் என்றும், மேலே விபரிக்கப்பட்ட பணியின் செயற்பரப்பை மேற்கொள்வதற்கு அவசியமான பண்புகளை கொண்டிருக்கின்றீர்கள் என்றும் நீங்கள் கருதினால், இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் மிக இலகுவான முறையில் careers@dialog.lk இற்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்

twitter.com/dialoglk facebook.com/dialog.lk

இலங்கையின் பிரபலமான தொலைத் தொடர்பு சேவை வழங்குனர் 2015

Dialog

an axiata company www.dialog.lk

எதிர்காலம் இன்றே.



# நத்தார் பரிசு கொண்டாட்டம்

வீட்டுக்குத்தேவையான சிறந்தவற்றை

கொள்வனவு செய்வதற்காக அபான்ஸில் பிரவேசிக்கும் போது உலகின் உன்னதமான தயாரிப்புக்களுடன் பெறுமதிமிக்க பரிசில்கள் உங்களுக்கு காத்திருக்கின்றன. நத்தார் பண்டிகைக்காலத்தில் உங்களுக்கு வேண்டியவர்களுக்கு சிறந்த பரிசில்களை வழங்குவதைப்போன்று சிறந்த பரிசில்களையும் பெற்றுக்கொள்வதற்கு ஒரே இடம் அபான்ஸ் மாத்திரமேயாகும்.

அபான்ஸ்



32LF515A ரு 59,990

CINEMA 3D Smart TV

47LB650T ரு 199,990

DH6631T ரு 55,999

விசேட விலை ரு 49,999

மாதாந்தம் ரு 3,915

இலவசம்

01.கேஸ் குக்கர்
02.ரைஸ் குக்கர்
03.மேசை மின்விசிறி
04.மின்னழுத்தி
05.எயார் ட்ரையர்

வளிச்சீராக்கியுடன் 23" LED தொலைக்காட்சி அல்லது மினி பார் ஒன்றை கொண்டு செல்லுங்கள்

இரண்டு வளிச்சீராக்கியுடன் 32" LED தொலைக்காட்சி அல்லது 140L அதிகுளிரூட்டி அல்லது 220L குளிர்சாதன பெட்டி ஒன்றை கொண்டு செல்லுங்கள்

LG இன்வேட்டர் வளிச்சீராக்கி 9000btu - 24000btu 116,900 ரூபாவிலிருந்து

இலவசம் LED TVs,140L அதிகுளிரூட்டிகள், 220L குளிர்சாதன பெட்டிகள், மினி பார்கள்

DM5540 ரு 49,999 ரு 44,999 மாதாந்தம் ரு 3,915

மிக்ஷர் கிரைண்டர்ஸ் 6,900 ரூபாவிலிருந்து

ரைஸ் குக்கர்ஸ் 0.6L-2.8L 2,200 ரூபாவிலிருந்து

கேஸ் டொப் | 2 பேனர் குக்கர்கள் 3,300 ரூபாவிலிருந்து

acer 4 YEAR WARRANTY

ES-573-3 ரு 77,990 Rs.3,896

LENOVO IP 100 CEL
- INTEL CEL DC Processor
- 2GB RAM
- 500GB Hard Disk
- WINDOWS 10

Rs.3,784

ரு 49,900 ரூபாவிலிருந்து

GL-B282SLHL ரு 79,900

55X340 ரு 79,900

WF7004E ரு 59,990

ரு 21,990 விசேட விலை ரு 19,990


இலவசம்

தள்ளுப்படி 20 மற்றும் 20 மாத வட்டியின்றிய கொடுப்பனவு AMEX கடனட்டையாளர்களுக்கு மட்டுமே

Nations Trust Bank

அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் அபான்ஸ் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமும் பெறலாம்

Abans





**காணி விற்பனைக்கு**

மருதனார்மடப் பகுதியில் "4" பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.

தொடர்பு: 077 328 8795

**தென்னந்தோட்டம் விற்பனைக்கு**

பளைக்கும் தர்மக் கேணிக்கும் இடையில் உள்ள 20 ஏக்கர் தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 072 525 4133

**விற்பனைக்கு**

கூல்பாருக்கு உரிய பொருள்கள் விற்பனைக்கு உண்டு. Food Displayer, cooler, Nescafe machine, Juice mixer and cooler, Table & Chair, Deep Fryer.

தொடர்பு: 077 744 6962

**விசேட விலைக்கழிவு**

மூடப்படவுள்ள Computer Shop இன் மேசைகள், கதிரைகள், பெயர்ப்பலகைகள், கண்ணாடி Showcase, Fittings மற்றும் Computer பொருள்கள் விசேட விலைக்கழிவுகளில் பெறலாம்.

(65647) (14.15.17)

தொடர்பு: 077 310 3205


# மக்கள் வங்கி அறிவித்தல்

பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.07.2014 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 07.11.2015, 08.11.2015 ஆகிய திகதிகளிலும் 30.09.2014 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 28.11.2015, 29.11.2015 ஆகிய திகதிகளிலும் காலை 8.30 மணி தொடக்கம் கீழ்க்குறிப்பிட்ட அட்டவணைக்கு அமைவாக பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | திகதி | ஏலம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| காங்கேசன் துறை | மல்லாகம் | | யாழ்.பிராந்திய |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | 07.11.2015 | தலைமைக் |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | 28.11.2015 | காரியாலயம் |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | 07.11.2015 | யாழ்.ஸ்ரான்லி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | 28.11.2015 | வீதி கிளை. |
| | கல்வியங்காடு | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| ஊர்காவற்றுறை | - | | |
| சுன்னாகம் | கோப்பாய் | | யாழ்.பிராந்திய |
| | அளவெட்டி | 08.11.2015 | தலைமைக் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | 29.11.2015 | காரியாலயம் |
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி | | |
| | மானிப்பாய் | | யாழ்.ஸ்ரான்லி |
| நெல்லியடி | - | 08.11.2015 | வீதி கிளை |
| சாவகச்சேரி | கொடிகாமம் | 29.11.2015 | |
| | கைதடி | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (C/19663)(11.15,16,17)

# மாகாண கல்வி அமைச்சு, வடமாகாணம்

## பாடசாலை மாணவர்களுக்கான மேசை மற்றும் கதிரைகளுக்கான கூறுவிலை கோரல்

தலைவர், அமைச்சு பெறுகைகள் குழு (MPC) மாகாணக் கல்வி அமைச்சு வடமாகாணம் பாடசாலை மாணவர்களுக்கான மேசை மற்றும் கதிரைகளுக்கான கூறுவிலை கோரல்.

Bid No - NP /03/03/FII/S.F/2015 (Type -I,II) (B.S 50000)

| தொ.இ | பொருள் விபரம் | தேவையான தளபாடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | Students steel desk table Type- 01 | 1300 |
| 02 | Students steel desk table Type-02 | 1400 |
| 03. | Students steel chair Type - 01 | 1300 |
| 04. | Students steel chair Type . 02 | 1400 |

Bid No - NP /03/03/FII/S.F/1/2015 (Type -III,IV) (B.S 50000)

| தொ.இ | பொருள் விபரம் | தேவையான தளபாடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | Students steel desk table Type . 03 | 1230 |
| 02 | Students steel desk table Type . 04 | 1250 |
| 03. | Students steel chair Type . 03 | 1230 |
| 04. | Students steel chair Type . 04 | 1250 |

1. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களையும் விலைக்கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்காட்டப்பட்ட முகவரியில் (021 205 4095) எமது அமைச்சில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
2. இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் வியாபாரப் பதிவுச் சான்றிதழ், கேள்விப்பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பக் கடிதம் என்பவற்றினைச் சமர்ப்பித்து ஒவ்வொரு விலைக்கேள்விப்பத்திரத்துக்கும் ரூபா 1,000 மீளளிக்க முடியாத கேள்வி வைப்புப் பணத்தினைக் காசாகச் செலுத்தி அலுவலக நாள்களில் 30.10.2015ஆம் திகதி தொடக்கம் 20.11.2015ஆம் திகதி வரை மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணிவரையான அலுவலக நேரங்களில் எமது அமைச்சில் பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைக்கேள்விப் பத்திரங்கள் 20.11.2015ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாக இவ் அமைச்சில் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்கான நேரம் முடிவடைந்த உடனேயே விலைக்கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

திரு.இ.இரவீந்திரன்,
தலைவர் - பெறுகைக்குழு, மாகாணக் கல்வி அமைச்சு, வடமாகாணம்,செம்மணி வீதி,நல்லூர், யாழ்ப்பாணம். (அ/19669)(11,15,16)

**வீடு வாடகைக்கு**

கொக்குவில் மேற்கு குளப்பிட்டி சந்தியில் இருந்து ஆனைக்கோட்டைக்குச் செல்லும் வீதியில் C.C.T.M பாடசாலைக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொ.பே: 075 721 2467

**வீடு வாடகைக்கு**

K.K.S வீதி, கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள வீட்டின் மேற்தளம் வாடகைக்கு உண்டு.

தொ.பே: 021 222 5832, 077 598 7500

**கார் விற்பனைக்கு**

19- தொடரிலக்கமுடைய MITSUBISHI LANCER GLX Model, Center Lock, A/C, Power Staring, Good running Condition தனிப்பட்ட ஒருவரின் பாவனையிலுள்ளதுமான கார் விற்பனைக்குண்டு.

தொ.பே: 077 247 2776

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை நகர சபைக்கு உட்பட்ட கடற்கரை வீதியையும் கடற்கரையையும் முற்புறமாகக் கொண்டு ஹொட்டேல் உல்லாச விடுதிக்கும் சிறந்த தான ஒரு ஏக்கர் நிலம் விற்பனைக்கு உண்டு.

தொ.பே: 021 226 4202, 011 267 4599

**பனம் கைப்பணிப் பொருள் உற்பத்தியாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

பனம் கைப்பணிப் பொருள் உற்பத்தியில் உயர் வருமானம் பெற ஆவலா?

தொடர்பு கொள்ளுங்கள்

யாழ்.பனைசார் உற்பத்திக் கம்பனி (வ.து), 925, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

021 221 7934

நேரம் - 9.30 - 4.30

(திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை)

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

இலங்கையில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், வங்கிகள் மற்றும் பல நிறுவனங்களுக்கு பயிற்சியுள்ள, பயிற்சியற்ற ஆண், பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. சாறி அணியும் பெண்கள் விரும்பத்தக்கது. வயது 18-55, சம்பளம் OT யுடன் 35,000/= சாப்பாடு, தங்குமிடம் இலவசம்.

தேவைப்படும் பிரதேசங்கள்: யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை இன்னும் பல பிரதேசங்களுக்கு வெற்றிடங்கள் உண்டு. மொழி அவசியமில்லை. வரும் நாளில் சேர்க்கப்படுவீர்கள். தொடர்பு கொண்டு சமுகம் தரவும். 076 801 6129

R.S.International Job Service
No: 48A1/1,Hill Street,
Maharagama Road,
Dehiwela, Colombo

**யாழ்.நாவலர் வீதியில் வீடு விற்பனைக்கு**

யாழ்.நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள நாவலர் வீதியில் பெருமாள் கோயிலுக்கு மிக அருகில் அமைந்துள்ள 3½ பரப்புக் காணியுடன் கூடிய இரு மாடிகளைக் கொண்ட அழகிய பெரிய வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. நிறுவனம், வங்கி, வைத்தியசாலை நடத்துவதற்கு சிறந்தது. தரகர் தேவையில்லை.

தொ.பே: 071 450 0112 அல்லது 077 743 1809

# சரவணா ரெக்ஸ்
நல்லூர்




சரவணாவின் தீபாவளி சிறப்பு தள்ளுபடியால் உங்கள் வீட்டு கஜனா தப்பியது

வித விதமான அழகிய சாறிகள் மற்றும் ரெடிமேற் சல்வார் தெரிவுகளுக்கு மட்டும்

526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர், (பின் வீதி) (சிவன் கோவில் அருகில்) யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24 | 29 |
| 01 | 10 |
| 1934 | 2015 |



## திருமதி. பூமலர் சரவணமுத்து

கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பூமலர் சரவணமுத்து 29.10.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை அங்கயற்கண்ணி தம்பதியரின் மருமகளும் சரவணமுத்துவின் அன்பு மனைவியும், கல்பனா (லண்டன்), ரேணுகா (கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும் பகீரதன், ராதா கரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆர்த்தி, சரண்யன், சஹானா, சந்தியா ஆகியோரின் அன்பு பேத்தியும் காலஞ்சென்ற தங்கமலர் மற்றும் சோமசுந்தரம் (லண்டன்), காலஞ்சென்றவர்களான சதாசிவம் கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பாலசிங்கம், மற்றும் பதுமாவதி, தவமணி, செல்வக்கண்ணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 01.11.2015 ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 8 மணி தொடக்கம் நடைபெற்று 10.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வெள்ளவத்தை. தகவல் – குடும்பத்தினர்


**டோகா கட்டார் - உடனடி வேலைவாய்ப்பு**
**(பிரபலமான மினரல் வோட்டர் கம்பனியில்)**

| Category | Qty | Salary | Food Allowance | Total |
|---|---|---|---|---|
| சேல்ஸ் உதவியாளர் (Sales helper) | 20 | QR.900 | +QR.300 | 45,600+OT |
| சேல்ஸ் டிரைவர் (Sales Driver) | 16 | QR.1400 | +QR.300 | 64,600+OT |

- தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து இலவசம். 1QR=38/=
- சம்பளத்துடன் உணவுக் கொடுப்பனவு QR 300 வழங்கப்படும்.
- இரண்டு வருட வேலை வாய்ப்பு - 8மணி நேர வேலை.
- 6 நாள்கள் வேலையுடன் OT உம் வழங்கப்படும்.
- 2 வருட முடிவில் விமான சீட்டு வழங்கப்படும்.
- Drivers இலங்கை சாரதி அனுமதிப் பத்திரத்துடன் விண்ணப்பிக்கலாம். (அரசாங்க கட்டணம்)

நேர்முகப் பரீட்சை இம்மாதம் 03,04,05 ஆம் திகதிகளில் பின்வரும் முகவரியில் நடைபெறும்.

5-8, முதலாம்மாடி, பழைய மீன் சந்தை, கொழும்பு-11 (Pettah)

மேலதிக விபரங்களுக்கு

**Shima International Services** (L.L.NO.2271)

No 263,Main Street, Kattankudy - 02 (C/19578)(1.11.15,16)

T/P: 0777 12 07 07 / 077 532 7007 / 0113 300 600




# 45ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 | 19 |
| 08 | 09 |
| 1996 | 2015 |

கடந்த 19.09.2015 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் செல்வன் புஸ்பராசா துவாகரன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (02.11.2015) திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் சபிண்டீகரண நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பத்தானை, அல்வாய் கிழக்கு, அல்வாய். குடும்பத்தினர்.

(C/19606)(1.0.17)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.10.2015 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தெய்வம்

அமரர்

## இளையவன் சந்திரமதி (சாந்தி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (02.11.2015) திங்கட்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்று மதியம் 1.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

ஆவரங்கால் மேற்கு, புத்தூர் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## இராமன் கிருஸ்ணசாமி



கண்டியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமன் கிருஸ்ணசாமி நேற்று (31.10.2015) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் வள்ளியம்மையின் அன்புக்கணவரும் சிவலிங்கம், லோகநாதன், சிவகுமார், ஜெயசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெசிகரன் (பிரதேச செயலகம், பளை), வினோஜா (ஜேர்மனி), விஜிகரன், விதுசனி (முதலாம் வருட மாணவி நுண்கலைப்பீடம்), விஜயதர்சினி, நிரோசன், சிரோமி, டேனியல், நிருபா, லோசினி ஆகியோரின் அன்புத் தாத்தாவும், தசாந்த், ஜானுசா, ஹரிசன் ஆகியோரின் பூட்டனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10.30 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மத்தி, நீர்வேலி. (65635)(1.11.15) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## விசேந்தி பெனடிக்ற்



கண்டுக்குளி பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும், டேவிற் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட விசேந்தி பெனடிக்ற் 31.10.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசேந்தி - சிசிலியா அன்னமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான யுவானி செபதேயு - மசேலியா தம்பதியரின் மருமகனும், பொன்னதேத்தின் அன்புக் கணவரும், அனஸ்ரின் கிளறன்ஸ் (சந்திரன்), காலஞ்சென்றவர்களான அலைக்சியா ரஞ்சினி, அஞ்சலோ செறன்ஸ் மற்றும் அலைன்ஸ்ரைன் (கல்ரெக்ஸ் அலன் ஒயில் மாட்), அனிற்ரா நிறஞ்சனி (கிழியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

138, டேவிட் வீதி, யாழ்ப்பாணம். தகவல்: மனைவி,மக்கள்

# இலங்கை – சீனா பாதுகாப்பு கலந்துரையாடல் ஒத்திவைப்பு

கொழும்பு, நவ. 1

இலங்கை-சீனாவுக்கு இடையிலான இரண்டாவது பாதுகாப்பு ஒத்துழைப்புக் கலந்துரையாடல், அடுத்த ஆண்டின் முன் அரையாண்டு பகுதியிலேயே இடம்பெறும் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு நாடுகளுக்குமிடையிலான முதலாவது பாதுகாப்புக் கலந்துரையாடல், கடந்த 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பீஜிங்கில் இடம்பெற்றது.

ஆண்டுதோறும் நடத்த திட்டமிடப்பட்ட இந்தப் பாதுகாப்பு ஒத்துழைப்புக் கலந்துரையாடலின், இரண்டாவது கூட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் இலங்கையில் நடத்துவது என இணக்கம் காணப்பட்டிருந்தது.

கடந்த மே மாதம், சிங்கப்பூரில் நடந்த சங்கிரி-லா பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்கேற்கச் சென்றிருந்த இலங்கைப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் பிரதிப் பொதுத் தலைமை அதிகாரி அட்மிரல் சன் ஜியான்குவோவுடன் நடத்திய பேச்சுக்களின்போதும், இந்த ஆண்டு இறுதியில் இந்தப் பாதுகாப்புக் கருத்தரங்கை நடத்த இணக்கம் காணப்பட்டது.

அத்துடன், இலங்கையில் நடத்தப்படும் இந்த மாநாட்டில் பங்கேற்குமாறும், சீன குழுவுக்குப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவினால் அழைப்பு விடுக்கப்பட்டது.

எனினும், இந்தப் பாதுகாப்பு மாநாட்டை இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்தும் ஒழுங்குகளில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இழுபறிகளே காரணம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், அண்மையில், சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, இந்தப் பாதுகாப்புக் கலந்துரையாடலை அடுத்த ஆண்டு முதல் அரையாண்டுப் பகுதிக்குள் நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருக்கிறார்.

ஜியானான் அமைப்பின் 6ஆவது கூட்டம் கடந்த 16ஆம் திகதியிருந்து 18ஆம் திகதி வரை பீஜிங்கில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்குச் சென்றிருந்தபோதே, சீன- இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்புக் கலந்துரையாடலுக்கான ஒழுங்குகளைப் பாதுகாப்புச் செயலாளர் மேற்கொண்டிருந்தார்.

அடுத்த ஆண்டு முதல் அரையாண்டுக்குள் இந்தக் கூட்டத்தை நடத்த சீனத் தரப்பு இணங்கியுள்ள போதிலும், இந்தக் கூட்டம் நடக்கவுள்ள சரியான காலப்பகுதி இன்னமும் முடிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(த-வ)

---

## பருத்தித்துறை

மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பனவால் நேற்றுக் காலை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்தநிகழ்வில்விருந்தினர்களாகச் சட்டம், ஒழுங்கு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன, சிறுவர் மகளிர் விவகார ராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஜெகத் விஜயவீர, வடமாகாண சபை உறுப்பினர்களான சு.சுகிர்தன், சி.அகிலதாஸ், வடமாகாண ஆளுநரின் செயலாளர் ஈ.இளங்கோவன், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். செந்தில்நந்தனன், யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி எம். இளஞ்செழியன், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா. கணேசராசா உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

முதலில் அமைச்சர் குழுவினர் நீதிமன்ற வாயிலில் இருந்து கண்டியகலாசாரநடனத்துடன் அழைத்து வரப்பட்டுப் பொலிஸ் அணி வகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அணி வகுப்புமரியாதையைப்பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் மற்றும் அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோர் ஏற்றுக் கொண்டனர்.

சமயப் பெரியார்களின் ஆசியுரைகளைத் தொடர்ந்து பொலிஸ் நிலையநினைவுக்கல்லை அமைச்சர் திரை நீக்கம்செய்து வைத்ததோடு பொலிஸ் நிலையக் கட்டடத் தொகுதியையும் திறந்து வைத்தார்.

தொடர்ந்து பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன், அமைச்சர் திலக் மாரப்பன, காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.மாரசிங்க மற்றும் யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.பெரேரா ஆகியோர் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள், அரச திணைக்கள அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தப் புதிய கட்டடத் தொகுதியில் குற்றத்தடுப்பு பிரிவு, சிறிய முறைப்பாட்டுப் பிரிவு, சுற்றுச்சூழல் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு, சமூக நலன் பிரிவு, சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, விசேட பணியகம் அடங்கலாக பல பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-108-109)

## போரின்

முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

லண்டனில் அண்மையில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரின் இறுதிக் கட்டத்தில், விடுதலைப் புலிகள் சரணடைவதற்கு, அமெரிக்கா – நோர்வே – ஐரோப்பிய ஒன்றியம் – ஜப்பான் மற்றும் இந்தியாவின் ஆதரவுடன், திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் சரணடைவதற்கு வலியுறுத்தும் ஒரு நகர்வு மேற்கொள்ளப்பட்டது. சரணடையும் விடுதலைப் புலிகளை ஏற்றி வருவதற்கு ஒரு கப்பலும் கூட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த இரண்டு நகர்வுகளுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும், புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானும் சாதகமாகப் பதிலளிக்கவில்லை. இதன் விளைவாகவே, வெள்ளைக்கொடியுடன் சரணடைய முனைந்தபோது, உயிரிழப்புக்கள் ஏற்பட்டன –என்றார்.

எரிக் சொல்ஹெய்ம் தனது உரையில், இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டபோது தாம் எதிர்கொண்ட நெருக்கடிகள், சவால்கள் குறித்தும் விபரித்துள்ளார். (த-5)

## கைதிகளுக்குப்

வருகின்றது என்று சட்டம் ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

யாழ்.சிறைச்சாலைக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறைச்சாலைக் கட்டடத் தொகுதி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் – அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று ராஜாங்க அமைச்சர் விஜயகலா தனது உரையில் சுட்டிக் காட்டிய விடயம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. எனினும் தற்போதைய சூழ்நிலையில் அவர்களைப் பிணையில் விடுவிப்பது சம்பந்தமாக சட்டமா அதிபருக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளனர். அவர்களது ஆலோசனையின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழ், சிங்களம் என்ற பேதம் பார்க்கப்படாது அனைத்துக் கைதிகளும் ஒரே மனிதர்கள் என்ற ரீதியில் அவர்களுக்கு உதவி ஒத்தாசைகள் வழங்கப்படவேண்டும் என்று கூறியுள்ளேன். தற்போது சிறைகளிலுள்ள கைதிகளில் 25 வீதமாவது குறைக்கப்படவேண்டும் என்று எண்ணுகிறேன்.

1990, 1991 இல் கைதிகள் விடயம் பற்றிச் சட்டமா அதிபருடன் கலந்துரையாடியிருந்தேன். அந்த அமைச்சு இப்போது எனக்குக் கிடைத்துள்ளது. எனவே கைதிகளுக்கு சௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் –என்றார்.

(த-4-21-105)

## 224 பேருடன்

சென்றது.

எகிப்தின் ஷினாய் தீபகற்பப் பகுதியில் இந்த விமானத்தின் தொடர்புகள் திடீரெனத் துண்டிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து விமானத்தைத் தேடும் பணிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலையில், மாயமான விமானத்திலிருந்து துருக்கி விமான நிலையத்துடன் விமானிகள் தொடர்பு கொண்டதாகத் தகவல்கள் முதலில் வெளியாகின. மேலும் ரஷ்யா நோக்கி அந்த விமானம் பாதுகாப்பாக வந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், எகிப்து பிரதமர் ஷெரீப் இஸ்மாயில், ரஷ்யா விமானம் ஷினாய் தீபகற்பப் பகுதியில் நடுவானில் வெடித்துச் சிதறிவிட்டது. இது குறித்து ஆய்வு செய்யக் குழு அமைக்கப்பட்டு அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இதனால் விமானம் விபத்தில் சிக்கியதா? இல்லையா? என்ற குழப்பம் நீடித்தது. இந்நிலையில், நேற்று மாலை ஷினாய் தீபகற்பப் பகுதியில் நொறுங்கிய விமானத்தின் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் விமானத்தில் பயணம் செய்த 224 பேரும் உயிரிழந்திருப்பதும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ரஷ்ய அரசால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட இந்த தனியார் விமானத்தில் 217 பயணிகளும், விமானிகள் உட்பட 7 பணியாளர்களும் இருந்தனர் என ரஷ்யாவின் விமான போக்குவரத்துத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ)

## 7, 393 ஏக்கர்

னால் 31 பேருக்குச் சொந்தமான 16.37 ஏக்கர் காணியும், கடற்படையினரால் 105 பேருக்குச் சொந்தமான 139.6 ஏக்கர் காணியுமாக, மொத்தம் 10 ஆயிரத்து 495 பேருக்குச் சொந்தமான 7 ஆயிரத்து 214 ஏக்கர் காணி கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை விட இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே 106 வீடுகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸாரினால் 102 வீடுகளும், கடற்படையினரால் 117 வீடுகளுமாக மொத்தம் 325 வீடுகள் இன்னமும் விடுவிக்கப்படாமல் முப்படையினர் வசம் உள்ளன.

அரச காணிகளைப் பொறுத்த வரை, இராணுவத்தினர் 36 இடங்களில் 132.88 ஏக்கர் காணியையும், பொலிஸார் 3 இடங்களில் 1.34 ஏக்கர் காணியையும், கடற்படையினர் 16 இடங்களில் 45.24 ஏக்கர் காணியையும் என மொத்தமாக 179.46 ஏக்கர் காணி கையகப்படுத்தப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்து 6 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், மீள்குடியமர்வு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ள நிலையிலும், இன்னமும் 7 ஆயிரத்து 393.46 ஏக்கர் நிலப் பரப்பு முப்படையினர் வசம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-5-101)

## ஜனாதிபதி இன்று

வதை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விழாவில் பங்கு பற்றுவதற்காகவே அவர் அங்கு செல்கிறார்.

இதன்படி எதிர்வரும் 4 ஆம் திகதி வரை ஜனாதிபதி தாய்லாந்தில் தங்கியிருப்பார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (த-வ)

## சிறைச்சாலைக்

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அதனைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், யாழ்ப்பாணத்திலுள்ள நீதிமன்றங்களின் நீதிவான்கள், ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோரும் சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர், அதன் அதிகாரிகள் யாழ்.சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், பொலிஸ் உயரதிகாரிகள், இராணுவ உயரதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

எனினும்குறித்தசிறைச்சாலையில் இன்னும் சில கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கவேண்டியுள்ளதனால் அது இயங்கத் தொடங்குவதற்குத் தாமதமாகும் என்று கூறப்பட்டுள்ளது. தற்போது யாழ்.சிறைச்சாலை தனியார் வீடுகள் மூன்றை ஒன்றிணைத்து அதில் இயங்கி வருகிறது.

(த-4,21)

## கேணியில்

என்பவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்தவராவார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை இறப்பு விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் விசாரணைகளை மேற் கொண்ட பின் சடலத்தை உறவினர் களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

(த-108)

## சிறையில்

யாழ்.சிறைச்சாலைக்கெனப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறைச்சாலைக் கட்டடத் தொகுதி பண்ணையில் நேற்றுத் திறந்து வைக்கப் பட்டது. அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மண் புதிய ஒரு மறியல் சாலையைப் பெற்றுள்ளது. சிறைக் கைதிகள் மனிதர்களாக மதிக்கப்படவேண்டும் என்பதற்காக அவர்கள் குற்றங்கள் செய்தாலும் அவர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள். தீர்ப்பளிக்கப்படும் வரை அவர்கள் நிரபராதிகள். நிரபராதிகளைத் தண்டிக்கப்பட்ட கைதிகள் போல் நாம் நடத்தக் கூடாது என்பதற்காக சிறைச்சாலைகள் சீர்திருத்தக் கல்லூரிகளாக மாற வேண்டும்.

யாழ்.மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய சந்தேக நபர்கள் மற்றும் கைதிகள் தடுத்து வைத்து விசாரணை செய்யப்படுவதற்கு யாழ்.சிறைச்சாலை உள்ளது. சிறைச்சாலையில் இருக்கும் ஒவ்வொரு நபரும் நீதிமன்ற உத்தரவிலேயே உள்ளனர். அவர்களைத் தடுத்து வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டால் மாத்திரமே அவர்கள் சிறைச்சாலைக்குச் செல்ல முடியும். அதனால் நீதிமன்ற உத்தரவுப்படியே ஒவ்வொருவரும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்ற எண்ணம் ஒவ்வொரு சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கும் ஏற்படவேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தவறு செய்தால்கூட அவர்களை அன்புடன் அணுகி அதிலிருந்து விடுபடுவது பற்றிக் கூறவேண்டும். பொலிஸ் நிலையத்தில் 24 மணி நேரமும் அவர்களைத் தடுத்து வைத்திருக்கமுடியாது என்பதனால் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தி மேலதிகமாக 14 நாள்கள் தடுத்து வைக்குமாறு பொலிஸாரால் கோரப்படுவதை அடுத்தே அவர்களை நீதிபதிகள், நீதிவான்கள் தடுப்புக்கு அனுப்புகிறார்கள்.

3 வகையாக கைதிகள் தடுத்து வைக்கப்படுகிறார்கள். குற்றம் சாட்டப்பட்ட கைதிகள், குற்றவிசாரணை நடத்தப்படுகின்ற கைதிகள், தண்டிக்கப்பட்ட கைதிகள். அவர்களை மேற்குறித்தவாறே 3 வகையான தடுப்பில் வைக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு கைதிக்கும் உரிய மனித உரிமை பேணப்படவேண்டும். அதனால்தான் வெலிக்கடைச் சிறையில் சிறைக் கைதிகளும் மனிதர்களே என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது.

சிறைக் கைதிகள் பண்பாகவும் உரிய முறையிலும் நடத்தப்பட வேண்டும். ஏனெனில் சிறைச்சாலைகளில் நடந்த பல வரலாறுகள் உள்ளன. அந்த வரலாறுகள் மீண்டும் எழுதப்படக்கூடாது. எந்த இனத்தவராக இருந்தாலும் எந்த மதத்தவராக இருந்தாலும் அது அங்கு பார்க்கப்படுவதில்லை.

1983 இல் 53 தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டனர். 2013 இல் 25 சிங்களக் கைதிகள் கொல்லப்பட்டனர். 2013 இல் 3 கைதிகள் கொல்லப்பட்டனர். இத்தகைய வரலாறுகள் இனிமேல் எழுதப்படக் கூடாது–என்றார். (த-4,21)

2015 நவம்பர் 01 ஞாயிற்றுக்கிழமை உதயன்

# வடமாகாண
# மரநடுகை மாதம்
## கார்த்திகை 1 - 30

ஐந்து மாவட்டங்கள் ஐந்து இலட்சம் மரக்கன்றுகள்



## ஆளுக்கொரு மரம் நடுவோம்
## நாளுக்கொரு வரம் பெறுவோம்

விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி,
கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல்,
நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு
வடமாகாணம்

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி பரம்சோதி தேவகுஞ்சரி

(இடைப்பிட்டி, காரைநகர்)

தோற்றம்
03.09.1961

மறைவு
16.11.2011

குஞ்சரித்தாய் குவலயத்தில்
குன்றனைய விளக்காகி
எம் குலத்தை வாழவைத்து
எல்லோருக்கும் வழிகாட்டி
இவ்வுலகு இறையுலகு
இரண்டிலுமே பரம்சோதி
இணையடிகள் நீழலிலே
இன்புற்றாள் தவப்பேறே!
திருவடியில் சிவனருளால்
பெருமுத்தி அடைந்தாலும்
இருவிழிகள் நீர் சொரிய
இதயத்துள் நினைவேற்றி
திருத்தாயின் அடிதொழுவோம்
மனமலரால் அர்ச்சிப்போம்...

**திதி:ஷஷ்டி**
**01.11.2015**

அருள் சொரியும் அன்னைமுகம்
அன்றாடம் பூஜிப்போம்
ஒன்றென்ன ஒருகோடி
ஆண்டோடிப் போனாலும்
என்றென்றும் எமதுள்ளம்
நீயுறையும் கோயிலம்மா
நன்றெமக்கு நல்கிடுவாய்
நாளும் ஒளியூட்டிடுவாய்....
நின்னடியை சரணடைந்தோம்
நின்னருளால் அமைதிகொள்வோம்.

(சி.19668)(13.15.16)

354/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**
(வெங்கடேஸ்வரா)

# நெஞ்சில் கம்பு துளைத்ததால் படுகாயமுற்ற மாணவன் சாவு

கொழும்பு, நவ. 1

களுத்துறை, புளத்சிங்கள பிரதேசத்தில் கடந்த செவ்வாக்கிழமை மரமொன்றிலிருந்து வேலியொன்றின்மேல் விழுந்த மாணவன், நெஞ்சுப் பகுதியில் கம்பு குத்திய நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவேளை, நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

16 வயதான குறித்த மாணவன், தனது மாமாவுடன் வயலுக்குச் சென்றுள்ளார். அங்கு சென்று, அருகிலிருந்த மாமரத்தில் ஏறியுள்ளார்.


அதன்போதே, மரத்திலிருந்து தவறி, மாமரத்துக்குக் கீழிருந்த வேலியில் விழுந்துள்ளார்.

அந்தக் கம்பு மாணவனின் நெஞ்சுப் பகுதியைப் பதம் பார்த்துள்ளது. சம்பவத்தையடுத்து அவர், ஹொரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எனினும், கம்பு அகற்றப்படாமல் மேலதிக சிகிச்சைகளுக்காக அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவருக்கு அங்கு ஆறு மணிநேரம் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையை அடுத்தே அந்தக் கம்பு அகற்றப்பட்டது.

தொடர்ந்தும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே நேற்று முன் தினம் காலை குறித்த மாணவன் உயிரிழந்துள்ளார். (த-சி)


## இனி இல்லை நெஞ்சுவலி !!!




தினமும் இலவச ஆலோசனை
செலிங்கோ ஹவுஸ்
வார நாட்கள் மு.ப 9.00 - மாலை 5.06
சனிக்கிழமை மு.ப 9.00 - பி.ப 2.00
மாதாந்த கிளினிக் நாடு முழுவதும்
செலிங்கோ ஹவுஸ் 10ஆம் மாடி, இல.69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

FAIR PHARMA (PVT) LTD
(Kerala Ayurvedic Medicine)
011 4 388 200, 4 388 100
4 388 101, 4 388 102
Hotline: 0777 555 600 / 0777 708 310 / 0777 708 330
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

## vacancies For Marketing Executives

**JOIN US TODAY !**

பல்தேசிய நிறுவனத்துக்கு Education Technologies கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Benefits**
- Unlimited income potential
- Comprehensive Training
- Basic Salary/ Travel Allowances/ Commission incentives
- Overseas Travel/ Coferences for Achievers
- Management positions within 6month - 1Year
- Motor Bike/ Car Allowances

**Requirement**
- Age above 35 Years.
- G.C.E (A/L) Qualification (School Leavers can apply)
- A Positive attitude with a pleasing personality

**Education Technologies**
No: 100, 2nd Floor Manipay Road, Jaffna.
Contact - Manager - Mr.G .ANTHANY
021 567 1130, 077 356 6835
WWW.Pioneerhouselearning.com

## Hi - Life
## Health Care And Gym Centre

யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக இலங்கை மருத்துவசபையில் (SLMC) இல் பதிவு செய்த நாடளாவிய ரீதியில் பயிற்சி பெற்ற போசனையியலாளர்களினால் (Nutritionist) சரியான போசாக்கினை உள்ளெடுத்தல் சம்பந்தமான ஆலோசனை வழங்கப்படுகின்றது.

எமது சேவைகள்
- உடல் எடையை சரியான அளவில் பராமரித்தல்
- நீரிழிவு, இதயநோய், உயர்குருதி அழுக்கம் என்பவற்றுக்கான உணவு முகாமைத்துவம்
- கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கான நிறைவான போசனை.
- குழந்தைகள் மற்றும் சிறுபிள்ளைகளுக்கான போசனை.

எம்மிடம் உடற்பயிற்சி செய்வதற்குரிய (Gym) வசதிகளும் உண்டு.

**Special offer**
01. Full package / month - 2500/= (Gym + Nutrition Counselling + 1 person can use gym free (offer)

தொடர்பு:-
305/2, ஸ்ரான்லி வீதி (சிறாம்பியடி ஒழுங்கை), யாழ்ப்பாணம். 076 888 2525

## சிறி குமரன் ரெக்ஸ்



தித்திக்கும் தீபாவளியை சிறிகுமரன் ரெக்ஸ்சுடன் கொண்டாடுங்கள்

பல புத்தம் புதிய டிசைன்களில் எண்ணற்ற தெரிவுகளை மலிவாகவும், தரமாகவும் பெற்றிட

சிறி குமரன் ரெக்ஸ்

விசேட விலைக் கழிவில் அனைத்து ஆடைகளும்

வாரத்தின் ஏழு நாட்களும் வியாபாரம் நடைபெறும்

இல.770, K.K.S. ரோட், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

## திருமண வரவேற்புபசார அழைப்பு

அன்புடையீர்!

நாளை (02.11.2015) திங்கட்கிழமை திருமண பந்தத்தில் இணையும்
சிரஞ்சீவி சோ. சந்திரசேகர சர்மா சௌபாக்கியவதி லலிதாம்பிகை
தம்பதிகளின் திருமண வரவேற்பு உபசார வைபவம்
03.11.2015 செவ்வாய்க்கிழமை மாலை 04 மணிமுதல் சுன்னாகம், மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீவிஸ்வநாதசுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சிவன் கோயில்,
குடவாயிற் கோட்டம்,
மயிலணி, சுன்னாகம்.

தங்கள் நல்வரவை விரும்பும்
ஸ்ரீமதி நா.சோமாஸ்கந்தக் குருக்கள் - குடும்பத்தினர்.

## இயந்திரமோ ஒன்று! வேலையோ பல !!

3D ஹீட் பிறஸ் மெசின்

கிடைக்கும் இலாபமோ மிக அதிகம் !!!

விசேட விலைக்கழிவுடன்




Studio ,Colour Lab, Book Shop,Gift Centers, Communication..
போன்ற வியாபார ஸ்தலங்களிற்கு உகந்தது




பிரின்ட் செய்யக்கூடிய சகல பொருட்களும் எம்மிடம் உண்டு
கப், பிளேற், ரிங் போத்தல், ஸ்ரோன், ரீ சேர்ட், டைல் போன்றவற்றில் பிரின்ட் செய்யக்கூடியது

077 201 5330
077 385 0089

WINRICH INTERNATIONAL(PVT)LTD

max adz

## STUDENT VISA

UK, Australia, Canada, USA, New Zealand , Austria, Belgium, Czech Republic, Denmark, Finland, France, Germany, Greece, Hungary, Italy, Malta, Netherlands, Norway, Poland, Portugal, Spain, Sweden, Switzerland

வெளிநாட்டில் உங்கள் கல்வியைத் தொடர ஆசையுள்ளதா?

விசா என்றால் உலக சாதனை இல்லை நீங்கள் விரும்பிய நாட்டில் படித்துக் கொண்டும் வேலை பார்க்கலாம்.

100% Genuine Students Only

உங்கள் 18 வயதிற்கு குறைவான பிள்ளைகள் உயர் கல்விக்காக மேலே குறிப்பிட்ட நாட்டில் மற்றும் ஏனைய நாடுகளுக்கும் செல்வதற்கும் விரும்புகின்றீர்களா?

அப்படியானால் மிக எளிதாக பிள்ளைகளோடு தாய், தந்தையருடன் மற்றும் உங்கள் பாதுகாவலருடன் செல்வதற்கான வாய்ப்புகளுக்கு உடனே தொடர்பு கொள்ளவும்.

Hotline : 0777 711 905

SKYWALK VISA SOLUTIONS
No.65, 1/1, Galle Road, Dehiwala
0113 053 405

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி நடராசா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நடராசா 30.10.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, புஸ்பமலர், உருத்திரசிங்கம் மற்றும் குணபாலசிங்கம், தனபாலசிங்கம் (சுவிஸ்), சரோஜினிதேவி(பணிப்பாளர் திவிநெகும - வவுனியா), அம்பிகை(ஜேர்மன்), அம்பாலிகை, பவானி(ஜேர்மன்) ஆகியோ ரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவேலாயுதம் மற்றும் செகராசா, சிவபாலசுப்பிரமணியம்(ஜேர்மன்), பத்மரஞ்சன் (வவுனியா- கிராமசேவையாளர்), மேனன், புனிதராசன் (ஜேர்மன்), பிறேமா, தர்மா (சுவிஸ்) ஆகியோ ரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், சரஸ்வதி, யோகம்மா மற்றும் பற்பனா, கமலாதேவி, இலங்காதேவி, பரஞ்சோதி, மகாலிங்கம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், செல்லையா தர்மலிங்கம், பரமேஸ்வரி, இரத்தினேஸ்வரி மற்றும் ரஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனியும் பாமினி(ஜேர்மன்), தர்சினி (பிரான்ஸ்), பிறேமனா, நிசாந்தன், டினோஜா, நிசாந்தினி, ஜெனனி, கஸ்தூரி, தாமிரா, திமேத், சொலமன், சிசான், நிரோஸ், திவ்யா, பிரசாந், ரம்யா, பிரஜித், அனோஜித் ஆகியோரின் பேர்த்தியும் சுபானு, மாதவன், சியாம், அபர்ணிகா, அபர்னன், அர்ச்சயன், சஜித், சஞ்சயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கிலுள்ள கட்டை ஆலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :மகன் ந.குணபாலசிங்கம்(கடவுள்)
குடும்பத்தினர்.

(c 19676)
(14.15.16)

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**சிவகுரு பொன்னம்பலம் (S.L.D)**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திதி - 01.11.2015

தோற்றம் 22.06.1943
மறைவு 28.10.2010

ஆண்டுகள் ஐந்து சென்றாலும் உங்கள் பார்வைகள்
எம் மனதை விட்டு அகலவில்லை
உம் பிள்ளைகள், மனைவி, சகோதரர், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் அனைவரும் ஒன்று கூடி உம் நினைவுகள் பேசி
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"நிலாவாசம்" பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
077 780 3203

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

(65697) (14,15,17)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 26 . 02 . 1947
விண்ணில் 24 . 10 . 2013




அமரர் **கனகசபை மகாதேவன்**
(ஓய்வுபெற்ற மருந்தாளர்)
திதி: அபரபக்க ஷஷ்டி

அன்புக்கோர் இலக்கணமே! ஆருயிர் அப்பாவே!
[illegible]
[illegible]
பல வழிகள் காட்டியவரே! எங்குற்றீர் தவிக்கின்றோம்
[illegible]
[illegible] பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் வீதி,
உரும்பிராய் தெற்கு.

[illegible]
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1962.02.15

மறைவு 2014.11.13

திதி - 01.11.2015

**முத்துச்சாமி சண்முகநாதன்**

இன்முகத்துடன் எல்லோருடனும்
பழகி யாவரையும் கவர்ந்து அனைவரின் இதயத்திலும் நிறைந்த
அன்புத் தந்தையே! என்றும் எங்களுக்கு சக்தியாகவும்
ஆற்றும் செயல்கள் சித்தியாகவும் எம்மை நடத்தும் புத்தியாகவும்
எப்போதும் எங்களோடு இருங்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

இல. 5, சிவாஸ்லேன்,
கொக்குவில் கிழக்கு.

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

(65667) (14,17)

# மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 11 . 1956



இறப்பு 29 . 10 . 2015

## தங்கமயில் சிவராசா
(சிவம் இரும்புத் தொழிலகம்-யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கமயில் சிவராசா 29.10.2015 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கமயில்-கோலமதி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், சகுந்தலாவின் அன்புக் கணவரும், ஜெகநாத் (ஜெகன்), ஜெசிதா, ஜெயந்தலா(கனடா), ஜெயக்குமார்(JK- சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மோகன் மற்றும் நாதன், பாபு, ராசன், விமலா, காலஞ்சென்ற அமுதா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவமணிதேவி, சந்திராதேவி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுரேந்திரகுமார், சுதன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலக்சிகா, கீர்த்திகா, சுபீட்சா(கனடா), சுஜின்(கனடா) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-11-2015) ஞாயிற்றுக்கிழமை ந.ப 12:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ஜெயக்குமார்(JK) - சுவிட்சர்லாந்து
செல்லிடப்பேசி: +41762483972
ஜெசிதா - இலங்கை தொலைபேசி:+94212221019
செல்லிடப்பேசி:+94213207080


ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(65678) (14,15,26)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 11 . 1989



மறைவு 12 . 11 . 2014

செல்வன் **இராஜலிங்கம் வருண்ராஜ் (வருண்)**

என் அன்பு மருமகன் வருணே!
ஆண்டு ஒன்று கடந்து சென்றாலும்
நீ எம்முடன் வாழ்ந்த காலங்களை
மீட்டுத் தந்து கொண்டிருக்கின்றன.
உன் அன்பான பேச்சும் உன் குறும்புத்தனமான செயலும்
என்றும் உன் நினைவுகளைத் தந்து கொண்டிருக்கின்றன.
காலத்தின் செயல்களாய் கண்சிமிட்டும் நொடிக்குள்
நீ எம்மை விட்டுச் சென்று விட்டாய்
காலங்கள் கடந்து சென்றாலும்
கடைசி வரை உன் நினைவுகள்
என்றும் எம் மனதில் தொடரும்

நினைவுகளுடன்
சோ. வர்ணகுலசிங்கம் (மாமா) (ஜங்கரன் மோட்டோர்ஸ்)
யாழ்ப்பாணம்.

## 6 வரி திருத்தச் சட்ட வரைவுகளில் கையெழுத்திட்டார் சபாநாயகர்

கொழும்பு. நவ 1

8 ஆவது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள ஆறு வரி திருத்தச் சட்ட வரைவுகளில் சபாநாயகர் கரு ஜெயசூரிய கையெழுத்திட்டுள்ளார்.

தேசிய வருமான வரி திருத்த சட்டவரைவு, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி திருத்த சட்ட வரைவு, பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவு வரி திருத்தச்சட்ட வரைவு, பொருளாதார சேவைகள் கட்டண வரி திருத்தச் சட்டவரைவு, மதிப்புக்கூட்டு வரிச் திருத்தச் சட்ட வரைவு மற்றும் பொருளாதார சேவைகள் வரி திருத்தச் சட்ட வரைவு ஆகியவற்றுக்கே அவர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை சபாநாயகர் குறித்த சட்ட வரைவுகளில் கையெழுத்திட்டுள்ளதாக அவரின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை சபாநாயகராகப் பொறுப்பேற்ற பின்னர் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டவரைவில் கரு ஜெயசூரிய கையெழுத்திடுவது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ)

## கொழும்புக்குள் நுழையும் வாகனங்கள் அதிகரிப்பு

கொழும்பு,நவ 1

கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களிடம் கட்டணம் அறவீடு செய்வது குறித்து கவனம் செலுத் தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதனால் அதிகளவு வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. கொழும்பு நகருக்குள் சகல வசதிகளையும் உடைய போக்குவரத்துச் சேவையொன்றை ஆரம்பித்து, நகருக்குள் பிரவேசிக்கும் கார்களுக்குக் கட்டணம் அறவீடு செய்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

1985 ஆம் ஆண்டு நாள் ஒன்றில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் வாகனங்கள் கொழும்பு நகருக்குள் பிரவேசித்ததாகவும், தற்போது அந்த எண்ணிக்கை 5 லட்சமாக உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் 85 வீதமானவை கார்கள், வான்கள், ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள்களாகும் என ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கொழும்பு நகருக்குள் நாள்தோறும் பிரவேசிக்கும் பஸ்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்திலிருந்து 29 ஆயிரமாகக் குறைவடைந்துள்ளது. தனியார் வாகனங்களில் பயணிப்போருக்குக் கொழும்பு நகருக்கு வெளியே வைத்துப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் புதிய யோசனைகள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும் அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-வ)



அமெரிக்காவின் போர்ட் லாவ்டர்டலி ஹொலிவூட் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து வெனிசுவேலா நோக்கிப் பறப்பை மேற்கொள்ளத் தயரான போயிங் 767 ஜெட் பயணிகள் விமானம் ஒன்றில் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டது. அந்தச் சமயம் விமானத்துக்குள் 101 பயணிகளும், விமானப் பணியாளர்களும் இருந்தனர். உடனடியாக அவர்கள் அவசர வாயில்கள் வாயிலாக வெளியேற்றப்பட்டனர். அதில் 15 பேர் காயங்களுக்குள்ளாகினர். விமானம் திடீரெனத் தீப்பிடித்தமைக்கு எரிபொருள் கசிவே காரணம் என்று கூறப்படுகின்றது. விமானத்தின் இயந்திரப் பகுதியில் தீ ஏற்பட்டுள்ளது. தீயணைப்புப் பிரிவினரின் கடும் போராட்டத்தால் தீ ஏனைய பகுதிகளுக்குப் பரவாது அணைக்கப்பட்டது. (ற)

## அதிக வசதிகள் கொண்ட வீதி விளக்குகள் சீனாவில்

பீஜிங், நவ.1

அவசரகால அழைப்புகள், வைபை, போக்குவரத்து நெரிசலை எச்சரிக்கும் கருவி, கண்காணிப்புக் கமரா போன்ற பல வசதிகளைக் கொண்ட வீதி விளக்குகள் சீனாவில் பொருத்தப்பட்டுள்ளன. அங்குள்ள ஷாங்காய் நகரில் அவை தற் போது பொருத்தப்பட்டு இயங்கத் தொடங்கியுள்ளன.

எட்டு மீற்றர் உயரமுள்ள இந்த வீதி விளக்குகள் ஒவ்வொன்றிலும் அவசரகால அழைப்பை மேற்கொள்ளும் பொத்தான் உள்ளது. அதை அழுத்தினால் பொலிஸ், தீயணைப்புப் பிரிவு போன்ற பொதுச் சேவை அமைப்புகளுக்கு உடனடியாகவே அழைப்புச் செல்லும்.

வீதி விளக்குக் கம்பத்தில் உள்ள கமரா அந்தப் பகுதியில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளையும் பதிவு செய்து கொள்ளும். கடும் போக்குவரத்து நெரிசல் அல்லது மக்களுக்கு அபாயத்தை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வுகள் நடந்தால், கம்பத்தில் உள்ள ஒலிபெருக்கி தானாக இயங்கி அவசர அறிவிப்புகளை, தகவல்களை வழங்கும்.

இந்தவீதிவிளக்கைக்கண்டுபிடித்த நிறுவனத்தின் இயக்குநர் லின் டோவோ, இதுகுறித்துத் தெரிவிக்கையில் மக்களுக்குப் பாதுகாப்பளித்தல், எரிசக்திச் சேமிப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டு இந்த மின்கம்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.- என்றார். (ற)


## தென் சீனக் கடல் விவகாரம் அமெ. – சீனா அவசர பேச்சு

வொஷிங்டன், நவ.1

கடந்த சில தினங்களுக்கு முன்பு அமெரிக்கக் கடற்படை, சீனாவுக்கு சொந்தமான சர்சைக்குரிய தென் சீனக் கடல் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டமைக்கு சீனா கடும் கண்டனம் வெளியிட்டிருந்த நிலையில், இது குறித்து இரு நாடுகளுக்கும் இடையே கடந்த வியாழக் கிழமை அவசர கலந்துரையாடல் ஒன்று நடந்துள்ளது.

யு.எஸ்.எஸ். லாசன் என்ற அமெரிக்கப் போர்க் கப்பல் ஸ்பார்ட்லி தீவின் அருகே 12 நாட்டிகல் மைல் தூரத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டது. அந்தப் பகுதி சீனாவுக்கு உட்பட்ட பகுதி இல்லையாயினும் சீனாவால் அமைக்கப்பட்டுள்ள செயற்கைத் தீவு அந்த பகுதியில் உள்ளது. அதையடுத்து அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு சீனா கடும் கண்டனம் வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில், சர்ச்சைக்குரிய தீவின் அருகே அமெரிக்கப் போர்க் கப் பல் சென்றது குறித்து அமெரிக்க- சீன உயர்கடற்படை அதிகாரிகள் பேச்சில் ஈடுபட்டனர். அமெரிக்க கடற்படை சார்பில் அட்மிரல் ஜோன் ரிச்சார்ட்சன் மற்றும் சீன கடற்படையின் சார்பில் அட்மிரல் வு சென்க்லி ஆகியோர் அதில் பங்குபெற்றனர்.



இது குறித்து அமெரிக்கக் கடற்படைச் செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் டிம் ஹாக்கின்ஸ் கூறுகையில், இந்தப் பேச்சு பயனுள்ளது என்றும் சிறப்பாக இருந்தது என்றும் தெரிவித்தார். வேறு எந்தத் தகவல்களையும் வெளியிட அவர் மறுத்துவிட்டார் (ற)

## பலஸ்தீனத்துக்கு ஆதரவாக ஜோர்தானில் ஆர்ப்பாட்டம்



அம்மான், நவ.1

ஜோர்தானின் தலைநகர் அம்மானில் நேற்றுமுன்தினம் மேற்குக் கரை மற்றும் பலஸ்தீன மக்களுக்கு தாம் ஆதரவு வழங்க வேண்டும் என்று பெரும் ஆர்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

அதில் நூற்றுக்கணக்கான மக்கள் மற்றும் வெவ்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

ஆர்பாட்டக் காரர்கள் பலஸ்தீன சமூகத்துக்கு ஆதரவான பாதகைகளை ஏந்தி கோசங்கலை எழுப்பியவாறு தொகுதி தொகுதியாக அணி வகுத்துச் சென்றனர்.

இஸ்ரேலில் பலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நிகழ்ந்து வருகின்ற நிலையில், ஜெருசலேம் அல்-அக்ஸா மசூதியை மையமாக வைத்து இரு தரப்பினருக்கும் இடையிலான மோதல் கடந்த 5 வாரங்களாக தீவிரமடைந்துள்ளன.

பலஸ்தீனர்களின் தாக்குதலில் இதுவரை 11 இஸ்ரேலியர்கள் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேலியர்களின் துப்பாக்கிச் சூட்டில், தாக்குதல்களில் ஈடுபட்ட 35 பலஸ்தீனர்கள் உள்பட 55 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். (ற)

## ஒரு தம்பதிக்கு இனி இரு குழந்தைகள்

### அரசின் அறிவிப்பால் சீனர்கள் மகிழ்ச்சி

பீஜிங், நவ.1

சீனாவில் பல தசாப்த காலமாக இருந்து வந்த ஒரு தம்பதிக்கு ஒரு குழந்தை எனும் சட்டத்தை மாற்றி தற்போது ஒரு தம்பதியினருக்கு இரு குழந்தைகள் எனும் புதிய சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

குறித்த சட்ட மாற்றத்தை கடந்த வியாழக்கிழமை சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

சீனவாழ் தம்பதியர்கள் ஒரு சில நிபந்தனைகளுக்கு உட்படும் பட்சத்தில் அவர்கள் இருகுழந்தைகள் பெறத் தகுதி பெறுவார்கள் என 2013 ஆம் ஆண்டு சீன அரசு தெரிவித்திருந்தது.

கட்டுக்கடங்காமல் பெருகிய சனத்தொகைப் பெருக்கத்தை அடுத்து ஒருதம்பதியினருக்கு ஒருகுழந்தை எனும் சட்டம் சீனாவில் 1970ஆம் ஆண்டளவில் கொண்டுவரப்பட்டது. எனினும் தற்போது அருகிவரும்தொழிலாளர்களின்எண்ணிக்கையால், ஒரு தம்பதியினருக்கு இரு குழந்தைகள் எனும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது

கடந்த பல தசாப்தங்களில் முதன் முறையாக 2012 ஆம் ஆண்டு சீனாவில் தொழிலாளர் எண்ணிக்கை கணிசமாகக் குறைவடைந்தது. இதேவேளை, உலகில் உள்ள நாடுகளிலேயே முதியவர்கள் அதிகமாக வாழும் நாடாக சீனா மாறும் நிலையும் காணப்படுகின்றது. (ற)

## அரசியல் தீர்வு ஒன்றே சிரியாவில் அவசியம்

### அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிப்பு

டமஸ்கஸ், நவ.1

சிரியாவில் ரஷ்யா மேற் கொண்ட ஒரு மாதகால வான்வழி தாக்குதல்களானது, தீவிரவாதிகளின் படைபலத்தை முறியடிப் பனவாக அமைந்துள்ள போதிலும், இந்தப் போர் தொடர்பில் அர சியல் ரீதியாக முறையான தீர்மா னம் எடுக்கப்படும் பட்சத்திலேயே முழுமையான தீர்வுக்கு வழி கிட்டும் என சிரியாவின் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யா சிரியாவில் வான் தாக்குதல்களை மேற்கொள்ள ஆரம்பித்து நேற்றுமுன்தினத்துடன் ஒரு மாதம் நிறைவு பெறுகின்றது.

ரஷ்ய வான் தாக்குதல்களின் உதவியுடன் சிரிய அரச படைகள் ஐ.எஸ் தீவிரவாதிகளினால் கைப்பற்றப்பட்டிருந்த சிரியாவின் மத்திய மற்றும் மேற்குப் பகுதிகளில் ஏறக்குறைய 70 க்கும் அதிகமான பிரதேசங்களை மீளக் கைப்பற்றியுள்ளன. (ற)

# அராலி சரஸ்வதி, வட்டு மத்தி அணிகளிடம் கிண்ணம் சங்கானை கோட்ட பாடசாலைகளின் உதைபந்தாட்டத்தில்





மாங்குளம், நவ. 1

சங்கானை கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டத் தொடரில் 14 வயது மற்றும் 18 வயதுப் பிரிவுகளில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயமும், 16வயதுப் பிரிவில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியும் கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளன.

**14வயது பிரிவினருக்கான ஆட்டம்**

14வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியைஎதிர்த்து அராலி இந்துக் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்துடன் இணைந்து சரஸ்வதியின் ஆதிக்கமும் ஆரம்பித்தது. 2ஆவது நிமிடத்திலேயே தமது முதலாவது கோலைப் பதிவுசெய்தது சரஸ்வதி அணி. வேறெந்த கோல்களும் பதியப்படாதநிலையில் முடிவுக்கு வந்ததுமுதல் பாதி. இரண்டாம் பாதியில் மேலும் இரண்டு கோல்கள் சரஸ்வதி சார்பாக பதியப்பட முடிவில் அந்தஅணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. 3ஆம் இடத்தை வட்டு மத்தியகல்லூரி அணி தனதாக்கியது.

**16வயதுப் பிரிவினருக்கான ஆட்டம்**

16வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் வட்டுமத்தியகல்லூரி அணியை எதிர்த்து அராலி இந்துக் கல்லூரி அணி மோதியது. கோல்கள் எவையும் பதியப்படாத நிலைமையிலே முடிவுக்கு வந்தது முதல்பாதி. இரண்டாம் பாதியின் 15ஆவது நிமிடத்தில் அராலி இந்துக் கல்லூரி கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தது. அந்தக் கோலே ஆட்டத்தின் இறுதிக் கோலாகவும் அமைய முடிவில்1:0 என்ற அடிப்படையில் கிண்ணத்தைக் கைப்பற்றியது அராலி இந்துக் கல்லூரி. 3ஆம் இடத்தைஅராலிசரஸ்வதி மகா வித்தியாலய அணி கைப்பற்றியது.

**18வயது பிரிவினருக்கான ஆட்டம்**

18வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் அராலிசரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து வட்டுமத்திய கல்லூரி அணிமோதியது. ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயவீரன் குவேதனன் தனக்குக் கிடைத்த வாய்ப்பை கச்சிதமாகப் பயன்படுத்தி கோலாக்க, முதல் பாதியில் 1:0 என அராலிசரஸ்வதி மகாவித்தியாலய அணி முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியின் 14ஆவது நிமிடத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய வீரர் தணிசன் மேலும் ஒரு கோலைப் பதிவு செய்ய முடிவில் அந்த அணி2:0 என்றகோல் கணக்கில் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 3ஆம் இடத்தை அராலி இந்துக் கல்லூரி அணி தனதாக்கியது.

(ம-422)

# சம்பியனானது யாழ். இந்துக் கல்லூரி மத்தியின் தொடரில் மத்தியையே வீழ்த்தி

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ்.மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையினால் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் பொ.விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ். இந்துக்கல்லூரி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி மோதியது. முதல் சுற்றை 11:10 என்ற அடிப்படையில் கைப்பற்றியது மத்தி. இரண்டாவது சுற்றை இந்து 19:10 எனக் கைப்பற்ற இந்துவின் ஆதிக்கம் மேலோங்கியது. மூன்றாம் சுற்றை 20:17 என மத்தி கைப்பற்ற ஒட்டு மொத்தபுள்ளிகளின் அடிப்படையில் 46:41 எனஆதிக்கம் செலுத்தியது இந்து. இறுதிச் சுற்றும் 23:19 என்ற அடிப்படையில் இந்துவின் வசமாக முடிவில் இந்துக் கல்லூரி 69:60 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மத்தியின் தொடரில் மத்தியையே வீழ்த்திச் சம்பியனானது. (ம)

# கபில்தேவ் கருத்துக்கு வடேகர் கண்டனம்



சச்சினுக்கு சதங்கள் மட்டுந்தான் அடிக்கத் தெரியும். சதத்தை இரட்டைச் சதங்களாகவும் முச்சதங்களாகவும்நூற்சதங்களாகவும்மாற்ற பெருமளவில் தெரியாது என்று விமர்சித்திருந்த கபில்தேவின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளார் மற்றொரு முன்னாள் இந்திய அணித் தலைவரான வடேகர்.


குறித்தவிடயம் தொடர்பாக வடேகர் தெரிவித்ததாவது, சச்சினுக்கு சாதனைகள் பெரியவிடயமில்லை. அவர் அணிக்காக விளையாடியவர். அவர் மும்பை பள்ளி கிரிக்கெட் டில் தொடங்கி சர்வதேச ஆட் டங்களில் இருந்து ஓய்வு பெறும் வரை இந்திய அணியை வெற்றி பெறச் செய்வது என்பதுபற்றி மட்டுமே சிந்தித் துள்ளார். கபிலின் கருத்து மும்பை வீரர்கள் மீது உள்ள தனிப்பட்ட வெறுப்பைத்தான் காட்டுகிறது. என்றாவது சதம் கண்டபின்னர் சச்சின் துள்ளிக் குதித்ததைப் பார்த்துள்ளீர்களா? ஒன்றல்ல, இரண்டல்ல, நூறு வாய்ப்புக்கள் சச்சினுக்குக் கிடைத்தன. அத்தனை வாய்ப்புக்களையும் அவர் ஆடம்பரமாகச் செலவிட விரும்பவில்லை. விளம்பரத்துக்காக விமர்சிக்க வேண்டாம்-- என்றார். (ம)

# மிஸ்பா தலைவராக நீடிக்க வேண்டும்

பாகிஸ்தான்டெஸ்ட் அணியின்தலைவராகச் செயற்பட்டுவரும் மிஸ்பா தொடர்ந்தும்சிலவருடங்கள்அணியின்தலைவராகநீடிக்க வேண்டும் எனவும், இளம்வீரர்கள் ஓரளவு சிறப்பாக செயற்பட ஆரம்பித்த பின்னர் ஓய்வு குறித்து பரிசீலிக்கும்படியும் அந்தநாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மிஸ்பாவைக் கேட்டுள்ளது.

தனது ஓய்வு குறித்துக் கருத்து வெளியிட்ட மிஸ்பா பாகிஸ்தான் அணிக்காக மறக்க முடியாத ஓர் இன்னிங்சை விளையாடியதும் ஓய்வுபெறுவேன்என்று தெரிவித்திருந்தார். ஆனால் ஓய்வு பெறும் எண்ணத்தை அடுத்தசில வருடங்கள் தள்ளிப் போடும்படி பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது. குறித்த விடயம் தொடர்பாக அந்தச் சபையினால் விடுக்கப்பட்ட அறிக்கையில்-- பாகிஸ்தானுக்குஅடுத்த வருடம்டெஸ்ட் கிரிக்கெட்டில்பெரும் சவால் காத்திருக்கிறது. அடுத்த வருடம் இங்கிலாந்திலும் ஆஸியிலும் விளையாடவுள்ளதால் இந்தத் தொடர்களுக்கு மிஸ்பா தேவைப்படுகிறார். மிஸ்பாமட்டுமல்லாமல் யூனிஸ் கானும் தனது ஓய்வு முடிவை அடுத்த சில வருடங்களுக்குத் தள்ளிப் போட வேண்டும் என்றுள்ளது. (ம)

# சானியா - கிங்கிஸ் இணை அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி



சிங்கப்பூரில் நடைபெற்றுவரும் முன்னணிவீராங்கனைகளின் ரெனிஸ் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா-கிங்கிஸ் இணைஅரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றுள்ளது.

நேற்றுநடைபெற்றலீக் ஆட்டம் ஒன்றில் இரட்டையர் பிரிவில் முதல் இடத்தில் இருக்கும்சானியா (இந்தியா)-- கிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) இணை டிமியா - கிறிஸ்டினா இணையை எதிர்கொண்டது. இந்தஆட்டத்தில் முதல் இரண்டு செற்களையும் 6-4,7-5 என்ற கணக்கில் கைப்பற்றிய சானியா இணை 2-0 என்ற ரீதியில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (ம)

# ரோகித்துக்கு திருமணம்



இந்தியகிரிக்கெட் அணியின் முன்னணி வீரராகத் திகழ்ந்துவரும் ரோகித் சர்மா, தனது விளம்பர வருமானத்துக்கு மேலாளராக இருந்த ரித்திகா என்பவரை கடந்த 6 ஆண்டுகளாகக் காதலித்து வந்தார். இவர்களது திருமண நிச்சயதார்த்தம் கடந்த மே மாதம் மும்பையில் நடந்தது. இந்தநிலையில் தற்போது திருமணத் திகதி முடிவாகி உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது தென்னாபிரிக்கா தொடரில் ரோகித் சர்மா விளையாடிவருகிறார். அந்த அணிக்கு எதிரானடெஸ்ட் தொடர் டிசெம்பர் 7ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அதன் பிறகு இந்திய அணி ஜனவரி மாதம் தான் அவுஸ்திரேலியா சென்று ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில் திருமணத்தை நடத்த முடிவு செய்துள்ளனர்.அதன்படி டிசெம்பர் 13 ஆம் திகதி ரோகித் சர்மா ரித்திகா திருமணம் மும்பை பாந்த்ராவில் உள்ள நட்சத்திரவிடுதியில்நடைபெறவுள்ளது. (ம)

# வடமாகாண வீரவீராங்கனைகள் எவருக்கும் சளைத்தவர்கள் அல்லர்

## பிரதேச செயலகங்களின் மாகாணமட்ட தடகளத் தொடரில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 1

வடமாகாண வீரவீராங்கனைகள் நாட்டின் எந்தப் பாகங்களிலும் உள்ள வீரவீராங்கனைகளுக்கும் சிறிதேனும் சளைத்தவர்கள் அல்லர். வாய்ப்புக்களும், அனுசரணைகளும், உதவிகளும், ஊக்குவிப்புக்களும் பாரபட்சமற்ற விதத்தில் வழங்கப்படும் பட்சத்தில் நாட்டின் உச்சம் தொடக்கூடிய நம்பிக்கையும் வலிமையும் அவர்களிடத்தில் உண்டு இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமான பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்குமேலும்தெரிவித்ததாவது -'கடந்தகால பெறுபேறுகளில் இருந்து பார்க்கின்ற பொழுது வடபுல வீரவீராங்கனைகள் விளையாட்டுத்துறையில் பெரிதளவான முன்னேற்றம் கண்டுவருவதை அவதானிக்க முடிகிறது. ஆனால் எமது பெறுபேறுகள் இன்னமும் உயர்வடைய வேண்டும். அதற்கு வாய்ப்புக்களும் அனுசரணைகளும், உதவிகளும், ஊக்குவிப்புக்களும் பாரபட்சமற்ற விதத்தில் வழங்கப்படவேண்டும். அவ்வாறு வழங்கப்பட்டால் வடபுல வீரவீராங்கனைகள் நாட்டின் உச்சத்தை தொட்டு நிற்பார்கள் என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை. இந்த வாய்ப்புக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

சில பெற்றோர்கள் மாணவர்களை விளையாட்டில் இருந்து தள்ளி வைக்கின்றனர். இந்த அணுகுமுறை மிகவும் தவறானது. விளையாட்டின் மூலமே ஆளுமை வளரும். அந்த ஆளுமையே கல்வியில் சாதிக்க உதவும். இதை பெற்றோர்கள் உணர வேண்டும்.

போரின் போதும் அதற்கு பிற்பட்ட காலங்களிலும் எமது மக்கள் பல்வேறுபட்ட மன அழுத்தங்களுக்கு உட்பட்டிருக்கிறார்கள். இவற்றில் இருந்து நாம் படிப்படியாக விடுபட வேண்டும். அதற்குரிய பிரதான தீர்வுதான் விளையாட்டும் உடற்பயிற்சியும்.' என்றார்.

நிகழ்வில் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங் கம், வடமாகாண விளையாட்டுத்துறை இணைப்பாளரும் உறுப்பினருமான ஆனோல்ட், வடமாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராசா, எம்.பி. நடராஜ், ஜி.ரி. லிங்க நாதன், இ.இந்திரராசா, தர்மபால செனவிரத்தன வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கு.சிதம்பரநாதன், வவு னியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ம-422)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் பிரதேச செயலகங்களுக்கு இடையில் 9ஆவது வருடமாக நடத்தும் தடகளத் தொடர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத்தில் ஒலிம்பிக் சுடரேற்றலுடன் நேற்று ஆரம்ப மானது. வடமாகாண சபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான ஆனோல்ட் தீபத்தை ஏற்றிவைத்தார். (ம-422)



பிரதேச செயலகங்களுக்கு இடையில் வடமாகாண ரீதியாக நடைபெற்று வரும் தடகளத் தொடரில் பெண்களுக்கான திறந்த அல்லது அனைவருக்குமான பிரிவு) தட்டெறிதலின் ஓர் பதிவு. (ம-422)

## புதிய அணிகளுக்கு 10 வீரர்கள் நேரடித் தகுதி

சென்னை, ராஜஸ்தான் அணிகளின் தடையை அடுத்து புதிதாக தெரிவு செய்யப்படும் இரண்டு அணிகளிலும் தலா 5வீரர்கள் என்ற அடிப்படையில் மொத்தமாக 10 வீரர்கள் நேரடியாக இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


புதிய இரண்டு அணிகளுக்குமாக சென்னைஇ ராஜஸ்தான் அணிகளில் உள்ள வீரர்கள் அனைவரும் ஏலம் விடப்படுவார்களா? அல்லது அந்த அணிகளின் வீரர்கள் புதிய அணிக்கு நேரடியாகச் செல்வார்களா? என்று கேள்விக்குறி நிலவியது. இதில் புதிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி சென்னை சூப்பர்கிங்ஸ்இராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளில் இருந்து தலா 5 வீரர்கள் 2 புதிய அணிக ளுக்கு நேரடியாக தேர்வு செய்யப்படுவார்கள். இந்த 5 வீரர்களில் அதிகபட்சமாக 4 இந்திய வீரர்கள் இருக்கலாம். மற்ற வீரர் கள் ஏலத்தில் விடப்படுவார்கள். அதன்படி சென்னை அணியில் இருந்து டோனி, ரெய்னா, அஸ்வின்.




ஜடேஜா, மக்கலம் ஆகியோர் நேரடியாக தேர்வு செய்யப்பட அதிக வாய்ப்பு இருக்கிறது. (ம)

## இம்ரானின் இரண்டாவது திருமணமும் பத்தே மாதத்தில் முடிவுக்கு வந்தது

பாகிஸ்தான் அணிக்கு உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொடுத்தவர் முன்னாள் சகலதுறை வீரரான இம்ரான் கான். இவர் பிரிட்டனைச் சேர்ந்த ஜெமிமா கான் என்பவரை திருமணம் செய்தார். அவர்களுக்கு இரண்டு மகன்களும் உள்ளனர். எனினும், தொலைக்காட்சித் தொகுப்பாளினியான ரேகம் கானுடன் இம்ரான் பழகி வருவதாகச் செய்திகள் வெளியாகின. தன்னைச் சுற்றி வந்த கிசுகிசுக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக ரேகம் கானை கடந்த ஜனவரி மாதம் எளிய முறையில் திருமணம் செய்துகொண்டார் இம்ரான் கான். ரேஹம் கானுக்கும் ஏற்கனவே திருமணமாகி மூன்று குழந்தைகள் உள்ளனர். அவர் தனது முதல் கணவரை விவாகரத்து செய்துவிட்டார். 10 மாதங்கள் மகிழ்ச்சியாக சென்ற இவர்களது வாழ்க்கையில் திடீரென விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால் இருவரும் விவாகரத்து செய்து கொண்டனர். தனக்கு இது மிகுந்த வலியை ஏற்படுத்தும் தருணமாகவும் தமது தனிப்பட்ட வாழ்வை விமர்சிக்க வேண்டாம் எனவும் இம்ரான் கேட்டுக் கொண்டுள்ளார். (ம)



வடமாகாண ரீதியாக பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் தடகளத் தொடரில் ஆண்களக்கான திறந்த பிரிவின் (அனைவருக்குமான அல்லது வயதெல்லைபற்ற) முப்பாய்ச்சலின் ஓர் பதிவு. (ம-422)

## காயத்தால் வூட் விலகல் இங்கிலாந்துக்குப் பின்னடைவு

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டம் இன்று ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான இங்கிலாந்து அணியில் இருந்து காயம் காரணமாக விலகியுள்ளார் வூட்.

முடிவடைந்துள்ள முதல் இரண்டு ஆட்டங்களின் அடிப்படையில் பாகிஸ்தான் 1:0 என முன்னிலை வகிக்கிறது. இதனால் இன்றைய ஆட்டத்தில் வென்றேயாகவேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்குகிறது இங்கிலாந்து. ஆனால் வூட்டின் விலகல் அந்த அணிக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. (ம)



**NEW SCIENCE HALL**

KANNATHIDDY JAFFNA

**2016 - A/L**

PAPER CLASS
PAST & MODEL PAPER

BY MR.J. ரஞ்சித்காந்

ஆரம்பம் : 01.11.2015 07.30 AM

வெல்டிங், கிறில் வேலை செய்து கொடுக்கப்படும்

திறமையான வேலையாள்களால் தரமான வேலை எம்மால் செய்து கொடுக்கப்படும்

1 சதுர அடிக்கு 50/-

அழையுங்கள்- 077 329 1745 (நுவான்)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com

021 493 1111

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

Honda Road Master CD 200 விற்பனைக்கு உண்டு.

விலை ரூ.375,000

தொடர்பு:- 077 360 4934

மங்களா காட்சியறை Mega Sale

அனைத்து தளபாடங்களுக்கும் தீபாவளி அமோக விலைக் குறைப்பு.

தெரிவுக்கு இன்றே முந்துங்கள்.

இல.536, கே.கே.எஸ். வீதி, மனோகரா சந்தி, யாழ்.

021 222 8367 0777 286 069

(ஞாயிறும் காட்சியறை திறக்கப்படும்.)

**LONDON METROPOLITAN COLLEGE**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS**

Duration : 60 hours (Week | Weekends)

* Student Visa / * Skill Migration

**IELTS**

LIFE SKILLS A1, B1 (Speaking & Listening)

Duration : 48 hours (Week | Weekends)

**APPLIED SPOKEN ENGLISH** (With Grammar)

Duration : 48 hours (Week | Weekends)

**COMPUTER COURSES**

- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net,C#
- Internet | Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing

No.136, Palali Road, Parameswara Junction, Jaffna

Tel : 011 7555511 Mobile: 0774765990 | 071 4541099

A/L 2016 Day Classes

பௌதிகவியல் R.சுகன்

கடந்தகால, மாதிரி வினா-விடை வகுப்புக்கள் (திங்கள் - வெள்ளி)

பிரிவு I :- 9.30 - 11.30

பிரிவு II :- 11.45 - 1.30

**LIGHT**

ஆரம்பம் 02-11-2015

Short note Classes

Theary Classes

NEW SCIENCE WORLD

Navalar Road -Brown Road Junction. Jaffna.

அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

V2 TRAVELS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | வல்வெட்டித்துறை 0776697960 |

இன்றுடன் பதிவுகள் நிறைவடையும் திகதி

கந்தன் கருணை

முருகன் அடியார்களுக்கு

கந்தசஷ்டியை முன்னிட்டு யாழ்-நகரில் இருந்து முதன் முறையாக ஆறுபடை வீடு தரிசனம்

தரிசனம் 10 நாள்கள்..... புறப்படும் திகதி 11.11.2015

20% விசேட கட்டணக் குறைப்புடன் 75,000/=SL.Rs

சென்னையில் ஒரு நாள் சொப்பிங்குக்கு ஒதுக்கப்படும்

எங்கள் கட்டணத்தில் உள்ளடக்கப்பட்டவை

- இருவழி விமான கட்டணம்
- இருவழி விமான நிலையத்துக்கான போக்குவரத்துக் கட்டணம்
- மூன்று நேர உயர்தர சைவ உணவுகள்
- இருவர் தங்கக் கூடிய அறை, இணைந்த குளியலறை
- 2 தண்ணீர் போத்தல் / காலை, மாலை தேநீர்
- இந்தியாவில் 9நாள்களும் யாத்திரைக்கு தனி குளிரூட்டப்பட்ட வாகனம் பயன்படுத்தப்படும்.

முக்கிய குறிப்பு: 3ஆம் திகதிக்கு முன்னர் முழுப் பணத்தையும் செலுத்தி உங்கள் பயணத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

Sunjey's Multi Marketing Center & Sunjeya Tourisum

No: 713, Hospital Road, Jaffna.

021 221 7070, 077 747 4111, 077 354 5115

தீபாவளியை முன்னிட்டு மாபெரும் அதிரடி விலைச் சலுகை

8 GB Flash 699/-
16 GB Flash 1449/-
32 GB Flash 2559/-
Kaspersky 1U 1449/-
Kaspersky 3U 2899/-
Webcam 649/-
Card Reader 49/-
Multi Card Reader 99/-
Speaker 349/-
Monitor 19" HP LED 12299/-
Mouse 149/-
Mouse Pad 49/-
4GB Memory Card 299/-

Computer Corner

K.K.S வீதி மல்லாகம் சந்தி மல்லாகம்

TP No :- 021 205 9044, 021 561 8547

Mobile :- 077 353 7126


## மரண அறிவித்தல்

### குமரேசு ரங்கநாதன் (கிளாக்கர்)

(ஓய்வுநிலை பொறுப்பதிகாரி - அச்சுவேலி பிரதேசசபை)



**பிறப்பு:15*03*1939**

**இறப்பு: 29*10*2015**

அச்சுவேலி தெற்கு விக்கினேஸ் வரா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமரேசு ரங்கநாதன் (ஓய்வு நிலை பொறுப்பதிகாரி-மூதூர், கிளி வெட்டி, திருகோணமலை, புலோலி, கோப்பாய், புத்தூர், அச்சுவேலி பிரதேசசபை) 29.10.2015 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமரேசு- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யோகாம்பிகையின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற வைரமுத்து-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் அன்புச் சகோதரனும், தயாபரன், சந்திரவதனி (தங்கி), யாதினி, சுஜமுகன், சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்சினி, பரந்தாமன், சிங்கம், ஞானாம்பிகை சுரேஷ்குமார் ஆகியோரின் அன்பு மாமனும், சந்தையாவின் அன்பு மைத்துனரும், கஜானா, கபினா, சுஜந்தா, டெசிந்தன், எல்லாளன், தாமிரன், நவீன், சிந்துஜா, சூர்யா, பார்த்திபன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அச்சுவேலி தெற்கு முழுக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C/19695) (10.17)

தகவல்: குடும்பத்தினர்.

| | | | |
|---|---|---|---|
| தயாபரன் | - 0041627976947 | சந்திரவதனி | - 0041 67340988 |
| யாதினி | - 0041712784180 | சுஜமுகன் | - 0041625345776 |
| சாந்தினி | - 0041564430635 | பிரதீபன் | - 0776856492 |

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி சின்னையா



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், வத்திராயன் தெற்கு தாளையடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சின்னையா 30.10.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லியப்பர் சின்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு- ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லியப்பர்- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சண்முகராஜா (சாரதி துணுக்காய் ப.நோ.கூ.ச. மல்லாவி), சிவலிங்கம் (கோவில்வயல்), ஞானேஸ்வரி (லண்டன்), சிவபாலசிங்கம் (U.K பாலு- இடைக்காடு) சிவராசா (லண்டன்), மகேஸ் வரி (லண்டன்), சிவசுப்பிரமணியம் (லண்டன்), யோகேஸ்வரி (வவுனியா), சிவசோதி (லண்டன்), சரோஜா (லண்டன்), ஜெகதீஸ்வரி (உபயகதிர்காமம்-புலோலி) ஆகியோரின் பாசமிகு தாயும், தவயோகம், பாலயோகராணி (சித்திரா), கிருஷ்ணபிள்ளை, வள்ளிநாயகி, கணேஸ்வரி, பாலகுமாரசாமி, ஜெயமதி, யோகேஸ்வரன், டான்சியா, பத்மலிங்கம், விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு இயக்கச்சி கோவில்வயலில் உள்ள மகனான சிவலிங்கத்தின் (சிவம்) இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோவில்வயல் சாவுந்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோவில்வயல், இயக்கச்சி.
0773210484

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 1.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ் 01.11.2015






பொது நூலகம்

# அப்பிள் அரசியல்

பசுபதி தேபிந்த்



யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தைக் கடக்கும் ஒவ்வொரு தருணத்திலும் வீதியோரமாக கண்ணைக் கவரும் அப்பிள் மற்றும் ஒரேஞ் பழங்களின் வர்ணங்களைத் தீண்டாமல் கண்கள் தாண்டியதில்லை. முன்னே பொலிஸார் நின்றாலும்கூட தன்னிச்சையாகத் தலை அந்தப் பக்கம் திரும்பிய பின்னர்தான் பொலிஸாரைக்கூடப் பார்க்கும்.

யாழ்ப்பாண நகரத்தில் என்று மட்டுமில்லை இன்று வடக்கிலுள்ள எல்லா முக்கிய பேருந்து நிலையங்களையொட்டியும், முறிகண்டி போன்ற நீண்ட தூர வண்டிகள் தரித்து நிற்கும் இடங்களிலும் கூட இதே காட்சிதான். அப்பிள் மற்றும் ஒரேஞ் பழங்களால் நிரம்பிய கடைகள்தான் கண்களைப் பறிக்கின்றன. கால்களை அங்கு நோக்கி நகர்த்துகின்றன. இத்தகைய இடங்களில் அப்பிளுக்கு நிகராக வாழைப் பழத்தையோ அல்லது உள்ளூரில் விளையும் வேறு எந்தப் பழத்தையோ கண்டதில்லை.

பல சந்தர்ப்பங்களில், பயணங்களின்போது இடை வழியில் அப்பிள் தவிர தான் வேறு எதனையும் சாப்பிட்டதில்லை என்று நண்பன் கூறக்கேட்டிருக்கிறேன். சத்து நிறைந்தது என்பதற்கு மேலாக கடைகளில் கிடைக்கும் தின்பண்டங்களைவிட மேலானது என்பதனால் தான் அதனைத் தேர்ந்தெடுப்பதாக அவன் கூறக் கேட்டிருக்கிறேன். வாழைப்பழம் நல்லதுதானே என்று கேட்டால் ஏற்றுக்கொள்ள மாட்டான். மருந்தடிச்ச பழமாய் இருக்கும், அப்பிள் அளவுக்கு அதில் சத்தில்லைத்தானே என்று பதில் வரும்.

நண்பன் மட்டும் என்றில்லை, எங்கள் பலரிடமும் அதே எண்ணங்கள்தான் உண்டு. அப்பிள் மற்றும் ஒரேஞ் பழங்கள் நிறைந்த சத்துள்ளவை என்றுதான் நினைக்கிறோம். அதனால்தான் ஒரு கிலோ வாழைப் பழத்துக்கு நிகரான விலையைக் கொடுத்து ஒரு அப்பிளையோ ஒரேஞ்சையோ வாங்கி உண்ணத் தயங்குவதில்லை நாம். வைத்தியசாலையில் உறவினர்களை அல்லது நண்பர்களைப் பார்க்கப் போவதானாலும் இப்போதெல்லாம் அப்பிள் அல்லது ஒரேஞ் இன்றி யாரும் செல்வதில்லை என்றாகிவிட்டது. அந்தளவுக்கு அப்பிள் சிறந்தது என்ற மனப்பதிவு ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

சத்தான உணவு மட்டும் கிடைத்தாலே 70% நோய்களைத் தடுக்க முடியும் என்கிறது உலக சுகாதார நிறுவனம். தாய்ப்பாலுக்கு அடுத்து குழந்தையின் உடல் மற்றும் மூளை வளர்ச்சிக்கு நல்லது என்று உலகம் நம்புவது அப்பிள்! உலகம் முழுக்கக் குழந்தைகள் எப்படி அப்பிளை விரும்பிச் சாப்பிடுகிறார்கள்? அமெரிக்காவின் பிடியாட்ரிக்ஸ் பத்திரிகையில் வெளியான ஓர் ஆய்வறிக்கை இது குறித்து நம்மை யோசிக்கவைக்கிறது. ஒரு குழந்தை எத்தகைய சமூகப் பொருளாதாரச் சூழலில், எத்தகைய உணவுப் பண்டங்களின் ஊட்டத்தால் வளர்க்கப்படுகிறதோ அதைப் பொறுத்துத்தான் அந்தக் குழந்தை ஒரு பழத் தைக்கூட விரும்பிச் சாப்பிடும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டுகிறது அமெரிக்கக் குழந்தைகள் மருத்துவக் கழகம். உண்மைதான், நாம் எதை அடிக்கடி கொடுக்கிறோமோ அதையே பழக்கமாக்குகிறோம்.

## யாருக்கு லாபம்?

இலங்கையில் அப்பிள் எங்கும் உற்பத்தி செய்யப்படுவதில்லை. 100% இறக்குமதிதான். அமெரிக்கா, சீனா, சிலி, நியூசிலாந்து, இத்தாலி, பிரான்ஸ், பெல்ஜியம், துருக்கி போன்ற நாடுகளில் இருந்து அப்பிள் இறக்கப்படுகின்றது. சராசரியாக வருடம் ஒன்றுக்கு இலங்கைக்கு 18,500 மெற்றிக் தொன் அப்பிள் இறக்குமதி செய்யப்படுகின்றது. சுவாரஸியமான புள்ளிவிவரம் என்னவென்றால் 2001 முதல் 2013 வரையான 13 வருட காலப்பகுதியில் இறுதிப் போர் இடம்பெற்ற 2009ஆம் ஆண்டுதான் உச்ச அளவில் இறக்குமதி இடம்பெற்றிருக்கிறது. 23,000 மெற்றிக் தொன் அப்பிள் இறக்கப்பட்டிருக்கிறது.

இவ்வளவு பெருந்தொகை அப்பிள்கள் இறக்குமதி செய்யப்படுவதற்குக் காரணம், பழக்கம். கூடவே, அப்பிள்தான் சிறந்தது என்ற நம்பிக்கை. ஆனால், இது எந்த அளவு உண்மை?

இந்த மண்ணில் அப்பிளுக்கு இணையான, அதை விடவும் கூடுதலான சத்துகள் கொண்ட பழங்களே இல்லையா என்ன? ஆய்வுகள் அப்படிச் சொல்லவில்லை. உதாரணத்துக்கு, ஒரு சிறிய அப்பிள் (138 கிராம்) பழத்தில் 81 கலோரி, 21 கிராம் மாவுச் சத்து, 3.7 கிராம் நார்ச்சத்து மற்றும் இதயத்துக்கு ஆரோக்கியம் அளிக்கும் அன்ரி ஆக்சிடெண்ட்ஸ் உள்ளன. அதே ஒரு வாழைப்பழத்தில் (சுமார் 118 கிராம்) 108 கலோரி, 27 கிராம் மாவுச்சத்து, 1.2 கிராம் புரதச்சத்து, 2.8 கிராம் நார்ச்சத்து, விட்டமின் பி6, விட்டமின் சி, மாங்கனீசு, பொட்டாசியம் போன்ற கனிமச் சத்துகளும் உள்ளன.

ஒரு கொய்யா (100 கிராம்) பழத்தில் 68 கலோரி, 14.32 கிராம் மாவுச்சத்து, 8.92 கிராம் சர்க்கரை, 5.40 கிராம் நார்ச்சத்து, 2.55 கிராம் புரதச்சத்து, விட்டமின் ஏ, பீட்டா கரோட்டின், வைட்டமின் பி1; பி2; பி3; பி5; பி6; பி9; சி; கே, மெக்னீசியம், மாங்கனீசு, பாஸ்பரஸ், பொடாசியம் உள்ளன.

ஒரு சிறிய பப்பாசிப் பழத்தில் (சுமார் 100 கிராம்) 39 கிலோ கலோரி, 9.81 கிராம் மாவுச்சத்து, 0.61 கிராம் புரதச்சத்து, 0.14 கொழுப்புச்சத்து, 1.80 கிராம் நார்ச்சத்து, விட்டமின்கள், கனிமங்கள், எலெக்ட்ரோலைட்கள், பைட்டோ சத்துகள் உள்ளன.

அதிலும் நெல்லிக்காய் அபாரமான சத்துகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வெறும் 100 கிராம் நெல்லிக்காயில் நீர்ச்சத்து மட்டும் 81.8%, 96 கலோரி, 0.5 மில்லி கிராம் கனிமம், 3.4% நார்ச்சத்து, 13.7 கிராம் மாவுச்சத்து, 1.2 மில்லி கிராம் இரும்புச் சத்து, 50% சுண்ணாம்புச்சத்து (கல்சியம்), இன்னும் ஏராளமான விட்டமின்களும் உள்ளன.

இப்படி இந்த மண்ணில் எத்தனையோ பழவகைகள் இருக்க வந்தேறியான அப்பிளுக்கு ஏன் இவ்வளவு மவுசு என்பதை உற்றுக் கவனித்தால், உணவு அரசியல் புரியும். எப்பாடுபட்டாவது அப்பிள் பழத்தை இறக்குமதி செய்வது யாருக்கு லாபம்? இத்தனை மடங்கு அப்பிள் சிலாகித்துப் பேசப்படுவது ஒரு விதத்தில் நுகர்வுக் கலாசாரத்தின் நீட்சியே. அப்பிள், ஸ்ரோபெரி எனப் பெருமையாக உச்சரிக்கும் நம் உதடுகள் வாழைப்பழம், கொய்யாப்பழம், பப்பாப்பழம் போன்ற உள்ளூர் பழவகைகளைச் சொல்லும்போது மட்டும் சுளுக்கிக்கொள்வது காலனிய ஆதிக்கத்தின் பிடியிலிருந்து இன்னும் நாம் விடுபடவில்லை என்பதையே காட்டுகிறது.

## மறைந்திருக்கும் ஆபத்து

இறக்குமதி செய்யப்படும் அப்பிள், ஒரேஞ் மற்றும் திராட்சை மொத்தமும் நுகர்வுக்கு உகந்தவையா என்றால், "இல்லை", "நுகர்வோர் கவனமாக இருக்கவேண்டும்" என்கிறார்கள் சுகாதாரத் துறையினர். அவர்களைப் பொறுத்த வரையில் இவை பல பக்றீரியாக்கள் உள்ளிட்ட கிருமிகளைக் கொண்டிருக்கின்றன.

பெரும் பல்பொருள் அங்காடிகளில் வாங்கப்பட்ட இத்தகைய இறக்குமதி செய்யப்பட்ட பழங்களை உண்ட பின்னர் தமது குழந்தைகள் உணவு நச்சுத் தன்மையால் பாதிக்கப்பட்டனர் என்று கடந்த காலங்களில் தேசிய வைத்தியசாலைகளில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இத்தகைய பாதிக்கப்பட்ட பழங்களை உண்ணும் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு, வாந்தி, வயிற்றுவலி மற்றும் பிடிப்புகள் ஏற்படுகின்றன என்று அவர்கள் கூறுகிறார்கள். எனவே நீங்கள் தெருவோரக் கடைகளில் வாங்கினால் என்ன பெரும் அங்காடிகளில் வாங்கினால் என்ன அவை நல்ல தரமான, காயமடையாத பழங்கள்தானா என்பதைப் பார்த்து வாங்குங்கள் என்கிறார்கள் மருத்துவர்கள்.

இத்தனை ஆபத்துக்கள் இருந்தாலும் அது பற்றியெல்லாம் கவலைப்படாமல் அப்பிளும் ஒரேஞ்சும் நல்லது என்று நோயாளிகளுக்கும் அவற்றை வாங்கிக்கொடுத்துக் கொண்டிருக்கிறோம் நாம்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதியில் இப்போது மெல்லமெல்ல பழமரச் செய்கை அதிகரித்து வருகின்றது. அத்தோடு செயற்கை உரங்களையும் கிருமி நாசினிகளையும் பயன்படுத்தாத மரக்கறி மற்றும் பழ உற்பத்தி பற்றிய விழிப்புணர்வும் நுகர்வுணர்வும் மெல்ல மெல்லத் தலை காட்டத்தொடங்கியுள்ளது. இந்த நிலையில் எமது சந்தைகளையும் வீதிகளையும் நிறைக்கும் சத்துமிக்கவை என்கிற போலியான விளம்பரங்களுடன் வலம் வரும் அப்பிள் மற்றும் ஒரேஞ் என்பவற்றை ஒதுக்கி அதிகம் சத்துள்ள மாம்பழம், வாழைப்பழம், தேங்காய், முந்திரி, பப்பாசி, மாதுளை, திராட்சை என்று உள்ளூரிலேயே கிடைக்கும் பல கனிகளைப் பயன்படுத்தத் தொடங்குவோம். அதுவே உண்மையான ஆரோக்கியம்.

ஏழைகளுக்கும் எட்டும் விலையில் கிடைக்கிறது அப்பிளை விடவும் சிறந்த சத்தான பழங்கள் பல என்பதைக் கவனத்தில் கொண்டால் போசாக்குக் குறைபாட்டால் வடக்கின் சிறுபிள்ளைகள் அதிகம் பாதிக்கப்படுவதைத் தடுத்துவிடலாம். நோயுற்றுள்ள போதும் காசை வீணாக்கி அப்பிளையும் ஒரேஞ்சையும் மருந்து போன்று அருந்துவதைவிட உள்ளூர் பழங்களையே தேவையான அளவுக்கு உண்டு ஆரோக்கியத்தைப் பேண முடியும். வெறும் பகட்டு வாழ்க்கைக்கு உதவாது. உள்நாட்டுச் சரக்காயினும் அதிலும் தேவாமிர்தம் உண்டு.

படங்கள்: தர்சன்

**இறக்குமதி செய்யப்படும் அப்பிள், ஒரேஞ் மற்றும் திராட்சை மொத்தமும் நுகர்வுக்கு உகந்தவையா என்றால், "இல்லை", "நுகர்வோர் கவனமாக இருக்கவேண்டும்" என்கிறார்கள் சுகாதாரத் துறையினர். அவர்களைப் பொறுத்த வரையில் இவற்றில் பல பக்றீரியாக்கள் உள்ளிட்ட கிருமிகளைக் கொண்டிருக்கின்றன.**

**பெரும் பல்பொருள் அங்காடிகளில் வாங்கப்பட்ட இத்தகைய இறக்குமதி செய்யப்பட்ட பழங்களை உண்ட பின்னர் தமது குழந்தைகள் உணவு நச்சுத் தன்மையால் பாதிக்கப்பட்டனர் என்று கடந்த காலங்களில் தேசிய வைத்தியசாலைகளில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இத்தகைய பாதிக்கப்பட்ட பழங்களை உண்ணும் குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு, வாந்தி, வயிற்றுவலி மற்றும் பிடிப்புகள் ஏற்படுகின்றன என்று அவர்கள் கூறுகிறார்கள்.**

# ஒரே கல்லில் மூன்று காய்கள்!

சந்திரசேகர ஆசாத்



கடந்த மாத முற்பகுதியில் தம்மைப் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யக்கோரி, பல வருடங்களாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர். அதைக் கைவிட வைப்பதற்கு பல தரப்பினராலும் பலவித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அவர்கள் உறுதியுடன் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.
உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் சிலர் ஆபத்தான நிலைமையை எட்டியபோதிலும், அவர்களின் போராட்டம் ஆறு நாள்களாகவும் தொடர்ந்தது. இறுதியில் நவம்பர் மாதம் 7 நாள்கள் முன்பாக அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென வாக்குறுதி வழங்கப்பட்ட ஜனாதிபதியின் கடிதம் சிறைச்சாலை ஆணையாளர் மூலம் கைதிகளுக்கு அனுப்பப்பட்டது. அதை ஏற்றுக்கொண்ட தமிழ் அரசியல் கைதிகள் கொடுக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படாவிட்டால் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்ற நிபந்தனையுடன் தமது போராட்டத்தை இடைநிறுத்திக் கொண்டனர்.

## நிர்ப்பந்தம்

கைதிகள் ஒவ்வொருவராக மயக்கமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை தொடர்ந்தமை அவர்கள் விடுதலை இல்லையேல் சாவதற்கு தயாராகி விட்டனர் என்பதைத் தெளிவாகவே வெளிப்படுத்தியது. அதுமட்டுமன்றி கொழும்பு உட்படப் பல்வேறு பகுதிகளிலும் கைதிகளின் விடுதலை கோரிப் போராட்டங்கள் வெடித்தன. இப்படியான நிலையில் கைதிகள் போராட்டம் தொடர்பாக அலட்சியப் போக்கைத் தொடர முடியாத சூழ்நிலை ஏற்பட்டமையால் ஜனாதிபதிக்கு இப்படியொரு வாக்குறுதியை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. மேலும், வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட முடியாத நிலையும் கூட உருவாகிவிட்டது. உடலகம அறிக்கை, பரணகம அறிக்கை, ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை எனப் பல பக்கங்களாலும் இலங்கையின் மனித உரிமைகள் மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் நிலையில் கைதிகள் பிரச்சினை உதாசீனம் செய்யப்படுமானால் அதுவும்கூடப் பல எதிர் விளைவுகளையே உருவாக்கிவிடும்.
இந்த நிலையில்தான் அமைச்சர் சுவாமிநாதனால் தமிழ் அரசியல் கைதிகள் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படுவது தொடர்பாக ஓர் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. இது ஜாதிக ஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்கவாலும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவாலும் கடுமையாக எதிர்க்கப்பட்டது. இறுதியில் அமைச்சரவை கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கவில்லை எனவும் நவம்பர் முதல் வாரத்துக்குள் சகல கைதிகள் மேலும் வழக்குகளைத்தாக்கல்செய்வது எனவும் விசாரணைகளைத் துரிதமாக மேற்கொள்வது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

## எதிர்ப்பு

இதனையடுத்து தமிழ் மக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு எழுந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படாவிட்டால் போராட்டத்தில் இறங்கப் போகிறார்கள் என அறிவித்தார்.
ஏற்கனவே நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச இலங்கையில் அரசியல் கைதிகள் எவருமில்லை எனவும், தமிழ்க் கைதிகள் கொலை, களவு போன்ற குற்றங்களில் ஈடுபட்டவர்களே எனவும் தெரிவித்ததை இங்கு நினைவு கூரவேண்டும். முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும் அடிக்கடி இதே வார்த்தைகளைச் சொல்வதுண்டு. ராஜபக்ச பரம்பரையின் குணாம்சத்தை அமைச்சர் விஜயதாச ராஜபக்சவும் தவறாமல் பின்பற்றுகிறார்போல் தெரிகிறது.
இவ்வாறு நிலைமைகள் குழப்பங்களுக்குள் தள்ளப்படுவதற்கு முன்பாக ஆசியாவின் தலைசிறந்த ராஜதந்திரி என அழைக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மருமகனான தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைதிகள் தொடர்பான நடவடிக்கை பற்றி ஆராய ஒரு கூட்டத்தைக் கூட்டினார். இதில் இந்தப் பிரச்சினையுடன் தொடர்புடைய பல தரப்பினரும் அழைக்கப்பட்டிருந்தனர்.
அதில் நவம்பர் முதல் வாரத்துக்கிடையில் ஏற்கனவே தீர்ப்பு வழங்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டவர்களைவிட அனைத்துக் கைதிகளும் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு பிணையில் விடப்பட வேண்டும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## பொதுமன்னிப்பு

தற்போது ஏறக்குறைய 270 அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் இவர்களில் ஏறக்குறைய 60 பேர் தண்டனை வழங்கப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. கைதிகள் விடுதலை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அது தொடர்பாக ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்ட பின்பு தண்டிக்கப்பட்ட 60 கைதிகளும் பொதுமன்னிப்பின் கீழ் 7ஆம் திகதிக்கு முன் விடுவிக்கப்படுவர் எனக் கூறியிருந்தார்.

அந்தப் பொதுமன்னிப்பின் கீழான விடுதலைகூட 60 பேருக்கும் இல்லை என்பது பிரதமர் தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் ஜனாதிபதியின் வாக்குறுதிக்கு என்ன நடக்கப் போகின்றது என்ற கேள்வி எழுகிறது.
அதேவேளையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைதிகள் விடுதலை தொடர்பாக நடத்திய கூட்டத்தில் எடுத்த தீர்மானம் மூலம் ஒரு கல்லில் மூன்று காய்களை விழுத்தியுள்ளார். இது ஒரு ராஜதந்திர வெற்றி என்றே கூற வேண்டும்.

## அரசியல்வாதிகளுக்கே வெற்றி

முதலாவது, கைதிகள் விடுதலை என்பதற்குப் பதிலாக பிணையில் அவர்களை விடுவிப்பது தொடர்பான யோசனை. இதன் காரணமாக பல கைதிகள் சிறைக்கு வெளியே வந்து விடுவார்கள். எனவே, கைதிகள் விடுதலை தொடர்பான சர்வதேச அழுத்தங்கள் குறைவடையும். இன்னொரு புறம் இன்னும் விடுபடாத கைதிகள் தொடர்பாகப் போராட்டங்களை நடத்துவதானால் அதற்காகக் கைதிகள் ஒன்று திரளும் வாய்ப்புக்கள் இல்லாமற் போய்விடும். எனவே, கைதிகள் மீண்டும் போராட்டங்களைத் தொடர்வதில் வாய்ப்புக்கள் குறைவடையும். இரண்டாவது, தண்டிக்கப்பட்ட கைதிகள் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை முழுமையாக அனுபவித்தேயாக வேண்டும். எந்தவித நிவாரணத்துக்கும் இடமில்லை.
மூன்றாவது, பொதுமன்னிப்பு வழங்கப்படக்கூடாது என்று கோரும் விஜயதாச ராஜபக்ச, சம்பிக்க ரணவக்க போன்றோரும் திருப்திப்படுத்தப்பட்டு விடுவார்கள். எனவே இங்கும்கூட வெற்றி பெற்றிருப்பது தமிழ்க் கைதிகளல்லர். அரசே வெற்றி பெற்றுள்ளது. அதாவது கைதிகளின் போராட்டம் உரிய பயனை எட்ட முடியாமல் தோற்கடிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே தண்டிக்கப்பட்ட கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு இல்லை என்பது முதலாவது தோற்கடிப்பாகும். அடுத்து ஏனைய கைதிகள் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு அவர்கள் பிணையில் விடப்படுவார்கள் என்பதும்கூட ஒரு தோற்கடிப்புத்தான்.

## எதிர்பார்க்க முடியாத நீதி

நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுப் பிணையில் விடப்படும் இவர்கள் மேல் நீதிமன்றில் வழக்கு நடத்தப்படும். இந்த வழக்குகளில் நீதியை எதிர்பார்க்க முடியாமைக்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, சிங்கள புத்திஜீவிகள் முதல் சாதாரண சிப்பந்தி வரை இனக்குரோத சிந்தனையாலும், இன மேலாதிக்க உணர்வாலும் நஞ்சூட்டப்பட்டுள்ளனர். விசாரணைகளில் இந்தப் போக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது கடந்த கால அனுபவமாகும். அடுத்தது, சட்டமா அதிபர் திணைக்களத்தினதும் பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர் ஆகியோரின் நடவடிக்கைகளுமாகும். இந்தத் தடுப்புக் கைதிகளில் 90 வீதத்துக்கும் மேற்பட்டோர் நேரடியாகக் குற்றங்களில் ஈடுபட்டவர்களல்லர். குற்றங்களில் ஈடுபட்டவர்கள் எனக் கருதப்படும் நபர்களுக்கு உணவுவழங்கியமை, தங்க இடம்கொடுத்தமை, தகவல்வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுகளிலேயே தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள். இவர்களுக்கு எதிரான பிரதான சாட்சியாக முன்வைக்கப்படுவது குற்ற ஒப்புதல் வாக்கு மூலமாகும். எத்தகைய கொடூரமான சித்திரவதைகள் மூலம் குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்கள் பெறப்படுகின்றன என்பது எல்லோருமே தெரிந்து வைத்துள்ள விடயம்.
பலவந்தமாகப் பெறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது எனச் சட்டம் கூறினாலும் கூட, அவை நீதிமன்றங்களில் பல சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஏனெனில் அந்த வாக்கு மூலங்கள் பலவந்தமாகத்தான் பெறப்பட்டவை என்பதற்கு குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் சாட்சிகள் இல்லை. சாட்சி சொல்லக் கூடியவர்கள் முன்னிலையில் சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்ற காரணம் நீதிமன்றங்களில் எடுபடுவது இல்லை. இது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் ஒரு பாதகமான நிலைமையாகும்.
அடுத்தது, சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கைகள். சட்டப்படி அவர்கள் மேல் சுமத்தப்படும் குற்றங்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட முடியாது. எனவே சட்டமா அதிபர் திணைக்களம் ஒவ்வொருவர் மீதும் ஏராளமான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும். அவை ஒவ்வொன்றுக்கும் தண்டனைகள் வழங்கப்படும்போது 200 அல்லது 300 வருட சிறைத் தண்டனை என அது விரிவடைந்து விடும். அவர்கள் வாழ்நாள் முழுவதையுமே சிறையில் கழிக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

## சந்தர்ப்ப சூழ்நிலைகள்

தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் தாங்கள் செய்யப்போகும் காரியங்களை அடுத்தவர்களுக்கு கசிய விடமாட்டார்கள். அது எவ்வளவு ஆபத்தானது என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் தங்குமிடம் சம்பந்தமாகவோ அல்லது வேறு உதவிகளைப் பெறும்போதோ வேறு காரணங்களைச் சொல்லியே பெறுவார்கள். அவர்கள் உறவினர்கள் என்ற அடிப்படையிலோ அல்லது ஊரவர்கள் என்ற அடிப்படையிலோதான் உதவிகளைப் பெறுவார்கள். அவர்கள் தாங்கள் செய்யப்போகும் காரியம் பற்றி உதவி பெறுபவர்களிடம் எந்தக் காரணம் கொண்டும் கூறவே மாட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் உதவி செய்தவர்கள் பின்பு கைது செய்யப்படும்போது அவர்களிடம் சித்திரவதைகள் மூலம் தெரிந்தே செய்ததாக வாக்குமூலம் பெறப்படும். பின்பு அதுவே முக்கிய சாட்சியாக முன்வைக்கப்படும். இப்படியான நிலையில் நீதிமன்ற விசாரணைகளில் நீதியை எதிர்பார்க்க முடியுமா?
எனவேதான் பிரதமர் தலைமையிலான குழு ஒன்று எடுத்த முடிவின் மூலம் ஒரே கல்லில் மூன்று காய்கள் விழுத்தும் நோக்கம் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. இப்படியான மோசடிகளுக்குக் கைதிகள் மயங்கும் நிலையில் இல்லை. ஜனாதிபதியின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டால் அவர்களின் போராட்டங்கள் மீண்டும் தொடருமெனவே அறிவித்து விட்டனர்.





# செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும் 7

# நிருபர்கள் புரியும் பணிகள்

ரம்யன்

இணையத்தளத்தில் வரும் செய்திகள் பெரும்பாலும் வெளிநாட்டு மற்றும் தூர இடங்களில் நடைபெறும் சம்பவங்கள் பற்றிய தகவலாகவே காணப்படுவதுண்டு. ஆனால், உள்நாட்டு மற்றும் உள்ளூர் செய்திகள் பத்திரிகை நிறுவனங்களில் நியமிக்கப்படும் நிருபர்கள் மற்றும் செய்தியாளர்கள் மூலமே கிடைக்கின்றன. இவர்கள் பத்திரிகைக் காரியாலயங்களுக்கு நேரடியாக வந்து செய்திகளை வழங்குபவர்களாய் இருப்பர். இவர்கள் தூர இடங்களில் இருப்பவர்களானால் தம் செய்திகளைத் தொலைபேசி, தொலைநகல் மற்றும் மின் அஞ்சல் போன்ற வசதிகளைப் பயன்படுத்தி வழங்குவார்கள்.

**செய்தியாளர்கள் அல்லது நிருபர்கள்**

பெரிய பத்திரிகைகளில் பணிபுரியும் செய்தியாளர்கள் பல இடங்களுக்கும் சென்று செய்தி சேகரிப்பவர்களாய் இருப்பார்கள் என்பதுடன் தாம் பெற்றுக் கொள்ளும் செய்திகளை அவ்வப் போதே தமது பத்திரிகைக் காரியாலயத்துக்கு வழங்க வேண்டிய நிலையில் இருப்பார்கள். சில செய்திகள் வெளியூர் பதிப்புகளுக்கு முக்கியமானவையாக இருக்கும். இன்னும் சில கடைசிப் பதிப்பில் அதாவது பத்திரிகை அச்சடிக்கப்படும் நகருக்குரிய செய்தியாக இருக்கும். எந்தெந்தப் பதிப்பு முதலில் அச்சடிக்கப்படுகிறது என்பதைச் செய்தியாளர்கள் அறிந்து வைத்திருப்பார், ஆகையால் அந்த வகையில் அந்தந்தப் பதிப்புக்குரிய விடயங்களை அதற்கேற்ற முறையில் வழங்குவர்.

கொழும்பிலிருந்து வெளியாகும் பெரிய முக்கிய பத்திரிகைகள் யாழ்ப்பாணத்துக்கு என்று ஒரு பதிப்பும், மட்டக்களப்பு, திருகோணமலைக்கென்று ஒரு பதிப்பும், மலையகத்துக்கு ஒரு பதிப்பும் என்று அச்சிடுவதுடன் இறுதியில் கொழும்பு நகருக்கென்று ஒரு பதிப்புமாகப் பல பதிப்புக்களை வெளியிடுகின்றன.

ஒரு பதிப்பில் முக்கியத்துவம் கொடுக்கப்படும் ஒரு விடயம் இன்னொரு பதிப்பில் முக்கியமற்றதாக இருக்கலாம். சிலசமயம் அந்தச் செய்தியே மற்றப் பதிப்புக்களில் நீக்கப்பட்டுவிடும். உதாரணமாக:

மலையகத்தில் ஒரு தோட்டக் குழுவின் உறுப்பினர்கள் விவரம் மலையகத்துக்குரிய பதிப்பில் ஒரு செய்தியாக வெளியானாலும் யாழ்ப்பாணத்துக்குரிய பதிப்பில் அந்தச் செய்தி இடம்பெற வேண்டிய அவசியமில்லை என்பதாகும். அந்தநேரம் முழுநாட்டுக்குமே முக்கியத்துவமான விடயம் சகல பதிப்புக்களிலும் இடம்பெற்றிருக்கும்.

பத்திரிகை செய்தியாளர்கள் அல்லது நிருபர்கள் அந்தந்த பத்திரிகைகளிலேயே சம்பள அடிப்படையில் பணிபுரிபவர்களாகவும் இருக்கலாம். சிலசமயம் பல பத்திரிகைகளுக்குச் செய்திகளை அல்லது கட்டுரைகளை வழங்கும் சுயேச்சைப் பத்திரிகையாளர்களாகவும் இருக்கலாம். இவர்கள் பத்திரிகை ஆசிரியரின் அல்லது செய்தி ஆசிரியரின் அனுமதி அல்லது பணிப்புரையைப் பெற்று வெளியில் குறித்த இடங்களுக்குச் சென்று செய்திகளைப் பெற்றுக் கொள்வார்கள். அவ்வாறு பெற்றுக் கொள்ளும் செய்திகளை அவர்கள் பத்திரிகைக் காரியாலயத்துக்குத் தொலைபேசியில் கூறுவார்கள். குறிப்பு முறையில் அவர்கள் வழங்கும் செய்திகளை அங்குள்ள அனுபவமிக்க உதவி ஆசிரியர்கள் கேட்டுக் குறிப்பெடுத்துக் கொண்டு, அதை விரிவாக எழுதித் தலைப்பிட்டுப் பயன்படுத்துவார்கள். சிலசமயம் செய்திகளை தொலைநகல் (Fax) மூலமும் நிருபர்கள் அனுப்புவதுண்டு. பெரும்பாலானவர்கள் காரியாலத்துக்கு நேரில் வந்து செய்திகளைத் தாமே எழுதிக் கொடுப்பார்கள். அவைகளில் தேவையான திருத்தங்களைச் செய்வதும் தலைப்பிடுவதும் உதவி ஆசிரியர்களின் பணியாகும்.

நிருபர்கள் பத்திரிகை வெளியாகும் ஊரில் மட்டுமன்றி வெளியூர்களில் இருந்தும் செயற்படுவதுண்டு. அப்படியானவர்கள் வேறு தொழில்களில் இருந்து கொண்டே செய்தியாளர் பணியை ஆர்வம் மற்றும் மேலதிக வருமானம் கருதி செய்பவர்களாகவும் இருப்பர். பெரிய பத்திரிகைகளைப் பொறுத்த வரை முக்கிய நகரங்களில் தமக்கென நிருபர்களை நியமித்திருப்பார்கள். வெளிநாட்டுத் தலை நகரங்களில் முக்கிய மாநாடுகள் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும்போது பத்திரிகைகள் தமது சொந்தச் செலவில் நிருபர்களை அங்கு அனுப்பி செய்திகளைப் பெறுவதும் உண்டு.




பிறநாட்டு தலைநகரங்களில் முகாமிட்டிருக்கும் செய்தியாளர்கள் அந்த நாடுகளில் நிகழும் திடீர் சம்பவங்கள், அரசியல் பிரச்சினைகள் போன்றவற்றைத் தத் தமது பத்திரி கைகளுக்கு ஏற்ற முறையில் எழுதி அனுப்பு வார்கள்.

வெளிநாடுகளில் போர் நடக்கும்போது போர்முனைகளுக்குச் செய்தி சேகரிக்கும் வகையிலும் பெரிய பத்திரிகைகள் தமது செய்தியாளர்களை அனுப்புவதுண்டு.

சிறிய பத்திரிகைகளைப் பொறுத்தவரை இந்த மாதிரிச் செய்திகளைச் சர்வதேசச் செய்தி நிறுவனங்களிடமிருந்தே பெற்றுக் கொள்கின்றன.

**ஆசிரிய பகுதியின் பிரிவுகள்**

முன்பே சொன்னதுபோல் பத்திரிகைக் காரியாலயங்களில் அலுவலக நிருபர்கள் அல்லது செய்தியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டு இருப்பார்கள். இவர்கள் எங்காவது திடீர் சம்பவங்கள் நிகழும்போது, அந்த இடங்களுக்கு உடனடியாகச் சென்று தமது பத்திரிகைக்குச் செய்திகளை எடுத்து வருவார்கள்.

செய்தியாளர்களில் சிறப்பு நிருபர்கள் அல்லது நிபுணத்துவ நிருபர்கள் இருப்பார்கள். இவர்கள் குறிப்பிட்ட சில துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பர்.

> வெளிநாடுகளில் போர் நடக்கும்போது போர்முனைகளுக்குச் செய்தி சேகரிக்கும் வகையிலும் பெரிய பத்திரிகைகள் தமது செய்தியாளர்களை அனுப்புவதுண்டு.

அரசியல், விளையாட்டுத் துறைகளில் சிறப்புப் பயிற்சியும் அறிவும் உள்ளவர்கள் அவை சார்ந்த செய்திகளைக் கையாள்வார்கள். அந்தத் துறைகளுக்கென சிறப்புப் பிரிவுகள் இருக்கும். அந்தப் பிரிவுகளுக்குத் தலைமை வகிக்கும் ஒருவரும் இருப்பார். இதேபோன்று ஏனைய விடயங்கள் தொடர்பான பிரிவுகளும் விசேட செய்தியாளர்களும் இருப்பார்கள். ஆனால் எல்லா விடயங்களையுமே கையாளும் திறமையுள்ள செய்தியாளர்களே பெரும்பாலானவர்கள். இப்படியானவர்களே சிறிய பத்திரிகைகளில் திறமுடன் செயற்படுபவர்கள்.

**செய்திகளுக்கு அப்பால்**

செய்திகளுக்கு அப்பால் கட்டுரைகள், தலையங்கங்கள், சிறப்பு அம்சங்கள் மற்றும் பத்திகள் என்று எழுதும் பத்திரிகையாளர்களும் உண்டு. இவர்களில் சிலர் வெளியில் இருந்து விசேட ஏற்பாட்டில் விடயதானங்களையும், கட்டுரை மற்றும் அம்சங்களையும் வழங்குபவர்களாய் இருப்பார்.

**தலையங்கம்**

தலையங்கம் என்பது செய்திகள் தொடர்பில் ஒவ்வொரு பத்திரிகையும் அதன் கொள்கைகளுக்கேற்ப எழுதப்படும் கருத்தைக் குறிக்கும். இது பொதுவில் அந்தப் பத்திரிகையின் ஆசிரியரால் எழுதப்படுவது. பெரிய பத்திரிகைகளில் ஆசிரியர் தலையங்கம் எழுதுவதற்கென்று ஒரு குழுவே செயற்படும். சில பத்திரிகைகளில் தலையங்கம் எழுதுநர் என்ற பதவியும் உண்டு. எதுவானாலும் தலையங்கத்தில் எழுதப்படும் விடயங்களும் கருத்துக்களும் அந்தப் பத்திரிகையின் கொள்கை சார்ந்ததாகவே அமையும். அதற்கு பிரதம ஆசிரியரே பொறுப்பானவராவார்.





# மக்கள் கட்டிய தரைக்கீழ் மாளிகைகளும் மஹிந்தவுக்கு வெட்டிய பதுங்குகுழியும்!

—ஸ்டோ ஸ்வாமி

சில மாதங்களுக்கு முன்னர் இரத்மலானையிலுள்ள இலங்கை விமானப் படைத்தளத்துடன் இணைந்ததாக அமைக்கப்பட்டிருக்கும் விமானப்படை நூதன சாலைக்குச் சென்றிருந்தேன். பெரும் நிலப்பரப்பில் இலங்கை வான்படை வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட பலவகை விமானங்களையும் அதனுடைய உட்புறப் பாகங்களையும் விமானத்துறையுடன் தொடர்புபட்ட பலவிடயங்களையும் பார்வையிடக்கூடிய மற்றும் அறியக்கூடிய வகையில் அந்த நூதனசாலை அமைக்கப்பட்டிருந்தது.

ஈழப்போரின் பல கட்டங்களிலும் வட பகுதி வான்பரப்பில் வந்து சிறகை விரித்து காதை செவிடுபடுத்தி அச்சுறுத்தி குண்டு மழை பொழிந்த கிபிர், புக்காரா முதற்கொண்டு சியாமாசெட்டி வகை விமானங்கள் வரை அங்கிருந்தன. அது மாத்திரமன்றி வானிலிருந்து சூட்டுத் தாக்குதல்களை நடத்துவதிலும் சமாதானப் பேச்சுக்காக துருப்புகளை/தரைப்படையினரைக் காவுவதிலும் பங்கு கொண்ட பெல் ரக மற்றும் எம்–24 வகை உலங்குவானூர்திகளையும் தொட்டு உணரும் சந்தர்ப்பமும் அங்கு கிடைத்திருந்தது.

அது மாத்திரமல்லாமல் கடந்த தை மாதத்தில் நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் கண்டறியப்பட்டு சர்ச்சையைக் கிளப்பியிருந்த அந்தச் சிறு விமானமும் அங்கு பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது.

இலங்கை வான்படையின் கட்டுப்பாட்டில் இருக்காத அதேவேளை, இலங்கையின் [illegible]ன்பகுதி வான்பரப்பை அச்சுறுத்தலுக்குள்ளாக்கிய மற்றொரு விமானமும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இயந்திரப் பகுதியுடன் கூடிய முன்பகுதி சேதமடைந்த நிலையில் ஏனைய விமானங்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டு தனியான ஓரிடத்தில் தீவு போன்ற ஒரு நிலப்பரப்பில் அந்த விமானம் பார்வையாளர்களின் அதீத கவனத்தைப் பெற்றபடி இருந்தது. தாக்குதல் நடவடிக்கைகளுக்காக தமிழீழ விடுதலைப்புலிகள் பயன்படுத்திய விமானமே அது.

இத்தகைய விமானங்களின் தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்கான பதுங்குகுழி என்னும் போர்க்காலக் கட்டமைப்புப் பற்றி நம்மில் பலருக்குத் தெரிந்திருந்தாலும் அது தொடர்பான நினைவுகள் [illegible]ங்கிவரும் நிலையிலிருந்தாலும் கடந்த சில நாள்களுக்கு முன்னர் வெளிவந்த செய்தி ஒன்று பதுங்குகுழி பற்றிய சிந்தனைகளை தூசுதட்டிச் சென்றிருக்கிறது. கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலக வளாகத்தில் அமைந்திருப்பதாக அறியப்படும் பதுங்கு மாளிகை பற்றிய செய்தியே அது.

பதுங்குகுழி எனப்படும் தற்பாதுகாப்பு கட்டமைப்பு, யாழ்ப்பாணம் மற்றும் வன்னி உள்ளிட்ட பிராந்தியங்களில் ஒரு காலத்தில் தவிர்க்க முடியாத வாழிடப் பகுதியாக இருந்திருந்தது. தாக்குதல் நடவடிக்கைகளின்போது, முக்கியமாக விமானத் தாக்குதலின்போது உயிர்ப் பாதுகாப்பு உத்தியாக பாதுகாப்புத் தேடி பதுங்குகுழிகளை நோக்கி ஓடிய வரலாறும் சிலநாள்களின் பெரும்பாலான பகுதியை பதுங்குகுழிகளுக்குள் கழித்த வரலாறுகளும் நமது சரித்திரத்தில் கடந்து வந்தவைதாம்.

இரைச்சல்களை மாறுபாடுகளை வைத்தே வருகின்ற விமானம் என்ன வகை, எந்த நாட்டுத் தயாரிப்பு போன்ற இனங்காணும் ஆற்றலை மட்டுமல்லாது குண்டு போடும் நோக்கில் வருகிறதா அல்லது வேவு பார்க்கும் நோக்கில் வருகிறதா போன்ற எதிர்வுகூறல்களையும் வெளியிடுவதில் நம்மில் பலர் அந்தக் காலத்தில் பாண்டித்தியம் பெற்றிருந்தனர்.

அமைக்கப்பட்ட பதுங்குகுழிகள் அவரவர் வசதிகளைப் பொறுத்து வேறுபட்டிருந்தன. வெறுமனே ஒருவரோடொருவர் நெருக்கியடித்து குனிந்து கொண்டு நின்று, வந்த விமானம் கோபத்தைத் தணித்துச் செல்லும் மட்டும் இஷ்டதெய்வங்களை வேண்டியபடி நிமிட நேரங்களை செலவிட ஏதுவான வகையில் அமைக்கப்பட்ட பதுங்குகுழிகள் முதல் விட்டவிசாலமாய் குறிப்பிட்ட குடும்பத்தினர் மட்டுமல்லாமல் பக்கத்துவீடு அயல்வீட்டினரும் வந்து தங்கி



வானொலி கேட்டு கதைபேசி உணவு பரிமாறி சிலவேளைகளில் உறங்கியும் செல்லக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட பதுங்குகுழிகள் வரை வெவ்வேறு தராதரத்தை அவை கொண்டிருந்தன.

கட்டியெழுப்பிய வீடுகளைக் கைவிட்டு இத்தகைய பதுங்குகுழிகளை தமது வாழிட மாளிகைகளாக மாற்றிய நிர்ப்பந்தம், மாற்றவேண்டிய நிர்ப்பந்தம் நாம் சந்தித்த தழும்புகளில் ஒன்று. துரதிருஷ்ட வசமாக, இத்தகைய பதுங்குழி மாளிகைகளுக்குள் இருந்தவேளை ஷெல் தாக்குதலினால், விமானக்குண்டு வீச்சினால், பாம்புக்கடியினால் சாவுகள் சம்பவித்த வரலாறுகளும் பதிவகற்ற முடியாதவை.

காலத்தின் கோலத்தினால், நோக்கு மற்றும் இலக்கு (Vission & Mission) என்பவற்றில் பதுங்கு குழிகளுக்கு ஒத்த கட்டமைப்பு ஒன்றினை உருவாக்க வேண்டிய கட்டாயம் முன்னாள் ஜனாதிபதிக்கும் இருந்திருக்கின்றது என்பது தற்போதுதான் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

ஊடகங்களில் வெளிவந்துள்ள தகவல்களின்படி இதனை ஒரு பளிங்குப் பதுங்கு குழியாகவே கொள்ளவேண்டியிருக்கிறது.

தற்போது யாரும் வசிக்காத இந்த பதுங்கு மாளிகையில் மைத்திரிபால சிறிசேன குடிபுகுவாரேயானால் அதன் பராமரிப்புக்கு மாத்திரம் மாதாந்தம் 15 மில்லியன் ரூபா செலவிடவேண்டியிருக்கும் என்று அவரே தெரிவித்திருக்கிறார் என ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தகவல் வெளியிட்டிருக்கிறது.

யாரும் வசிக்காத நிலையிலேயே அந்த மாளிகை பல மில்லியன் ரூபாய்களை மின்சாரச் செலவாக மாதாந்தம் விழுங்கிக்கொண்டிருப்பதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு குறிப்பிட்டிருக்கிறது.

ஜனாதிபதி செயலகத்தை மேற்கோள் காட்டி சிலோன் ருடே பத்திரிகை தெரிவித்திருக்கும் தகவல்களின்படி, இந்தப் பதுங்கு மாளிகையானது ஆறு படுக்கையறைகளையும் எட்டுக் குளியலறைகளையும் உடற்பயிற்சிக்கூடம், யோகாசனப் பயிற்சிகளுக்கான மண்டபம் என்பவற்றுடன் நீச்சல் தடாகத்தையும் கொண்டிருக்கிறது. இதற்கான குளியலறைச் சாதனங்கள், மரத்தளபாடங்கள் மற்றும் தரைவிரிப்புக்கள் இத்தாலியிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கின்றன. 24 மணித்தியாலமும் பதனப்படுத்தப்பட்ட வளி மாளிகைக்குக் கிடைக்கும் வகையில் வளிச்சீராக்கிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கடற்படை மற்றும் தரைப்படை இராணுவ வீரர்களைக் கொண்டு கட்டப்பட்ட இந்த தரைக்கீழ் மாளிகை கட்டட வேலைகள் போர்க்காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட போதிலும் போர் முடிவுக்கு வந்த பின்னரேயே முடிவடைந்திருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி இந்த தரைக்கீழ் பதுங்கு மாளிகைக்கு இரண்டு தரம் மாத்திரமே வருகை தந்திருக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 22ஆம் திகதி, இத்தகைய தரையிலிருந்து முப்பது அடி கீழாக அமைக்கப்பட்டுள்ள இந்தப் பதுங்கு பங்களா விடயத்தை மைத்திரிபால ஊடகங்களுக்கு போட்டுடைத்திருந்த நிலையில், கடந்த 25ஆம் திகதி நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் ஊடகவியலாளர்களை எதிர்கொண்ட மகிந்த ராஜபக்ச, குண்டுத் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு பெறவே தாம் அத்தகைய கட்டுமானத்தை மேற்கொண்டார் எனத் தெரிவித்திருக்கிறார். அது மாத்திரமல்லாமல், இத்தகைய தொரு கட்டுமானம் அலரிமாளிகையிலும் இருப்பதாகவும் வேறு கூறியிருக்கிறார்.

நாட்டின் தலைவர் ஒருவர் பாதுகாப்பிற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது ஒன்றும் தவறான செயலல்ல. ஆனால் அதற்காக தான்தோன்றித் தனமான ஆடம்பரங்களை நாடுவது ஏற்புடையதுமல்ல. இவ்வாறான செய்திகள் வெளிவருவது இது ஒன்றும் முதற்தடவையல்ல. ஏற்கனவே சிலபல வெள்ளை யானை கள் பற்றிய தகவல்கள் வெளிவந்திருந்த நிலையில், இந்தப் பதுங்கு மாளிகை விவகாரம் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கிறது.

எதிர்வரும் தை மாதம் தொடக்கம் கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை வாரத்தில் இருநாள்கள் பொதுமக்கள் பார்வைக்கு அனுமதிக்க ஜனாதிபதி மைத்திரிபால தீர்மானித்துள்ளார் எனத் தெரிய வருகிறது. இந்த நிலையில் குறித்த பதுங்கு மாளிகையும் பொதுமக்கள் பார்வைக்கு திறக்கப்பட முடியும். அவ்வாறு அமையும் பட்சத்தில, பதுங்குமாளிகை எண்ணக் கருவுக்கு வித்திட்ட, பந்தியின் ஆரம்பத்தில் சொன்ன நூதனசாலையில் சிறுதீவு போன்ற நிலப்பரப்பில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அந்த விமானத்தையும் சேர்த்துப் பார்ப்பது உசிதமானதாக அமையும்.

# மண்ணுள் புதையுண்டது

## மீரியபெத்தை மட்டுமல்ல அந்த மக்களின் வாழ்வுமே

அதிரன்




ஒட்டுமொத்த மலையகத்தையும் பெரும் சோகத்தில் ஆழ்த்திய மீரியபெத்தை மண் சரிவும் அவலமும் நிகழ்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது. ஆயினும் அந்த இடரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையோ மிகவும் பரிதாபத்துக்குரியதாகவும் அவலம் நிறைந்ததாகவும் உள்ளதை கடந்த ஓராண்டு காலமாக யாருமே அறிந்திருக்கவில்லை. அதன் ஓராண்டு நினைவு கடந்த வியாழக் கிழமை அனுஷ்டிக்கப்பட்டபோதே அந்த மக்கள் படும் அவலம் வெளிச்சத்துக்கு வந்தது.

மண்ணுக்குள் புதையுண்டு உயிரிழந்த தமது உறவுகளை மீரியபெத்தை மக்கள் சுடரேற்றி விழிநீர் வடித்தபடியே நினைவு கூர்ந்தனர்.

ஒரு வருடத்துக்கு முன்னர் மீரியபெத்தைப் பகுதியில் இந்தப் பேரவலம் அரங்கேறியது. மண்மேடு சரிந்து வந்து ஒரு தோட்டத்தையே விழுங்கியது. இதில் 37 பேர் உயிரிழந்தனர். மேலும் சிலர் படுகாயமடைந்த நிலையில் உயிர்தப்பினர். பாதிக்கப்பட்டவர்களும், உயிர்பிழைத்தவர்களும் தற்போது மாகந்த முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஒருவருடம் கடந்தும் அவர்களுக்கு இன்னும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. போதிய வசதிகளின்றி அவர்கள் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். அப்பகுதி மண் விழுங்கிய பகுதி புற்காடாகக் காட்சியளிக்கின்றது.

வீடுகளை இழந்து முகாமில் அவல வாழ்க்கை வாழும் எமக்கு இன்னும் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவில்லை. முகாமிலும் உரிய வசதிகள் இல்லை. சுதந்திரமற்ற நிலையிலேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். எமக்கு எப்போது விடிவு கிடைக்கும் என்று தெரியவில்லை எனக் கண்ணீருடன் கூறுகின்றனர் மாகந்த முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மீரியபெத்தை மக்கள்.

மீரியபெத்தையில் மண் சரிவு ஏற்பட்டதையடுத்து அங்கு வாழ்ந்த மக்கள் மாகந்த தொழிற்சாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

சொந்தங்களை இழந்துவிட்டுச் சொத்துக்களையும் தொலைத்துவிட்டு சொந்த மண்ணைவிட்டு வெளியேறினோம். தற்போது முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளோம். அங்கு சிறிய அறைகளே காணப்படுகின்றன. சுதந்திரம் இல்லை. மலசலகூட வசதியில்லை. இப்படி பல அவலங்கள் தொடர்கின்றன.

குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் உதவித்தொகை கூப்பனாடாக வழங்கப்படுகிறது. அதுவும் போதுமானதாக இல்லை. சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்திலும் அதன் பின்னரும் எமக்குப் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. இன்று நாம் அநாதைகளாக்கப்பட்டுள்ளோம். ஆரம்பத்தில் எமக்குப் போதுமானளவு உதவிகள் கிடைத்தன. இன்று நாம் கைவிடப்பட்டுள்ளோம். ஊடகங்களும் இவ்வாறான சந்தர்ப்பங்களில்தான் வருகின்றன. மற்றைய நாள்களில் எமது பிரச்சினைகள் பற்றி கதைப்பதில்லை.

அதேவேளை, நாம் இடம்பெயர்ந்து ஒரு வருடமாகின்றது. இன்னும் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவில்லை. 75 வீடுகள் கொண்ட திட்டத்தில் 4 வீடுகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. அவை இன்னும் முழுமை பெறவில்லை. எமக்கு எப்போது வீடு கிடைக்கும் என்று அதிகாரிகளும் கருத்துக் கூற மறுக்கின்றனர்.

தங்கியிருக்கும் முகாமில் பெண்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். உடை மாற்றுவதற்குக் கூட உரிய ஏற்பாடுகள் இல்லை. எனவே, எமக்கு என்று விடியல் கிடைக்கும் என்று தெரியவில்லை என்று அவர்கள் தமது உள்ளக் குமுறலை அங்கு சென்ற ஊடகவியலாளர்களிடம் கொட்டித் தீர்த்தனர்.

தங்களுக்கு இருப்பதற்கு தனிவீடு விரைவில் அமைத்துக்கொடுக்கப்படவேண்டும் என்றும் அந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர். இதை வலியுறுத்தி மீரியபெத்தைப் பகுதியில் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

91 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 349 பேர் இவ்வாறு முகாமில் ஆரம்பத்தில் தங்கினர். அவர்களில் சிலர் தற்போது அங்கிருந்து வெளியேறி வேறு இடங்களில் தங்கியுள்ளனர்

உயிரிழந்த தமது உறவுகளின் உருவப் படங்களைத் தாங்கிவந்த அவர்கள், தமது வீடுகள் அமைந்திருந்த இடங்களில் படங்களை வைத்து அவற்றின் முன் சுடரேற்றி நினைவுகூர்ந்தமை அங்கு நின்ற அனைவரது கண்களையும் குளமாக்கியது.

உறவுகளை இழந்த சோகத்தில் இருந்த அவர்கள், அவர்களின் பெயர்களைக் கூறி கதறியழுதனர். இதனால், மீரியபெத்தை சோகமயமானது. அத்துடன், முகாமில் தாங்கள் படும் கஷ்டங்களையும் புலம்பித் தீர்த்தனர்.

மண்ணுக்குள் புதையுண்டு உயிரிழந்தவர்களுக்கு நினைவுத்தூபி அமைக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. எனினும், சம்பவம் நடைபெற்று ஒருவருடம் கடந்துள்ள நிலையிலும் இன்னும் அது அமைக்கப்படவில்லை என்று மீரியபெத்தை மக்கள் நேற்று முன் தினம் கவலை வெளியிட்டனர்.

நினைவுத்தூபி அமைப்பதற்கு அரசியல்வாதிகள் எவ்வித ஒத்துழைப்பையும் வழங்கவில்லை. பலர் மீரியபெத்தையை மறந்துவிட்டனர். ஆகவே, பிரதேச மக்கள் இணைந்து நினைவுத்தூபி அமைப்பதற்கு முயற்சிக்கின்றோம். இதற்கும் தடங்கல் ஏற்படுத்தப்படுகின்றது என்று மண்சரிவு சம்பவத்தில் தமது ஐந்து உறவினர்களை இழந்து தவிக்கும் இளைஞர் ஒருவர் மனக் குமுறலை வெளிப்படுத்தினார்.

ஓராண்டுக்குள் நினைவுத்தூபி அமைக்கப்படும் என்று சம்பவ இடத்துக்குவந்த அரசியல்வாதிகள் முழக்கமிட்டனர். ஆனால், அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேறவில்லை. முன்னாள் அரசும் இதைச் செய்யவில்லை. ஆட்சி மாற்றத்தின் பின்பும் நினைவுத் தூபி அமைக்கப்படவில்லை என்று குறித்த பிரதேசத்திலுள்ள ஆசிரியர் ஒருவர் ஆதங்கப்பட்டார். ஆகவே அரசு இந்த மக்களின் விடயத்தில் இனியும் காலம் தாழ்த்தாது விரைந்து செயற்படவேண்டும் என்பதே அங்குள்ள மக்களின் வேண்டுகோள்.

மண்சரிவினால் புதையுண்டுபோனது மீரியபெத்தை மட்டுமல்ல. அந்தப் பகுதி மக்களின் வாழ்வுமே.



# தங்கத்தில் முதலீடு செய்யலாமா?

எஸ்.இராமன்

உலகப் பொருளாதார அரங்கில், அமெரிக்க டொலருக்கு அடுத்தபடியாக, பொது சர்வதேச மாற்று நாணயமாக (alternate common reserve currency) தங்கம் கருதப்படுகிறது. எனவே, உலக நாடுகளின் அரசுகள், தங்கள் கையிருப்பில், குறிப்பிட்ட ஒரு பகுதியைத் தங்க வடிவில் வைத்திருப்பதைப் பொருளாதாரக் கொள்கைகளில் ஒன்றாகக் கடைப்பிடித்து வருகின்றன.

உதாரணத்துக்கு, அமெரிக்கா 8,133 தொன், ஜெர்மனி 3,384 தொன், இத்தாலி 2,451 தொன், இந்தியா 557 தொன், இலங்கை 22 தொன் என்ற அளவில் தங்கத்தைத் தங்கள் அரச வைப்பில், தற்போது காப்பு நிதியாகப் (Reserve currency) பாதுகாத்து வருகின்றன. விடுதலைப் புலிகளின் கையிருப்பில் இருந்த 40 தொன் தங்கத்தை ராஜபக்ச அன்ட் கோ இரகசியமாக விற்றுவிட்டதாக வரும் செய்திகள் இதில் சேர்த்தியில்லை.

எம் நாட்டுத் திருமணங்கள் மற்றும் விசேட நிகழ்ச்சிகளில் இடம்பெறும் முக்கிய உலோகம் தங்கம்தான். அனைத்து திருமண நிகழ்வுகளுக்கான செலவுகளில், பெரும் பகுதியை தங்கத்தின் மதிப்பு ஆக்கிரமித்துக் கொள்கிறது.

திருமணத்தின்போது, மணப் பெண்ணுக்கு வழங்கப்படும் தங்க நகைகளின் அளவானது, மதம், பெண்ணைப் பெற்றவர்களின் மதிப்பு, மாப்பிள்ளையின் படிப்பு மற்றும் உத்தியோகம், மாப்பிள்ளையைப் பெற்றவர்கள் கடைசித் தருணத்தில், பெண் வீட்டாருக்குக் கொடுக்கும் நெருக்கடி ஆகியவற்றைச் சார்ந்திருக்கின்றது.



சுப நிகழ்ச்சிகளுக்கு, வட்டிக்குக் கடன் பெற்றாவது, தங்கம் வாங்கும் பழக்கம் நம்மிடையே, காலப்போக்கில் வளர்ந்து, எம் கலாசாரத்தில் ஆழமாக ஊன்றி விட்டது என்று சொல்லலாம்.

எதிர்காலப் பொருளாதாரத் தேவைகளுக்காக, நிகழ்கால வருமானத்திலிருந்து ஒரு பகுதியைச் சேமிப்பவர்கள், அந்தச் சேமிப்பின் ஒரு பகுதியைத் தங்கத்தில் முதலீடு செய்கின்றனர். நிறுவனப் பங்குகள், கடன் பத்திரங்கள், சொத்து வர்த்தகம் தவிர, செல்வந்தர்களின் முதலீடுகளில், தங்க முதலீடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. விவசாயிகள், அறுவடைக் கால வருமானங்களின் ஒரு பகுதியைத் தங்கம் வாங்குவதற்காக ஒதுக்குகின்றனர்.

பொருளாதார நெருக்கடித் தருணங்களில், தங்க நகைகளை, வங்கிகள் மற்றும் அடகுக் கடைக்காரர்களிடம் அடமானம் வைத்து, எளிதாகக் கடன் பெற முடியும் என்பது, இந்த உலோகம் பல தரப்பினராலும் விரும்பப்படுவதற்கும் வாங்கப்படுவதற்கும் ஒரு முக்கிய காரணியாகும். மேலும், பணவீக்கத்துக்கு எதிரான முதலீட்டுச் சாதனங்களில் ஒன்றாக (Hedging against inflation) தங்கம் கருதப்படுகிறது.

உலகிலேயே தென் ஆபிரிக்கா தான் அதிகம் தங்கத்தை உற்பத்தி செய் கிறது. ஆண்டுக்கு சுமார் 100 தொன் தங்கத்தை அது உற்பத்தி செய்கிறது. கனடா, ஆஸ்திரேலியா ஆகியன அடுத்தடுத்த இடங்களில் தங்கத்தை உற்பத்தி செய்கின்றன. இந்த நாடுகளில், தங்கத்துக்கான தனிநபர் தேவை அதிகம் இல்லாததால், அவற்றில் பெரும்பகுதி ஏற்றுமதி செய்யப்பட்டு, அந்த நாடுகளின் அந்நியச் செலாவணியின் வரவுக்கு வழிவகுக்கின்றது.

ஆண்டுதோறும், தங்கத்துக்கான உலக மொத்தத் தேவைகளில், மூன்றில் ஒரு பங்கு இந்தியா மற்றும் தெற்காசியாவுக்கானதாகும். சமீபத்திய புள்ளி விவரப்படி, தங்கத்துக்கான தேவையில், முன்னணியில் இருந்த சீனாவைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, இந்தியா முதல் இடத்துக்கு முன்னேறி உள்ளது. சீனாவின் தேவை, கடந்த ஓராண்டில், 38 சதவீதம் குறைந்துள்ளதே இதற்குக் காரணமாகும்.

அரசு அதிகாரிகளுக்கு, விழாக் காலங்களில், தங்கம் பரிசாக வழங்கப்படுவதைத் தடுக்க, சீன அரசால் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட சில கடுமையான லஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகள், இந்தச் சரிவுக்கு ஒரு முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

உலகப் பொருளாதார நிலவரம், அமெரிக்க டொலரின் பலம் மற்றும் பலவீனம், இந்திய ரூபாயின் மதிப்பு, போர்மூட்ட சூழ்நிலை, மத்திய வங்கிகளின் தங்கக் கொள்முதல் நடவடிக்கை போன்றவை, தங்கத்தின் சர்வதேச விலையை நிர்ணயிக்கும் சில முக்கிய காரணிகளாகும்.

அமெரிக்கப் பொருளாதாரத்தில், 2011 செப்ரெம்பர் - ஒக்ரோபர் மாதங்களில் நிலவிய அசாதாரண சூழ்நிலையின் போது, சர்வதேசச் சந்தையில் தங்கத்தின் விலை உச்சியைத் (1889 அமெரிக்க டொலர் அவுன்ஸுக்கு) தொட்டது. அமெரிக்க டொலர் மீது, உலகப் பொருளாதாரத்துக்கு, பெரும் அவநம்பிக்கை உதித்திருந்த காலக் கட்டம் அது.

2013ஆம் ஆண்டு இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் தங்கத்தின் விலை திடீரென எகிறியது. தங்கத்தின் விலை, இம்மாதிரி, பல திடீர்சந்தை நிகழ்வுகளைச் சார்ந்திருக்கிறது.

நல்ல முதலீடு என்பது, அதன் விலை ஏற்ற இறக்கங்களின் காரணிகள், எல்லாவகையான முதலீட்டாளர்களாலும், எளிதாகப் புரிந்து கொள்ளும்படியாக அமைதல் வேண்டும். முதலீட்டின் அடிப்படை மதிப்பு (Principal amount) முற்றிலும் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால், தங்கத்தின் விலை, மேலே கூறியுள்ளபடி, சாமானிய மக்கள் புரிந்து கொள்ளமுடியாத பல சர்வதேசச் சந்தை நிகழ்வுகளைச் சார்ந்திருக்கிறது. இதனால், முதலீட்டின் அடிப்படை மதிப்பு, பெருமளவில் தேய்ந்துவிட வாய்ப்பிருக்கிறது, ஆகவே, தங்கத்தை முதலீட்டு நோக்கத்தில், சிறு முதலீட்டாளர்கள் வாங்குவதற்கு முன்பு, பலமுறை யோசிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.



தற்போதைய சூழ்நிலையில், தங்க முதலீடுகள் பெரும்பாலும், பணப்பரிவர்த்தனை மூலமே (Cash transactions) செய்யப்படுகின்றன. கருப்புப் பண உலக இயக்கத்தில், தங்கம் முக்கிய பங்கு வகிக்கிறது.

தங்கத்தில் முதலீடு என்பது, நாட்டின் ஆக்கபூர்வமான திட்டங்களுக்குப் பயன்படாத, ஒரு செயற்படாத முதலீடாகும். முதலீட்டுக் காலத்தில் விலை உயர்வு இருந்தாலொழிய, வட்டி, ஈவுத்தொகை போன்ற வேறு எந்த வருமானத்தையும் தங்க முதலீடு ஈட்டுவதில்லை.

இலங்கையைப் பொறுத்தவரை, தங்கத்துக்கான தேவைகளுக்கு அது, முழுவதும் இறக்குமதியைச் சார்ந்திருக்கிறது. தங்கத்தின் இறக்குமதிக்காக ஏற்றுமதிகள் மூலம் ஈட்டிய அந்நியச் செலாவணியைச் செலவழிக்கிறோம். இதனால், எம் அந்நியச் செலாவணி பெருமளவில் கரைகிறது. இதனால், அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் ஏற்றம் ஏற்படுவதையும் தவிர்க்க முடிவதில்லை.

தங்க இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும், குறைக்கவும், அரசு பல கட்டங்களில், கூடுதல் வரி, ஏற்றுமதிக் கடமை (Export obligation for importers) ஆகியவைகளை அறிமுகம் செய்ததாலும் கடத்தல் மூலம் பெருமளவு தங்கம் நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் அடிக்கடி தங்கக் கட்டிகளும் கடத்த முயற்சிக்கப்பட்ட தங்க நகைகளும் பிடிபடுவது இதனை அப்பட்டமாகக் காட்டுகின்றது.

முந்தைய சந்ததியினரைவிட, அதிக தெளிவான சிந்தனைகளை உடைய தற்போதைய இளைய சமுதாயம், தங்கள் திருமணச் சடங்குளில் வழங்கப்படும் தங்கத்தின் அளவைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். தங்கள் சந்ததிகளுக்குத் தங்கம் வழங்கும் நோக்கமுடைய பெற்றோர்கள் அதை வேறு வழிகளில் வழங்க முயற்சிக்க வேண்டும். மக்களின் மனமாற்றம், தங்கத்தின் தேவையைப் பெருமளவில் குறைக்கும் வல்லமை படைத்ததாகும்.

மேற்கூறிய மாற்றுத் திட்டங்களை மட்டும் நம்பியிராமல், நாட்டின் உற்பத்தித் திறனுக்கு சற்றும் பயன்படாத தங்க இறக்குமதியின் அளவை அரசு படிப்படியாகக் குறைத்து, அரிய அன்னியச் செலாவணியை, பொருளாதார முன்னேற்றத்துக்குப் பயன்பட வழிவகை செய்யவேண்டும் என்பதுதான் அனைவருடைய எதிர்பார்ப்பாகும்.

நோய் வரவிடாமல் தடுப்பது, நோய் வந்த பிறகு சிகிச்சை எடுத்துக்கொள்வதை விட விவேகமானது என்ற கூற்றின்படி, தங்க இறக்குமதியைத் தற்பொழுதே கட்டுப்படுத்தி, அந்நியச் செலாவணி பற்றாக்குறை என்ற வருங்கால நோயிலிருந்து நாட்டைக் காப்பாற்றும் செயல்பாடுகளை அரசு மேற்கொள்ள வேண்டியது மிக, மிக அவசியமாகும்.

# தென்னாபிரிக்காவை உலுப்பிய மாணவர்கள்

தென்னாப்பிரிக்க கிரிக்கெட் அணி இந்திய அணியைப் புரட்டி எடுத்ததை அதிர்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்தவர்களில் பலர், தென்னாப்பிரிக்காவில் நடந்துவரும் மாணவர் போராட்டத்தைத் தவறவிட்டிருக்கலாம். 1976 இல் ஜொகன்னர்ஸ் பெர்க்கின் சொவீட்டோ பகுதியில் நிறவெறிக்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்டத்துக்குப் பின்னர், மிகப் பெரிய அளவில் மாணவர்கள் நடத்தும் போராட்டம் இது. இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து அந்த நாட்டின் பல பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன. அந்த நாட்டின் மூன்று தலைநகரங்களில் ஒன்றான பிரிட்டோரியாவில்கூடிய பல்வேறு பல்கலைக்கழகங்களின் மாணவர்களின் எண்ணிக்கை 10,000 ஐத் தாண்டியது. பொலிஸாருடன் மோதல், கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு என்று தென்னாபிரிக்காவே திகைத்து நிற்கிறது. மாணவர்களின் கொந்தளிப்புக்குக் காரணம், கல்விக் கட்டண 'உயர்வு!




'விட்ஸ்' என்று அழைக்கப்படும் விட்வாட்டர்ஸ்ராண்டு பல்கலைக்கழகத்தில்தான் போராட்டத்துக்கான பொறி கிளம்பியது. ஜோகன்னர்ஸ் பெர்க்கில் உள்ள இந்தப் பல்கலைக்கழகத்தின் கல்விக் கட்டணம் இந்த ஆண்டு 10.5% உயர்த்தப்பட்டிருக்கிறது. பதிவுக் கட்டணமும் 6% உயர்ந்திருக்கிறது.

தென்னாப்பிரிக்கா ஒன்றும் அத்தனை செழிப்பான நாடல்ல. சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் இன்னமும் வறுமைக்கோட்டுக்கு வெகு கீழே வாழ்பவர்கள் என்று பெப்ரவரி மாதம் வெளியான கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

ஏழைகளில் பெரும்பாலானோர் கருப்பினத்தவர்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இவர்களில் பெரும்பாலானோர் கல்லூரி வரை வருவதே சிரமம். கல்விக் கட்டணம், தங்குமிடம், உணவு என்று ஏகப்பட்ட செலவுகளைத் தாக்குப்பிடித்து கல்வியைத் தொடர்வது இன்னும் கடினமான விடயம்.

இப்படியான சூழலில்தான், 'விட்ஸ்' பல்கலைக்கழகத்தின் கல்விக் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டது. அரசின் நிதி உதவி பெறும் பல்கலைக்கழகம்தான் இது.

இந்தக் கட்டண உயர்வால், தனியார் கல்வி நிறுவனங்களுக்கு இணையாகக் கல்விக் கட்டணம் உயர்ந்திருக்கிறது என்று கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த 'விட்ஸ்' மாணவர்கள் ஒக்டோபர் 14இல் போராட்டத்தில் குதித்தனர்.

கல்விக் கட்டண உயர்வுக்கு மிக முக்கியக் காரணம், பொதுக் கல்வி நிறுவனங்களுக்கு அரசு அளித்துவரும் நிதியுதவி கணிசமாகக் குறைக்கப்பட்டிருப்பதுதான் என்று கல்வியாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இதேபோல் பாதிக்கப்பட்ட மற்ற பல்கலைக்கழகங்களின் மாணவர் களும் போராட்டத்தில் இணைந்துகொண்டனர். கேப்டவுனில் உள்ள நாடாளுமன்றம், பிரிட்டோரியாவின்

> **“ கல்விக் கட்டண உயர்வுக்கு மிக முக்கிய காரணம், பொதுக் கல்வி நிறுவனங்களுக்கு அரசு அளித்துவரும் நிதியுதவி கணிசமாகக் குறைக்கப்பட்டிருப்பதுதான் என்று கல்வியாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.**

முன்பும் குவிந்த மாணவர்கள் அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். மாணவர்களின் மிகப் பெரிய எழுச்சி அரசை அசைக்காமல் இல்லை. அடுத்த ஆண்டு இதுபோல் கல்விக் கட்டணம் உய ராது என்று அறிவிக்கிறேன் என்று பெருந்தன்மையாக அறிக்கை விடுத்திருக்கிறார் தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் ஸுமா. ஆனால், இப்போது அறிவிக்கப்பட்டிருக்கும் கல்விக் கட்டணத்தைக் குறைப்பது, இலவசக் கல்வி ஆகியவைதான் முக்கியம் என்று மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் தரப்பில் வாதம் முன்வைக்கப்படுகிறது. அத்துடன், ஜேக்கப் ஸுமாவின் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் கொள்கை முடிவுகள் தோல்வியடைந்திருப்பதை அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

அரசின் அறிவிப்பைத் தொடர்ந்து மாணவர்கள் வகுப்புகளுக்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், மாணவர்கள் இன்னமும் திருப்தியடையவில்லை. பிரச்சினைகனன்று கொண்டே இருக்கின்றது.

## நானும் புலிதான்



ஒரு புலி திருமணம் செய்துகொண்டது. எல்லா மிருகங்களும் அந்த விருந்துக்கு வந்திருந்தன. அவை எல்லாமே புலியிலிருந்து கொஞ்சம் தள்ளியே நின்றன. இடைவெளியைப் பேணிக்கொண்டே புலித் தம்பதியை வாழ்த்தின.

ஒரு பூனை பரபரப்பாக உள்ளே வந்தது. வந்ததும் மேடையில் பாய்ந்து ஏறி நடனமாடியது. தன்னுடைய வாழ்த்தைத் தெரிவிக்க, மேடையில் இருந்த புலியை நோக்கிக் கையை நீட்டியது.

பூனையைப் பார்த்துச் சீற்றத்துடன் பெரும் சத்தத்தில் உறுமிய புலி சொன்னது. "என்ன சிறுத்தையேகூட என்னைப் பார்த்து மரியாதைக்காக கொஞ்சம் தள்ளியே நிற்கிறது. ஆனால் நீ மேடையில் ஏறிக் குதிக்கிறாய்" என்று கர்ஜித்தது.

புலியை அலட்சியமாகக் கூர்ந்து பார்த்த பூனை பதில் சொன்னது. அதைக்கேட்ட புலி அதிர்ச்சியில் மயக்கமடைந்து அப்படியே சரிந்தது. அப்படி என்னதான் அந்தப் பூனை சொல்லி இருக்கும்? உங்களுக்கு ஏதாவது தோன்றுகின்றதா?

அந்தப் பூனை சொல்லியது. "நானும்கூடப் புலியாகத்தான் இருந்தேன் திருமணம் முடிப்பதற்கு

# தாமரை இலைத் தண்ணீர்

மிருசுவில் தமிழ்தாசன்
மீசாலை கிழக்கு, மீசாலை.

அந்த அழகான திருமண மண்டபத்தில் விருந்தினர்கள் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. சரியான சுபமுகூர்த்தத்தில் சடங்கு நிகழ்வுகள் அனைத்தும் வெகு நேர்த்தியாகவே நிறைவேறியிருந்தன. இருந்தும், இப்போதும்கூட ஏராளமானவர்கள் மணமக்களுக்கு அறுகரிசி போட்டு வாழ்த்துக்கள் தெரிவித்து கையில் கொண்டு வந்திருந்த என்வலப்புக்கள், அன்பளிப்புக்கள் அனைத்தையும் அக மகிழ்ந்து கொடுத்துக் கொண்டிருந்தனர்.

எல்லோரையும் அப்படிச் சொல்லமுடியாது. சிலர் வயிறெரிந்தும் கொடுத்துக் கொண்டிருந்தனர் போலவே தெரிந்தது. என்னைப்போல அவசரமாக வீடு போக வேண்டியவர்கள் அங்கே மேல்மாடி விருந்து மண்டபத்திலே அலைமோதிக்கொண்டிருந்தனர்.

"சே! சும்மா சொல்லக்கூடாது. அருமையான சாப்பாடு! சம்பா அரிசிச் சோத்துக்கு அந்தக் கடலைப் பிரட்டல்கறி என்ன சோக்காயிருக்குது! வெங்காயச் சம்பல்! எட! உங்கை எல்லாரும் தான் வெங்காயச் சம்பல் போடுகினம். இப்பிடி ஆராலும் போட ஏலுமே! எல்லாம் அருமை! உண்ணானை! அந்தச் சமையல்காரன்ரை கையுக்கு ஒரு மோதிர மடிச்சுப் போடலாம்."

செல்ஃப் சேவீஸ் என்னும் புதிய நடைமுறை விருந்தினர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பாகிப் போய்விட்டது. ஏன்! எனக்கும்தான். வெள்ளித்தட்டு நிறையச்சம்பா அரிசிச் சோற்றை அள்ளிப் போட்டு பிடித்தமான கறி, குழம்பு பொரியல் வடை அத்தனையையும் ஒன்றாகப் போட்டுக் குவித்தபடி ஒரு மூலைக்குள் முடங்கிக் கொண்ட எனக்கு அவசர உணர்வு பிடரியைப் பிடித்துத் தள்ளியது.

"கவனமப்பா! பஸ் பிரயாணம்! காசைத் துலைச்சுப் போடாதேங்கோ. கெதியாய் அலுவலை முடிச்சுப்போட்டுக் கவனமாய் வாருங்கோ. காசு கவனம். நீங்கள் ஒரு மறதி பிடிச்ச அறணை. உங்களைத் தனியவிட எனக்குப் பயமாய்க் கிடக்குது. மறக்காமல் காசைப் போட்டிடுங்கோ. வரேயுக்கை ஒரு பணியாரப்பையும் மறந்திடாமல் கொண்டு வந்திடுங்கோ!"

மனைவி அகிலா திரும்பத் திரும்ப என்னிடம் சொல்லிவிட்ட ஆலோசனைகள் நெஞ்சிலே வந்து இரை மீட்டுக் கொண்டிருந்தன.

எல்லாம் சரிதானே! ஒரு பிசகும் விடயில்லை. அவள் பாவி ஒரு பயந்த சீவன். எடுத்ததுக்கெல்லாம் பயப்புட்டுப் பயப்புட்டு.......... சே! அறுகரிசி போடுறபோதே கையோடை என் வலப்பையும் குடுத்திட்டன். இனியென்ன பிரச்சினை! சாப்பிட்டு மாச்சுது. ஒரு பணியாரப்பை! ஏனுமெண்டால் இரண்டு மூண்டைக்கூட எடுத்துக் கொண்டு நடையைக் கட்ட வேண்டியது தானே.

பன்னிரண்டரைக்கு ஒரு மன்னார் பஸ் இருக்குதாம். அதிலை போனால்தான் கமலாக்கா வீட்டுச் சாமத்திய வீட்டுக்கும் பின்னேரமெண்டாலும் போகலாம். வடிவாய்ச் சாப்பிட்டாச்சுது. பின்னையென்ன! ஆயிரம் ரூபா சுளையாய் என்வலப்பிலை வைச்சுக் குடுத்தனான்தானே! அப்ப வடிவாய்த் தானே சாப்பிடவேணும். உங்கை என்னைப் போல ஆயிரம்ரூபாவை ஆர் குடுக்கப் போறான்! எல்லாரும் முன்னூறும், ஐநூறும் எண்டு குடுத்திட்டு மூக்கு முட்டச் சாப்பிட்டிட்டு போவினம். என்ரை சித்தியின்ரை மகன்! என்ரை ஒண்டைவிட்ட தம்பி! அவனுக்கு ஆயிரம் போடத்தானே வேணும். இல்லாட்டில் நாளைக்கு மதிப்பினமே!



எனது தாயாரின் தங்கை மனோகரியின் மகனுக்குத்தான் இன்று திருமணம் நடந்து கொண்டிருக்கின்றது. அம்மாவும் சித்தியும் நீண்ட காலமாகப் பகைமை பாராட்டி வருகின்றார்கள். இருந்தும் மனோகரிச் சித்தி எனக்கு மட்டும் விசேடமாக அழைப்பு விடுத்திருந்தாள். சித்தியையும் சித்தப்பாவையும் தவிர எனக்கு அவர்களின் பிள்ளைகளைத் தெரியாது. அம்மாவின் பகைமை காரணமாக நாங்கள் யாருமே யாழ்ப்பாணப் பக்கம் வருவதேயில்லை. அன்று எதிர்பாராத வகையில் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு நான் வந்த வேளையில் பஸ் நிலையத்தில் என்னைக் கண்டு கொண்ட சித்தி எப்படியோ அடையாளம் கண்டுவிட்டாள். எதேச்சையானதொரு சந்திப்பு!

"என்ரை ராசா! நீ என்ரை சின்னக்காவின்ரை சதீஸ் எல்லே! கடவுளே! கொம்மாதான் தேவையில்லாமல் என்னோடை பழிப்பிடிச்சுக் கொண்டிருக்கிறா எண்டால் நீங்களும் அப்பிடியே மோனை! யாழ்ப்பாணத்திலை சித்தியெண்டு ஒருத்தி இருக்கிறாள் எண்டு நினைச்சு நீயெண்டாலும் ஒரு நாளைக்கு வீட்டை வந்திருக்கலாமே!"

பஸ் நிலையமென்றும் பாராது என்னைக் கட்டியணைத்துக் கண்கலங்கினாள். எனக்கும் கண்கள் பனித்துவிட்டன.

"இந்தாடா! உனக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம். என்ரை மூத்தவன் பானுவுக்கு வாற புதன் கிழமை கலியாணம். காட்டைப்பிடி கொம்மாவுக்குக் காட்டாதை. தெரிஞ்சால் மனிசி உன்னையும் மறிச்சுப்போடும். அது ஒரு பிடிச்சிராவி. இல்லாட்டில் இப்ப முப்பது வருசமாய் என்னோடை பறையாமலிருக்குமே! நீயெண்டாலும் வா மோனை! உனக்கும் என்ரை மூத்தவனைத் தெரியாது. அவனுக்கும் நீயொரு அண்ணையெண்டு தெரியாது. எப்பிடியும் வா. என்ரை அக்காவின்ரை இடத்துக்கு நீயெண்டாலும் வந்திடு."

மீண்டும் கெஞ்சிக் கலங்கினாள் சித்தி. என் மனமும் ஐஸ்கட்டியாகக் கரைந்து விட்டது. தூர்ந்து போயிருந்த உறவைப் புதுப்பிக்க வேண்டும். அதற்கு என்னைத் தயார்ப் படுத்தியிருந்தேன்.

நேரம் நண்பகல் பன்னிரண்டு மணியென்று எனது கைக்கடிகாரம் என்னை எச்சரித்தது. இப்போது நடக்கத் தொடங்கினால்தான் பஸ்நிலையம் சென்று பன்னிரண்டரை மன்னார் பஸ்ஸைப் பிடிக்க முடியும்.

அது சரி! என்வலப்பை மாப்பிளையிட்டுக் குடுத்திட்டன்தானே!

என்னை நானே பரிசீலித்துக் கொண்டேன். ஒரு நெருடல்! மாப்பிள்ளையிடம் என்வலப் கொடுத்த ஞாபகம் இல்லவே இல்லை. மாப்பிள் ளைக்கு கைலாகு கொடுத்தேன் மணப் பெண்ணிடம்தான் என்வலப்பைக் கொடுத் திருந்தேன். செக்கச் செவேலென்று மிக அழகாக அனுஷ்கா போன்று சிரித்தபடியிருந்தாள். நான் என்னை மறந்து அவளிடமே கொடுத்து விட்டது இப்போதுதான் எனது மரமண்டைக்கு ஞாபகத்தில் வந்தது.

கடவுளே இப்ப என்ன செய்யுறது! சித்தியின்ரை மகனுக்குக் குடுக்க வேண்டியதை எங்கையோ கிடந்தவளுக்குக் குடுத்திட்டனே! என்னெண்டு திருப்பிக் கேக்கிறது! மரியாதை கெட்ட வேலையாய்க் கிடக்கு. வேறை காசிருந்தாலும் பறவாயில்லை. திரும்பவும் ஒருக்கால் மாப்பிள்ளையிட்டைக் குடுக்கலாம். அதுக்கும் வழியில்லை. இதென்ன சோதனை!

நெருப்புக்குள் கால் வைத்த நாய்க்கடுவனாகத் துடித்தேன். சித்தியும் சித்தப்பாவும் என்னைக் கண்டு கதைத்துமிருந்தார்கள். இந்த நிலையில் நான் வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டு மாப்பிள்ளைக்கு என்வலப் கொடுக்காது போக முடியுமா! ஒரேயொரு வழி! கொடுத்த என்வலப்பை யாரையாவது பிடித்துத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். இது எப்பிடிச் சாத்தியமாகும்.

நெற்றி நிறைய விபூதி, பெரிதாக ஒரு சந்தனப்பொட்டு, வெள்ளை வேட்டி, நாஷனல்ச் சட்டையில் ஒரு வயோதிபர் பார்ப்பதற்கு ஒரு ஓய்வுநிலைத் தமிழாசிரியர் போலக் காணப்பட்டார். பெண்வீட்டுக்காரருடனே நின்று ஏதேதோ காரியங்களில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவரையும் விட்டால் வழியில்லை.

லபக்கென அந்த மனிதனைப் பிடித்தேன். எனது பரிதாப நிலையை விலாவாரியாகக் கூவியும் விட்டேன். என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். வெட்கத்தால் உடல் கூசியது. இனிக் கூசியென்ன! மூசியென்ன. எனக்குக் காரியம் நடந்தாக வேண்டுமே. மணப் பெண்ணிடமிருக்கும் என்வலப்பை மாப்பிள்ளையிடம் கொடுத்துவிட்டால் எனது பிரச்சினை தீர்ந்துவிடும்.

கொஞ்சம் பொறுக்க வேணும் தம்பி. இப்ப உதுக்கை போய் ஒண்டும் செய்யேலாது. ஆக்கள் நெருக்கடி குறையட்டும் தேடிப் பாப்பம் சொல்லிவிட்டு மனிதர் சுடுகஞ்சி குடித்த நாய்போல ஓடியாடித் திரிந்து கொண்டிருந்தார். அவருடைய ஆறுதல் வார்த்தைகள் ஒருவித தெம்பைக் கொடுத்தன.

பன்னிரண்டரை மணிக்குப் புறப்பட வேண்டிய நான், இப்போது இரண்டு மணியாகியும் வீடு போகக்கூடிய சூழ்நிலையில்லை. சனங்களும் குறைந்த பாடாயில்லை. அந்த வயோதிபரையும் பார்க்க முடியவில்லை. அறுந்துவிட்ட பல்லியின் வாலாக என்னிதயம் துடித்துக் கொண்டிருந்தது. இந்தக் கேவலத்தில் சூழ்நிலை புரியாது மனைவி தொலைபேசியில் ஓயாது அழைத்துக் கொண்டிருந்தாள்.

"என்னப்பா செய்யிறியள்! இன்னும் கலியாண வீடு முடியவில்லையே! என்வலப்பை மறக்காமல்க் குடுத்திட்டியளே! நீங்கள் ஒரு மறதி பிடிச்ச மனிசன்தானே! அதுதான் கேட்டனான். கெதியாய் வெளிக்கிட்டு வாருங்கோ. சாமத்திய வீட்டுக்கும் போக வேணும்.

(20ஆம் பக்கம் பார்க்க)





சு.நிலானி
தரம் -3,
யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி.



மு.கலக்ஷிகா,
தரம் -3,
யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தி.

## அன்பான பாப்பாவே நில்லு

அன்பே பாப்பா நில்லு!
ஆத்தி சூடி சொல்லு!
இன்சொல் என்றும் பேசு!
ஈயாத உலோபியரை ஏசு!
உள்ளத்தை நேர்மை ஆளணும்!
ஊரார் மெச்ச வாழணும்!
எல்லாக் குலமும் ஒன்றாகும்!
ஏழைக்கு உதவுதல் நன்றாகும்!
ஐயம் இட்டு உண்பாயே!
ஒன்றே குலமென்று அறிவாயே!
ஓரினமாக நீ வாழ்வாயே!
ஔவை நல்வழி சென்றாலே!
என்றும் உனக்கு நலமாமே!



செ.தீர்க்கஜன்,
தரம் -3,
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தி.



வி.பவுஜன்
தரம் -3,
யா/உடுவில் மகளிர் கல்லூரி.

# தங்கமுடி நங்கை

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு போலந்து நாட்டில் ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். வயல் ஓரமாக (புறத்தில்) உள்ள குடிசை ஒன்றில் அவன் தனது மனைவியுடன் வாழ்க்கை நடத்தினான். திருமணம் செய்து நீண்ட காலமாகியும் அவர்களுக்குக் குழந்தைச் செல்வம் கிடைக்கவில்லை. அதன் காரணமாக விவசாயியும் அவனுடைய மனைவியும் மிகவும் கவலை அடைந்தனர். வயலுக்குச் சற்றுத் தொலைவிலுள்ள ஆலயத்துக்கு அடிக்கடி சென்று தங்களுக்கு ஒரு குழந்தை கிடைக்கச் செய்ய வேண்டும் என்று அவர்கள் பிரார்த்தனை புரிந்து வந்தனர். வயலில் ஒருநாள் வழக்கம் போல் வேலை செய்துவிட்டு, மரநிழலில் படுத்துத் தூங்கினான் அந்த விவசாயி. அப்போது, அவனுடைய காதுகளில் அசரீரி ஒலி பலமாகக் கேட்டது. “அப்பனே! உங்கள் பிராத்தனைக்கு விரைவில் பயன் கிடைக்கப்போகிறது. உனது மனைவி விரைவில் அழகான பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுப்பாள். அதனுடைய தலைமயிர் தங்கத்தால் அமைந்திருக்கும். அந்தக் குழந்தை அழுதால் அதன் கண்களிலிருந்து முத்துக்கள் உதிரும். அந்தக் குழந்தை மூலம் நீங்கள் செல்வந்தர் ஆவீர்கள். அந்தக் குழந்தை பெரியவளானதும் இளவரசன் ஒருவனைத் திருமணம் செய்து, மகிழ்வுடன் வாழ்வாள்.” அசரீரிக் குரல் கேட்டதும் துள்ளி எழுந்த விவசாயி ஆச்சரியத்துடன் அங்குமிங்கும் பார்த்தான். அவனுடைய கண்களில் யாருமே தென்படவில்லை. அவசர அவசரமாகத் தனது குடிசைக்குச் சென்று அசரீரிக் குரல் பற்றித் தனது மனைவியிடம் தெரிவித்தான். தான் சற்று முன் கண்ட கனவிலும் மேற்படி அசரீரியின் குரல் கேட்டதாக அவனுடைய மனைவி மகிழ்ச்சியுடன் கூறினாள். சிறிது காலத்துக்குப் பின்பு விவசாயியின் மனைவி அழகே உருவான



பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள்.

அந்தக் குழந்தையின் தலைமயிர் தங்க நிறமாகக் காட்சியளித்தது. அந்தக் குழந்தை அழுதபோது அதன் கன்னங்களிலிருந்து சிறிய முத்துக்கள் வெளிவந்தன. அந்த முத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் அந்த விவசாயி பணக்காரனானான். விவசாயியின் மகள் பதினாறாவது வயதை அடைந்து தேவலோகக் கன்னி போல பேரழகுடன் விளங்கினாள். அதே வேளையில் விவசாயியின் மனைவியும் இறக்க நேரிட்டது. அதையடுத்து விவசாயி வேறொரு பெண்மணியைத் திருமணம் செய்துகொண்டான். கொடிய குணம் படைத்த அந்தப் பெண், விவசாயியின் மகளைக் கொடுமைப்படுத்தத் தொடங்கினாள். தங்கத்தாலான தலைமுடியுடன் காணப்பட்ட பேரழகியை ஓவியன் ஒருவன் அழகுற வரைந்து அந்த நாட்டு அரசனுக்கு அன்பளிப்புச் செய்துவிட்டான். விவசாயின் இரண்டாவது மனைவிக்குப் பிறந்த பிள்ளை அவலட்சணமாகக் காணப்பட்டது. தனக்கு அவலட்சணமான குழந்தை பிறந்ததும் தங்க முடி அழகி மீது பொறாமை கொண்டாள் கொடிய குணம் படைத்த அந்தப் பெண். பேரழகியை எப்படியாவது தொலைத்துக்கட்டி விட வேண்டும் என்று திட்டமிட்டாள் அந்தப் பொறாமைக்காரி. விவசாயி வெளியூர் சென்றிருந்த சமயத்தில் பேரழகியைக் காட்டுக்கு அழைத்துச் சென்று, அவளுடைய இரு கண்களையும் கம்பியால் குத்திக் குருடாக்கிவிட்டு வீட்டுக்கு ஓடிவந்து விட்டாள் அந்தப் பெண். விவசாயி வீடு திரும்பியதும் பேரழகி தன்னிடம் கூறாமல் எங்கோ ஓடி விட்டாள் என்று பொய் கூறினாள். வேதனை தாங்க முடியாத விவசாயியும் உயிர் துறந்தான். காட்டுக்கு விறகு வெட்டுவதற்கு வந்த விறகு வெட்டியொருவன் பேரழகி அழுது கொண்டிருப்பதையும் அவளுடைய கண்களிலிருந்து முத்துக்கள் வெளிவந்து கொண்டிருப்பதையும் கண்டான். நடந்த சம்பவங்களையெல்லாம் பேரழகியின் மூலம் அறிந்து கொண்ட விறகுவெட்டி அவளைத் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று கண்களுக்கு வைத்தியம் செய்தான். பேரழகியின் கண்கள் முன்பு போல் ஆகிவிட வேண்டுமென்று உள்ளம் உருகிப் பிரார்த்தனை செய்தான். அவனுடைய பிரார்த்தனைக்குப் பயன் கிடைத்தது. சில தினங்களின் பின்பு பேரழகியின் கண்கள் பார்வை பெற்றன. ஒரு நாள் வேட்டையாடி விட்டு அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்த அந்த நாட்டு இளவரசன் பேரழகியைக் கண்டான். “ஓவியனால் அரசருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட ஓவியத்திலிருக்கும் பேரழகி இவள் தான்” என்று அவனுடைய உதடுகள் முணுமுணுத்தன. விறகு வெட்டிக்குப் பெருந்தொகைப் பணம் கொடுத்துவிட்டு, பேரழகியை அரண்மனைக்கு அழைத்துச் சென்று அவளைத் திருமணம் செய்து கொண்டான் இளவரசன். பேரழகியின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து இளவரசன் அவளின் சிற்றன்னையைப் பிடித்துப் பாதாளச் சிறையில் அடைத்துவிடும்படி உத்தரவிட்டான். ஒருநாள் இரவு பாதாளச் சிறைச்சாலையில் இருந்த குழவிக் கூடொன்றிலே மோதினாள் பொறாமைக்காரி. குளவிகள் அவளைக் கொட்டியதால் அவளது இரு கண்களும் பார்வை இழந்தன. “முற்பகல் செய்தால் பிற்பகல் விளையும் என்பது முற்றிலும் உண்மை தான்” என்று அவளுடைய வாய் முணுமுணுத்தது.

# இந்த வாரம்

## 01.11.2015 முதல் 07.11.2015 வரை

## உங்களுக்கு எப்படி?

### மேடம்

குரு, சுக்கிரன், ராகு நற்பலன் தர காத்திருக்கின்றனர். நீண்ட நாள் முயற்சி வெற்றி பெறும். மனதில் உற்சாகம் உண்டாகும். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். புத்திரர் நண்பருக்கு இணையாகப் பழகுவர். ஆரோக்கியம் பலம் பெறும். பணக்கடனில் பெரும்பகுதியை அடைப்பீர்கள். மனைவியின் செயல்பாடு கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். பெண்கள் சுபநிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழ்வர். மாணவர்கள் ஆர்வமாகப் படிப்பர். சனீஸ்வரர் வழிபாடு, சங்கடம் போக்கும்.

### இடபம்

சுக்கிரன், சூரியன், புதன், கேதுவினால் நன்மை பெருகும். சாதுர்யமாக செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். எதிரியும் பாராட்டும் சூழ்நிலை உருவாகும். குடும்பத்தில் ஒற்றுமை பலம் பெறும். வாகன பராமரிப்புச் செலவு ஏற்படும். புத்திரர் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வு உருவாகும். மனைவியால் குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிலக்கை விரைந்து முடிப்பர். பெண்கள் மனம் போல புத்தாடை அணிகலன் வாங்குவர். மாணவர்களுக்கு நண்பரின் உதவி கிடைக்கும். விஷ்ணு வழிபாடு, தொழிலில் வளர்ச்சி தரும்.

### மிதுனம்

செவ்வாய், சுக்கிரன், சனீஸ்வரர் நன்மை தருவர். மங்கல நிகழ்ச்சி நடத்த உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். வாகன வகையில் பராமரிப்புச் செலவு உண்டாகும். புத்திரரின் குறையை இதமான அறிவுரையால் சரிசெய்வது நல்லது. எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பகைமை குணம் உள்ளவரும் அன்பு பாராட்டுவர். மனைவியின் பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள். பெண்கள் கணவர் வழி உறவினர்களால் பாராட்டப்படுவர். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர். வைரவர் வழிபாடு, நன்மை அளிக்கும்.

### கடகம்

குரு, சுக்கிரன், ராகு, புதன் அதிக நன்மை தருவர். பேச்சு, செயலில் புத்துணர்வு வெளிப்படும். சமூகத்தில் நற்பெயருடன் திகழ்வீர்கள். குடும்பத் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். வாகனப் பயணத்தால் இனிமை காண்பீர்கள். புத்திரரின் உடல்நலத்தில் உரிய கவனம் வேண்டும். எதிரியும் விலகிச் செல்லும் சூழல் உருவாகும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுபச்செய்தி வரும். தொழில், வியாபாரத்தில் புதிய சீர்திருத்தங்களைச் செய்வீர்கள். மாணவர்கள் ஆசிரியர்களின் மத்தியில் பாராட்டுப் பெறுவர். மகாலட்சுமி வழிபாடு, வளம் தரும்.

### சிங்கம்

சுக்கிரன், சூரியன், சந்திரனால் நன்மை அதிகரிக்கும். பொது இடங்களில் எவருடனும் அதிகம் பேச வேண்டாம். ஆடம்பரச் செலவு தவிர்க்க முடியாததாக இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. புத்திரரின் செயல்களை கண்டிக்கும் சூழ்நிலை உருவாகும். கடன், நோய் தொந்தரவு குறையும். மனைவி இன்ப, துன்பங்களில் சம பங்கு கொள்வார். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களின் ஆதரவால் வளர்ச்சி உண்டாகும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கப் பெறுவர். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுவர். இராமர் வழிபாடு, மனதில் உறுதி வளர்க்கும்.

### கன்னி

சுக்கிரன், சந்திரன், சனீஸ்வரர் நன்மை வாரி வழங்குவர். பணிகளில் ஒருமுகத்தன்மையுடன் ஈடுபடுவது அவசியம். குடும்பத் தேவைக்கான செலவு அதிகரிக்கும். கடந்த கால நற்செயலுக்கான பலன் வந்து சேரும். வாகனத்தில் அறிமுகம் இல்லாதவருக்கு இடம் தர வேண்டாம். விலகிய உறவினரும் விரும்பி வந்து சொந்தம் பாராட்டுவர். மனைவியின் ஆலோசனையைக் கேட்டுப் பாராட்டுவீர்கள். பணியாளர்கள் சக ஊழியர்களின் ஆதரவைப் பெற்று மகிழ்வர். பெண்கள் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். மாணவர்கள் படிக்கும் நேரத்தை அதிகப்படுத்துவர். விநாயகர் வழிபாடு, வெற்றி தரும்.

### துலாம்

குரு, செவ்வாய், சுக்கிரன், கேதுவினால் நன்மை உண்டாகும். கருத்து பேதம் கொண்டவர்களிடமிருந்து சமயோசிதமாக விலகுவீர்கள். உடன் பிறந்தவர்கள் அன்பு பாராட்டுவர். பூர்வீகச் சொத்து மூலம் வளர்ச்சி உண்டாகும். சொத்தில் வருமானம் அதிகரிக்கும். புத்திரர் உங்களின் வழிகாட்டுதலைக் கேட்டு வளர்ச்சிப்பாதையில் முன்னேறுவர். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் ஆடை, அணிகலன் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் ஆர்வத்துடன் ஈடுபடுவர். தட்சிணாமூர்த்தி வழிபாடு, நல்வாழ்வு தரும்.

### விருச்சிகம்

ராகு, சந்திரனால் நற்பலன் உண்டாகும். பணவரவுக்கான புதிய வழி உருவாகும். அனுபவம் கற்றுத் தந்த பாடம் வளர்ச்சிக்கு துணை நிற்கும். புத்திரரின் அதிரடியான செயல்பாடு திகைப்பை ஏற்படுத்தும். உடல் நலனில் கவனம் தேவை. மனைவியின் கவனக்குறைவை கண்டிப்பதில் மென்மையான அணுகுமுறை தேவை. தொழில், வியாபாரத்தில் மந்தநிலை மாறி லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் விவாதத்தில் ஈடுபடுவது கூடாது. பெண்கள் பிறருக்காக எந்தவிதப் பொறுப்பும் ஏற்க வேண்டாம். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும். முருகன் வழிபாடு, சகல நன்மை தரும்.

### தனுசு

குரு, சுக்கிரன், சூரியன், புதனால் நன்மை உண்டாகும். மனதில் அமைதி நிறைந்திருக்கும். புதிய முயற்சி மூலம் வளர்ச்சிக்கு வழிவகுப்பீர்கள். நண்பரால் தக்க சமயத்தில் உதவி உண்டாகும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்தும் சூழல் உருவாகும். புத்திரர்களின் செயல்பாடு கண்டு மகிழ்வீர்கள். நிலுவைப் பணம் கிடைக்கும். மனைவியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் சந்தோச வாழ்வு காண்பர். மாணவர்கள் படிப்பில் அக்கறை கொள்வர். ஆஞ்சநேயர் வழிபாடு, வெற்றி தரும்.

### மகரம்

பெரும்பான்மையான கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். தடைப்பட்ட பணி விரைவாக நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். முக்கிய தேவை தாராள பணச் செலவில் பூர்த்தியாகும். புத்திரர், உங்கள் சொல் கேட்டு நடப்பர். எதிர்க்கும் உங்கள் மீது நல்ல எண்ணம் ஏற்படும். மனைவி செயல்பாடு குடும்ப ஒற்றுமையைப் பாதுகாக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணியிலக்கை விரைந்து முடிப்பர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்களின் விருப்பத்தை பெற்றோர் நிறைவேற்றி வைப்பர். அம்பிகை வழிபாடு, ஆனந்தம் அளிக்கும்.

### கும்பம்

குரு, சந்திரனால் நன்மை உண்டாகும். புதியவர்களின் நட்பும், உதவியும் கிடைக்கும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றவும். புத்திரரின் செயல்பாட்டை கண்டிப்பதில் மென்மை தேவை. ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவி வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகும். தொழில், வியாபாரத்தில் உழைப்பால் முன்னேற்றம் காண்பீர்கள். இலாபம் பெருகும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும் அதற்குரிய பலன் கிடைக்கும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். நந்தீஸ்வரர் வழிபாடு, மேன்மை தரும்.

### மீனம்

செவ்வாய், புதன், சந்திரனால் நன்மை ஏற்படும். எதிரித் தொல்லை விலகும். பணி நிறைவேற புதிய உத்தியைக் கையாள்வீர்கள். வாகனப் பயணம் இனிமை சேர்க்கும். புத்திரர் அறிவுத்திறனில் மேம்படுவர். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் ஆலோசனையை ஏற்று நடைமுறைப்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான காலகட்டம். ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களின் ஆதரவைக் கண்டு மகிழ்வர். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் திட்டமிட்டுப் படித்து முன்னேறுவர். நாகர் வழிபாடு, வாழ்வில் நலம் சேர்க்கும்.



# உளுந்து லட்டு

**தேவையான பொருட்கள்:**
உளுத்தம் பருப்பு- 2 கப்
அரிசி- 2 தேக்கரண்டி
சர்க்கரை - 2 கப்
நெய் - தேவையான அளவு

**செய்முறை:**
சட்டியை அடுப்பில் வைத்துத் தனித்தனியே பருப்பு மற்றும் அரிசியை பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும். இரண்டையும் தனித்தனியாகத் தூளாக அரைத்து கலந்து கொள்ளவும். சட்டியில் நெய் விட்டு அது காய்ந்ததும் அரைத்து வைத்திருக்கும் மாவைச் சிறிது சிறிதாகக் கொட்டி கிளறவும். நன்கு கிளறியதும், சட்டியை அடுப்பில் இருந்து இறக்கி, சூடாக இருக்கும்போதே லட்டுகளாக உருட்டிக் கொள்ளவும்.



# பீட்ரூட் ஹெயார் மாஸ்க்

மாசு நிறைந்த சுற்றுச்சூழல் மற்றும் மன அழுத்தத்தினால் பலருக்கும் ஏற்படும் ஓர் பிரச்சினை தான் தலைமுடி உதிர்வது. இப்படி தலைமுடி உதிர்வதாலேயே பலர் மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றனர். எனவே முடி உதிர ஆரம்பித்தால், அதனைச் சரிசெய்யும் முயற்சியில் உடனே ஈடுபட வேண்டும். இல்லாவிட்டால், வழுக்கைத் தலை தான் ஏற்படும். தலைமுடி உதிர்வதைத் தடுக்க எத்தனையோ இயற்கை வழிகள் உள்ளன. அதில் பலருக்கும் நெல்லிக்காய், கறிவேப்பிலை, வெங்காயம் போன்றவற்றைக் கொண்டு பராமரிப்பது பற்றித் தான் தெரியும். ஆனால் உடலில் குருதியின் அளவை அதிகரிக்க உதவும் பீட்ரூட்டைக் கொண்டு கூட முடி உதிர்வதைத் தடுக்கலாம் என்பது தெரியுமா? இங்கு பீட்ரூட்டைக் கொண்டு எப்படி தலைமுடி உதிர்தலுக்கு தீர்வு காண்பது என்று காண்போம். பீட்ரூட் இலைகளை எடுத்துக் கொண்டு, அதனைக் கொதிக்கும் நீரில் போட்டு, தண்ணீர் பாதியாகக் குறையும் வரை கொதிக்க விட்டு, பின் நீரை வடிகட்டி விட்டு, இலைகளை மிக்ஸியில் போட்டு நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அதில் ஒரு கரண்டி நிறப்பூச்சு சேர்த்துக் கலக்கவும். பின்னர் ஸ்கால்ப்பில் படும் படி நன்கு தடவி 20-25 நிமிடங்கள்; ஊற வைத்து, பின்னர் ஷாம்பு போட்டு அலச வேண்டும். இவ்வாறு வாரம் 4 முறை செய்து வந்தால் முடி உதிர்வது குறைந்திருப்பதைக் நன்கு காணலாம். பீட்ரூட்டில் இருக்கும் விற்றமின் பி, சி, பொஸ்பரஸ், கல்சியம் மற்றும் புரோட்டீன் சத்துக்கள், தலைமுடியின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவுகிறது. இந்தச்சத்துக்கள் தான் மயிர் கால்களை வலிமையாக்கி, அதன் வளர்ச்சியைத் தூண்டுகிறது. பீட்ரூட்டில் சத்துக்கள் வளமாக நிறைந்துள்ளது. எனவே இவற்றைக் கொண்டு ஹெயார் பேக் போடும் போது, முடிக்கு நல்ல பாதுகாப்பு கிடைத்து, முடியும் பிரகாசமாக இருக்கும். சருமத்துளைகளை இறுக்கும் பீட்ரூட் கொண்டு ஹெயார் பேக் போடும் போது, ஸ்கால்ப்பில் உள்ள சருமத் துளைகளை இறுக்கப்பட்டு, முடி உதிர்வதைத் தடுக்கிறது. பொதுவாக உடலில் பொட்டாசியம் குறைபாடு இருந்தால், முடி உதிர ஆரம்பிக்கும். ஆனால் பீட்ரூட்டில் பொட்டாசியம் அதிகம் உள்ளது. எனவே இதனைக் கொண்டு முடியைப் பராமரிக்கும் போது, முடி உதிர்வது குறையும். ஒரு ரம்ளர் பீட்ரூட் ஜூஸ் குடித்து வந்தாலும், முடி உதிர்வதைத் தடுத்து, முடியின் வளர்ச்சியை அதிகரிக்கலாம்.

# ஒரே மாதத்தில் வெள்ளையான சருமத்துக்கு



ஒவ்வொருவருக்குமே தாம் வெள்ளையாக இருக்க வேண்டு மென்ற ஆசை இருக்கும். இந்தஆசையின்காரணமாக பல்வேறு கிறீம்களை பயன்படுத்துவோம். ஆனால் அப்படி பயன்படுத்தும் பேர்னஸ் கிறீம் மூலம் சருமத்தின் நிறம் அதிகரிக்கிறதோ இல்லையோ, சருமத்தின் ஆரோக்கியம் கெட்டு, ஒருநாள் அந்த கிறீமைப் பயன்படுத்த தவறினாலும், சருமம் ஆரோக்கியமின்றி ஒருவித வறட்சியுடன் பொலிவிழந்து காணப்படும். எனவே எப்போதுமே நமது சருமத்தில் ஏற்படும் பிரச்சினைக்கு கெமிக்கல் கலந்த கிறீம்களின் மூலம் தீர்வு காண நினைக்காமல், நமது வீட்டுச் சமையலறையில் உள்ள பொருள்களைக் கொண்டே பெற முயலுங்கள். இதனால், சருமப் பிரச்சினை நீங்குவதோடு, சருமத்தின் ஆரோக்கியமும் மேம்படும். இதனை ஒரு மாதம் தொடர்ந்து பின்பற்றி வந்தால், உங்கள் சருமத்தில் நல்ல மாற்றத்தைக் காணலாம்.

**வாழைப்பழம்**
சருமத்தின் நிறத்தை அதிகரிக்க வாழைப்பழம் மிகவும் உதவியாக இருக்கும். அதுவும் வாழைப்பழம் முதுமையைத் தடுக்கும். அதற்கு வாழைப்பழத்தை மசித்து முகத்தில் தடவி 15-20 நிமிடம் ஊற வைத்து, குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். வேண்டுமானால் இறுதியில் ஐஸ் கட்டியால் முகத்தை மசாஜ் செய்யலாம். இதனால் சருமத்தில் அதிகப்படியான எண்ணெய் சுரப்பதைத் தடுக்கலாம்.

**தோடம்பழ ஜூஸ்**
அதனைக் கொண்டு சருமத்தைப் பராமரித்தால், சருமம் பாதிப்படைவதைத் தடுக் கலாம். அதுமட்டுமின்றி, தோடம்பழ ஜூஸ் சருமத்தின் நிறத்தை மேம்படுத்தவும் உதவும். அதற்கு தோடம்பழ ஜூஸ் 4 மேசைக்கரண்டி எடுத்து அத்துடன் 2 மேசைக்கரண்டி முல்தானி மெட்டி சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15-20 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும்.

**வெள்ளரிக்காய்**
1 மேசைக்கரண்டி வெள்ளரிக்காய்ச் சாற்றில் 2 கரண்டி தேன் கலந்து, முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்துக் கழுவலாம். அல்லது, வெள்ளரிக்காய் ஜூஸ், எலுமிச்சை ஜூஸ் மற்றும் ரோஸ் வாட்டரை ஒன்றாகக் கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்துக் கழுவவும் செய்யலாம். இவற்றின் மூலமும் சருமத்தின் நிறத்தை அதிகரிக்கலாம்.

**தயிர்**
தயிரைத் தினமும் முகத்தில் தடவி வருவதன் மூலமும் சருமத்தில் உள்ள இறந்த செல்களை முழுமையாக நீக்கி, சரும நிறத்தை மேம்படுத்தலாம். பொலிவை அதிகரிப்பதோடு, மென்மையையும் மேம்படுத்தும்.

Home Notifications Messages Search Twitter Tweet

உதயன்

Uthayan Print
@UthayanPrint

TWEETS 949 FOLLOWING 223 FOLLOWERS 973

What's happening?

Who to follow · Refresh · View all



**Mr.பாமரன்** @udaya_Jisnu · Sep 6
கோவிலுக்கு செருப்பு திருட வருபவனுக்கும் நல்ல செருப்பை தருவதில் இருக்கிறது கடவுளின் சாமர்த்தியம்

மட்டும் பார்த்திருந்தபோது தலைகோதாத பெருமர இருட்டில் வந்தமரும் பறவைபோல என் கவிதைக்கு பொருளானவள் நீ.

நோக்கிய நகர்வுகள் சலித்துப் போன இரவொன்றில் ஆழ்ந்த தூக்கத்தை அணைத்துக் கொள்வது தான் பெரும்பாடாகிவிடும்.

அழுதுவிட்டோம் நிறைய உறவுகளை இழந்து விட்டோம் இனியும் வேண்டாம் இழப்புகளும் கண்ணீரும்...!

#மதுவை ஒழிப்போம் மனிதனாய் வாழ்வோம்

ஓராயிரம் நட்சத்திரங்களில் ஒற்றை நட்சத்திரமோ/ விழும் எரிகல்லோ சிலவேளைகளில் நிலாவை விட வசீகரித்து விடுவது ஆகாய அதிசயம்!

**Gobinath** @Gobinath_SP · Jul 26
கடைசியாய் பிரிகையில் நம் இரு சோடி கண்களையும் மழை வந்து துடைத்துச் சென்றது! #மழை_நல்லது

**Naveen Kumar**
கேக்க ஆள் இல்லை என்பது ஒரு பருவத்தில் வரம், ஒரு பருவத்தில் சாபம்.

**St Vishnu விஷ்ணு** @Vishnu06Jaffna · Oct
வாய்ப்புகளை தவறவிட்டோமென்று

தெரியாமலே வாழ்ந்து வருவது தான் ஆகச்சிறந்த நிம்மதியான வாழ்க்கை!

**Reshzan Thayaparan** @Reshzankan · Oct 22
காதல் கடல் மாதிரி வெளியிலிருந்து பார்த்தால் வியப்பூட்டும், உள்ளே போனால் கடக்கவே நாக்குத் தள்ளும்

# வலைப்பக்கம்

**டீச்சர்:** (மக்கள் தொகை பற்றிய பாடம் நடத்தியபோது) இந்தியாவில் ஒவ்வொரு பத்து விநாடிக்கும் ஒரு பெண் ஒரு குழந்தை பெற்றெடுக்கிறாள்.
**சர்தார்:** (அவசரமாக எழுந்து நின்று) டீச்சர் உடனடியாக அந்தப் பெண்ணை நாம் கண்டுபிடித்து அதை தடுத்து நிறுத்த வேண்டும்.








"எதுக்காக கோர்ட்டுக்கு உங்க மனைவியை அழைச்சுட்டு வந்திருக்கீங்க.......?"

"வக்கீலை விட என் மனைவி நல்லா வாதாடுவா எஜமான், அதான்!"

"என்ன மன்னா...... என்றைக்குமே இல்லாத அளவுக்கு என்னை வரவேற்கிறீர்....?"

"உங்கள் கையுள், செய்யுள் எதுவுமே இல்லையே புலவரே....... அதனால்தான்!......





## தத்துவம் மச்சி தத்துவம்

மீந்துபோன இட்லியில் உப்புமா செய்யலாம், மீந்துபோன உப்புமாவில் இட்லி செய்ய முடியுமா?
- உணவுப் பற்றாக்குறை போக்க உபயோகமாய் யோசிப்போர் சங்கம்

## என்னைக் காப்பாத்துங்க டாக்டர்



பெண் ஒருத்தி டாக்டரைப் பார்க்க முகத்தில் காயத்துடன் சென்றாள்.
டாக்டர்:என்னமா முகத்துல இவ்ளோ அடிப்பட்டிருக்கு??
பெண்:என் கணவர் டெய்லிகுடிச்சிட்டு வந்து என்ன அடிக்கிறார் டாக்டர்.
காயத்துக்கு மருந்து போட்டுவிட்டு டாக்டர் சொன்னார்:
இனிமே உன் கணவன் குடிச்சிட்டு வந்தா வாய்ல்ல கொஞ்சம் தண்ணீரை ஊத்திக்கோ. முழுங்கிவிடாதே அவர் தூங்குற வரைக்கும் வாய்குள்ளே வச்சிரு.அடுத்த வாரம் என்னை வந்து பார்.
ஒரு வாரம் கழித்து மிகவும் ப்ரஷ்ஷாக வந்தாள்.
பெண்:நீங்க சொன்ன மாதிரியே வாய்க்குள்ள தண்ணிய வச்சு இருந்தேன் என் கணவர் என்னை அடிக்கவே இல்ல டாக்டர்!!!
டாக்டர்::நீங்க வாய திறக்காம இருந்தா எந்த பிரச்சனையும் வராது, அதுக்குதான் இந்த ஐடியா என்றார்.

ஒரு சர்தார்ஜி புகைப்படக்காரரை ஒரு சாவு வீட்டில் பத்து பேர் சேர்ந்து அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வழியாகச் சென்ற ஒருவர்
ஏங்க அவரைப் போட்டு அடிக்கறாங்க?
என்று மற்றொருவரைக் கேட்கிறார்.
பின்ன என்னாங்க? இறந்தவர் உடலைப் போட்டோ எடுக்கச் சொன்னால் ஸ்மைல் ப்ளீஸ் என்றால் என்ன செய்வார்களாம்?



சர்தார் பெருமையாக தன் நண்பரிடம் சொன்னார். என் தாத்தா சாகும் போது அமைதியாக எந்த சத்தமும் போடாமல் பஸ்சில் தூக்கத்திலிருக்கும்போது செத்தார். ஆனால் அவர் ஓட்டிக்கொண்டிருந்த பஸ் பயனிகள்தான் அலறிக் கொண்டே செத்தார்கள்



# நெருப்பை விழுங்கியவள்! 8

கலா. மகேஸ்வரன்

தொடர்கதை

அனித்தாவுடன் கூடப்படித்த சித்திரா அங்கு தான் ஆசிரியையாக இருந்தாள். அனித்தாவுக்கு அதுவே இரட்டிப்புச் சந்தோசமாயிருந்தது.

சித்திரா நல்ல வாயாடி. எதற்கும் துடுக்காகப் பதில் சொல்வாள். அது போலவே, சிந்தித்து ஐடியா கொடுப்பதிலும் கெட்டிக்காரி.

அம்மா இப்போதெல்லாம் நெடுகிலும் நச்சரிப்பதில்லை என்றாலும், இவள் நல்வாழ்வை நினைத்தே சதா ஏங்கிக்கொண்டிருப்பது இவளுக்கு ஏனோ விசனமாயிருந்தது.

இடையிடையே கேசவனின் பேச்சை எடுக்காமலும் விடுவதில்லை. இராத்திரிக்கூட சொன்னாள்

"பிள்ளை, கேசவன் முன்னைமாதிரி இல்லையாமடி. அவன் உன்னையே செய்ய வேணுமென்று தவமாய்த்தவம் இருக்கிறானாமடி. அண்ணன் ரொம்பக் கவலைப்பட்டார். நீ சம்மதிச்சால் அவைக்குச் சரி. நீ என்ன சொல்லுவியோ, ஏது செய்வியோ எனக்குத் தெரியாது. அதைப் பற்றியும் கொஞ்சம் யோசி... அவ்வளவு தான் பிள்ளை என்னாலை சொல்லேலும்!"

அந்த நினைவு வந்தபோது. அனித்தாவுக்கு சித்திரா விடமே அது பற்றிக் கதைக்க வேண்டும் போலிருந்தது.

"நீ கேசவனைப் பற்றி என்ன நினைக்கிறாய், சித்திரா?"

சித்திரா, நேராக அவள் முகத்தைக் கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்தாள். பின், பார்வையைத் தளர்த்தி, உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை அளந்தாள்.

அனித்தாவுக்கு ஏனோ கூச்சமாயிருந்தது.

"என்னடி, அப்படிப் பார்க்கிறாய்? ஒரு ஆம்பிள இரகசியமாய் ரசிச்சு ரசிச்சு அனுபவிக்கிற மாதிரி அப்பிடி என்ன ஒரு பார்வை? என்னில என்ன வழியுது?"

"எனக்கு நெற்றிப்பொட்டில் எதுவோ சுழல்வதுபோல் பட்டது. மனோவசியம் என்று இதைத்தான் சொல்கிறார்களோ, என்னவோ? ஆனால் மறுபடியும் அவள் தன் மனதில் உள்ளதையெல்லாம் என்னிடம் கொட்டிவிட வேண்டும் போலிருந்தது.

"அசடு வழியுது. ஆளப்பாரன்... உண்மையா நீ அவனில உள்ள விருப்பத்தால கேட்கிறியோ...? அல்லது.... கொஞ்சம் விருப்பம், கொஞ்சம் ஏக்கம், கொஞ்சம் சலனம், கொஞ்சம் வெறுப்பு, கொஞ்சம் பயம்.... அப்பிடி ஒரு கலவையாய் இருக்கிறியோ என்று அளந்து பார்த்தன்..... போதுமா?"

"அதென்ன, அப்பிடி அளந்து என்னில என்ன கண்டுபிடிச்சாய்...? எப்பிடிக் கண்டு பிடிப்பாய்?"

"இதெல்லாம் முடியாவிட்டால் நான் உளவியல் படிச்சதில, படிப்பிக்கிறதில என்ன பயன்? மனிசர அளவிடுறதும் இதில ஒரு பகுதிதான். இப்ப நீ என்ன மனசில நினைக்கிறாய் என்று சொல்லட்டுமா?" என்ற பீடிகையுடன் நிறுத்தினாள் சித்திரா.

"சொல்லு.... சொல்லு... பெரிய சைக்கோலஜி படிச்சுக் கிழிச்சுட்டாய் போ!" அனித்தா அலட்சியமாக புறக்கணித்தாள்.

"...ம்....ம்...இப்ப.... இந்த நிமிசத்தில ஏனடா இவளிடம் பேச்சக் கொடுத்து மாட்டிக் கொண்டோமே என்று முழிக்கிறாய்... ஆம் ஐ கரெக்ட்? ஸோ, உனக்கு அவனைப் பிடிச்சதெண்டுமில்ல, பிடிக்கயில்ல எண்டுமில்ல. அவனை மணந்தால் உன்னையும் கைகழுவி விடுவானோ என்று உன்மனசு சஞ்சலப்படுகுது. ஸோ, உன் அம்மாவுக்கும் பதில் சொல்லி ஆக வேணும். அது ஒரே பதிலாய் ஆணித்தரமாய் இருக்க வேணும். ஆக, இண்டைக்கே உனக்கு ஒரு நல்ல ஐடியா! என்னிடமிருந்து கிடைத்தாலும் சரிதான். ஒகே! இனி என் அபிப்பிராயத்தைச் சொல்லிறன், கேள். ஒரே வார்த்தையில் சொன்னால், அவனைச் செய்யாமலே விடுறதுதான் பெட்டர். பட், இது பற்றி என்றைக்காவது அவன் உன்னைச் சந்தித்து இந்த நாளயில உன்னோட மனம்விட்டுக் கதைக்க முயன்றானா? நெவர்.. அப்புறம் ஏன் அவனைப் பற்றி நினைக்க? அவனைப் பொறுத்தளவில ஒரு பொம்பிளை வேணும், அவ்வளவுதான். அது யாராயிருந்தாலும் அவனுக்குக் கவலையில்லை. ஸோ, ஒருவேளை அவன் விரும்புகிற அந்த மனைவி ஸ்தானத்துக்குரியவளாக உன்னையே அவன் நினைத்திருக்கலாம். ஆனால் காதல் உள்ளவரை ஒருத்தன் மனம் ஏக்கத்திலதான் தவிக்கும். கிடையாதபோது சந்தர்ப்பம் கூடிவராவிட்டால் மறக்கும். வாழக்கிடைச்சால் ஓ.கே. ஆனால் அதுக்குப் பிறகும் அப்பிடியே மனம் மாசுபடாமல் இருக்குமா எண்டதிலதான் சந்தேகம். என்னடீ, இவள் அளந்து கொட்டிறாளே என்று சலிக்கிறதாடி...?"

சற்று நேரம் நிறுத்திவிட்டு, என்னையே பார்வையால் துளைத்தாள்.

எனக்கு நெற்றிப்பொட்டில் எதுவோ சுழல்வதுபோல் பட்டது. மனோவசியம் என்று இதைத்தான் சொல்கிறார்களோ, என்னவோ? ஆனால் மறுபடியும் அவள் தன் மனதில் உள்ளதையெல்லாம் என்னிடம் கொட்டிவிட வேண்டும் போலிருந்தது.

அதனை அறிந்து கொண்டதுபோல், அவள் மீண்டும் தொடர்ந்தாள்.

"உன் மனநிலை எனக்குப் புரியுது அனித்தா. உங்களுக்கெல்லாம் தெரியாத எனக்கு மட்டுமே தெரிந்த சங்கதியொன்று இருக்கு. ஆதாரத்தோட நான் அதை நிரூபிக்கிறதென்றால், என்னோட ஒரு நாள் நீ மினக்கடத் தயாரா? அதுக்குப் பிறகு நீ உன்ர விருப்பப்படி உன்ர ஓண் டிஸிஸன எடுத்துக்கொள்ளலாம்....." "ஓ.கே...?" *(நெருப்பு உமிழும்)*



# சாவே உனக்கொரு நாள் வராதோ சாவு

கந்த பேரின்பம்
*காவலூர்க் கவிஞன்*

திரையுலகின் ராணி, ஆச்சி நடிப்பில் மகாராணி
ஆச்சி மனோரமா திரையில் ஆளுமையின் அவதாரம்
நடிப்பில் எல்லோரையும் சிரிக்க வைத்த ஆச்சிக்காக
நல்லுலகம் இப்போது அழுது கொண்டிருக்கிறது

பத்மசிறி, கலைமாமணி, சரித்திர நாயகி, அண்ணாவிருது
பத்துக்கு மேற்பட்ட விருதுகள் எங்கள் ஆச்சி புகழ் பாடும்
எங்கள் என்ற அடைமொழி எல்லோருக்கும் கிடைப்பதில்லை
எங்கள் ஆச்சி மனோரமாவுக்கு மட்டும் சொந்தமானது

மன்னார் குடியில் கோபி சந்தா, பள்ளத்தார் பாப்பாவாகி
அந்தமான் காதலியில் மனோரமாவாகப் பெருமை பெற்று
மாலையிட்ட மங்கையினால் மகிமை பெற்ற ஆச்சி
1,500 படங்களுக்கு மேல் நடித்து உலகசாதனை படைத்தவர்.

இந்தியாவின் ஐந்து முதலமைச்சர்களுடன் நடித்த பெருமை
எந்த நடிகையாலும் சாதிக்க முடியாத புதுமை
இதுவே மனோரமா ஆச்சியின் நடிப்பின் மகிமை
ஆச்சி மனோரமா ரசிகர்கள் மனதுக்கே என்றும் உரிமை


பொம்பிளை சிவாஜி என்று புகழ்பெற்ற ஆச்சி
எந்த வேடமானாலும் சந்தமுறச் செய்தவர்
வாழ்வதற்காக நடிக்க வந்து நடிப்பே வாழ்க்கையானவர்
நல்லவர், வல்லவர், எல்லோரையும் கவர்ந்தவர்.

குணச்சித்திர வேடம்,வராஸ்யம்,பாட்டு,நடிப்பு, ஸ்டண்ட்
பல்துறையில் வெற்றி பெற்றதும் பரிணமித்த ஆச்சி

முன்னொருவரில்லைப் பின்னொருவரில்லை மனோரமா
ஆச்சியைப்போல் நடிக்க இன்னொருவரில்லை இனி

திரையுலகின் நடிப்பில் சகாப்தம், நற்பிறப்பொன்றை
குற்றம் குறை காணாது மற்றவரை மதித்த தாயைச்
சற்றேனும் இரக்கமின்றிக் கவர்ந்து சென்றாய்
சாவே உனக்கொரு நாள் வராதோ சாவு





# திருமண வாழ்வை கெடுக்கும் விடயங்கள்

இணையவள்

திருமண வாழ்வைக் கெடுக்கும் குணங்கள் புகைப்பிடித்தலுக்கு சமமானவை. ஏனெனில் எப்படிப் புகைப் பிடிப்பதால், உடல் மெதுவாக வும் அமைதியாகவும் பாதிக்கப்படுகிறதோ, அதேபோல் திருமணத்துக்குப் பின்னர் ஒருசில குணங்களை வெளிக் கொணர்வதால், திருமண வாழ்வும் விவாகரத்தில் முடிகிறது. தற்போது விவாகரத்தானது எளிதில் ஏற்படுகிறது. இதற்கு காரணம் ஒருவரின் குணங்கள் தான். அத்தகைய குணங்கள் இன்றைய மக்களது மனதில் அதிகம் உள்ளன.

எனவே மண வாழ்வைக் கெடுக்கும் குணங்களை முற்றிலும் தவிர்த்தால், நிச்சயம் திருமணத்துக்குப் பின்னர் நல்ல வாழ்க்கையை வாழலாம். நிறைய மக்கள் விவாகரத்து ஏற்படுவதற்குக் காரணம் நாமில்லை, மற்றவர்கள் தான் என்று கருதுகின்றனர். உண்மையில் விவாகரத்து ஏற்படுவதற்கு காரணமான குணங்கள் ஒருவரது மனதில் தான் உள்ளன. அது தான் அளவுக்கு அதிகமாக உணர்ச்சிவசப்படுதல், பேசும் வார்த்தைகள், கோபம், அகங்காரம் போன்றவை.

இத்தகைய குணங்கள் தம்பதியருக்குள் இருந்தால், நிச்சயம் அந்த மண வாழ்வானது இறுதி நிலையை அடையும்.

### அகங்காரம்

எப்போதுமே தம்பதியருக்குள் தான் என்ற அகங்காரம் இருக்கக் கூடாது. இது தான் மண வாழ்வுக்கு முதல் எதிரி. முதலில் அனைவருமே திருமணத்தில் புரிந்துணர்வுடன் இருவருமே வெற்றி பெற வேண்டும் என்று நினைக்க வேண்டும்.

### சந்தேகம்

சந்தேகம் என்பது ஒரு நோய். அந்த நோய் ஒருமுறை வந்தால், அதனைக் குணப்படுத்த முடியாது. எனவே சந்தேகம் என்ற நோயை மனதில் வராமல் கவனமாக இருக்க வேண்டும். அதற்கு முதலில் துணை மீது நம்பிக்கை வேண்டும்.

### பேச்சு இடைவெளி

தம்பதிகள் இருவரும் எப்போதும் மனம் விட்டு பேச வேண்டும். அதைவிட்டு எப்போதும் வீட்டில் அமைதியுடன், அவரவர் வேலையை செய்து கொண்டிருந்தால், அதுவே இருவரின் மண வாழ்வுக்கு முற்றுபுள்ளி வைத்துவிடும்.

### நேரம்

இன்றைய காலத்தில் தம்பதிகள் இருவரும் வேலைக்குச் செல்ல வேண்டியிருப்பதால், இருவராலும் சரியாகப் பார்த்துப் பேச நேரம் கிடைக்காமல் போகிறது. இவ்வாறு இருவரும் சந்திக்க முடியாத அளவு நேரம் கிடைக்காமல் போனால், பின்னர் சந்தோஷமான மணவாழ்வுக்கே ஆபத்து ஏற்படும். எனவே எப்படிப்பட்ட வேலையாக இருந்தாலும், துணை யுடன் சிறிது நேரம் செலவழிக்க வேண்டும்.

### விமர்சனம்

இருவருக்கும் இடையில் ஏதாவது ஒரு பிரச்சினை வந்தால், அதை அப்பொழுதே பேசிச் சரிசெய்து கொள்ள வேண்டும். அதைவிட்டு, அதனைப் பற்றி அடிக்கடி பேசிக்கொண்டிருந்தால், அதுவே துணைக்கு வெறுப்பை ஏற்படுத்தி, பிரிவை உண்டாக்கும்.

### கெட்ட நடத்தை

துணை ஏதேனும் தவறு செய்து விட்டால், அப்போது அதனால் ஏற்படும் கோபத்தை அவரிடம் காண்பிக்கும் போது, அவர் மனமானது புண்படும்படியாக இல்லாதவாறு நடக்க வேண்டும். அதைவிட்டு, அவர் மனம் புண்படும் படியாகவோ அல்லது அசிங்கப்படுத்தும் படியாகவோ நடந்தால், பின்னர் அது கெட்ட விளைவை உண்டாக்கும். மேலும் கோபத்தால் பேசும் பேச்சைப் பார்த்து பேச வேண்டும். அதைவிட்டு வார்த்தையை ஒரு முறை விட்டு விட்டால், பின்னர் அதனால் ஏற்பட்ட காயத்தை அகற்ற முடியாது. ஆகவே இத்தகைய குணத்தை அறவே தவிர்க்க வேண்டும்

### குடும்பப் பிரச்சினை

இருவருக்குள் ஏதேனும் பிரச்சினை என்றால் அந்தப் பிரச்சினையில் மூன்றாம் நபரை குறுக்கிட வைக்க வேண்டாம். ஏனெனில் அவ்வாறு குறுக்கிட வைத்தால், சிறு பிரச்சினை கூட பெரிதாகிவிடும். பின் அதுவே விவாகரத்து வரை முடியும். ஆகவே எதுவாக இருந்தாலும், தம்பதியர்களே பேசி முடிக்க வேண்டும்.

### கலாசாரப் பிரச்சினை

சிலர் காதல் திருமணம் செய்து கொள்வார்கள். அவ்வாறு காதல் திருமணம் செய்யும் போது, வேறு மதத்தினரையோ அல்லது நாட்டினரையோ மணம் முடித்துக் கொண்டால், அப்போது சில நேரங்களில கலாசார பிரச்சினை ஏற்படும். எனவே இவ்வாறான திருமணம் செய்து கொண்டவர்கள், திருமணத்துக்கு முன்பே ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டால், எந்த பிரச்சினையும் இருக்காது. இது ஒருவரது மனம் மற்றும் புரிதலை பொறுத்தது. ஆகவே அதற்கேற்றாற் போல் நடக்க வேண்டும்.

### கோபம்

அலுவலகத்தை விட்டு வெளியே வந்ததும், அலுவலகத்தில் ஏற்பட்ட பிரச்சினையால் உண்டான கோபத்தை வீட்டில் துணையிடம் வெளிப்படுத்தக் கூடாது. ஒருசில நேரங்களில் துணை நிச்சயம் புரிந்து கொண்டு நடப்பார்கள். ஆனால் அதுவே தொடர்ந்தால், பின் பிரிவைச் சந்திக்க நேரிடும்.



## எழுந்திடு பெண்ணே! எழுந்திடு!

உன் இமைக் கதவுகளை
இழுத்து மூடாதே
உன் இதயமது இருண்டுவிடும்
உன் பஞ்சுமெத்தையிலே முட்கள்
பரந்து கிடக்கட்டும்
உன் இருக்கையிலே இரும்பு ஆணிகள்
நிமிர்ந்து நிற்கட்டும்
தூங்கிவிடாதே தூரிகை கொண்டு
உன் வாழ்வோவியம் தீட்டு
பாதையிலே ரோஜாக்கள் மட்டும்
விரிந்து கிடப்பதில்லை
கல்லும் மண்ணும் விதந்து
கிடக்கும் பூமியிலே
வீர நடை போட்டு நிமிர்ந்து செல்
உன் இரத்தச்சுவடுகள் இரத்த
சரித்திரம் பேசட்டும்
பூமியைச் சுருட்டி எடுத்து உருட்டி
விளையாடு
நச்சுப்பாம்புகள் அதில்
நசுக்கப்படட்டும்
மறைந்த உண்மைகள் விஸ்வரூபம்
எடுக்கட்டும்
பெண்ணே! உன் மானிடப்பிறப்பு
மாய்ந்துவிடுவதற்காகவல்ல
காலத்தை வென்று காவியம்
படைக்கவே.....



## ரசிக்கலாம்

# நானும் ROWDY தான்

காவல் துறை ஆய்வாளர் மீனா குமாரிக்கு (ராதிகா) மகன் பாண்டியையும் (விஜய் சேதுபதி) காக்கிச் சட்டையில் பார்க்க ஆசை. மகனோ, ரவுடியாக வேண்டும் என்னும் உயர்ந்த லட்சியம் கொண்டவர். நண்பர்களுடன் சேர்ந்து நானும் ரவுடிதான் என்று சொல்லித் திரிகிறார். செவித் திறன் குறைபாடுடைய காதம்பரியை (நயன் தாரா) பார்த்ததும் பாண்டிக்குக் காதல். அந்தக் காதலை ஏற்க காதம்பரி ஒரு நிபந்தனை விதிக்கிறார். தாதா கிள்ளி வளவனை (பார்த்திபன்) கொல்லவேண்டும் என்பதுதான் அது. ரவுடிக்கான எந்தத் தன்மையும் இல்லாத விஜய் சேதுபதி ரவுடி ஆனாரா, இல்லையா, நயன்தாராவின் நிபந்தனையை ஏற்று வெற்றி பெற்றாரா, இல்லையா என்பதுதான் கதை. பாவனைகளிலேயே வாழும் மனிதர்களைப் பற்றிய பகிடிதான் படத்தின் அடிநாதம். வாழ்வின் அபத்தத்தை அங்கதத்தின் மூலம் வெளிப்படுத்தும் நகைச்சுவையை திறமையாகப் பயன்படுத்தியிருக்கிறார் இயக்குநர் விக்னேஷ் சிவன். விஜய் சேதுபதி குழு மட்டுமல்லாமல் அவர்களை மிரட்டும் அசல் ரவுடிகளும் கேலிப்பொருளாக்கப்படுவது சிறந்த உதாரணம். பெரிய தாதாக்களாகக் காட்டப்படும் பார்த்திபன், மன்சூர் அலிகானும் விலக்கு அல்ல. ஆனால் இந்த தாதாக்கள் இடையே நடக்கும் போட்டி, பொறாமையில் தெறிக்கும் வன்முறை வெறியையும் பதிவுசெய்திருக்கிறார். அங்கதக் காட்சிகளுக்கு நடுவே நயன்தாராவின் சோகத்தைச் சற்றும் மலினப்படுத்தாமல் கையாண்டிருப்பதும் பாராட்டத்தக்கது.

தன் மகனை போலீஸாக்க ராதிகா செய்யும் முயற்சிகள், ஆனந்தராஜ் கோஷ்டி - விஜய் சேதுபதி கோஷ்டியை எதிர்கொள்ளும் காட்சி, இந்த இரண்டு கோஷ்டிகளும் சேர்ந்து போடும் திட்டங்கள் ஆகியவை வாய்விட்டுச் சிரிக்க வைக்கின்றன. செவித் திறன் குறைந்தவராக நயன் தாராவைக் காட்டி னாலும் அதில் கழிவிரக்கத்தை ஏற்றி விடாமல் இயல்பாகக் காட்சிப் படுத்தியுள்ளார் இயக்குநர். நயன்தாராவை ஒரு ரவுடி துன்புறுத்தும் காட்சியில் விஜய் சேதுபதி பாத்திரத்தின் தன்மை மாறுகிறது.

சாது நாயகனை ஒரே காட்சியில் வீரத் திருமகனாக மாற்றவே இதுபோன்ற காட்சிகள் பொதுவாகப் பயன்படுத்தப்படும். விக்னேஷ் சிவன் இதிலும் வித்தியாசம் காட்டியிருக்கிறார். காதலுக்காக நயன்தாரா நிபந்தனை விதிக்கும் காட்சியும் நிபந்தனையை விஜய் சேதுபதி ஏற்றுக் கொள்ளும் காட்சியும் நன்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. முத்தம் கொடுக்க வரும் காதலனிடம், காதலி நிபந்தனை விதிக்கும் காட்சியில் உதடுகளுக்கு மட்டும் குளோஸப் வைப்பதன் மூலம், வசனத்தின் வீரியத்தைத் துல்லியமாகக் காட்டிவிடுகிறார் இயக்குநர்.

நகைச்சுவை தாராளமாக இருந்தும் முதல் பாதி சற்று மந்தமாகவே நகருகிறது. பார்த்திபனைக் கொல்ல எந்த ஏற்பாடும் இல்லாமல் நிராயுதபாணியாக நயன்தாரா வரும் காட்சியில் வலிந்து திணிக்கப்பட்ட இரட்டை அர்த்த வசனங்கள், எல்லாம் படத்தின் பலவீனம்.

விஜய் சேதுபதி துறுதுறுவென இருக்கிறார். இதுவரை கிராமத்து இளைஞனாக, லோக்கல் பையனாக வந்தவருக்கு நகரத்து நவீன இளைஞன் வேடம். அளவான வசனங்கள், அழகான மேக்கப் என பாத்திரத்துக்கு கச்சித மாகப் பொருந்தி விடுகிறார். வசன உச்சரிப்பிலும் தேறியிருக்கிறார். ரவுடியாக இல்லாவிட்டாலும் ரவுடி போல பில்டப் கொடுப்பது, ரவுடியாவதற்கு நான் கடவுள் ராஜேந்திரனிடம் பயிற்சி எடுப்பது, நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு தாதா அளவுக்குத் திட்டம் போடுவது, காதலி நயன்தாராவுக்காக உருகி மருகுவது என அசத்தியிருக்கிறார். தன் பாத்திரத்தின் அடியோட்டமான அப்பாவித்தனத்தை நன்கு புரிந்து கொண்டு வெளிப்படுத்தியிருக்கிறார்.

வயது ஆகஆக நயன்தாராவுக்கு அழகு கூடிக்கொண்டே போகிறது. பாத்திரத்தில் அப்படியே ஒன்றிவிடுகிறார். அப்பா உயிரோடு இருப்பதாக நினைத் துக் கொண்டிருக்கும்போது, அவர் இறந்த விசயம் தெரியவருகிறது. அடக்க முடியாத அழுகையையும், நம்பிக்கை பொய்த்துப்போன விரக்தியையும் ஒருசேர வெளிப்படுத்தும் நயன்தாரா, நடிப்பில் சிக்ஸர் விளாசிவிடுகிறார். முதல்முறையாக சொந்தக் குரலில் பேசி நடித்திருப்பதும் நன்றாக உள்ளது.

பார்த்திபன் முழு நீள வில்லனாக வந்தாலும் அவருக்கே உரிய நக்கல், நையாண்டியுடன் கலக்குகிறார். ராதிகா, ஆனந்தராஜ், மன்சூர் அலிகான், ஆர்ஜே பாலாஜி என ஒவ்வொரு பாத்திரமும் கச்சிதம். அவர்களும் தம் பங்கை நன்றாகவே செய்திருக்கிறார்கள். அனிரூத் இசையில் கண்ணான கண்ணே, வரவா வரவா பாடல்கள் கேட்கும்படி உள்ளன.

நயன்தாராவை மட்டுமல்லாமல் புதுச்சேரி, வடசென்னை கடலோரப் பகுதிகளையும் அழகாகக் காட்டியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் ஜார்ஜ் வில்லியம்ஸ். அது ஏன் அப்படி? இது ஏன் இப்படி? என்று காரண காரியங்களையும் சாத்தியங்களையும் யோசிக்காமல் பார்க்கும்போது ரசிக்க வைக்கிறான் ரவுடி!

# நீ மாற்றம் கொள்

மல்லாவிக் கஜன்



அன்று
புண்பட்டுப்போன நாம்
இன்று பண்பாட்டுப் போதையின்
கண்பட்டுப் போனோம்
காதலும் காமமும்
சந்தைக் கடைகளில்
சாதலும் சோகமும்
வாசற்படிகளில்
கலியுக காலத்தின்
வலிகளா இவை?
இல்லை
விலைபோன எங்களின்
பிழைகளா இவை?

ஊரூராய் அலைந்து
உறவுகளை இழந்து
வீதியோர நாய்களாய்
நாதியற்றுக் கிடக்கையிலும்
நலமுடனிருந்த பண்பாடு
இன்றெங்கு தொலைந்திற்று?
கண்ணுக்கு மைபூசி
காதுக்கு கைபேசி
பலருடன் கதைபேசி
கழியும் வாழ்வதை
நீ யோசி!

பருவங்கள் ஏழும் - ஒரே
உருவங்களாச்சு
பல்லுப்போன பாட்டியும்
சுடிதாரிலும் சூட்டிபப்பிலும்.....
சேலை கட்டிப்போகும் பெண்ணைச்
சாலையிலே காணவில்லை
பிணக்குகளை இணக்காது
சுணக்கமின்றி வாங்குகிறாய்
விவாகரத்து

சட்டங்கள் செய்யவும்
பட்டங்கள் ஆளவும்
புதுமைப் பெண்ணைக் கனவு கண்டான்
புரட்சிக் கவிஞன்
ஐயோ! பாவம்!!
அவனின்று இருந்திருந்தால்
அவன் நிலை என்னோ?
காமங்களும் கற்பழிப்புக்களும்
வேடம் கொண்டதின்று
பெண்ணினமே விழித்துக்கொள்!
உன் நிலையை மாற்றிக்கொள்!
தானாய் மாறிடும்
பண்பாட்டைப் பார்த்துக்கொள்!

# தந்தை செல்வாவின் சரணாகதியே தமிழர்களைக் காப்பாற்றும்

■ சாம் ரமேஸ்குமார்

மகாபாரதம் எனும் இதிகாசத்தில் வரும் பாண்டவர்களின் மனைவியாகிய பாஞ்சாலி, கௌரவர் சபையின் நடுவே நிறுத்தப்பட்டு கௌரவர்களால் மானபங்கப்படுத்தப்பட்டுத் துகிலுரியப்பட்ட பொழுதில், தன் மானத்தைக் காப்பதற்காக தன் இருகரம் கொண்டு கடும் பிரயத்தனத்தோடு கௌரவர்களை எதிர்த்துப் பேராடினாள். இறுதியில் பாஞ்சாலியால் இயலாமல்போகவே அவள் தன் கடவுளாகிய கிருஷ்ணரை நோக்கித் தன் இருகரங்களையும் உயர்த்தித் தன்னைக் காப்பாற்றுமாறு மன்றாடினாள். முடிவில் கிருஷ்ணரால் பாஞ்சாலி காப்பாற்றப்பட்டாள். இது பாஞ்சாலியின் முழுமையான சரணாகதி ஆகும்.

அதைப்போன்றே ஈழத்துக் காந்தி என வர்ணிக்கப்படும் தந்தை செல்வநாயகமும் ஈழத்தமிழர்களுடைய நிரந்தரத் தீர்வுக்காக தென்னிலங்கைப் பேரினவாத சக்திகளுடன் தன் வாழ்நாள் முழுவதும் அகிம்சை வழியில் எதிர்த்துப் போராடினார். அது அவரால் முடியாமல் போகவே இறுதியில் தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வநாயகம் கடவுளிடம் சரணாகதி அடைந்தார்.

இங்கு நாம் கவனிக்கவேண்டியது பாஞ்சாலியின் சரணாகதியும் தந்தை செல்வாவின் சரணாகதியும் ஒன்றேயாகும். ஆனால் பாஞ்சாலி பாரதத்தில் வெற்றி பெற்றுவிட்டாள். தமிழர்களாகிய நாம் இன்னும் வடக்கு – கிழக்கு தாயக பூமியில் ஒரு நிரந்தர அரசியல் தீர்வைத்தானும் வெற்றியாகப் பெறவில்லை.

ஏனெனில் தந்தை செல்வாவின் கடவுள் சரணாகதித் தத்துவத்தை நாம் ஏற்காமல் எங்கெங்கெல்லாமோ சுற்றித் திரிந்து அயல்நாடான இந்தியாவையும் நம்பி ஏமாந்து, எவ்வளவோ உயிரிழப்புக்களையும் உடைமைகளையும் இழந்து கடைசியில் தந்தை செல்வா தொடங்கிய புள்ளியிலேயே மீண்டும் வந்து நிற்கின்றோம். காரணம், கடவுள் மீது எமக்கு சிறு நம்பிக்கைதானும் ஏற்படாததே! இத்தனை இழப்புகளுக்குப் பின்பும் நாம் ஒருபோதும் குரோதம், அகங்காரம் கொள்ளாது கடவுள் மீது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவோம்.

2009ஆம் ஆண்டு மே 19ஆம் திகதியுடன் துப்பாக்கி வேட்டுக்களும், குண்டுச் சத்தங்களும், வன்முறைகளும் நிரந்தரமாய் ஓய்ந்து மௌனித்து விட்டன. அந்த மௌனம் தேச ஆன்மாவுடன் கலந்து ஆழ்நிலை மௌனமாக மாறிவிட்டது. அதிலிருந்து வன்முறை பிறக்காது. நிச்சயம் ஆன்மிகத் தாகம்தான் பிறக்கும். அதுவே தந்தை செல்வாவின் சரணாகதித் தத்துவத்துக்கு எம்மை அழைத்துச் செல்லும். அதனால் தேசத்தின் மௌனம் மீது அமர்ந்து இறைவனை நோக்கி உங்கள் அக உலகத்துக்குள் தியானம் செய்யுங்கள் எம் இளந்தலை முறையினரே. போரால் கொல்லப்பட்ட மக்களின் ஆன்மா முத்தியடையவும் எமக்கான ஒரு நிரந்தரத் தீர்வை நிலைநாட்டவும் மூவின மக்களும் ஒற்றுமையுடன் ஒன்றுகூடி வாழ்வதற்கும் தியாக உணர்வுடன் இறைவனை நாடி நில்லுங்கள்.

கடுகுப் பொட்டலமானது சிதறிவிட்டால் அதை ஒன்றாக்குவது மிகக் கடினமான வேலை என்கிறார் சுவாமி ராமகிருஷ்ண பரமஹம்சர். அதைப்போலவே எம் இளந்தலை முறையினரின் மனஎண்ணங்களும் பேரினவாதத்தின் சதியால் நிலை தடுமாறி போதைப் பொருள் சமூகச் சீரழிவு எனும் பண்பாட்டுக்குள் பிரவேசித்து விட்டால் மீண்டும் அந்த எண்ணங்களில் இருந்து இளந்தலை முறையினரின் மனதை ஒன்றிணைப்பது கடுகுப்பொட்டலத்தை விடக் கடினமானதே. அதனால் இப்போதிலிருந்தே மன எண்ணங்களை ஒன்றிணைக்கப் பாடுபடுங்கள். அந்த மனவொரு நிலையை ஆயுதமாக வைத்துத்தான் நாம் கடவுளிடம் இருந்து எம் தேசத்துக்கு ஒரு சுயமான வாழ்வைப் பெற்றுக்கொடுக்க முடியும். காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளுங்கள். தேச நலனுக்காகவே கடவுளிடம் சரணாகதி ஆகுங்கள். இல்லையெனில் நாம் எதிர்காலத்தில் வேதனையைத்தான் சொந்தமாக்கிக் கொள்ள முடியும்.



இன்று நல்லூர்க் கந்தவேலை எம் இளந்தலை முறையினரும் சிங்கள சகோதரர்களும் ஒன்றிணைந்து சகல குரோதங்களையும் மறந்து தரிசிக்கும் நிலை உருவாகிவிட்டது. இதையே பாலமாக வைத்து இரு இனங்களுக்கு இடையிலும் பரஸ்பர நம்பிக்கையை உண்டாக்கி தந்தை செல்வாவின் சரணாகதித் தத்துவத்தில் நிலைத்து நின்று எம் அரசியல் தீர்வை கடவுள் மூலமாக நாமே எழுதி எமக்கோர் விதி செய்வோம். வாருங்கள் இளந்தலை முறையினரே!

# வழி மாறும் விதிகள்

எண்ணத்தில் தோன்றி
எழுத்தாய்
வருவதெல்லாம் ஒரு
பாட்டுமில்லை
பல வண்ணங்கள் சேர்ந்து
வரைவதெல்லாம்
ஒருபடமுமில்லை

நெல்லுடைத்துச்
சமைப்பதெல்லாம்
ஒரு சோறுமில்லை கருங்
கல்லுடைத்து
வடிப்பதெல்லாம்
ஒரு சிலையுமில்லை

பிறக்கும் குழந்தையெல்லாம்
பேர்சொல்லி வாழ்வதில்லை
சிறகிருக்கும்
பறவையெல்லாம்
பறந்து சென்று சேர்வதில்லை



அடிக்கும் அலைகளெல்லாம்
கரை வந்து சேர்வதில்லை
பூக்கும் மலர்களெல்லாம்
பூவிழிகள் பார்ப்பதில்லை

வீசும் காற்றெல்லாம்
தென்றலாய் குளிர்வதில்லை
காசும் பணமும் கட்டையில்
வந்து சேர்வதில்லை

ஓடும் நதிகளெல்லாம்
கடல் சென்று சேர்வதில்லை
கட்டும் வீடெல்லாம்
கல்வீடாய் இருப்பதில்லை

விழுகின்ற இலைகளெல்லாம்
கிளை சென்று சேர்வதில்லை
காய்க்கும் காய்களெல்லாம்
கனிகளாய் மாறுவதில்லை

உதிக்கும் சூரியனும்
ஓய்வொன்று எடுப்பதில்லை
சுற்றும் பூமியும்
செல்லும் வழி மாறுவதில்லை

மண் விழும் நீரெல்லாம்
வேர் சென்று சேர்வதில்லை
விதைக்கும் விதை எல்லாம்
விண்பார்த்து எழுவதில்லை

பெண் பார்த்து செய்வதெல்லா
பெருங்குலமாய் வளர்வதில்லை
கண்பார்த்துக் கற்பதெல்லாம்
தமிழ்மொழிபோல்
இனிப்பதில்லை

குட்டிநகர் பாவரன்
வவுனியா

# மீண்டும் கருணா அரசியல்!

வந்தியத்தேவர்



கருணா அம்மான் அதாவது விநாயகமூர்த்தி முரளிதரன் தமிழினத்துக்கும் விடுதலைப்புலிகளின் அமைப்புக்கும் இழைத்த துரோகத்தின் பயன்களை இப்போது அனுபவிக்கத் தொடங்கிவிட்டார். புலிகள் அமைப்பும் அதன் தலைமைகளும் அவருக்கு வழங்கிய முக்கியத்துவத்தை மதிக்காது பிரதேசவாதம் பேசி, அந்த அமைப்பில் இருந்து விலகிக் கொண்டு தமிழினத்தையே காட்டிக் கொடுத்து அதன் வீழ்ச்சிக்குக் காரணமாக விளங்கியவர் கருணா அம்மான்.

முதலில் ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரத்துக்குப் பலியாகி பின்னர் மகிந்தவின் செல்லப்பிள்ளையாக, கோத்தபாயவின் கைக்கூலியாக மாறி தமிழின விரோதியாகச் செயற்பட்டவர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து தனது துரோகத்தனத்துக்குப் பரிசாக புனர்வாழ்வு பிரதி அமைச்சர் என்ற பதவியையும் பெற்றுக் கொண்டவர். கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் மகிந்தவின் அரவணைப்பில் குஷியாக வாழவேண்டும் என்ற கனவில் திளைத்தவர். காக்கை வன்னியர்களையும் கைக்கூலிகளையும் எப்படி வழிப்படுத்தலாம் என்பதில் கைதேர்ந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, கருணாவைத் தனது தேவைகளுக்குப் பயன்படுத்திய பின்னர் தள்ளிக் கெடுத்துவிட்டார். அதாவது அமைச்சர் பதவி வழங்கி அணைத்துக் கொண்டவரான மகிந்த, தேசியப்பட்டியலூடாக பதவி தருவதாகக் கூறி பொதுத்தேர்தலில் கருணா கலந்து கொள்ளாமல் பார்த்துக்கொண்டார். பின்னர் மைத்திரிபால தேசியப்பட்டியலிலும் கருணாவுக்கு இடம் வழங்காது தூக்கித் தூர வீசிவிட்டார்.

புலிகளை விட்டுவிலகிய பின் அவர்கள் குறித்த முக்கிய தகவல்களை தனது சிங்கள எஜமானர்களிடம் தெரிவிக்க வேண்டும் என்ற அவாவுடன் ஒரு பெட்டிநிறைந்த ஆவணப்படங்களை அடைத்துத் தூக்கமுடியாமல் தூக்கி வந்தவர் கருணா என்று அவரை அழைத்துச் சென்ற அலிசாகிர் மௌலான கூறியிருந்தார். பின்னாளில் சிங் களவர்கள் அந்தக் கருணாவையே தூக்கி வீசி விட்டனர். இதுதான் இப்போது ரணில், மகிந்த ஆகியோர் மீது அடக்க முடியாத ஆத்திரத்தையும் கோபத்தையும் கருணாவுக்கு ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகள் முதற்கொண்டு மகிந்தவுடன் கைகோர்த்த காலம் வரை பலரைப் பலியெடுத்து வசதி வாய்ப்புக்க ளுடன் சொகுசாகவாழ்ந்த கருணா, கைவிடப்பட்டுக் கந்தலாகிப் போனதில் மீண்டும் ஒரு சொகுசு வாழ்க்கையைத் தேட முயற்சிக்கிறார்போல் உள்ளது. மீண்டும் தமிழினத்தின் ஒரு தலைவராக வருவதற்கான நப்பாசை அவருக்கு இருப்பதாகவும் தெரிகின்றது. அதற்கு வாய்ப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தேர்ந்தெடுத்துள்ளார்போலும்.

வடக்கின் தலைமை தேவையில்லை என ஒரு சமயம் உதறித்தள்ளிய கருணாவுக்கு இப்போது வடக்கின் தலைமை கரும்பாகி விட்டது போலும். தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து கொள்வதில் அவருக்கு ஆசை பிறந்துள்ளதாக வெளியாகும் தகவல்களை வேறு எப்படிக் கொள்வது?

இனிமேல் சிங்களக் கட்சிகளுடன் இணைவதற்கான வாய்ப்புக்கள் தனக்குக் கிடைக்காது என்பதாலும் வேறு வழியின்றியும் தமிழர் விடுதலைக்கூட்டணியை அவர் நாட நினைத்துமிருக்கலாம். என்ன பறிபோனாலும் மீண்டும் ஏதாவது ஒரு பதவியில் தொற்றிக்கொண்டு எஞ்சிய நாள்களை ஓட்டவேண்டும் என அவரும் முடிவு செய்துள்ளார் போலும்.

ஜனாதிபதியாக இருந்த மகிந்த ஏனைய முன்னாள் ஜனாதிபதிகளைப் போலன்றி வாழ்நாள் முழுவதும் அரசியலில் இருந்து ஆண்டனுபவிக்க வேண்டும் என்று விரும்பி இப்போது நாடாளுமன்ற உறுப்பினராகிக்கொண்டார். பன்றியோடு கூடிய கன்று போல விநாயகமூர்த்தி முரளிதரன் என்கிற கருணாவும் அந்தப் பாதையில் தன்னை மாற்றிக்கொண்டு விட்டார் போலுள்ளது.

ஓர் அமைச்சராகப் பதவிவகித்த கருணாவும் உள்ளூராட்சித் தேர்தலூடாக ஒரு பிரதேசசபை உறுப்பினராகப் பதவி பெறவேண்டும் எனத் தீர்மானித்துள்ளார் போலும். அதற்காக அவர் தேர்ந்தெடுத்த கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணி. இந்தக் கட்சி ஒரு பாரம்பரியத்தைக் கொண்டிருந்தது. தமிழ்த் தலைமைகள் இணைந்து அரசியல் நிலைமைகளுக்குக்கேற்ப எடுத்த தீர்மானமாகவே தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது. காலத்துக்கேற்ப கட்சியையும் தன்னையும் தகவமைத்துக்கொள்ள மறுத்ததால் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டு நிற்கின்றது. என்றாலும் இன்றும் வீ.ஆனந்தசங்கரியின் தலைமையில் இயங்குகின்றது.

போர் காரணமாகக் கூட்டணியில் ஏற்பட்ட பிளவுகளில் இருந்து மீண்டும் அதனைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருப்பதாகவும் உள்ளூராட்சித் தேர்தலில் அதனுடன் இணைந்துதான் போட்டியிடப் போகிறார் எனவும் கருணா கூறியுள்ளார். இதனூடாக மகிந்தவுக்குத் தான் சிறிதும் சளைத்தவரல்லர் என்பதை வலியுறுத்துவதே கருணாவின் எண்ணம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரிக்கு கருணாவின் வரவு யானைப் பலம்போலும். அம்மானை வரவேற்கக் காத்திருப்பவராக ஆனந்தசங்கரியும் உள்ளார். வடக்கின் தலைமையைக் கருணா ஏற்றிருப்பது இனியில்லாத பெரிய விடயம் என்பது போல் மகிழ்ச்சியில் ஊறியுள்ளார்.

தனது நலன் சார்ந்த விடயங்களுக்காக ஓர் அமைப்பின், ஓர் இனத்தின் அழிவுக்கு வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவர் மீண்டும் தமிழினத்தின் தலைவராக முயற்சிப்பது தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியாயினும் சரி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரனாயினும் சரி விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு ஆராத்தி எடுக்கலாம்.. ஆனால், மீண்டும் ரணில் விக்கிரமசிங்க அல்லது மகிந்த ஜாடையாகக் கண்ணசைத்தால் அவர்களிடம் சரணடையமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இந்தச் சந்தேகம் இருக்கும்வரை மக்கள் அவரை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

# கடிதமதைச் சுமந்த காலணி

கே. எஸ். சிவஞானராஜா

1500ஆம் ஆண்டில், பார்த்தலோமியே டயஸும் சகமாலு மிகளும் புதிய புதிய நாடுகளைக் கண்டுபிடிப்பதற்காகப் பரந்த ஆழமான கடலினூடாக பயணம் செய்தனர். எதிர்பாராத விதமான அவர்கள் பயணம் செய்த கப்பல் கடும்புயலில் சிக்கியது. அப்போது தலைமை மாலுமி டயஸ் இறக்க நேரிட்டது. கப்பல் தென்னாப்பிரிக்கக் கரையை அடுத்துள்ள ஒரு சிறிய தீவில் கரையொதுங்கியது.

உயிர் பிழைத்த மாலுமி ஒருவர், தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை எல்லாம் ஒரு கடிதத்தில் எழுதி அதைத் தன்னுடைய காலணிக்குள் போட்டு ஒரு மரத்தில் தொங்கவிட்டுத் தூரச்சென்றுவிட்டார்.

பத்து மாதங்களின் பின்னர், அந்தத் தீவுக்கு வருகை தந்த மற்றொரு போர்துக்கீசிய மாலுமியான ஜோஓயா நோவா என்பவர் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த அந்தக் காலணியைக் கண்டு விட்டார். திங்கள் நாட்டில் செய்யப்படுவதுபோன்றே அந்தக் காலணி இருப்பதைக் கண்டு வியந்தார். இயற்கைப் பேரிடர்களில் இருந்து தப்பியிருந்த அந்தக் காலணியை ஆராய்ந்து விட்டு அவல் கொண்டு அருகில் சென்று தொட்டுப்பார்த்தார். தொடர்ந்து பார்த்தார். அதை அப்படியே இறக்கிப் பார்த்தார்.

என்ன ஆச்சரியம்! உள்ளே ஒரு தடிப்பான மட்டை தெரிந்தது. அது நொந்து போயிருந்தது. மெதுவாக ஒடிந்து போகாத வண்ணம் எடுத்தார். வாய்ப்பகுதி ஓட்டடைகளினால் குடை போல மூடப்பட்டிருந்தன.

ஓட்டடைளை நீக்கி, உள்ளே பர்த்தபோது மேலுமொரு கடதாசி இருந்தது. அதை எடுத்துத் திறந்து பார்த்தார். தெளிவாகக் கடிதம் பேனாவினால் எழுதப்பட்டிருந்தது. அப்படி என்ன கடிதம்! தாம் எங்கிருந்து எப்படி எங்கே எப்போது எதற்காகப் புறப்பட்டோம், என்ன நடந்தது, யாரை இழந்தோம், எப்படி இழந்தோம், இனி இங்கு வருபவர்கள் எப்படி வரவேண்டும்? எதை எதைக் கொண்டு வரவேண்டும், என்ன காலத்தில் பயணம் மேற்கொள்ள வேண்டும், என்ன மருந்துகள் தேவை, என்ன உடுப்புப்போடவேண்டும், எப்படிப்போட்டால் குளிரிலிருந்து தப்பிக் கொள்ளலாம், இதெல்லாவற்றையும் உள்ளடக்கியே அந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது.

இந்தச் செய்தியை அந்த மாலுமியோ எங்கும் காட்டிச் சொன்னதினால் தென்னாபிரிக்கா முழுவதுமாகப் பரவியது இந்தப் புதினம்.

பலரும் இதனை அற்புதமாகப் பார்வையிட்டதனால், அந்தக் காலணி, வெய்யில், மழை தீண்டாதவண்ணம் இப்போதும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அல்லாமலும், அந்தக் காலணி கட்டப்பட்ட அந்த மரம், மோசல் என்ற இடத்தில் பாதுகாக்கப்பட்டு காலணி வடிவமான ஒரு தபால் பெட்டியும் வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் காலணி சிவப்பு நிறமாக இருந்தபடியால் அந்தத் தபால் பெட்டியும் சிவப்பு நிறம் பூசப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அன்றில் இருந்து புதிதாக வருபவர்கள் மோசல் மரத்தடியில் வைக்கப்பட்ட அந்தத் தபால் பெட்டியில் கடிதங்களைப் போட்டு வருகிறார்கள். இதுவே தபால் பெட்டி தோன்றக் காரணமாக இருந்ததெனலாம். 1814ஆம் ஆண்டு சிவப்பு நிறம் பூசப்பட்ட தபால் பெட்டி லண்டன் மாநகரில் ஆரம்பிக்கப்பட்டது.

இன்றுவரை இருநூறு வருடங்களுக்கு மேலாக உலகெங்கனும் தபால்பெட்டிகள் உயிரோடு வாழ்ந்து வருகின்றன. உண்மைதானே!

பரம இரகசியங்களை மிகவும் பாதுகாப்பாக உரியவர்களிடம் ஒப்படைப்பதில் தபால் பெட்டிகளுடன் தபால் திணைக்களம் வெற்றிகளைச் சுமக்கின்றது. பரீட்சை, நியமனம், பணப்பரிமாற்றம், முக்கிய ஆவணங்கள் யாவுமே தபால் பெட்டிகள் மூலமாகவே பகிரப்படுகின்றன. இத்தகு சேவையை எப்படிப் போற்ற வேண்டும் என்பது மக்களின் கைகளிலேயே உள்ளது.

# துணையை தேடாதீர்கள்



சுகி பாலா
இணுவில்

தலைப்பைப் பார்த்ததும் ஆச்சரியமாக இருக்கிறதா? ம் புரிகின்றது. நான் இங்கே குறிப்பிடுவது வாழ்க்கைத் துணையை அல்ல. பிற இன்ன துணைகளையே! அதாவது உதவிக்கு அழைத்தல், பிறரிடம் பொன் - பொருளுக்கு எதிர்பார்த்தல் போன்ற துணையான விடயங்களையே. துணையை - உதவியை நாடுபவர்கள் தம் மனதில் உறுதி இல்லாதவர்கள். இவர்கள் ஏதாவது ஒன்றுக்கோ அல்லது முன்னேறுவதற்கான செயல்திட்டங்களுக்கோ பிறர் உதவியை எதிர்பார்த்திருப்பார்கள். இவர்கள் தம் சொந்தக் காலில் நிற்காத, துணிவு என்பதையே மறந்தவர்கள்.

துணைகள் பல விதங்களில் தேடப்படுகின்றன. நேர்முகத் தேர்வுகளில் பரிந்துரைக்காக தெரிந்தவர்களை தேடல், துன்ப மிகுதியால் இறைவனை துணைக்குத் தேடல், நல்ல விடயங்கள் - கெட்ட விடயங்கள் செய்யத் துணை தேடல், கடன் பெறத் துணை தேடல், சமூக செயல்களில் - நிகழ்வுகளில் பங்குகொள்ளத் துணை தேடல். இப்படி நல்லது கெட்டது இரண்டுக்குமே துணை - உதவியை நாடுகிறார்கள்.

இது வளர்ந்தவர்களிடம் மட்டுமல்ல சிறு வயதினரிடம்கூடக் காணப்படுகின்றது. உதாரணமாகக் கிராமப்புறங்களில் இவ்வாறான விடயங்களைக் காணலாம். அதாவது ஒரு பிள்ளையைக் கடைக்குப் போய் வா என்றால் உடனே அந்தப் பிள்ளை "அம்மா! நான் போகேக்க இவனையும் கூட்டிக்கொண்டு போறன் எண்டுதான்" எதிரில் நிற்கும் நண்பனைச் சுட்டிக்காட்டும். உடனே தாய் "உங்களால சோடி போடாம போகேலாதா?" எனச் செல்லமாக ஏசிவிட்டு தன் காரியம் ஆகவேண்டும் என்பதற்காக, "சரி! அவனையும் கூட்டிக்கொண்டு கவனமாய் போய்வா" என்பார். இங்கே சிறுவயதிலேயே பக்கத்தில் இருக்கும் கடைக்குப் போகக் கூடத் துணை - உதவி எதிர்பார்க்கப்படுகின்றது. சிறுவயதிலேயே தனித்து செயற்படத் தயங்கும் நிலையை இங்கு காண்கிறோம்.

சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கத்தான் செய்கின்றன. செல்வந்த - ஏழைக் குடும்பங்கள் கலந்தேதான் வாழ்கின்றன. ஏழைக் குடும்பங்கள் சில சமயங்களில் இக்கட்டான நிலையில் பண உதவியோ, பொருள் உதவியோ பணக்காரக் குடும்பங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றன. சிலர் உதவுவார்கள். சிலரால் உதவமுடியாமல் போகலாம். தனக்கு உதவி செய்யவில்லை என்பதை மனதில் வைத்து குரோதத்தை வளர்த்து *(கடகம் தூக்கினதுகள் எல்லாம் காற்சட்டை போட்டுக்கொண்டு கதைக்கிற கதையைப் பார்)* என்டு அவர்களது பழைய வாழ்க்கையைக் கிண்டிக் கிளறிக் கொண்டிருப்பார்கள் சிலர். இதெல்லாம் பிறரின் உதவியை எதிர்பார்த்து தாங்களாகவே தம் மனதுக்குள் விரோதத்தை வளர்த்துக் கொள்ளும் செயல்கள்தான்.

இது மட்டுமல்ல பாடசாலைகளில் என்னதான் கல்வியைக் கற்றுக் கொடுத்தாலும் படித்தாலும் ஊர்க்கோயில்களில் பூசை வழிபாட்டின்போது தேவாரம், புராணம் ஓதுக என்றதுமே அங்கு நின்ற இளம் யுவதிகள் ஓடி ஒளித்ததைக் கண்டுகொண்டேன். அதனையும் மீறி ஒருவரை தேவாரம் படிக்க முன்னுக்கு அழைக்கும்போது துணைக்கு இன்னொருத்தரையும் அவர் இழுத்து வருவார். எதற்காக இதெல்லாம்? பிறர் உதவியின்றி உங்களால் முன்நிற்க முடியாதா?

இது மட்டுமா? எங்கேயேனும் வேலைகள் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டால் உடனே அந்த அலுவலகத்தில் தங்களுக்கு தெரிந்தவர்கள் யார் யார் இருக்கினம், யாரிட்ட உதவி கேட்கலாம் எண்டு யோசிப்பார்கள். இதெல்லாம் எதற்கு? உங்கள் திறமையை மட்டும் அங்கே சமர்ப்பியுங்களேன். பிறரின் உதவியை எதிர்பார்க்காதீர்கள்.

முதியவர்கள்தான் எதற்கும் தனித்து இயங்க முடியாத நிலையில் இருக்கும்போது மற்றவர்களின் உதவியை எதிர் பார்த்து நிற்பார்கள். இளைய வயதினர். முன்னேறத் துடிப்பவர்கள். நாளைய தலைவர்கள் நீங்களும் இள வயதிலேயே பிறர் துணையை எதிர்பார்க்கலாமா? எதையும் எதிர்கொள்ளும் மனத்துணிவுடன் செயற்படுங்கள். கூச்ச சுபாவங்களைத் தூக்கி எறியுங்கள், நம்பிக்கையுடன் செயற்படுங்கள்.

## சிரிக்க சிந்திக்க சில வரிகள்

வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள். இது, தாவரங்களுக்கு பொருந்தும். ஆனால், மனிதர்களுக்கும் பொருந்துமோ என்பது சந்தேகமாக இருக்கிறது.

வாழ்க்கையில் முன்னேறிய பலரது வாழ்வில் இளமையில் அவர்கள் ஜொலித்தார்கள் எனத் தெரியவில்லை. பலரைச் சொல்லலாம். அவர்களில் சிலர் இளம் பராயத்தில் சாதாரண சிறுவனாகவோ சிறுமியாகவோதான் தென்பட்டார்கள். ஐசாக் நியூட்டன் பல கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரன். சிறுபராயத்தில் படிப்பில் நாட்டம் செலுத்தவில்லை. அல்பேட் ஐயன்ஸ்டீன் சாதாரணமான சிறுவனாகத்தான் வளர்ந்தார். பிற்காலங்களில் அவர்களை உலகமே திரும்பிப் பார்க்க வைத்தது அவர்களது அறிவியல் திறமைதான்.

நாற்பதில் நாய்க் குணம் என்றும் சொல்வார்கள். இது எவ்வளவு உண்மை என்பது புரியவில்லை. உலகில் பிரபல்யமான மனிதர்கள் 40 வயதுக்கு மேல்தான் உச்ச நிலையை அடைந்துள்ளனர். உலக அரசியல், விஞ்ஞானம், செல்வம், திறமை என உச்ச நிலையை அடைய அவர்கள் 40 வயதைத் தாண்டிவிட்டனர் எனலாம். இருந்தும் சில அதிசயப் பிறப்புக்களும் இருந்துள்ளதாக அறியக்கிடக்கிறது. திருஞானசம்பந்தர் முளையிலே பாக்கள் இயற்றும் வல்லமையும் கணித மேதை ராமானுஜன் சிறுவனாக கணிதத்தின் சூத்திரத்தை உலகறியச் செய்தமையும் விதிவிலக்காகக் கொள்ளலாம்.

தற்காலத்தை நோக்கினால் பல சிறுவர்கள், சிறுமிகள் முளையிலே ஜொலிப்பதைக் காணலாம். விஞ்ஞானம், தொழில்நுட்பம் முன்னேறிக்கொண்டிருக்கையில் அதை இலகுவில் புரிந்து கொள்கின்றனர். மூத்த, முதிர்ந்தவர்களுக்கு புரியாத தொழில்நுட்பங்களை இலகுவில் பிள்ளைகள் புரிந்து வைத்துள்ளனர் என்பது கண்கூடு.

இதேவேளையில் சிறுவர்களின் கற்பனா சக்தியும் கூர்மையாகவே உள்ளது. அண்மையில் எனது நண்பர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். வெள்ளிக்கிழமையானதால் அவர் தனது மகனை விளக்கு ஏற்றி சுவாமி கும்பிடும்படி சொல்லிவிட்டு என்னுடன் பேசிக் கொண்டிருந்தார். சற்று நேரம் கழிந்து அவரது 6 வயது மகன் அப்பா பிள்ளையார் தன்ரை வலது கொம்பை ஏன் உடைத்தார் என்று கேட்க நண்பர் அது எனக்குத் தெரியாது வேணும் எண்டால் கொம்மாவிடம் கேட்டுப்பார் என்றார். அதற்கு அம்மாவும் தெரியாதாம் என்றான் பிள்ளை. பின்பு அந்தச் சிறுவன் வெளியில் வந்து எனக்குப் பதில் தெரியுது என்றான்.

என்ன பதில் எனக் கேட்க ஒரு முறை பிள்ளையார் பூலோகத்துக்கு வந்து வங்கியில் பணம் எடுக்க வரிசையில் நின்றாராம். அவர் முறை வந்ததும் வங்கி ஊழியர் பணம் எடுக்கும் படிவத்தில் கையொப்பமிடவேண்டும் எனக் கூற பேனையைக் கேட்டாராம். ஊழியர் கொடுக்க மறுக்க கோபங்கொண்ட பிள்ளையார் தனது கொம்பை முறித்து ஒப்பமிட்டுக் கொடுத்தாராம் என்றான். இது எப்படி இருக்கு!

கலாபூசணம் மு. மாசிலாமணி



# தாமரை இலைத் தண்ணீர்



**09 ஆம் பக்கத் தொடர்ச்சி**

என்ன! பொம்பிளை மாப்பிளை மணவறையை விட்டு எழும்பும் வரைக்கும் உங்கை நிண்டு வாய்பாத்துக் கொண்டு நில்லாமல் கெதியாய் வாருங்கோ. பணியாரப்பையை மறந்து போகாதேங்கோ. எல்லாமிந்த மனிசனுக்குச் சொல்ல வேணும்."

நனைந்துபோன சீறுவாணமாக மெல்லிய ஒரு சீறலுடன் ஃபோனை வைத்துவிட்டாள்.

நாசமறுந்தவளே! நானிஞ்சை பானை யுக்கை தலையோட்டின கன்றின் தலை மாதிரி ஒண்டும் செய்யேலாமல் நிண்டு அவதிப்படுகிறது உனக்குத் தெரியுமே!

திட்டினேன். அதுவும் மனதுக்குள்தான்.

நேரம் மூன்று மணியாகிக் கொண்டிருந்தது. அந்த வயோதிபரும் புன்சிரிப்புடன் என்னை நோக்கி ஓடிவந்தார். நான் கொடுத்த அதே என்வலப்பை ஒருவித சிரிப்புடன் எனது கைக்குள் திணித்துவிட எனக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி.

திருவிழாவில் தொலைந்து போன குழந்தையைத் தேடிப் பிடித்துக் கையில் கொடுத்துவிட்ட ஆனந்தம். இனிப் பிரச்சினையில்லை. தலை நிமிர்ந்து போய் நின்று மாப்பிள்ளையிடம் என்வலப்பைக் கொடுத்து என்னை அறிமுகப்படுத்திக் கொண்டுபோகவேண்டியதுதான். நல்லவேளை பணியாரப்பையை மறக்கப் பார்த்தேன். அதில்லாமல் போனால் மனைவியிடம் ஏச்சுக்கள் திட்டுக்கள் வாங்கவேண்டிவரும். நான் மறக்க மாட்டேன். மனைவி சொல்வதுபோல நான் ஒன்றும் மோசமான மறதிக்காரனல்ல. ஏனோ அவள்தான் என்னை அப்படிச் சொல்லித் திட்டுகின்றாள் தினமும்.

"தம்பி பானு! இவரை ஆரெண்டு தெரியுதே! உவன் தான்ரா உன்ரை மன்னாரிலை இருக்கிற பூமணிப் பெரியம்மாவின்ரை மகன். உன்ரை அண்ணை. எங்கை! உன்ரை பெரியம்மாவின்ரை பிடிவாதக் குணத்தாலை அண்ணன் தம்பியையும் தெரியாது. இனசனங்களையும் தெரியாத நிலைமையாப் போச்சுது."

மாப்பிள்ளைக்கு என்னை முழுமையாக அறிமுகப்படுத்தி வைத்தாள் சித்தி. நாங்களிருவரும் ஒருவரையொருவர் வாஞ்சையுடன் கட்டித் தழுவிக்கொண்டோம். சரி இனி நடையைக் கட்ட வேண்டியதுதான். நேரம் போய்க் கொண்டிருந்தது. இனி பஸ் பிடித்து மன்னாருக்குப் போய்ச் சேரக் குறைந்தது நான்கு மணித்தியாலங்களாவது பிடிக்கும். கமலக்காவின் சாமத்திய வீட்டுக்குப்போகவேண்டும். இப்போதைய பிரச்சினை அது ஒன்றுதான்.

மன்னார் பஸ்ஸில் ஏறிவிட்டேன். கொண்டக்டர் மிக மெதுவாகவே ரிக்கற் எழுதிக் கொண்டிருந்தார். எனக்கு ஆத்திரமாகவிருந்தது.

உவன் பாவியென்ன ஆக்களின்ரை வீட்டு விலாசம், அடையாள அட்டை நம்பர் எல்லாம் கேட்டெழுதுறானோ!

மனதுக்குள் சினந்து கொண்டேன். ஒருவாறு ரிக்கெற்போடும் படலம் முடிந்ததும் பஸ்ஸும் புறப்பட்டது. சாரதி நல்ல வாட்ட சாட்டமான இளைஞனாயிருந்தான். படுவேகமாகத்தான் பஸ்ஸை ஓட்டுவான் போலத் தெரிந்தது. ஆனால் நான் நினைப்பது ஒன்றுமே எனது வாழ்க்கையில் நடப்பதில்லையே! மிக மெதுவாகவே நகர்ந்து கொண்டிருந்தது பஸ் வண்டி.

உந்த ஓட்டம் ஓடி உவன் பாவி எப்ப எங்களைக் கொண்டு போய்ச் சேர்க்கப் போறான்! உந்த றைவர் முந்தி லாண்ட் மாஸ்ரர் ஓடியிருப்பானோ! அல்லது றோட்டிலை கல்லு நெரிக்கிற மிசின் கிசின் ஓடியிருப்பானோ! அப்பிடித்தான் நினைக்க வேண்டிக் கிடக்குது. உவன்ரை ஓட்டத்தைப் பார்க்க. அது சரி மாப்பிள்ளையிட்டை நேரடியாக என்வலப் குடுத்தாச்சு. அதுவும் ஆயிரம் ரூபா. எனக்கு அங்கை நல்ல மரியாதை யாயிருக்கும். எல்லாம் சரி! எங்கை பணியாரப்பை! கடவுளே நான் அதை எடுக்காமல் வந்திட்டன். உவள் பாவி இண்டைக்குக் கொல்லப்போறாள்

உடம்பில் உதறலெடுத்தது. வீடு போய்ச் சேர்வதற்குள் ஏதாவதொரு பொய்யைத் தயார்ப்படுத்த வேண்டும்.

அப்பாடா! ஒருவாறு வீடு சேர்ந்துவிட்டேன். முதலில் சேட் டைக் கழற்றினால்தான் நிம்மதி. அதைக் கழற்றிக் கொடியில் போடும் போது புத்தம் புதிய ஒரு ஆயிரம் ரூபாத்தாள் மடிந்தபடி கீழே விழுந்தது.

இதென்ன இது ஆயிரம் ரூபா!

அடக்கடவுளே! என்வலப்புக்குள் இதை வைக்காமல் வெறும் என்வலப்பைக் கொடுத்துவிட்டேன். தலைசுற்றிக்கொண்டு வருகின்றது. தாமரை இலையில் தண்ணீர் தங்காததைப்போல என்னுடைய மனத்திலும் ஏனோ எதுவுமே தங்கி நிற்கு தில்லையே!

## சொற்சிலம்பம் - போட்டி இல: 393

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| | ■ | 9 | | 10 | | | ■ |
| 11 | 12 | | ■ | 13 | | | 14 |
| 15 | | ■ | 16 | | ■ | 17 | |
| 18 | | 19 | | ■ | 20 | | ■ |
| | ■ | 21 | | | | ■ | 22 |
| ■ | 23 | | | ■ | 24 | | |

அனுப்புபவர் பெயர்:........................................................

பூரணமான தபால் விலாசம்:

..........................................

..........................................................................

கையொப்பம்:....................................................................

**இடமிருந்து வலம்**

1. காலக்கெடு
5. ஆசை
7. சாய்தல்
8. நாளின் ஒரு பகுதி
9. திருமணம்
11. யானையைப் பராமரிப்பவன்
13. உழைத்து ஊதியம் தேடு
15. வானம்
16. (ஏதேனும் திரவத்தில்)தோய்த்தெடு
17. கீறு
18. குறைதல்
20. நாங்கள்
21. பல நாளங்கள் சேர்ந்த கூறு
23. சிறு பானை போன்ற மட்பாத்திரம்
24. பேரழிவு ஏற்படுத்துவது

**மேலிருந்து கீழ்**

1. எதிர்பாராது விளையும் கவலை தரும் சம்பவம்
2. திரை
3. அநியாயம் செய்பவன்
4. பணம் என்பதை பேச்சு வழக்கில் இப்படியும் அழைப்பது துண்டு
5. செருக்கு
6. மிருகங்களுக்கு உள்ள விசேட உறுப்பு
8. காசு
10. இரத்தல்
12. தடம்
14. மேடையை மறைக்கப் பயன்படுத்துவது
16. மேன்மையானவை
19. மெல்லிய சப்பையான உலோகப் பகுதி
20. எண்ணுக் கணக்கில் ஈரிரண்டு
22. தேசம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 391 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)சம்பாதி (4)அசதி (7)தனவந்தன் (8)பதிகம் (10)தம் (11)திறம் (12)மார் (14)அளை (15)நடு (16)கோபுரம் (18)விடம் (19)சமிபாடு (21)மையம் (22)சிதிலம்

**மேலிருந்து கீழ்**

(1)சதிபதி (2)பாதகம் (3)தினம் (4)அந்தர் (5)சதம் (6)தின் (9)திறப்பு (12)மாலை (13)குடும்பம் (14)அம்மி (15)நட (16) கோதுமை (17)ரசம் (18)விடுதி (20)பாசி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 391 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

B.சாருஜா,
இல.177, மூர்வீதி,
மன்னார்.

**2 ஆம் பரிசு**

S. நாகம்மா,
கல்லூரி வீதி.
பருத்தித்துறை.

**3 ஆம் பரிசு**

சீ.நடேசு,
அம்பிகை வாசா,
கற்பொக்கணை, உடுவில்.

**4 ஆம் பரிசு**

கஜபூரணி நரேந்திரன்,
ஆலடி வீதி. கோண்டாவில்
கிழக்கு, கோண்டாவில்.

**5 ஆம் பரிசு**

கி.றஞ்ஜினிதேவி,
இல. 14/9.பொலிஸ் நிலைய ஒழுங்கை,
சாவகச்சேரி.

**பாராட்டுப் பெறுவோர்**

திருமதி வா.அகல்யா,
அ.மி.பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.


சி.கிருஷ்ணவேணி,
இல.48/1. பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

செல்வி பொ.சிவகாமி
'இலக்குமிபதி', அம்பிகாவத்தை வீதி,
சங்கானை.

சொற்சிலம்பம் போட்டி
இல.393
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்
(11.11.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.393 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 15.11.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 391இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.



# ஆண்கள் சிந்திக்க வேண்டும்!

உடுவிலூர் கலா

அழகிய பண்பாட்டாலும், இறுக்கமான அடிக்கட்டுமானத்தாலும் பின்னிப் பிணைக்கப்பட்டு சிறந்ததொரு நாகரிகத்தை பறை சாற்றிய நாம், போதைப் பொருளின் வருகையாலும், அதன் நுகர்வினாலும் வழிதவறி வேண்டாத அசிங்கங்களை உருவாக்கி அவற்றை தினசரி தரிசிப்பவர்களாக மாறிவிட்டது வேதனை.

வாந்திபேதிக் கிருமியாய் அதிகரித்த வன்முறை பல சிரமங்களின் மத்தியில், சட்டத்தின் நியாயமான வலைவீச்சில் ஓரளவு குறைந்துள்ள போதும் அடியோடு போய்விடவில்லை. பாலியல் வன்முறை மட்டும் தொடர்ந்த வண்ணமேயுள்ளது. சிறுமிகள், பெண்கள், வயோதிப மாது என வயது வித்தியாசமின்றி வன்கொடுமைகள் தொடர்கின்றன.

பாலியல் துன்புறுத்தல், வன்முறை, வன்கொடுமை, வன்புணர்வுகள் என்கிற சொற்களைப்பற்றி ஆண்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். அவற்றால் ஏற்படுகின்ற வலிகளையும், சீர்கேடுகளையும் உணர்வுபூர்வமாக சிந்தித்துணர வேண்டும். பெண்கள் சமுதாயத்தின் உயிர்நாடிகள். சிறுவர்கள் (சிறுமிகள்) நாட்டின் முதுகெலும்புகள். மென்மையான உடல்வாகு கொண்ட இவர்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகி, உலகைவிட்டே செல்கின்றார்கள். இவையெல்லாம் யாரால்? என்கிற கேள் விக்கு ஆண்களால் என்பதுதானே ஒரே யொரு பதில். எனவே, ஒவ்வொரு ஆணும் இந்த இடத்தில் தம்மைப்பற்றி, தாம் செய் யும் தவறு பற்றி, பெண்ணினத்துக்குச் செய் யும் கொடுமை பற்றிச் சிந்திக்க வேண்டும்.

ஒரு சமுதாயத்தின் ஒழுக்க விழுமியங்கள் வேண்டாத பண்பாட்டால் மாசுபடுவதா? அற்பசுகத்துக்காக அசிங்கமாக, அநியாயமாக வாழ்வதா? எம்மினத்தின் அருமை பெருமைகளை பாலியல் வன்முறைகளால் செல்லரித்து போகவழி சமைப்பதா? சிறுமிகள் என்கிற அரும்புகளை ஈவிரக்கமற்று பாலியல் வன்முறைக்குள்ளாக்குவதா? எதிர்காலக் கனவுகள் பலவற்றை புத்தகங்களோடு சுமந்து பள்ளி செல்லும் மாணவிகளை சீருடைகளுடன் சீரழிப்பதா? பாழடைந்த வீடுகளில் பச்சிளம் பெண்கள் இச்சைக் காமுகர்களால் இம்சிக்கப்படுவதா? அலரிக் காடுகளிலும், பற்றைகளிலும், பாழடைந்த நீர்நிலைகளிலும் பெண்களின் உடல்கள் அநாதரவாய்க் கிடப்பதா? இவற்றையெல்லாம் ஒவ்வொரு ஆணும் மனிதாபிமானத்துடன் சிந்திக்க வேண்டும்.

உடலாலும் உள்ளத்தாலும் இணைந்து வாழ்வதற்காகவே திருமணம் எனும் புனித சடங்கைக் குறிப்பிட்ட வயதின் பின்னர் பெற்றோர் நிகழ்த்துகின்றனர். அப்படியானால், சிறுமிகளை பாலியல் வன்முறை செய்வது என்பது எவ்வளவு கொடூரமானது, அசிங்கமானது! வன்முறைக்குள்ளாகும்பெண்பிள்ளைகளின்குழந்தைத் தன்மை வலுக்கட்டாயமாகப் பிய்த்தெடுக்கப்படுகிறதல்லவா? உங்கள் அற்ப சுகத்துக்காக அடுத்தவர் வாழ்க்கையை அநியாயமாக்க எப்படி உங்களால் முடிகிறது?

பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகுபவர்களைப் பாருங்கள். சாரதிகள், காவலாளிகள், அதிபர், ஆசிரியர்கள், மதகுருமார், அப்பா, சித்தப்பா, மாமா, அண்ணா, தாத்தா என்று நீள்கிறது பட்டியல்.

ஆண்களின் எந்தவொரு தரப்பும் இதில் விதிவிலக்காக இல்லையே! பல் விழுந்த, முடி விடைபெற்ற தாத்தாக்கள் கூட குற்றச்சாட்டுக்களைச் சுமந்து நிற்கிறார்கள் என்பது இந்தச் சமூகத்தில் ஆழ வேரூன்றிப் போயுள்ள நோயின் குறிதானே!

சிறுமிகளுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியவர்களே அவர்களைப் பகிர்ந்துண்ண முயல்வது கேவலமானதில்லையா? பாலியல் சுகத்துக்காக இரத்த உறவுகளை வன்முறை செய்பவர்கள் மனித வர்க்கத்துக்குள் அடக்கிவிட முடியுமா?

ஆண்மை, வீரம், திறமை, பலம் என அதிகாரத்தன்மை கொண்ட ஆணினம் அதனைப்பெண்கள்மீது பயன்படுத்துவது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல. இவ்வாறான பாலியல் வன்கொடுமைகளால் ஆணினம்தனதுதன்தனித்துவமானசிறப்பியல்புகளை இழக்கிறது.

இதில் இன்னும் கொடுமை செய்யும் தவறு வெளியேதெரியவராதுஎனநம்பிப்பலஆண்கள் தவறு செய்வதுதான். தண்டனைகளும் சட்டங்களும் அவர்களைக் கட்டுப்படுத்தியதாகத் தெரியவில்லை.

மனிதப் பிறப்பெடுத்த ஒவ்வொருவரும் சுயமாக வாழும் உரித்துடையவர்கள். பெண்கள் மட்டும் விதிவிலக்கா? பெண்ணினத்தை பல வழிகளிலும் ஆணினம் சுடுகாடு வரை வன்முறை செய்கின்றது. பாலியல் வன்முறை இதில் முக்கியமானது.

ஆண்களைப்போல பெண்களும் சுயமாக வாழவேண்டும். அதற்கு மதிப்பளியுங்கள். "உள்ளத்தால் உள்ளலும் தீதுபிறன் பொருளை கள்ளத்தால் கள்வேம் எனல்" என்கிறது வள்ளுவம். மனதால்கூட களவெடுக்க நினைக்க வேண்டாம் என்பதுபோல, மனதாலும் இச்சை கொண்டு பார்வையை ஓடவிடாதீர்கள். ஒரு பெண்ணின் தொடுகை கிடைத்தால் காகிதத்தையோ மலரையோ தொட்டதாக உணருங்கள் என்றார் அறிஞர் அண்ணா. ஆம் அத்தனை மென்மை கொண்ட பெண் மையை முரட்டுத்தனமான வன்புணராதீர்கள். பெண்ணை முழுமனதுடன் பெண்ணாக மதிப்பவனே மனிதன். ஒரு பெண்ணின் வாழ்வை சீர்குலைப்பவன் பெற்ற தாயைக் கொலை செய்யும் கொலைகாரனுக்கு ஒப்பானவன். பெண்களை வாழவிடுங்கள்.

எம் சமூகத்தில் இருந்து பாலியல் வன்முறையை அடியோடு ஒழிக்க ஆண்களே நீங்கள் மாறுங்கள்.

# எங்கள் ஊருக்கொரு நதியை கொண்டுவரவேண்டும்

எங்களூருக்கொரு நதியை
கொண்டுவர வேண்டும்
புழுதிபறக்கும் உப்புநீர் திடலில்
வெள்ளை மணல் நிறைய –
காரை பற்றை விரவும் வெளிகள்
எல்லாம்

கரும்பும் கமுகும் ஓங்கி வளர
சோலையும் பூக்களுமாய்
என் பூமி தன்னை
சோடித்துக்கொள்ள
குயிலின் பாட்டும் வண்ணப்
பறவைகளின் ஒலியுமாய்

சலசலத்தோடும் இயற்கையின் சங்கீதம்
பருக எங்களூருக்கொரு நதியை
கொண்டுவரவேண்டும்

வெள்ளிவைரமாய் மின்னும் நீரிறங்கி
மேனிநனைத்து நீத்திக்களைத்து மனம்
குளிரகொக்குகள் தவமிருக்கும் அந்தி
நேரத்தில் காதலனுக்காய் காத்திருக்கும்
எம்மூர் பெண்களின்
கண்களில் தெரிகிற காதலின்
ஏக்கத்தை நான் கவிதையில் எழுத
பின்பொரு நாள் காதல் கூடாதபொழுது
அவர்கள் தற்கொலை செய்ய
தற்போது கவிதை எழுதுகிற
கவிஞர்களையெல்லாம்
(என்னையும் சேர்த்துத்தான்) தள்ளிவிட
எங்களூருக்கொரு நதியை
கொண்டுவரவேண்டும்

ம் கொண்டு வந்த நதியை எங்கே
வைப்பதாம் பிரதான வீதியிலே விரிக்க
வேண்டியதுதான்
அப்போ வாகனங்கள்———அட
அவை வானத்தால் போகட்டும் .





யோசப் செல்லத்துரை

# அருகிவருகின்ற அம்பாக்களின் அங்கதச் சுவை!

தேவி பரமலிங்கம்

*ஆடிப்பாடி வேலைசெய்தால்*
*அலுப்பு இருக்காது - அதில்*
*ஆணும் பெண்ணும் சேராவிட்டால்*
*அழகு இருக்காது!*

இது ஒரு சினிமாப்பாடல். அதனில் பதிவிக்கப் பட்டிருக்கும் தகவல் முக்கிய விடயம். மனித இயங்கியலுக்கு உலகளாவிய மட்டில் தொழில்களே முக்கியத்துவம் பெற்றுள்ளன. தொழில் ஒன்றைச் செய்யாவிட்டால் மனித வாழ்க்கையே அர்த்தம் இல்லாமல் அமைந்துவிடுகின்றது. அதனால் ஜீவனோபாயத் தேவைகளுக்குத் தொழில் என்பது இன்றியமையாத ஒன்றாகி விட்டது. தொழிலில் ஈடுபடும்போதில் ஆணும் பெண்ணும் சேர்ந்து ஈடுபடுதல் அழகானது; ஆரோக்கியமானது. அதனால் தொழில்களில் ஈடுபட்டு நிற்கையில் உடலில் தோன்றக்கூடிய அசதியைக்கூடத் தெரியாமல் தொழில்களைச் செய்ய முடிவதும் சாத்தியம்.

விவசாயம், சேனைத் தொழில் மற்றும் கைத்தறி, தையல் போன்ற இன்னோரன்ன தொழில்களில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஈடுபடல் என்பது இன்று நேற்றல்ல பன்னெடுங்காலமாக நடைமுறையில் இருந்து வருவதைக் காண்கிறோம். எனினும் வேறு சில தொழில்களில் அவ்விதம் இருபாலாரும் சேர்ந்து ஈடுபடுதல் என்பது இன்றைக்கும் நடைமுறையில் இல்லை எனும்போதும் காலமாற்றங்களால் தொழில்களில் நவீன வசதிகளை ஏற்படுத்தி மிகக் குறைந்தபட்சம் அந்தத் தொழில்களில் ஆணும் பெண்ணும் ஈடுபடுவதும் காணக்கிடக்கின்றன.

அத்தகு தொழில் கடற்றொழில் எனலாம். கடற்றொழிலில் ஈடுபடுகின்ற மீனவத் தொழிலாளர்கள் அந்த நேரங்களில் தமது உடல் அசதியை மறப்பதற்காக பாடுகின்ற பாடல்களே 'அம்பா' எனும் மற்றொரு கிராமியஞ்சார் பாடல் ஆகும்.

விவசாயிகள் மற்றும் தொழிலாளர் தொழில்களில் ஈடுபட்டு இருக்கையில் பாடும் நாட்டார் பாடல்களுக்கு ஈடாக 'அம்பா' பாடல்களும் விளங்குகின்றன. இந்தப் பாடல்களை, நாட்டார் பாடல்களைப் பாடிய ஏழை மக்களைப் போன்றே எழுத்தறிவு இல்லாத கடற்றொழிலாளர் பாடியிருப்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய 'அம்பா' பாடல்கள் சிலவற்றை குருநகர் வாழ் மீனவ தொழிலாளி லொவுறேன் (யோசப் செல்லத்துரை) பாடப்பாடக் கேட்டு அவற்றில் இழையோடும் புதினங்களை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளவே இந்தக் கட்டுரையை எழுதத் தொடங்குகிறேன்.

'அம்பா' பாடல்களில் கொச்சத்தனமாவும் சாதிகள் சொல்லியும் அங்கத் சுவை கொண்டவை அனேகம். அவற்றில் தேர்ந்த சில 'அம்பா'க்களை இந்தக் கட்டுரையில் இணைத்துள்ளேன்.

*இடி இடிக்க மழை பொழிய*
*இருகரையோ பெருக்வர*
*பெருகுதடா ராசு வெள்ளம்*
*பெருங்கடல் போல் குமுறிவிழ*

பற்றுக்கோடுகள் எதுவுமோ இல்லாத பெருங் கடற்பரப்பில் வெள்ளத்துள் இடிமழையில் அகப்பட்டு மீனவர் திக்குத்திசை தெரியாமல் போராடும் கணங்கள் பெருவாரியாக வந்து சூழும். அத்தகு சூழல் ஒன்றிலே 'அம்பா' பாடி தம்நிலையை மேலேடுக்க 'அம்பா' பாக்கள் அவர்களுக்கு பேருதவியாக அமைவதை என்னென்று கூறலாம்?

*பாருக்குள்ளே பறியை வைத்தேன்*
*ஊருக்கெல்லாம் கறி கொடுத்தேன்*
*கறி கொடுத்த கோயில் எல்லாம்*
*கையெடுத்தே கும்பிடுவேன்*

கடலுக்குள்ளே பெரிய பெரிய பார்கள் இருக்கின்றன. இந்தப் பார்களுள்ளே பறியைச் சொருகி (இறுக்கி) வைத்து விட்டு அந்தக் கற்பார்களுக்குள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் மீனினங்களை மண்டான் என்னும் இரும்பு ஈட்டி ஆயுதங்களைக் கொண்டே குத்தி மச்சங்களைப் பிடித்தல். அவ்விதம் பிடித்த கடலுணவை ஊரில் கறிசமைக்க விற்பனை செய்வதையும் அவ்விதம் கறி வழங்கிய கடலையே கோயில் எனக் கூறிக் கும்பிடுவர் மீனவர்கள். அதையே மேற்கண்ட அம்பாவில் தரிசித்தோம்.

*சின்னம்மான் தோணியெண்டால்*
*சீறி விளையாடாதோ*
*ஆசை அம்மான் தோணியெண்டால்*
*ஆகாயத்தில் எழும்பாதோ*

தோணி என்னும் கடற்கலம் தன்னில் மீனவர் தொழிலுக்குப் புறப்பட்டுச் செல்கையில் இவ்வாறு உறவுமுறைக் காரர்களின் தோணிகளின் இயல்புகளை எடுத்து இயம்புவதையும் 'அம்பா'வில் மிகுதியாகக் காணலாம்.

*நிலவோ நிலவெறிக்க*
*நிலவுபட்டால் ஆருதவி*

ஏகாந்தக் கடலில் நிற்கையில் பால் போல் நிலவு எறித்துக் கடற்றொழிலாளர்களுக்கு பக்கபலமாக இருப்பதும் இறைவன் கொடை. அந்த நிலவும் குறிப்பிட்ட நேரங்களுக்கு உள்ளாக மறைந்துவிடும். பின்பாக அவர்களைக் கும் என்ற இருளே பயமுறுத்தும். இருட்டில் திக்குத்திசை அறிவதும் துர்லபமல்லவா? வானத்தில் காணப்படும் விண்மீன்களின் வழிகாட்டலும் நோக்குறிப்புமே மீனவர்களுக்கு பேருதவியாக அமையும்.

*வாடை கடுக்குதடி*
*வடகடலோ இரையுதடி*
*வாராயோ சூபாரை*

சூபாரை என்பது சிறிய வகை மீனினம். குழந்தை பிரசவித்த பெண்களுக்கு சரக்குத் தண்ணீர் என்னும் கறி சமைக்க உகந்தது. அதனைக் கருவாடாக்கியும் உண்பர். பச்சையாகச் சமைத்த மீனைப் பார்க்கிலும் சூபாரைக் கருவாடு மிகவும் ருசியாக இருக்கும். அந்த மீன்கள் வாடைக் காற்று தலையெடுத்து நிற்கும் காலங்களில் வடகடல் இரைச்சலோடே பெருந்தொகையாகக் கூட்டம் கூட்டமாக எடுபட்டு வரும்.

வாடைக் காற்றுக் காலங்களில் மீனவர் மேற்சொன்ன 'அம்பா'வைப் பாடித் தொழிலில் ஈடுபடுவர். தொழில் சார்ந்த 'அம்பா'ப் பாடல்களையே இதுவரையும் பார்த்தோம். இனி உணவுப் பழக்கம் சார்ந்த அம்பாக்களைப் பார்ப்போமே.

*ஓரா மீனடி ஓடியல் புட்டடி*
*தின்னடியோ உனக்கென்னடி எளவும்*
*வாழை மீனோடி வரகு அரிசிச் சோறடி*
*தின்னடி உனக்கென்னடி என்றும்*
*திருக்கை நெய்யோ பழஞ்சோறோ*
*தீத்தடியோ திமிலனுக்கு*

இந்த விதமாய் 'அம்பா'க்கள் பாடப்பட்டுள்ளன. கடைசிப் பாவின் இறுதி முடிப்பில் சாதிப்பெயர் இடம்பிடித்துள்ளது. இவ்வாறு சாதிகளை விழிக்கும் அம்பாக்களும் அனேகம். அந்த வகை அம்பாவில் மாதிரிக்கு மற்றொன்றைப் பாருங்கள்.

*அம்படைச்சி மயிராம்*
*அறுபது பாகமாம்*
*கயிறும் திரிக்கலாம்*
*கப்பலிலும் ஏத்தலாம்*

'அம்பா'க்களில் சொல்லப்பட்ட சாதிகள் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல ஒன்றும் இல்லை. காரண காரியங்களுக்காகவும் சில பதிவுகளுக்காகவும் அந்தந்த 'அம்பா'க்கள் உருவாகியிருக்கலாம்.

அங்கதச் சுவைகளும் அம்பாக்களில் அபரிமிதமாகப் பாடப்பட்டுள்ளன. பெண்களை ஆண்கள் சீண்டி கிளுகிளுப்பை அனுபவிப்பது ஒன்றும் புதிய விடயமல்லவே. அவ்வகை 'அம்பா'க்கள் சிலவற்றை அடுத்துப் பார்க்கலாம்.

*"ஐயோ தாயோ கடலைக்காரி*
*அம்மா உந்தன் மகளைத் தாடி*
*மகளை விடு விறகொடிக்க"*

இவ்விதம் ஆண் பாட, பதிலுக்கு பெண் பாடுவதாக,

*"விறகொடிக்க அவளுக்கென்ன*
*தலைவிதியோ........."என்று அமைந்துள்ளது.*

இன்னும் சில அங்கதங்களை நுகர்வோம்.

*"சிங்களத்தி சிவத்தப்பெண்ணே*
*தோங்கா எண்ணே மணமென்னடி!" என்றும்*
*"ஆத்தை அவளாலே*
*ஆத்தில மீன் பாயுதடி!" இவ்வாறும்*
*"பேசாலை ஏழுகட்டை*
*பேசிப்போவம் வாடி பெட்டை"*

இந்த விதமாகவும் 'அம்பா'ப் பாடல்களில் கிளுகிளுப்பை ஊட்டும் சொற் பிரயோகங்கள் புகுத்தப்பட்டுள்ளன. கடற்றொழிலாளர் அலுப்புத் தெரியாமல் இருக்க இவற்றைப் பாடி வந்ததாக அறியக் கிடைக்கின்றன.

ஆணும் பெண்ணும் குதர்க்கமாக கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் 'அம்பா'க்களும் தாராளமாக எமது வடபகுதிக் கடலோரக் கிராமங்களில் பாவனையில் இருந்து வருகின்றன.

இந்த வகையில் கடலோர நாட்டார் பாடல்களும் நம் மண்ணின் முதுசங்களாகவே விளங்கி வருகின்றன.

---

நவிண்டிலூர் பிரா

## என்னைத் தேடுகிறேன்

எங்கும் முடியாத ஏகாந்தப் பெருவெளியில்
என்னைத் தேடுகிறேன், ஏங்கித் தடுமாறுகிறேன்
எங்கள் உரிமை கேட்டது என் தவறாம்
இயந்திரப் பறவைகள் உடல் கிழிக்க
சிங்கமெனும் சிரிப்பழகன் தம்பியை இழந்து [illegible]
சிறு நரிக் கூட்டத்தின் நடுவே பிணைந்தின்னி[illegible]
கங்குல் இருள் கனத்தயேமைதி
எங்கும் சூனியமே எதுவும் தெரியவில்லை
எரியும் சிதைகளும் எழுப்பும் ஓலங்களும்
பொங்கியெழும் காட்டேரிகள் கூடி
போர் தவிர்ப்பு வலயம் போட்டது
சோகமே அகலாத சூனியத்து நீள் வெளியில்
என்னைத் தொலைத்து விட்டேன்
போகமே பொன்னே பொருளே என்று
போனவழி பொழுது மட்டும்போனது
தாகமே உரிமை என்றதனால்
தாயக வாழ்வு கேட்டு நின்றதால்
தடுமாறிப்போய் என்னைத் தொலைத்துவிட்டேன்
போதி மாதவன் புத்தர் ஆடிய
போதை நாடகத்தில் நாங்கள்
நாதியிழந்தோம் நாயிலும் கேடானோம்
நஞ்சுக் குகையில் நான் என்னைத் தேடுகிறேன்



# அமெரிக்காவை வெறுக்கிறது ரஷ்யா!

– சபரினா டாவெர்னைஸ்,
நியூயோர்க் டைம்ஸ் இதழின்
முன்னாள் செய்தியாளர்,

நியூயோர்க் டைம்ஸ்
தமிழில் சுருக்கமாக:
வெ. சந்திரமோகன்

ஆகஸ்ட் மாதத்தின் வெதுவெதுப்பான மாலை நேரத்தில், மொஸ்கோவின் பெவெர்லி ஹில்ஸ் டைனர் உணவகத்தில், மூன்று இளம் ரஷ்யர்களுடன் அமர்ந்திருந்தேன். போர்க்கி தி பிக் மற்றும் மர்லின் மன்றோவின் ஆளுயர உருவங்கள் போன்ற அற்புதமான அலங்காரப் பொருள்கள் நிறைந்த உணவகம் அது.

"அமெரிக்கா எங்களை வளைக்கப் பார்க்கிறது" என்றார் 29 வயதான கிறிஸ்டினா டோனெட்ஸ், டெஸ்ஸெர்ட் வேஃபில் துண்டு ஒன்றில் வாழைப்பழக் கலவையைப் பரப்பியபடி. "பல பிரச்சினைகளைத் தாண்டி நாங்கள் எழுந்து நிற்கிறோம். உங்களுக்கு (அமெரிக்காவுக்கு) அது பிடிக்கவில்லை" என்றார் அப்பெண்.

பத்தாண்டுகளுக்கும் அதிகமான இடைவெளிக்குப் பிறகு, ரஷ்யாவில் செய்தி சேகரிப்பது என்பது பழைய நண்பரை மீண்டும் சந்திப்பது போல் இருந்தது. ஆனால், அந்தப் பழைய நண்பர் நிறையவே மாறியிருந்தார்.

சில வகைகளில், நல்ல விதமான மாற்றங்கள்! சமீபத்தில் ரூபிளில் ஏற்பட்டிருந்த சரிவு மற்றும் பண வீக்கம் போன்ற பிரச்சினைகள் இருந்தாலும், ரஷ்யர்கள் வளம் மிக்கவர்களாகியிருக்கிறார்கள். நிறையப் பயணம் செய்கிறார்கள். 1997 இல் முதன்முதலாக நான் மொஸ்கோ சென்றபோது என்னை உபசரித்த அன்பான அந்த ரஷ்யப் பெண், இனிமேல், பிளாஸ்டிக் பைகளைக் கழுவ வேண்டியிருக்காது என்று இம்முறை சொன்னார். நான் கடைசியாக அவரைப் பார்த்ததற்குப் பிறகு, அவரது சம்பளம் 4 மடங்கு உயர்ந்திருக்கிறது. முதன்முதலாக வெளிநாட்டுக்கும் சுற்றுலா சென்று வந்தார். துனீசியாவுக்கு!

### வெறுப்புப் பட்டியல்

அதேசமயம், இருண்ட பக்கங்களும் உண்டு. ரஷ்ய சமுதாயம் முன்பைவிட தற்காப்பு கொண்டதாகவும், அதீத சுயபிரக்ஞை கொண்டதாகவும் மாறியிருக்கிறது. அரசியல் தொடர்புள்ள ரஷ்ய செல்வந்தர்களில் பலர் லண்டனில் ஒரு வீடும், இரண்டாவது பாஸ்போர்ட்டும் வைத்திருந்தார்கள். என் ரஷ்ய நண்பர்கள் பலர் வெளியேறும் வழியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தற்போது ரஷ்யாவில் பல வெறுப்பு இலக்குகள் கட்டமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. உக்ரைன்காரர்கள், ...பாவின உறவாளர்கள், ஐரோப்பாவின் பால் பொருள்கள், எல்லாவற்றுக்கும் மேலாக அமெரிக்கா!

"அமெரிக்கா தனது ஜனநாயகத்தை எங்கள் முகத்தில் அப்புகிறது" என்று கோடமாகச் சொன்னார் நிஸ்னி நோவ்கோரட் நகரைச் சேர்ந்த கோஸ்த்யா எனும் வாடகை வண்டிச் சாரதி. தன்பாலின திருமணத்துக்கு அமெரிக்க உச்ச நீதிமன்றம் அனுமதியளித்ததால் அதிருப்தியடைந்த ரஷ்யர்களில் ஒருவர் அவர். "எதற்கெடுத்தாலும் சரி! சரி! என்று சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள். எல்லாவற்றுக்கும் தலையாட்டுகிறீர்கள். சில சமயங்களில் இல்லை என்றும் சொல்ல வேண்டும்" என்று சொன்ன நிஸ்னி, அமெரிக்காவை எதிர்க்கும் நிலைப்பாட்டை இறுதியாக ரஷ்யா எடுத்திருக்கிறது என்று விளக்கினார்.



### பழைய பகை

இதுபோன்ற கருத்தாக்கங்களுக்குப் பின்னால் ஏகப்பட்ட வரலாறு இருக்கிறது என்பது உண்மைதான். 19ஆம் நூற்றாண்டில் ரஷ்யாவின் சரியான பாதை எது என்பதில் ஸ்லாவோபைல்களும் வெஸ்டர்னைஸர்களும் மோதிக்கொண்டனர். சோவியத் ஒன்றியம் இருந்த காலகட்டத்தில், அமெரிக்காவுக்கு எதிரான கடுமையான பகை இருந்ததில் வியப்பில்லை. அப்போதிலிருந்து, அமெரிக்காவின் உலக நடவடிக்கைகளின் அடிப்படையில் அதன் மீது பல எதிர்மறைக் கருத்துகள் நிலவுகின்றன.

1999இல் செர்பியா மீது நேட்டோ படைகள் குண்டு வீசிய சம்பவம், ஈராக்கில் அமெரிக்கப் படைகள் ஊடுருவிய சம்பவம் போன்றவற்றை உதாரணங்களாகச் சொல்லலாம். ஆனால் இவை எல்லாவற்றையும் விட, அமெரிக்காவைப் பற்றிய ரஷ்யர்களின் தற்போதைய கருத்து, 24 ஆண்டுகளுக்கு முன்னர் சோவியத் ஒன்றியம் சிதறுண்டதற்குப் பிறகு மேலும் மோசமடைந்திருக்கிறது என்று மொஸ்கோவின் லெவாடா அனல்ட்டிக்கல் சென்டர் தெரிவிக்கிறது.

"அமெரிக்காவுக்கு எதிரான மனப் பான்மை தற்போது மேலும் வலுவடைந்திருக்கிறது. ஏனெனில், பல வகைகளில் ரஷ்ய அரசே இதை ஆதரிக்கிறது. இந்த விடயத்தைப் பற்றிய சுதந்திரமான குரல்கள் எல்லாம் ரஷ்யத் தொலைக்காட்சிகளில் காணாமல் போய்விட்டன. ரூபிளில் ஏற்பட்டிருக்கும் சரிவு, பொதுப் போக்குவரத்தில் முதியோருக்கான மானியம் ரத்து என்று உள்நாட்டுப் பிரச்சினை எதுவானாலும், அதற்கு அமெரிக்கா – ரஷ்யா இடையிலான மோதல் தான் காரணம் என்று நம்பப்படுகிறது. எங்கு அரசியல் உறுதியின்மை ஏற்பட்டாலும் அதன் பின்னணியில் அமெரிக்க அதிகாரிகள் இருக்கிறார்கள் என்றும் சித்திரிக்கப்படுகிறது.

### மாபெரும் மாற்றம்!

"நாம் எல்லோரும் எப்படி வாழ்கிறோம் என்று அவளிடம் எடுத்துச் சொல். ஐரோப்பாவைவிட சிறப்பாக நாம் வாழ்வதையும், க்ரீமியா இப்போது எத்தனை அற்புதமாக இருக்கிறது என்றும் அவளுக்குச் சொல்" என்று நான் செவ்வி கண்டு கொண்டிருந்த பெண்ணிடம் ஒரு பெண் முணுமுணுத்தார். கடந்த ஆண்டு ரஷ்யாவால் இணைக்கப்பட்ட க்ரீமியா தீபகற்பத்தைக் குறிப்பிடுகிறார் அப்பெண். ரஷ்யாவில் நான் எதிர்கொண்ட மற்றொரு மாபெரும் மாற்றம் அது.

க்ரீமியா தொடர்பான புடினின் நடவடிக்கைகளால் ரஷ்யாவுக்குள்ளேயே பல குடும்பங்கள் பிரிந்துவிட்டன. பல உறவுகள் முறிந்துவிட்டன. சோவியத் ஒன்றியம் சிதறுண்ட நிகழ்வுக்குப் பின்னர், மேற்குலக நாடுகளுடனான உறவில் பெரும் விரிசல் விழுந்ததற்கும் க்ரீமியா விவகாரம் ஒரு காரணமாகிவிட்டது.

ரஷ்யாவின் மிகப் பெரிய திட்டம் என்ன? அப்படி எதுவும் இல்லை என்று முற்போக்கான ரஷ்யர்களில் பலர் என்னிடம் தெரிவித்தார்கள். அடுத்தடுத்த பிரச்சினைகளால் புடினும் அவரது நெருங்கிய வட்டாரத்தினரும் சோர்வடைந்திருக்கிறார்கள். இறக்குமதி உணவுகளுக்கு ரஷ்யா விதித்த தடையால் பணவீக்கம் கணிசமாக உயர்ந்திருக்கிறது. அத்துடன் க்ரீமியாவில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மிகவும் குறைந்திருக்கிறது. புதிய சமூகப் பொறுப்புகளால் ரஷ்யா சோர்வடைந்திருக்கிறது.

### உள்ளூர் விமர்சனக் குரல்கள்

அரசு மோசமாகிக்கொண்டிருக்கிறது என்றும் தேசியவாத முழக்கங்கள் ஒரு கெட்ட சகுனத்தைக் காட்டுகின்றன என்றும் சிலர் கருதுகிறார்கள். புடினின் ஆதரவாளர்களைச் செழிப்பூட்டிக்கொண்டிருந்த எண்ணெயின் விலை சரிந்திருக்கிறது.

ரஷ்ய நிலம் தகித்துக்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார் முன்னாள் பத்திரிகையாளரும், அரசியல் நிகழ்வுகளை உன்னிப்பாகக் கவனித்து வருபவருமான எனது நண்பர் ஒருவர். ரோமானிய நகரமான போம்பேயி எரிமலைச் சீற்றத்தில் அழிவதற்கு முன்னர், அனைத்து வளங்களும் வறண்டுவிட்டதைப் போன்ற நிலைமை இது என்றார் அவர்.

அமெரிக்காவைப் பற்றிய மோசமான மதிப்பீடு நிரந்தரமான ஒன்றல்ல என்று சொன்னார் லெவாடா ஆய்வு நிலையக் கருத்துக் கணிப்பு மையத்தின் இயக்குநர் லெவ் குட்கோவ். ரஷ்யர்களின் தற்போதைய கோபம்கூட அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு எதிரானது அல்ல என்றும், தங்கள் மீதே தங்களுக்கு இருக்கும் கோபம் என்றே தோன்றுகிறது என்றும் சொன்னார்.

இதெல்லாம் எந்தத் திசையை நோக்கிச் செல்கிறது என்று ஒரு முக்கியக் கேள்வி எழுகிறது. ரஷ்யாவை விட்டு வெளியேறிவிடலாம் என்று நினைப்பதாகச் சொல்கிறார் அலெக்சாண்டர் யெரெமெயேவ். ரஷ்யாவில் தொழில் செய்வது நல்ல விடயம் என்கிறார்கள் என் நண்பர்கள். ஆனால், அவர்களிடம் இருக்கும் பொதுவான விடயம் என்ன தெரியுமா? வெளிநாட்டு பாஸ்போர்ட்டுகள்!



# வெற்றிநடை தொடருமா

## ஆட்டம் இன்று ஆரம்பம்




சங்கா, மகெல இருவரினதும் ஓய்வின் பின்னர் ஒருவாறாக தலைநிமிர ஆரம்பித்திருக்கிறது இலங்கைஅணி. பாகிஸ்தான், இந்தியா,போன்றஅணிகளிடம் சொந்த மண்ணில் தொடரை இழந்ததன் பின்னர் மேற்கிந்தியத் தீவுகளுக்குஎதிரானடெஸ்ட் தொடரை கைப்பற்றி நிம்மதியடைந்துள்ளது. இந்த வெற்றி நடை தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் தொடருமா என்பதே தற்பொழுதுள்ளகேள்வி.

குறித்ததொடரில் இலங்கைஅணியின் பெறுபேறு எவ்வாறு அமையப் போகின்றது என்பதை பரிசீலித்துபார்க்கும் பட்சத்தில் இலங்கை ரசிகர்கள் ஆறுதலடையக்கூடியவகையிலும் வயிற்றில் புளியைக் கரைக்கும் வகையிலும் இரண்டுவிடயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆறுதலடையக்கூடியவிடயம் டில்சான்,மலிங்க,மென்டிஸ், குலசேகராபோன்றஅனுபவவீரர்களின் மீள்வருகை. இலங்கைக்கு சவாலாக அமையப் போகும் விடயம் அதிகப்படியானஅறிமுகவீரர்கள் களமிறங்குகின்றமை.

அனுபவவீரர்களின் மீள்வருகை என்று எடுத்துக்கொள்கின்ற பொழுது குறிப்பாக மலிங்க, மென்டிஸ், குலசேகரா போன்ற வீரர்களின் மீள்வருகையைப் பார்க்கின்றபொழுது பந்துவீச்சை அதிகம் நம்பி இலங்கைக் களமிறங்கப் போகிறது என்பது புலனாகிறது. இது சிறந்ததும் இலங்கைக்குப் பொருத்தமானதுமான வியூகமாகும்.

கடந்தகால ஆட்டங்களையெல்லாம் வைத்துப் பார்க்கின்றபொழுது துடுப்பாட்டத்தைவிட பந்துவீச்சிலேயே இலங்கை அதிகம் சாதித்துள்ளமை துல்லியமாகத் தெரியும். மத்தியூஸ், சந்திமால், குசல் ஜெனித் பெரேரா, திரிமன்னே ஆகியோரது துடுப்பாட்டவரிசையும் தீவுகளை மிரளவைக்கும் அதேநேரம், டில்சான், சிறிவர்தன போன்ற சிறந்த சகல துறைவீரர்கள் அணிக்கு மேலும் பலம் சேர்க்கின்றனர். இவை இலங்கை அணியின் சாதகமான விடயங்கள்.

இலங்கை அணிக்கு சவாலாக அமையப் போகும் விடயம் என்றவெனில், ஓரேதொடரில்; அதிகப்படியான அறிமுக வீரர்கள் களமிறங்குகின்றமையே. செகான் ஜெயசூரிய,வண்டர்சே, குணதிலக போன்ற வீரர்கள் தீவுகளுக்கு எதிரான தொடரில் களமிறங்கவுள்ளனர். சங்கா, மகெலவின் காலத்தில் அவர்களின் வழிநடத்தலில் வீரர்களை அறிமுகம் செய்யாமல் தவறுவிட்ட இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தற்பொழுது ஒரே தொடரில் அதிகப்படியான வீரர்களை களமிறக்கித் தவறு செய்கிறது.

சீரான இடைவெளியில் ஒவ்வொருவராகக் களமிறக்கினால் அணியின் சமநிலை பேணப்படுவதுடன் வீரர்களுக்கு இடையிலானபுரிந்துணர்வும் ஆரோக்கியமானதாக இருக்கும். இந்தவகையில் மூன்றுஅறிமுகவீரர்களும் அணியின் ஏனைய வீரர்களுடனும் புரிந்துணர்வுடன் செயற்படுவார்களா என்பது கேள்விக்குறியே. மட்டுமல்லாது தீவுகளின் டெஸ்ட் ஆட்டத்தைவைத்துஒருநாள் ஆட்டங்களை எடைபோட்டு விடமுடியாது.

ஒருநாள் ஆட்டங்களில் தீவுகளின் ஒவ்வொருவீரர்களும் ஆபத்தானவர்கள். கெயில்,பொலார்ட்,பிராவோ ஆகியோர் அணிக்குத் திரும்பவில்லையாயினும் சமி மீண்டும் இணைகிறார். மொத்தத்தில் இலங்கை வீரர்களால் அவ்வளவு எளிதில் தொடரைக் கைப்பற்றிவிட முடியாது. ஒருநாள் தொடருக்கான இலங்கைஅணியின் விவரம் – மத்தியூஸ் (தலைவர்),திரிமன்னே,டில்சான், குசல் ஜெனித் பெரேரா,தினேஸ் சந்திமல், மிலிந்தசிறிவர்தன,செகான் ஜெயசூரிய, ஜெப்ரிவண்டர்சே,அயந்தமெண்டிஸ், மலிங்க, நுவான் குலசேகர,சுரங்க லக்மல், துஸ்மன் தசமீரா மற்றும் குணதிலக.

# இணைப்பாட்டமாக 503 ஓட்டங்கள் ஆஸியின் ஆரம்பவீரர்கள் அசத்தல்

நியூசிலாந்துக்குஎதிராக ஆஸ்திரேலியாஅணிவிளையாடியபயிற்சி ஆட்டமொன்றில் ஆஸியின் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய பின்ச், கார்ட்டர்ஸ் இணை 503 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்து சாதனை நிலைநாட்டியுள்ளது.

நியூசிலாந்துஅணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஆட்டங்களைக் கொண்டடெஸ்ட் தொடரில்விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் எதிர்வரும் 5ஆம் திகதிஆரம்பமாகவுள்ளநிலையில் குறித்த தொடருக்கான பயிற்சி ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸியிக்கு அதன் 'ஆரம்ப' வீரர்கள் இருவருமே நீண்டநேரம் துடுப்பெடுத்தாடிமிகப்பெரும் பலத்தைகொடுத்தனர். இணைப்பாட்டமாக 503 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தநிலையிலேயே முதல் இலக்குச் சரிக்கப்பட்டது.



இதில் பின்ச் 363 பந்துகளில் 24 பவுண்டரிகள் 7 சிக்சர்களுடன் 288 ஓட்டங்கள் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார். கார்ட்டர்ஸ் 364 பந்துகளில் 18 பவுண்டரிகளுடன் 209 ஓட்டங்களை எடுத்து லாதத்தின் பந்தில் ஆட்டமிழந்தார். நியூசிலாந்து அணியினர் 10 பந்துவீச்சாளர்களைப் பயன்படுத்தியபோதிலும் எதுவும் பயனளிக்கவில்லை. மூன்றுநாட்களைக் கொண்ட இந்தபயிற்சிஆட்டம் இன்றைய தினமே நிறைவடைய வேண்டும். ஆனால் ஆடுகளம் அளவுக்கு அதிகமாக பாதிக்கப்பட்டமையால் நேற்றையதினமே ஆட்டம் சமநிலையில் முடிவுக்குவந்தது.

**இந்த சாதனை பற்றிய சில புள்ளி விவரங்கள்:**

★ ஆஸ்திரேலியகிரிக்கெட் வரலாற்றில் அதன் சொந்தமண்ணில் 503 ஓட்டங்கள் எந்தஇலக்குக்காகவும் எந்தஒருகிரிக்கெட்டிலும் சேர்ப்பது இதுவேமுதல்முறை. டிசம்பர் 1990இல் மார்க் வோக், ஸ்டீவ் வோக் இணைந்து மேற்கு ஆஸ்திரேலியா அணிக்கு எதிராக நியுசவுத்வேல்ஸ் அணிக்காக 464 ஓட்டங்களைக் குவித்தது முந்தைய ஆஸ்திரேலியச் சாதனையாகும்.

★ முதல் தரகிரிக்கெட் வரலாற்றில் பின்ச் கார்ட்டர்ஸ் சேர்த்த 503 ஓட்டங்கள் 4ஆவது மிகப்பெரிய இணைப்பாட்டமாகும். 1923ஆம் ஆண்டு தொடக்க வீரர்கள் எட்கர் மேய்ன், பில் போன்ஸ்போர்ட் ஆகியோர் முதல் இலக்குக்காக 456 ஓட்டங்களைச் சேர்த்தனர். அதுதற்போதுமுறியடிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக முதல்தர கிரிக்கெட்டில் முதல் இலக்குக்காக அதிக ஓட்டங்களைச் சேர்த்த சாதனை பாகிஸ்தானிய வீரர்களான வாகீத், மிர்சா மற்றும் மன்சூர் அக்தரைச் சாரும். இவர்கள் 1977இல் 561 ஓட்டங்களைச் சேர்த்திருந்தனர். இதுதான் இன்னும் சாதனையாகநீடிக்கிறது.